T 63
62

# இஃது

எழுத்தும்-சொல்லும்-பொருளும்-யாப்பும்-அணியும்

ஆகியவைந்திலக்கணங்களையும்-சிறுவர்முதலியயாவரும்

எளிதி னுணரும்படியாகத்

திருத்தணிகைக்

கந்தப்பையர்குமாரராகிய

# விசாகப்பெருமாளையர்

செய்த

# இலக்கணச்சுருக்க

# வினா விடை.

இஃது

௲அ௱உஅ ஹலிக்குச்சரியான - சாலீவாகனவருஷம் - ௲எ௱ரு௰-ல்

நிகழும்-சர்வதாரிவருஷத்தில்

சென்னபட்டணம்-சர்ச்மிமிசியோன் அச்சுக்கூடத்தில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

T63
68

OFFICE OF THE CURATOR
RECEIVED
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY
CHEPAUK, MADRAS
GOVERNMENT ... LIBRARY
MADRAS

# கடவுள்வணக்கம்.

எவரிறையாயுறவுளதொருவீடுதா-னெவனைப்பாவினர்க்கருமி
ருவினையு-மெவரார்கோட்படும்விழிகண்முச்சுடரு-மெவர்க்
குவந்தியாகுநால்வேதமு - மெவரினங்குருதியலுடைமந்தொழிலு-
மெவராதுநிலையுணர்கிலவறுசமயமு - மெவர்கண்மேவுதல்செயாமெவ
ழுபிறப்பு-மவர்திருவடியிணையன்புகூருளத்தொடு-வழுத்துபுகருதி
வணங்குது-மெழுத்துமுதலைந்துமினிதுணர்பொருட்டே.

# சிறப்புப்பாயிரம்.

நிலம்பெறுநரர்க்கருணிலைமுதற்கடவுள்-பலம்பெறவருளி
யபற்பலமொழிகளுள் - வடக்கின்மாவேங்கடவரையுந்
தெற்கொடுகுடக்கிற்குணக்கினீள்குரைதி [illegible]ாநாலையு - மெல்லையென
த்திகழிடத்துமொழியாகி - யில்லையிது[illegible]ணையெனக்கெழுதகைமை
யின்-வழுத்தற்சிறப்பொடு வளர்தமிழிலக்கண - மெழுத்துச்சொற்
பொருள் யாப்பணியைந்து-நாற்பாவிலுமலைவ [illegible]னுகுமினத்திலு-
நூற்பாவிலும்பெற நுவன்றுளவவ்வில-வொன்றுயினுமடைவுறவுண
ர்தற்கெளி-தன்றேகூரியரல்லார்க்காதலின் - யாவருமுணரவவ்வைந்
தையுஞ்சுருக்கி - மேவருமவினவும் விடையுமாகத் - தகவினல்லுணா
வா சகத்தினவில்கெனச் - சுகவளநிறைதரு தொண்டைநாடதனிற்
கச்சிக்கீழாங் கடிகையின்வடகீழ்ப்-பச்சிளஞ்சாலி பரூஉக்கழையா
மெனக்-கன்னழகமுகாமெனக் கவிமடற்பாளைத்-தழைதருகமுகு தா
ழையாமெனமே-லெழுந்துயர்ந்தண்மினோர்க் கிறும்பூதுவிளைக்கு
ங்-கொழும்புனன்மருதக் கூவமாநகரோ - னேமக்கனவீகலுகப்

பொருசினக்கன-லேமக்கனல்செயு மிவர்க்குமற்றெவர்க்கு-முதாக
கனலவித்தோம் புறவளங்கூர் - மதுரத்திலகுண வயைசெயலாறு-
வறன்கடைக்கழிவு காணரும்பெறலுழவுத்-திறன்கடைப்பிடித்திடு-
திருத்தகுகுலத்தினன்-கழைமொழிமங்கையர் கண்ணெனும் பகை
யினம்-விழைபாணுமிவண்மேவிப்பொருதுமென்-றணிநிரையுற்றிரு
ந்தாங்குலைங்குவளை-மணிமலரொலியலார்வண்புயவனாயின-னுரு
வொடுமிருந்திகழ் வுருவிவன்முன்முன - மருவமெய்ப்பிய துறன்றுய
தென்றநங்கள்- கருதியுளத்தழுக்கறப்பநோக்கினர்க்கெலா - மிரு
விழிக்கூ-டெனனுமெழினிறைபுருவினன் - றக்கவர்நாப்பணோர்தான்
சிறந்துறுமவை-யொக்குமெனவிலை யுயர்பலமணிகளி-னடுவணொரு
பெரு நாயகமணியுடைச்-சுடர்விரிமதாணி துயல்வருமார்பினன்-
மூத்தமிழ்ப்புலமையின் முந்தியநாவலர் - புத்தமிழ்தெனச்சுவை
பொழிதரவகமலர்ந்- துகந்துதற்புகழ்ந்த வொப்பரும்பாட்டொ
டு-திகந்தமோரெட்டினுஞ் சென்றொளிர்சீர்த்திய-னிருவிசும்பிறைவ
னுக் கிறைவனுதைநுடமொரு - பொருளெனுந்தன்குணப் புனிதனெ
ம்பசுபதி-யடியவர்க்கடியவ னுதலேபொருளென-வொடிவறவுளத்
தெழுந்தோங்குறுமன்பினன்-திருமேனிவள்ளல்செய்பெருந்தவத்
தா-லொருமெனிகொண்டிவணு தித்தசெவ்வேளெனப் - பொருந்
தோகைமேலுற்றிப்புலவனாப்போற்றித்-தருந்திறன்ஞானசத்தியை
த்தாங்கி-யங்கமலவேதனைச்செருக்கடக்கி-மங்கலிற்பெரியவனாயடு
த்துறைவோர் - ஞவின்கிழத்திநயந்துறைபவர்வயிற்- பூவின்கிழத்திபு
சாலனைவேனை-யருக்காமிவன்றனக்கன்றெனவிளங்குந்-திருக்காமி
மாலுனா செய்தனனாக-நயத்தகுதொல்காப் பியநன்னூன்முத-லிய
ந்றமிழ்நூல்களி விளிவனபலதழீஇ-திடமுளவழக்கொடுசெய்யுளிற்
றிகழ்தழீஇ-வடநூல்விதிசில வரத்தகுவனகொளீஇ-யிலக்கணச்சுருக்
க விருவிடைபெறும் பெயர் - நலத்திலைபதாநிறீஇ நடையுறவகுத்
தனன்-சீர்பெறுந்தன்திருத் தணிகைவாழ்செல்வன் - சார்புறுவீர
சைவசிகாமணி-மலகருட்குறையுள் வாகுணமேரு-கல்விப்பெருங்க
டல் கந்தப்பதேசிக-னருந்தவப்பெரும்பே றுமெனவுதித்த - பெ
ருந்தலைகவிசாகப் பெருமாளையனென்-றுலகுபுகழ்தாவோங்கி-யில
குமியற்பெயரோய் துநாவலனே.

இச்சிறப்புப்பாயிரம் - இந்நூலாசிரியர் விசாகப்பெருமா
ளையர்க் கிளவலாகியசரவணப்பெருமாளையராற் சொல்லப்பட்டது.

# பதிக விருத்தம்.

எழுத்திலியன்மூன்றின் முதன்முப்பஃது சார்பெழுத்திரு
நூற்றுநாற்பதுடனென் - றெனுமிவற்றின்பெயர்பிறப்ப
ளபுமுதலிறுதியிடை நிலைபதம்புணர்ச்சி - பகுத்தவிகுசொல்லினியன்
மூன்றிவ்விருதிணையவைம்பாற்பொருளுமூவிடத்திற் - பாங்குறவுணர்
த்துபெயர் வினையிடையுரிச்சொற்பகுப்பு வேற்றுமைகளொழிபு -
விழுத்தகைப்பொருளினகத்திணைபுறத்திணையின்விதம் யாப்பகத்
தெழுத்தான் - மேவுமசைசீர்பந்தமடிதொடையிவற்றினொடுவெள்
ளைமுதலாம்பாவினம் - வழுத்துமணிதனிலுவமையாதியேதீருகவரு
மலங்கார நூறு - மற்றுமிவைமுற்றுநவையற்றுமுறைபெற்றுநிறை
மாட்சியின்விளக்குமிதுவே.

தமிழிற்கற்கவிரும்பியவர்களுக்குப்பலவிலக்கண நூல்களுள வாயினும்- அவையனைத்தும்பாக்களாகவும்பாவினங்களாகவுஞ்சூத்திரங்களாகவுஞ்செய்திருக்கின்றமையாலும் - அவற்றினுரைகளும் அரும்பதங்களோடுவிரவிமிகவிரிந்து நிற்கையாலும் - அவ்விலக்கண நூல்களெல்லாம் எளிதிற் கற்றறிந்துகொள்ளத்தக்கனவல்ல - ஆகையால் எழுத்துச்சொற்பொருள்யாப்பணியென்னும் ஐந்திலக்கணங்களையும்யாவருமெளிதிற்கற்றறிந்துகொள்ளுமாறு- தொல்காப்பியம்- நன்னூல்- இலக்கணவிளக்கம்- இவைமுதலாகிய இலக்கண நூல்களின் மூலங்களையுமுரைகளையும் பலமுறையாராய்ச்சிசெய்து அவற்றுண்மிகவுபயோகமாகத்தக்கவிதிகளையுங் குற்றமற்றவுலகவழக்கிலுஞ்செய்யுள்வழக்கிலுமமைந்துகிடந்துதெரிந்தெடுக்கப்பட்ட சிறப்பாயுள்ளசிலவற்றின்விதிகளையுந்தமிழில்வந்து பயன்படத்தக்க வடநூல்விதிகளிற் சிலவற்றையுஞ்சேர்த்து - என்னாலியன்றமாத்திரம் உரைவாசகநடையிற் சுருக்கி வினாவும் விடையுமாக இந்நூலைச்செய்தேன்.

இதனுள்

அணியிலக்கணம் - புதூர் - சீதாராம சாஸ்திரியாரால்

பரிசோதிக்கப்பட்டது.

# அவையடக்கம்.

வெண்பா.

வறியவர்நீர்மைபோலீமணிமாமணிகொள்செல் . . . . வீ.
நெறியவர்க்காமோநீணிலத்திற்சிறியவர்க்கு . . . . சீ.
சிற்றறிவேன்செய்சிறுநூல்சீர்சாலுமோண்பெருநூல்.
கற்றறிமேலோர்க்கென்றுங்கா . . . . . . . . . . . . ண்.

கலித்துறை.

ஈவாயுற்றுயதேன்றெள்ளல்செய்வாரிலையேயடவிழ்பூ - ல்.
பூவாயுற்றேறயெடுத்திட்டியதேனைப்புகழ்பலநா . . . . ற்.
பாவாயுற்றேதொகுத்தெய்திந்தநூலைப்பரிவெர்டுமேன்.
நாவாயுற்றுயதெனவிழைதாருயர்நாவல . . . . . . . . . . ரோ.

அட்டவணை


| பக்கம். | இலக்கணம். | இயல். |
|---|---|---|
| பூ. | எழுத்திலக்கணம். . . . | முதலாவதெழுத்தியல். |
| யரு | . . . . . . . . . . . . . . . . . | இரண்டாவதுபதவியல். |
| ருசா | . . . . . . . . . . . . . . . . | மூன்றாவதுபுணரியல். இதனுட்பிரிவு. |
| சய | . . . . . . . . . . . . . . . . | உயிரீற்றுப்புணர்ச்சி. |
| ருகூ | . . . . . . . . . . . . . . . . | மெய்யீற்றுப்புணர்ச்சி. |
| சாஎ | . . . . . . . . . . . . . . . . | உயிருமெய்யுமாகியவிருவகையீற்றின்பொதுப்புணர்ச்சி |
| எக | சொல்லிலக்கணம். . . | முதலாவதுசொல்லியல். இதனுட்பிரிவு. |
| எகூ | . . . . . . . . . . . . . . . . | பெயர்ச்சொல். |
| அகூ | . . . . . . . . . . . . . . . . | வினைச்சொல். |
| ாஎ | . . . . . . . . . . . . . . . . | இடைச்சொல். |
| ாயரு | . . . . . . . . . . . . . . . . | உரிச்சொல். |
| ாயகூ | . . . . . . . . . . . . . . . . | இரண்டாவதுவேற்றுமையியல். |
| ாஙரு | . . . . . . . . . . . . . . . . | மூன்றாவதொழிபியல். |
| ாசகூ | பொருளிலக்கணம். | |
| ஶருக | யாப்பிலக்கணம். | |
| ாஎஉ | அணியிலக்கணம். | |

# இஃது

# இலக்கணச்சுருக்கவினாவிடை.

## தற்சிறப்புப்பாயிரம்.

உலகுமேதகுமிவனெனக்கொருமுதலெனக்கொண்
டிலகவாழருளிடத்தனுமீசனையிறைஞ்சி . . . . . . . க்
குலவுநூற்பொருளுணர்த்தியகுரவனைப்பழிச் . . சி
யலகில்சீரெழுத்தாதியைந்தறைகுவனமைந் . . தே.

## எழுத்திலக்கணம்.

### முதலாவதெழுத்தியல்.

௧. இலக்கணமென்பதியாது.—

இலக்கியத்தினமைதியாம்.

௨. அவ்விலக்கணமெத்தனைவகையினையுடைத்தாகும்.—

எழுத்திலக்கணமும் - சொல்லிலக்கணமும் - பொருளிலக்கணமும் - யாப்பிலக்கணமும் - அணியிலக்கணமும் - எனவைந்துவகையினையுடைத்தாகும்.

௩. எழுத்திலக்கணமென்பதியாது.—

எழுத்துக்களுக்குரியவிதியே எழுத்திலக்கணமாம்.

௪. அவ்வெழுத்திலக்கணமெத்தனையியல்களாலுணர்த்தப்படும்.—

எழுத்தியலும் - பதவியலும் - புணரியலும் - ஆகிய மூன்றியல்களாலுணர்த்தப்படும்.

௫. அவ்வெழுத்திலக்கணமெத்தனைவகையினையுடைத்தாகும்.—

பெயர் - பிறப்பு - மாத்திரை - முதனிலை - இறுதிநிலை - இடைநிலை - என்னுமெழுத்துக்களினத்திலக்கணமாறும் - பதம் -

புணர்ச்சி - என்னும் புறத்திலக்கணமிரண்டும் - ஆகியவெண்வகையினையுடைத்தாகும்.

௬. எழுத்தென்பதியாது.—

மொழிக்குமுதற்காரணமாகியவோசையே எழுத்தாம். இதனையொலிவடிவெழுத்தென்றும் - இதனையறிதற்குக்கட்புலனாகவெழுதப்படுவதை வரிவடிவெழுத்தென்றுங்கூறுவர்.

௭. அவ்வெழுத்தெத்தனைவகையினையுடைத்தாகும்.—

முதலெழுத்துஞ் சார்பெழுத்துமென விருவகையினையுடைத்தாகும்.

௮. முதலெழுத்துக்களென்பனயாவை.—

உயிர் பன்னிரண்டும் - மெய் பதினெட்டும் - ஆகிய முப்பதும் - முதலெழுத்துக்களாம்.

௯. அம்முதலெழுத்துக்களினுட்பிரிவாய் வழங்கும் பெயர்கள் யாவை.—

உயிரெழுத்து - மெய்யெழுத்து - இவற்றுள் உயிர்களினுட்பிரிவாய்வருவனவாகியகுற்றெழுத்து - நெட்டெழுத்து - சுட்டெழுத்து - வினாவெழுத்து - மெய்களினுட்பிரிவாய் வருவனவாகியவல்லெழுத்து - மெல்லெழுத்து - இடையெழுத்து - என்பனவாம்.

௰. அவற்றுள் உயிரெழுத்துக்களென்பனயாவை.—

அ - ஆ - இ - ஈ - உ - ஊ - எ - ஏ - ஐ - ஒ - ஓ - ஔ. என்னுமிப்பன்னிரண்டும் உயிரெழுத்துக்களாம். அன்றியுமிவை - ஆவி - அச்சு எனவும் பெயர்பெறும்.

௰௧. மெய்யெழுத்துக்களென்பனயாவை.—

க் - ங் - ச் - ஞ் - ட் - ண் - த் - ந் - ப் - ம் - ய் - ர் - ல் - வ் - ழ் - ள் - ற் - ன் - என்னுமிப்பதினெட்டும் - மெய்யெழுத்துக்களாம். அன்றியுமிவை - உடல் - உடம்பு - உறுப்பு - ஒற்று - புள்ளி - அல் - எனவும் பெயர்பெறும்.

௰௨. குற்றெழுத்துக்களென்பனயாவை.—

அ - இ - உ - எ - ஒ - என்னுமிவ்வைந்தும் - குற்றெழுத்துக்களாம். அன்றியுமிவை குறிலெனவும் பெயர்பெறும்.

௰௩. நெட்டெழுத்துக்களென்பனயாவை.—

ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ - ஔ - என்னுமிவ்வேழும் - நெட்டெழுத்துக்களாம், அன்றியுமிவை - நெடிலெனவும்பெயர்பெறும்.

௧௪. சுட்டெழுத்துக்களென்பனயாவை—

ஒருபொருளைச்சுட்டிக்காட்டுதற்கு மொழிக்குமுதலில்வரும் அ - இ - உ - என்னு மிம்மூன்றும் - சுட்டெழுத்துக்களாம். உதாரணம்: அவன் இவன் - உவன் - எனவும் - அக்கொற்றன் - இக்கொற்றன் - உக்கொற்றன் - எனவும் - மொழிக்குறுப்பாயும் அதனைச்சார்ந்தும்வரும்.

௧௫. வினவெழுத்துக்களென்பனயாவை—

வினவுதற்கு மொழிக்குமுதலில்வரும் - எகரமும் - யாவும் மொழியிறுதியில்வரும் - ஆகாரமும் - ஓகாரமும் - அவ்விரண்டிடத்தும் வரும் - ஏகாரமும் - ஆகிய வைந்தும் - வினவெழுத்துக்களாம். உம். எவன் எக்கொற்றன் - யாவன் - எம். கொற்றனா - கொற்றனோ எம். ஏவன் - கொற்றனே - எம். வரும்: பொருளொப் புமையாற் சார்பெழுத்தாகிய யாவினவும் உடன் கூறப்பட்டது.

௧௬. வல்லெழுத்துக்களென்பனயாவை—

க் - ச் - ட் - த் - ப் - ற் - என்னு மிவ்வாறும் - வல்லெழுத்துக்களாம்: இவற்றைவல்லினமெனவும் - வன்கணமெனவுங் கூறுவர்.

௧௭. மெல்லெழுத்துக்களென்பனயாவை—

ங் - ஞ் - ண் - ந் - ம் - ன் - என்னு மிவ்வாறும் - மெல்லெழுத்துக்களாம்: இவற்றை மெல்லினமெனவும் - மென்கணமெனவுங் கூறுவர்.

௧௮. இடையெழுத்துக்களென்பனயாவை—

ய் - ர் - ல் - வ் - ழ் - ள். என்னு மிவ்வாறும் - இடையெழுத்துக்களாம்: இவற்றை யிடையினமெனவும் - இடைக்கணமெனவுங் கூறுவர்.

௧௯. இம்முதலெழுத்துக்களுள் - ஒன்றற்கொன்று - இனமாவனவுளவோ—

உயிர்களுள் - அகரத்திற்கு ஆகாரமும் - இகரத்திற்கு ஈகாரமும் - உகரத்திற்கு ஊகாரமும் - எகரத்திற்கு ஏகாரமும் - ஒகரத்திற்கு ஓகாரமும் - இன்னும் ஈகாரத்தினினமாகிய இகரத்திற்குத் தனக்கினமொத்த குற்றெழுத்தில்லாத ஐகாரமும் - ஊகாரத்தினினமாகிய உகரத்திற்குத் தனக்கினமொத்த குற்றெழுத்தில்லாத ஔகாரமும் இடையினமொழிந்த மெய்களுள் - ககரத்திற்கு ஙகரமும் - சகரத்திற்கு ஞகரமும் - டகரத்திற்கு ணகரமும் - தகரத்திற்கு நகரமும் பகரத்திற்கு மகரமும் - றகரத்திற்கு னகரமும் - இனமாவனவாம்.

௨௰. சார்பெழுத்துக்களென்பனயாவை—

உயிர்மெய் யிருநூற்றொருபத்தாறும் - முற்றாய்த மொன்றும் - உயிரளபெடையேழும் - ஒற்றளபெடைபதினொன்றும் - குற்றியலிகரமொன்றும் - குற்றியலுகரமொன்றும் - ஐகாரக்குறுக்கமொன்றும் - ஔகாரக் குறுக்கமொன்றும் - மகரக் குறுக்க மொன்றும் ஆய்தக்குறுக்கமொன்றும் - ஆகிய விருநூற்றுநாற்பத்தொன்றுஞ் சார்பெழுத்திக்களாம்.

௨௧. அச்சார்பெழுத்துக்களிலுட்பிரிவாய் வழங்கும் பெயர்களியாவை—

மேற்கூறிய உயிர்மெய்முதலிய பத்துமாம்.

௨௨. உயிர்மெய்யெழுத்துக்களென்பனயாவை—

பன்னிரண் டுயிரும் பதினெட்டு மெய்மேலுந் தனித்தனியேறிவருதலாலாகிய விருநூற்றுப்பதினாறும் - உயிர்மெய்யெழுத்திக்களாம். அவைவருமாறு.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

இவற்றுள் - நெட்டுயிர் கூடிவருவன வற்றை உயிர்மெய் நெட்டெழுத்தென்றும் - குற்றுயிர் கூடிவருவனவற்றை உயிர்மெய்க்குற்றெழுத்தென்றும் - வல்லொற்றுக்கூடி வருவன வற்றை உயிர்மெய் வல்லெழுத்தென்றும் - மெல்லொற்றுக் கூடிவருவன வற்றை உயிர்மெய் மெல்லெழுத்தென்றும் - இடையொற்றுக் கூடிவருவன வற்றை உயிர்மெய்யிடையெழுத்தென்றுஞ்சொல்லப்படும்.

உரு. ஆய்தவெழுத்தென்பதியாது—

குற்றெழுத்தின் முன்னும் - உயிர்மெய் வல்லெழுத்தின் மேலும் - மூன்றுபுள்ளிவடிவாய்வருமெழுத்து. ஆய்தவெழுத்தாம். உம். எஃகு - கஃசு - அஃகாமை - பஃறி - எனவரும்: இவ்வாய்தம் அஃகேனம் - தனிநிலை - புள்ளி - ஒற்று - எனவும் பெயர்பெறும்.

உச. உயிரளபெடையென்பனயாவை—

செய்யுளி லோசைகுறைந்தவிடத்து மொழிக்கு முதலிடை கடைகளிலேநின்று தமக்கினமான குற்றெழுத்துடன்சேர்ந்து தம் மாத்திரையின் மிக்கொலித்துவருகின்ற நெட்டெழுத்துக்களேழும் உயிரளபெடையாம். உம். ஓஒதல் வேண்டுமொளி மாழ்குஞ் செய்வினை யாஅது மென்னுமவர் - உறாஅர்க்குறுநோயுரைப்பாய் கடலைச்சேறாஅய் வாழியநெஞ்சு - அனிச்சப்பூக்கால்களை யாள்பெய்தா ணுசுப்பிற்கு நல்லபடாஅ பறை - எனவரும். இவற்றுள் - ஓதலென்பதில் - ஓவென்னு நெட்டெழுத்து மொழிக்கு முதலிலும் உறார் என்பதில் - ஆவென்னு நெட்டெழுத்து இடையிலும் - படா என்பதில் - ஆவென்னு நெட்டெழுத்துக்கடையிலும் - அளபெடுத்தவாறு காண்க. சேறாய் என்பதில் - ஆவென்னுநெட்டெழுத்து ஈளபெடுத்துவந்தது - இன்னுஞ் சிலவிடங்களிற் குற்றெழுத்து நெட்டெழுத்தாய் விகாரப்பட்டு அளபெடுத்து வருதலுமுண்டு. உம். எடுப்பதூஉ மெல்லாமழை - இதில் உகரம் ஊகாரமாயளபெடுத்தது. பிறவுமன்ன: இவ்வளபெடை - அளபு - புலுதம் - எனவும் பெயர்பெறும்.

உரு. ஒற்றளபெடையென்பனயாவை—

செய்யுளிலோசை குறைந்தவிடத்து மொழிக்கிடையிலுங் கடையிலுங் குற்றெழுத்தின் கீழுங் குறிலிணைக்கீழுந் தம்மோடு தாஞ்சேர்ந்து நின்று தம்மாத்திரையின் மிக்கொலிக்கின்ற - ங் - ஞ்

ண் - ந் - ம் - ன் - வ் - ய் - ல் - ள் - என்னும் பத்துமெய்களும் ஆய்தமும் - ஒற்றளபெடையாம். உம். எங்ஙிறைவனுளனென் பாய்மன்னேயர் னெங்ஙெனத்திரிவாரின். எம். அங்ஙகனிந்தவ ருளிடத்தாற்கன்புசெய்து நங்ங்களங்கறுப்பா நாம். எம். இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடியார்க்குக்கலங்ங்கு நெஞ்சமிலைக்காண். எம். மடங்ங்க லந்த மனனே களத்துவிடங்ங்கலந்தானை வேண்டு. எம். வரும். இவற்றுள் எங்கு என்பதில் நகரங் குறிற்கீழிடையிலும். அம். என்பதில் மகரந்திரிந்த நகரங்குறிற்கீழ்க்கடையிலும். இலங் கு என்பதில். நகரங்குறிலிணைக்கீழிடையிலும் மடம். என்பதில் மகரந்திரிந்த நகரங்குறிலிணைக்கீழ்க்கடையிலும் அளபெடுத்த வா றுகாண்க.— விலஃஃகி வீங்கிருளோட்டுமே மாதரிலஃஃகு முத்தி னினம். இதனுள் ஆய்தமளபெடுத்துவந்தது. இவ்வாறே பிறமெ ய்களுஞ் செய்யுளிலோசை குறைந்தவிடத்தளபெடுத்து வருதல் கா ண்க.

௨௬. குற்றிய லிகரமென்பதியாது—

யகரத்தை முதலிலுடைய சொல் வருமொழியாய் வந்து புணர நிலைமொழிக்கீறாகிய குற்றிய லுகரத்தினது திரிபாகியும். மியா வென்னு முன்னிலை யசைச்சொல்லின் மகர மெய்யிலிருந்தும். தன் மாத்திரையிற் குறைவதாகிய - இகரம் - குற்றியலிகரமாம். உம். நாகியாது - எஃகியாது - வரஃகியாது - கொக்கியாது - குரங்கியாது தெள்கியாது. எம். கேண்மியா. எம். வரும்.

௨௭. குற்றிய லுகரமென்பதியாது—

தனிநெடிலும் - ஆய்தமும் - உயிரும் - வல்லினமெய்யும் மெல்லினமெய்யும் - இடையினமெய்யும் - ஈற்றெழுத்திற்கு - அய லெழுத்தாய்த் தொடர்ந்துவருஞ் சொல்லிறுதியினின்ற வல்லினமெ ய்களிலிருந்தும் - நுந்தையென்னுஞ்சொல்லிடத்து நகரமெய்யிலி ருந்தும் - தன் மாத்திரையிற் குறைவதாகிய - உகரம் - குற்றியலுக ரமாம்: இவற்றுள் - ஆய்தமுதலிய வைந்தொடரும் பிறவெழுத்து க்களொன்றும்பலவு மேலே தொடரப்பெறும். உம். நாகு - காசு நீறு - என்பன - நெடிற்றொடர் மொழிக்குற்றிய லுகரம். எஃகு கஃசு - கஃறு - என்பன ஆய்தத்தொடர் மொழிக்குற்றிய லுகரம் வரகு பலாசு - இறும்பூது - என்பன உயிர்த்தொடர்மொழிக்குற்றிய லுக ரம். ஆக்கு - பொருப்பு - காற்று - என்பன வன்றொடர்மொழிக்

குற்றியலுகரம். ஞாங்கு - அரும்பு - கன்று - என்பன மென்றொடர் மொழிக்குற்றியலுகரம். வெய்து - சால்பு - தெள்கு - என்பன இடைத்தொடர்மொழிக் குற்றியலுகரம். எனவரும் - பிறவுமன்ன.

உஅ. ஐகாரக்குறுக்கமென்பதியாது—

மொழிக்கு முதலிடைகடை என்னுமூன்றிடத்திலு நின்று தன்மாத்திரையிற் குறைவதாகிய ஐகாரம் - ஐகாரக்குறுக்கமாம். உம். ஐயன் - எம். இடையன் - எம். பனை - எம். வரும்.

உகூ. ஒளகாரக்குறுக்கமென்பதியாது—

மொழிக்கு முதலினின்று தன்மாத்திரையிற் குறைவதாகிய ஒளகாரம் - ஒளகாரக்குறுக்கமாம். உம். ஒளவை - கௌவை - என வரும்.

௩0. மகரக்குறுக்கமென்பதியாது—

செய்யுளிடத்துச் செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுச் சொல்லினது ஈற்றயலுகரந் தானேறியிருந்த லகர ளகர மெய்களை விட்டுக்கெடுமிடத்து நின்ற லகரந்திரிந்த னகரமும் ளகரந்திரிந்த ணகரமும் ஆகியவிரண்டன்முன்னின்றும் வகரத்திற்குப்பின்னின்றுந் தன்மாத்திரையிற் குறைவதாகிய மகரம் - மகரக்குறுக்கமாம். உம். பொன்னொடுகூவிளம்பூத்ததுபோன்ம். மயிலியன் மாதர் மருண்ம். வரும்வணிகன். எனவரும். இவற்றுள் - போலும் என்பது போன்ம் எம். மருளும் - என்பது மருண்ம். எம். வந்தன.

௩க. ஆய்தக்குறுக்கமென்பதியாது—

தகரமுதன்மொழி வருமொழியாய் வந்து புணர்ந்தவிடத்து நிலைமொழித்தனிக்குற்றெழுத்தின் முன்னின்ற லகர ளகரங்களினது திரிபாய்த்தன்மாத்திரையிற் குறைந்து நிற்குமாய்தம் - ஆய்தக் குறுக்கமாம். உம். கல் - தீது - கஃறீது. எம். முள் - தீது - முஃடீது. எம். வரும்.

௩உ. எழுத்துக்களுடைய பிறப்பென்பதியாது—

உயிரின்முயற்சியா லெழுகின்ற காற்றினாலே நாதமாய்த் தலையும் - கழுத்தும் - மார்பும் - மூக்கும் - ஆகிய நான்கிடத்தை யும் பொருந்தி — உதடும் - நாவும் - பல்லும் - மேல்வாயும் - ஆகிய

நான்கன்றொழிலால் வேறுவேறு எழுத்தோசையாய்த்தோன்றுதல் எழுத்துக்களின் பிறப்பாம்.

௱௱. முதலெழுத்துக்களுள் எவ்வெவ்வெழுத்துக்கள் கழுத்துமுதலான நான்கனுளெவ் வெவ் விடத்தைப்பொருந்தும்—

உயிர்பன்னிரண்டும் - இடையின மெய்களாறுங் கழுத்தையும். மெல்லின மெய்களாறு மூக்கையும். வல்லின மெய்களாறுந் தலையையும். இடமாகப்பொருந்தும்.

௱௪. உயிர்களுளெவ்வெவ்வெழுத்துக்கள் - உதடுமுதலான நான்கனுளெவ்வெவற்றின் றொழிலாற் பிறக்கும்—

அ - ஆ - இரண்டு மேல்வாயின் றொழிலாகிய வாயைத்திறத்தலாலும். இ - ஈ - எ் - எ - ஐ - ஐந்தும் வாயைத்திறத்தலுடனே அடிநாவின் விளிம்பு அண்பல்லைப்பொருந்தலாலும். உ - ஊ - ஒ் - ஓ - ஔ - ஐந்தும் உதடுகளைக்குவித்தலாலும் பிறக்கும்.

௱௫. மெய்களுளெவ் வெவ் வெழுத்துக்கள் அந்நான்கனு ளெவ்வெவற்றின் றொழிலாற் பிறக்கும்—

கவ்வும் - ஙவ்வும் - அடிநாமேல்வா யடியைப் பொருந்தலாலும். சவ்வும் - ஞவ்வும் - இடைநாமேல் வாயிடையைப்பொருந்தலாலும். டவ்வும் - ணவ்வும் - நுனிநாமேல் வாய்க் கடையைப் பொருந்தலாலும். தவ்வும் - நவ்வும் - நுனிநா அண்பல்லடியைப் பொருந்தலாலும். பவ்வும் - மவ்வும் - மேலுதடுங்கீழுதடும் பொருந்தலாலும். யகரங்கழுத்துளெழுகின்ற காற்றோசைமேல் வாயை நெருக்கலாலும். ரவ்வும் - ழவ்வும் - நுனிநாமேல் வாயைத்தடவுதலாலும். லகரம் - நாவின் விளிம்பு அண்பல்லடியைத்தடித்துத் தீண்டலாலும். வகரம் - மேற்பல் கீழுதட்டைப்பொருந்தலாலும். ளகரம் - நாவின் விளிம்புமேல் வாயைத்தடித்துத்தடவலாலும். றவ்வும் - னவ்வும் - நுனிநாமேல்வாயை மிகப்பொருந்தலாலும்பிறக்கும்.

௱௬. சார்பெழுத்திற்கு இடமுமுயற்சியும்யாவை—

ஆய்தம் பிறத்தற்கு-இடந்தலையும்-முயற்சியங்காந்து கூறுதலுமாம். ஒழிந்த சார்பெழுத்துக்களுக்கு அவற்றின் முதலெழுத்துக்களினுடைய விடமுயற்சிகளே யுரியவாம்.

௩௭. எழுத்துக்களுக் கெல்லா மாத்திரை பொருந்துமளவா மா
றென்னை —

உயிரளபெடைக்கு மூன்றுமாத்திரையுநான்குமாத்திரையும்-
நெட்டெழுத்துக்கிரண்டு மாத்திரையும் - மொழிக்கு முதல் வரும்
ஐகாரக்குறுக்கத்திற்கும் ஔகாரக்குறுக்கத்திற்குந் தனித்தனி யொ
ன்றரை மாத்திரையும் - குற்றெழுத்திற்கும் மொழிக்கிடையிலு
மிறுதியிலும் வரும் ஐகாரக்குறுக்கத்திற்கும் ஒற்றளபெடைக்கும்
தனித்தனி யொரு மாத்திரையும் - உயிர் மெய்களுக்கு ஏறிய வுயிர்
களின் மாத்திரையும் - மெய்களுக்குங் குற்றிய லிகரத்திற்குங் குற்
றிய லுகரத்திற்கும் ஆய்தத்திற்குந் தனித்தனி யரை மாத்திரையும்
மகரக்குறுக்கத்திற்கும் ஆய்தக்குறுக்கத்திற்குந் தனித்தனி கால்
மாத்திரையும் பொருந்துமளவாம்.

௩௮. ஒரு மாத்திரைக்களவியாது —

மாந்தருடைய கை நொடிப்பொழுதே யொரு மாத்திரை
க்களவாம்.

௩௯. மொழிக்கு முதனிற்கு மெழுத்துக்க ளியாவை —

உயிர் பன்னிரண்டும் - உயிரேறிய - க - ச - த - ந - ப - ம
வ - ய - ஞ - என்னு மொன்பது மெய்களும் - ஆகிய விருபத்தோ
ரெழுத்துக்களு மொழிக்கு முத னிற்பனவாம். உம். அணி - ஆடை
இலை - ஈரல் - உரல் - ஊர்தி - எழு - ஏணி - ஐயம் - ஒளி - ஓந்தி
ஔவியம் - எம். கலை - சமழ்ப்பு - தஞ்சம் - நன்மை - பஞ்சு - மந்தி
வஞ்சம் - யமன் - ஞண்டு - எம். வரும்.

௪௰. அவ்வொன்பது மெய்களுள் - எத்தனை மெய்கள் - பன்னி
ரண்டுயிரோடு மொழிக்கு முதல்வரும் —

க - ச - த - ந - ப - ம - என்னுமாறு மெய்களும் பன்னி
ரண்டுயிரோடு மொழிக்கு முதல்வரும். உம். களி - காளி - கிளி - கீரை
குளிர் - கூடு - கெண்டை - கேழல் - கைதை - கொண்டை - கோ
டை - கௌவை - எம். சட்டி - சாந்து - சினம் - சீர் - சுக்கு - சூல்
செக்கு - சேவல் - சையம் - சொன்றி - சோறு - சௌரியம் - எம்.
தகை - தார் - திதலை - தீமை - துளை - தூசு - தெளிவு - தேன்
தையல் - தொண்டு - தோடு - தௌவை - எம். நஞ்சு - நாரி - நிலம்

நீறு - நுகம் - நூல் - நெல் - நேர்மை - நைதல் - நொய்து - நோய் ,
நௌவி - எம். பந்து - பால் - பிட்டு - பீடு - புள் - பூண்டு - பெருமை
பேடு - பையல் - பொன் - போது - பௌவம் - எம். மனை - மாடு
மின்னல் - மீன் - முள் - மூரி - மெய்ம்மை - மேதி - மையல்
மொட்டு - மோகம் - மௌவல் - எம். வரும்.

௬௧. ஒழிந்த - வ - ய - ஞ - என்னு மூன்று மெய்களுமெத்தனை
யெத்தனை யுயிரோடு மொழிக்கு முதல்வரும் —

உ - ஊ - ஒ - ஓ - என்னு நான்குமல்லாத வெட்டுயிருடன்
வகரமும் அ - ஆ - உ - ஊ - ஓ - ஔ - என்னு மாறுயிருடன்
யகரமும். அ - ஆ - எ - ஒ - என்னு நான்குயிருடன் - ஞகரமும்.
மொழிக்கு முதல்வரும். உம். வளி - வாளி - விளி - வீடு - வெண்
மை - வேரல் - வையம் - வௌவல் - எம். யவனர் - யானை - யுகம்
யூகம் - யோகம் - யௌவனம் - எம். ஞமலி - ஞாலம் - ஞெகிழி
ஞொள்கல் - எம். வரும்.

௬௨. மொழிக்கிறுதியினிற்கு மெழுத்துக்களியாவை —

உயிர் பன்னிரண்டும். ஞ - ண - ந - ம - ன - ய - ர - ல
வ - ழ - ள - என்னும் பதினொரு மெய்களுங் குற்றிய லுகரமுமா
கிய விருபத்துநா லெழுத்துக்களு மொழிக்கிறுதி யினிற்பனவாம் :
இவையீறுமிடத்து - எகரமொழிந்த வுயிர்பதினொன்றும் - மெய்
யோடுகூடியும் - ஔகாரமொழிந்த நெட்டுயிராறு மோரெழுத்தொ
ருமொழியாய்த் தனித்துநின்றும் - குற்றுயிரைந்து மளபெடுப்புழி
நின்று மீறுமெனவுணர்க. உம். விள - பலா - கிளி - தீ - கடு - பூ -
சே - கை - நொ - போ - வௌ - எம். ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ
எம். பலாஅ - குரீஇ - பூஉ - சேஎ - கோஒ - எம். உரிஞ் - உண்
பொருந் - நலம் - பொன் - வேய் - வேர் - வேல் - தெவ் - யாழ்
வாள் - நாகு - எம். வரும்.

௬௩. இடைநிலையென்ப தெத்தனை வகையினையுடைத்தாம் —

உடனிலை மெய்ம்மயக்கமும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமுமெ
ன விருவகையினையுடைத்தாம்.

௬௪. உடனிலைமெய்ம்மயக்கமென்பதியாது —

ரகர - ழகரமொழிந்த பதினாறு மெய்களுந் தம்முன்னர்த் தாமே யுயிரோடுகூடி நின்றுமயங்குதல்-உடனிலைமெய்ம்மயக்கமாம். உம். அக்கம் - அங்ஙனம் - அச்சம் - அஞ்ஞானம் - அட்டு - அண்ணம் - அத்தம் - அந்நீர் - அப்பம் - அம்மை - அய்யம் - அல்லி அவ்வை - அள்ளல் - அற்றம் - அன்னை - எனவரும்.

௪௫. வேற்றுநிலை மெய்ம்மயக்க மென்பதியாது—

க - ச - த - ப - என்னு நான்கனையு மொழித்துநின்றபதினான்கு மெய்முன்னு முயிரோடு கூடிநின்று மவற்றுள் யரழ முன்னும் - ல - ள - மெய்திரிந்த - ண - ன - முன்னுந் தனித்துநின்றும் பிறமெய்கண் மயங்குதல் - வேற்றுநிலை மெய்ம்மயக்கமாம்.

௪௬. அப்பதினான்கு மெய்களுக்குமுன் னெவ்வெம் மெய்கள் உயிரோடுகூடி நின்றுமயங்கும்—

[illegible]ன் - என - ஙகரமுன் - ககரமும். கஞ்சன் - உரிஞ்யாது என - ஞகரமுன் - சயவென்னு மிரண்டும். கட்கம் - கட்சி - நுட்பம் - கற்க - கற்சிறார் - கற்பு - என - டறமுன் - க - ச - ப - என்னுமூன்றும். வெண்கலம் - வெண்சோறு - வெண்ஞமலி - விண்டு வெண்பல் - வெண்மலர் - மண்யாது - மண்வலிது - என - ணகரமுன் - க - ச - ஞ - ட - ப - ம - ய - வ - என்னுமெட்டும். கந்தன் - பொருந்யாது - என - நகரமுன் - த - ய - என்னுமிரண்டும். கம்பன் - கலம்யாது - கலம்வலிது - என - மகரமுன் - ப - ய - வ என்னு மூன்றும். வேய்கடிது - வேய்சிறிது - வேய்ஞான்றது வேய்தீது - வேய்நீண்டது - வேய்பெரிது - வேய்மாண்டது - வேய் வலிது - என - யகரமுன் - க - ச - ஞ - த - ந - ப - ம - வ - என்னு மெட்டும். வேர்கடிது வீழ்கடிது - சிறிது - ஞான்றது - தீது நீண்டது - பெரிது - மாண்டது - யாது - வலிது - என - ரகர - ழகர முன் - க - ச - ஞ - த - ந - ப - ம - வ - ய - என்னுமொன்பதும். வேல்கடிது வாள்கடிது - சிறிது - பெரிது - யாது - வலிது - என லகர - ளகர முன் - க - ச - ப - ய - வ - என்னுமைந்தும். தெவ் யாது - என - வகரமுன் - யகரமும். புன்கண் - புன்செய் - புன் ஞமலி - புன்பயிர் - புன்மலர் - பொன்யாது - பொன்வலிது - புன்றலை - என - னகர முன் - க - ச - ஞ - ப - ம - ய - வ - ற - என்னு மெட்டு முயிரோடுகூடி நின்றுமயங்கும்.

சஎ. ய - ர - ழ - என்னு மூன்று மெய்முன்னு மெத்தனைமெய் தனித்துநின்றுமயங்கும்—

அம்மூன்றுமெய்முன்னும் - க - ச - த - ப - ங - ஞ - ந ம - என்னுமெட்டுமெய்களு முயிரோடுகூடாது தனித்துநின்றுமய ங்கும். உம். வேய்க்குறை - வேர்க்குறை - வீழ்க்குறை - எம். வேய் ச்சிறை - வேர்ச்சிறை - வீழ்ச்சிறை - எம். வேய்த்தலை - வேர்த்தலை வீழ்த்தலை - எம். வேய்ப்புறம் - வேர்ப்புறம் - வீழ்ப்புறம் - எம். வேய்ங்குழல் - ஆர்ங்கோடு - பாழ்ங்கிணறு - எம். காய்ந்தனம் நேர்ந்தனம் - வாழ்ந்தனம் - எம் வரும். ஞகர - மகர மயங்குதற்கு உதாரணம் வந்தவிடத்திற் கண்டுகொள்க.

சஅ. ள - ல - மெய்திரிந்த - ண - ன - முன்னெந்த மெய்தனித் துநின்றுமயங்கும்.

மகர்மெய்தனித்துநின்று மயங்கும் உம். மருண்ம்-பொ ன்ம். எனவரும்.

சகூ. முதலெழுத்துக்களும் - மொழியைச்சாராது தனித்து நிற் குஞ் சார்பெழுத்தாகிய வுயிர்மெய்யெழுத்துக்களும் - எவ்வாறுவழ ங்கும்—

மெய்கள் - க - ங - என - அவ்வென்னுஞ் சாரியை பெற் றும் - அதனோடு ககரம் - ஙகரம் - எனக்காரச்சாரியைபெற்றும் ககாரம் - ஙகாரம் - எனக் காரச்சாரியைபெற்றும் - கஃகான் - ஙஃ கான் - எனக்கான்சாரியைப்பெற்றும் வழங்கும். உயிர்நெடில் - ஆ ஐ - ஔ - எனச்சாரியை பெறுதும். ஆகாரம் - ஔகாரம் - எனக் காரச்சாரியை பெற்றும் - அவற்றுள் - ஐ - ஔ - என்னுமிரண்டுங் காரமன்றி - ஐகான் - ஔகான் - எனக்கான்சாரியைபெற்றும் - வழ ங்கும். உயிர்க்குறிலும்-உயிர்மெய்க்குறிலும் - அ - இ - க - கி - என ச்சாரியைபெறுதும் அகரம் - அகாரம் - அஃகான். ககரம் - ககாரம் கஃகான். எனக்கரமுங் காரமுங் கானுமாகிய மூன்றுசாரியையும் பெற்றும் வழங்கும்: மெய்கள் சாரியையின்றியும் உயிர் மெய் நெ டில் சாரியைபெற்று மியங்காவாம்.

ருய. எழுத்துக்களுள் சில வெழுத்துக்களிரண்டாகக்கூடிநின்று வேறோரெழுத்தைப்போலொலித்துப் பயன்பட்டுவருமோ—

அகரத்துடன் யகர மெய்சேர்ந்து ஐகாரம் போன்றும் அகரத்துடன் வகரமெய்சேர்ந்து ஔகாரம்போன்றும் பயன்பட்டுச்சிலவிடங்களில் வரும். இங்ஙனம் வருவனவற்றைப் போலியெழுத்தென்று பிணையெழுத்தென்றுங்கூறுவர். உம்.

வய்யக மெல்லாங் கழனியாய் வய்யகத்துட்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் - எம்.
செவ்வியெறு நீதிவளஞ் செப்புதற்கு ஞாலமிசை
யவ்வைபோ லுண்டோவறை. எம். வரும்

இவற்றுள் வையகம் - என்பதற்கு - வய்யகம் எனவும். ஔவை - என்பதற்கு - அவ்வை எனவும் வந்தன. இங்ஙனம் வாராவிடினெனுமை வழுவா மாறறிக.

எழுத்தியன் முற்றிற்று.

---

# இரண்டாவது பதவியல்.

---

௫௧. பதமென்பதியாது—

மேற்கூறப்பட்ட வெழுத்துக்கள் ஒவ்வொன்றாகத்தனித்து நின்றும் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்துநின்றும் பிறபொருளைத்தரின் - அதுவே பதமாம்.

௫௨. தனித்துநிற்கின்ற வோரெழுத்துப்பதங்களியாவை—

ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ - எம். கா - கு - கூ - கை கோ - கௌ - எம். தா - தீ - து - தூ - தே - தை - எம் நா - நீ நே - நை - நொ - நோ - எம். பா - பீ - பூ - பே - பை - போ எம். மா - மீ - மூ - மே - மை - மோ - எம். உயிரும் - க - த ந - ப - ம - என்னு முயிர்மெய்யுமாகிய ஆறுவருக்கத்தினு மவ்வாறெழுத்துக்களும். வா - வீ - வே - வை - வௌ - என வகரவருக்கத்தி னைந்தெழுத்துக்களும் சா - சீ - சே - சோ - எனச் சகரவருக்கத்தில் நான்கெழுத்துக்களும். யா - என யகரவருக்கத்தி லோரெழுத்தும் ஆகிய நாற்பத்தாறும் - ஓரெழுத்துப்பதங்களாம்.

௫௩. இரண்டெழுத்து முதலியவாகத் தொடரும் பதங்களாயா வை—

அணி - அறம் - அற்பம் - குழையினன் - முதலிய பலவு மாம்.

௫௪. அப்பத மெத்தனை வகையினையுடைத்தாம்—

பகாப்பதமும் பகுபதமுமென விருவகையினையுடைத்தாம்: இவற்றுள் பகாப்பத மிரண்டெழுத்துமுத லேழெழுத்தீறாகவும் - பகுபத மிரண்டெழுத்துமுத லொன்பதெழுத் தீறாகவுந்தொடர்ந்துநிற்குமெனக்கொள்க. உம் வளை - அறம் - உம்பல் - பம்பரம் - தருப்பணம் - உத்திரட்டாதி - எம். கூனி - கூனன் - குழையன் - பொருப்பன் - அம்பலவன் - அம்பலத்தான் - உத்திராடத்தான் - உத்திரட்டாதியான் - எம். வரும். பிறவுமன்ன.

௫௫. பகாப்பதங்க ளென்பன யாவை—

பகுக்கப்படாத வியல்பினையுடைய பெயர்ச்சொல்லும் - வினைச்சொல்லும் - இடைச்சொல்லும் - உரிச்சொல்லும் - ஆகிய நான்கும் பகாப்பதங்களாம். உம். நிலம் - நீர் - நெருப்பு - காற்று - வான் - பொன் - மலை - மரம் - காடு - என்பன பெயர்ப்பகாப்பதங்கள். நட - வா - விடு - போ - உண் - தின் - தேடு - என்பன வினைப்பகாப்பதங்கள். மன் - கொல் - மற்று - அம்ம - என்பன விடைப்பகாப்பதங்கள். உறு - தவ - கடி - எழில் - என்பன வுரிப்பகாப்பதங்கள். பிறவுமன்ன.

௫௬. பகுபதங்க ளென்பன யாவை—

பகுக்கப்படு மியல்பினையுடைய பொருண்முதலிய காரணத்தான்வரும்பெயரும் - வெளிப்படையாகக் காலத்தைக்கொள்ளுந் தெரிநிலை வினையும் - குறிப்பாகக் காலத்தைக்கொள்ளுங் குறிப்பு வினையும் - வினையாலணையும் பெயரும் - ஆகிய நான்கும் பகுபதங்களாம். உம். பொன்னன் - நிலத்தன் - வேனிலான் - கண்ணன் கரியன் - ஊணன் - என்பன பொருண்முதலிய காரணத்தான் வரும் பெயர்ப்பகுபதங்கள். நடந்தான் - நடவான் - நடந்த - நடவாத - நடந்து - நடவாது - என்பன வினைப்பகுபதங்கள். பொன்னன் - கரியன் - கரிய - இன்றி - என்பன வினைக்குறிப்புப்பகுபதங்கள். நடந்தான் - நடந்தவன் - பொன்னன் - என்பன வினையாலணையும் பெயர்ப்பகுபதங்கள். பிறவுமன்ன.

௩௭. மேற்கூறிய பெயர்ப் பகுபதத்தோடு வினைக்குறிப்பு முற்றிற்கும் - வினைமுற்றோடு வினையாலணையும்பெயர்க்கும் - உண்டாகிய வேறுபாடென்னை—

பெயர்ப்பகுபதம் பகுதி விகுதியிரண்டிலும் பொருட்சிறப்புடையதாய்க் காலங்கொள்ளாது வேற்றுமையுரு பேற்றுவருதலும் - வினைக்குறிப்புமுற்று அங்ஙனம் வாராமையு மவ்விரண்டற்கும் வேறுபாடாம். வினைமுற்று - பகுதியிற் பொருட்சிறப் புடையதாய்க் காலங்கொண்டு வேற்றுமையுருபேலாது வருதலும் - வினையாலணையும்பெயர் விகுதியிற் பொருட்சிறப்புடையதாய்க் காலங்கொண்டு வேற்றுமையுரு பேற்றுவருதலு மவ்விரண்டற்கும் வேறுபாடாம். உம். பொன்னனை - பொன்னன் - எம். நடந்தான் - நடந்தானை - பண்டுபொன்னன் - பண்டுபொன்னனை - எம். வரும் : அன்றியும் வினையாலணையும்பெயர் நடந்தவன் - வந்தவன் - என வீறுதிரிந்து வருதலுங்கொள்க.

௩௮. பகுபதங்களுள் - மேற்கூறப்பட்ட நான்குவகையுமேயன்றி யவற்றுளடங்காது வேறாய் வருவனவுமுண்டோ—

அத்துணைச்சிறப்பின்றி வருவனவுஞ் சிலவுளவாம். அவை தொழிற்பெயரும் - சில பண்புப்பெயரும் - பிறபெயருமாம். உம். நடத்தல் - வருதல் - உண்டல் - சேறல் - என்பன தொழிற்பெயர்ப்பகுபதங்கள். கருமை - செம்மை - என்பன பண்புப்பெயர்ப் பகுபதங்கள். சேர்ந்தார்க்கொல்லி - உடுக்கை - என்பன பிறபெயர்ப்பகுபதங்கள் - எனவரும்.

௩௯. இப்பகுபதங்க ளனைத்து மெவற்றான் முடிவுபெற்று நடக்கும்—

பகுதி - விகுதி - இடைநிலை - சாரியை - சந்தி - விகாரம் என்னு மாறுகருவிகளில் அவ்வப்பதப்பொரு ளமைதிக்கேற்பப் பகுதி - விகுதி - என்னு மிரண்டுமுதலியவற்றான் முடிவுபெற்றுநடக்கும். உம். கூனி - ஆடல் - என்பன பகுதி விகுதியான் முடிந்தன. உண்டான் - தின்றான் - என்பன வவ்விரண்டுடனே இடைநிலைபெற்றுமுடிந்தன. உண்டனன் - தின்றனன் - என்பன அம்மூன்றுடனே சாரியைபெற்று முடிந்தன. நடக்கின்றனன் - உரைக்கின்றனன் - என்பன அந்நான்குடனே சந்திபெற்றுமுடிந்தன. நடந்தனன் - வந்தனன் - என்பன அவ்வைந்துடனே விகாரமும்பெற்று

முடிந்தன. பிறவுமன்ன : இக்கருவிகளாறுமுறையே தன்னியல்பினி ற்கையாற் பகுதியென்றும்-தன்னியல்பினிற்கும்பகுதிப்பொருளைத் தன்னிடத்தவாவவிகாரப்படுத்துதலால் விகுதியென்றும்-பகுதி விகுதிகளுக்குநடுநிற்கையாலிடைநிலையென்றும் - விகுதிமுதலிய புணர்ச்சியைச் சார்ந் தவ்விடததிற் கியைந்து நிற்கையாற் சாரியையென்றும் - நால்வகைச்சொற்களு மொன்றோடொன்று சந்திக்குமிடத்து வருதலாற் சந்தியென்றும் - வலித்தலு மெலித்தலு முதலியவாக விகாரப்படுதலால் விகாரமென்றும் பெயர்பெற்றன.

௬௰. பகுதியாவதெத்தனை வகையினையுடைத்தாம் —

பெயராய்வரும்பகுதியும் - வினையாய்வரும்பகுதியும் - என விருவகையினையுடைத்தாம் : இவ்விரண்டே யன்றிச் சிறுபான்மை இடைச்சொல்லும் - உரிச்சொல்லும்-பகுதியாய்வருதலு முளவெனக்கொள்க.

௬௧. பெயராய்வரும் பகுதிகளியாவை —

பொருட்பெயர் - இடப்பெயர் - காலப்பெயர் - சினைப்பெயர் - குணப்பெயர் - தொழிற்பெயர் - என்னு மறுவகைப்பெயரும் பெயராய்வரும் பகுதிகளாம்.

௬௨. மேற்கூறியபொருளாதி யறுவகைப்பெயர்களு மெவ்வெப் பகுபதங்கட்குப் பகுதிகளாம் —

பெயர்ப் பகுபதங்கட்கும் வினைக்குறிப்புப்பகுபதங்கட்கும் பகுதிகளாம் : வினைக்குறிப்பிற்குப் பகுதியாமெனவே வினைக்குறிப்பு முற்றொழிலணையும் பெயர்க்கும் பகுதியாமென்பது கூறாமே யமையுமெனக்கொள்க. உம். குழையன் - அகத்தன் - ஆதிரையான் பல்லன் - செய்யன் - கூத்தன் - எனவரும். இவையேபெயர்ப்பகுபதங்கட்கும்வினைக்குறிப்புமுற்றிற்குமுதாரணமாமெனக்கொள்க. இவற்றுள்-குழை - அகம் - ஆதிரை - பல் - செம்மை - கூத்து - எனப்பொருளாதி யறுவகைப் பெயரும் பகுதியாயின வாறுகாண்க. அவன் - எவன் - பிறன் - எனப்பெயர்ப்பகுபதங்கட்கு இடைச்சொற்கள் பகுதியாய்வருதலு முண்டென்றறிக.

௬௩. பெயராய்வரு மவ்வறுவகைப்பகுதிகளுள், விகுதி புணருங்கால் விகாரப்பட்டு வருவனவுமுளவோ —

மைவிகுதிபுணர்ந்துநின்ற - செம்மை - கருமை - முதலிய பண்புப்பெயர்கள் பெரும்பாலும் விகாரப்பட்டு வருவனவாம்: இவை விகாரப்படுதல் பதப்புணர்ச்சிக்குங்கொள்க.

௯௪. அவையெவ்வாறு விகாரப்படும்—

ஈற்று மைவிகுதிகெடுதலும் - நடுநின்ற வுயிர்மெய்யேனு முயிரேனுங்கெடுதலும் - இடையுகர மிகரமாய்த்திரிதலும் - இடைமெய் மற்றொரு மெய்யாய்த்திரிதலு மிரட்டித்தலும் - தன்முன் வரும் வல்லெழுத்திற்கினமிகப்பெறுதலும் - முதற்குறி னீண்டுவருதலும் - முதலகரம் ஐகாரமாதலும் - இவைபோல்வன பிறவுமப்பண்புப் பெயர்கட்கு வரும் விகாரங்களாம்: ஒருபண்புப் பெயர்க்கே யிவ்விகாரங்களுள் ஒன்றும் பலவும் வருமெனக்கொள்க. உம். அணியன் - என்பதில் - அணிமையென்பதினீற்று விகுதிகெட்டது. பைந்தார் - என்பதில் - பசுமையென்பதி னீற்றுவிகுதியும் - நடுநின்ற வுயிர்மெய்யுங்கெட்டு முதலகர மைகாரமாகியினமெய்மிக்கது. பேரறிவு என்பதில் - பெருமையென்பதி னீற்று விகுதியோடு நடுநின்ற வுகர வுயிர்கெட்டு முத னீண்டுவந்தது. கரியன் - என்பதில் - கருமை யென்பதி னீற்று விகுதிகெட்டு நடுநின்ற வுகர மிகரமாயிற்று. சேதாம்பல் - என்பதில் - செம்மையென்பதி னீற்று விகுதிகெட்டு முதனீண்டு நடுநின்ற மகரமெய் தகரமெய்யாய்த்திரிந்தது. வெற்றிலை - என்பதில் - வெறுமையென்பதி னீற்று விகுதியும் நடுநின்ற வுயிருங்கெட்டு மெய் யிரட்டித்தது. பிறவுமன்ன: இப்பண்புப் பெயர்கள் பெரும்பாலும் விகாரமாமெனவே - கறுப்பன் - அன்பன் - எனவரும் பிற பண்புச் சொற்களைப்போல - அணிமையன் - கருமையன் எனச்சிறுபான்மை விகாரமின்றியும் வருமெனக்கொள்க.

௯௫. வினையாய்வரும் பகுதிகளியாவை—

நட - வா - மடி - சீ - விடு - கூ - வே - வை - நொ - போ - வெள - உரிஞ் - உண் - பொருந் - திரும் - தின் - தேய் - பார் - செல் - வவ் - வாழ் - கேள் - அஃகு - என வுயிரு மெய்யுங்குற்றிய லுகரமுமாகி யிருபத்துமூன்றீற்றையுடையனவாய்ப் பகாப்பதங்களாய்ப் படுத்தலோசையைக்கொண்டுநிற்கு முதனிலைத்தனிவினைப் பெயர்களனைத்துமாம்.

சுசு. நடமுதலிய விவ்விருபத்திமூன் றீற்று வினைச் சொற்களு மெவ்வெப்பகுபதங்கட்குப் பகுதிகளாம்—

முற்றும் பெயரெச்சமும் வினையெச்ச முந்தொழிற்பெய ருமாகிய நான்கு வகைப்பட்ட தெரிநிலை வினைப் பகுபதங்கட்கும் பகுதிகளாம். உம். நடந்தான் - வந்தான் - மடிந்தான் - சீத்தான் - விட்டான் - கூவினன் - வெந்தான் - வைத்தான் - நொந்தான் - போயினன் - வெளவினன் - உரிஞினன் - உண்டான் - பொருநினன் - திருமினன் - தின்றான் - தேய்த்தான் - பார்த்தான் - சென்றான் - வவ்வினன் - வாழ்ந்தான் - கேட்டான் - அஃகினன் - எம். நடந்த - வந்த - எம். நடந்து - வந்து - எம். நடத்தல் - வருதல் - எம். வரும் பிறவுமன்ன: இவை தெரிநிலைவினை முற்றிற்குப் பகுதியா மெனவே அவ்வினையாலணையும் பெயர்க்கும் பகுதியாமென்பதுதா னேயமையுமென்க.

சுஎ. தெரி நிலைவினைகட்கு - நட - வா - முதலிய வினைச்சொற்க ளேயன்றிப் பிறசொற்கள் பகுதியாய் வருதலுமுளவோ—

பிறசொற்கள் பகுதியாய்வருதலுஞ் சிறுபான்மையுள - அவை பெயர்ச்சொல்லும் - இடைச்சொல்லும் - உரிச்சொல்லுமாம். உம். சித்தரித்தான் - கடைக்கணித்தான் - என்பவற்றின்முறையே சித்திரம் - கடைக்கண் - என்னும் பெயர்ச்சொற்கள் பகுதியாயின. பொன்போன்றான் - புலிநிகர்த்தான் - என்பவற்றின் முறையே - போல் - நிகர் - என்னுமிடைச்சொற்கள் பகுதியாயின சான்றான் - மாண்டான் - என்பவற்றின்முறையே - சால் - மாண் - என்னுமுரி ச்சொற்கள் பகுதியாயின. பிறவுமிவ்வாறு வருதல்காண்க.

சுஅ. நட - வா - முதலியசொற்கள் பகுதியாய் நிற்குமிடத் தெவ் வாறுவரும்—

இயல்பாகியும் விகாரமாகியும் வரும்.

சுகூ. இயல்பாய்வரும் பகுதிகளியாவை—

உழுதான் - தொழுதான் - உண்டான் - தின்றான் - என்பவற்றுள் - உழு - தொழு - உண் - தின் - எனவருவன வியல்பாய்வரும் பகுதிகளாம்.

எ௦. விகாரமாய்வரும் பகுதிகளெவ்வாறு விகாரப்பட்டுவரும்—

முதற்குறி னீளலும் - முதனெடிற் குறுகலும் - முதலாகாரம் ஏகாரமாய்த்திரிதலும் - தன்முன்னேருயிர்மெய் விரியப்பெறுதலும் - இடைநின்ற வகர மகாரமாதலும் - ஈற்றுமெய்வருமெழுத்தாயேனு மதற்கினமாயேனுந் திரிதலும் - தன்முன் வரும் வல்லெழுத்து மிகப்பெறுதலும் - மிக்கவல்லொற்று மெல்லொற்றாதலும் இவைபோல்வன பிறவாதலுமாக - விகாரப்பட்டுவரும். உம். சேறல் என்பதில் - செல்லென் பகுதிமுதனீண்டது. தந்தான் - என்பதில் தாவென் பகுதிமுதல்குறுகி மிக்கமெய்திரிந்தது. செத்தான் - என்பதில் - சாவென் பகுதிமுதலாகாரமெகரமாய்த்திரிந்தது. வருகின்றான் என்பதில் - வாவென் பகுதிமுதல்குறுகித் தன்முன் னேருயிர்மெய் விரியப்பெற்றது. விராவினான் - என்பதில் - விரவு - என்னும் பகுதி நடு வகர மகாரமாயிற்று. கற்றான் - என்பதில் - கல்லென் பகுதியீற்று மெய்வரு மெழுத்தாய்த் திரிந்தது. சென்றான் - என்பதில் - செல்லென்பகுதி யீற்றுமெய்வருமெழுத்திற் கினமாய்த்திரிந்தது உரைத்தான் - என்பதில் - உரையென் பகுதிவரும் வல்லெழுத்து மிகப்பெற்றது நடந்தான்-என்பதில்-நடவென் பகுதிமுன்மிக்கவல்லொற்று மெல்லொற்றாயிற்று. பிறவு மிவ்வாறுவருதல் காண்க : இப்பகுதிகளுள் இச்சொல் இவ்வாறு விகாரப்படுமெனக் கூறப்புகி னளவுபடாமையாலும் - ஒருதன்மையவாய்நின்ற பகுதிகள் பலவும் பலவாறு விகாரப்படுதலானு மிவற்றிற்கு வருஞ் சில விகாரங்களைப்பொதுப்படக் கூறினும். இவற்று ளடங்காது வருவன வுளவே லவையும் புணரியலு ளடங்குவனவற்றையு மாராய்ந் தமைத்துக்கொள்க.

௭௧. இத்தெரிநிலை வினைப்பகுதிகளுள் விகாரமாய்க் காலங் காட்டுவனவுமுளவோ—

சிலவுளவாம். அவை. கு-று-டு- என்னுமிம்மூன்றுயிர்மெய்களை யீறாகக்கொண்டு குறிலிணையாய் நிற்கும் பகுதிகள் உயிர்முதல் விகுதியோடு புணருமிடத்துப்பெரும்பாலு மீற்றுயிர் கெட்டுநின்ற மெய்யிரட்டித்து இறந்தகாலங்காட்டிவருவனவாம். உம். புக்கான் பெற்றான் - விட்டான் - இவற்றுள்-முறையே -புகு - பெறு - விடு - என்னும் பகுதிகளவ்வாறாதல்காண்க.

௭௨. இன்னும் - நட - வா - முதலிய வித்தெரிநிலை வினைப்பகுதிகள் பிறவினைப்பகுதிகளா மிடத்தெவ்வாறுவரும் —

அவை சிலவிகுதிபெற்றேனும்விகார்ப்பட்டேனும் - விகார
ப்பட்டு விகுதிபெற்றேனும்வரும். அம்மூன்றுவகையு முறையாகக்
கூறுகின்றாம்.

### முதலாவது விகுதிபெற்று வருமாறு.

நட - முதலிய விருபத்துமூன்றீற்றுப் பகுதிகளும் - வி - பி - என்
னு மிவ்விருவிகுதிகளிலொன்றுபெற்று மீண்டும்பெற்றும் அவற்று
ட்சில உயிரீறு மெய்யீறுமாகிய பகுதிகள் - கு - சு - டு - து - பு -
று - என்னு மாறுவிகுதிகளையுந் தனித்தனிபெற்றும் இவ்விகுதிமேல்
விவ்விகுதிபெற்றும்வரும். உம். வா - வருவி - வருவித்தான். வரு
விப்பி - வருவிப்பித்தான். நட - நடப்பி - நடப்பித்தான். நடப்பி
ப்பி - நடப்பிப்பித்தான் - எம். போ - போக்கு - போக்கினான்.
நட - நடத்து - நடத்தினான். எழு - எழுப்பு - எழுப்பினான். பாய்
பாய்ச்சு - பாய்ச்சினான். உருள் - உருட்டு - உருட்டினான். தாழ் -
தாழ்த்து - தாழ்த்தினான். துயில் - துயிற்று - துயிற்றினான். [illegible]
போக்குவி - போக்குவித்தான் - எம். வரும் முறையேகாண்க.

### இரண்டாவது விகார்ப்பட்டு வருமாறு.

சிலமென்றொடர்க் குற்றியலுகரப் பகுதிகள் வன்றொடராதலும்
நெடிற்றொடர் குற்றிய லுகரப் பகுதியீற்று டகர றகர வொற்றுக்
களும் - உயிர்த்தொடர் குற்றியலுகரப்பகுதியீற்றுக் ககர வொற்று
மிரட்டித்துவருதலு மிவைபோல்வன. பிறவுமாம். உம். இயங்கு-
இயக்கு - இயக்கினான். திருந்து - திருத்து - திருத்தினான் - தோ
ன்று - தோற்று - தோற்றினான் - எம். ஆடு - ஆட்டு - ஆட்டினான்.
தேறு - தேற்று - தேற்றினான் - எம். உருகு - உருக்கு - உருக்கி
னான் - எம். வரும்.

### மூன்றாவது விகார்ப்பட்டு விகுதிபெற்று வருமாறு.

மேற் கூறிய வாறே விகார்ப்பட்டு நின்ற பகுதிகள் விவ்விகுதி
பெற்றுவரும். உம். இயக்கு - இயக்குவி - இயக்குவித்தான். உருக்
கு - உருக்குவி - உருக்குவித்தான். எனவரும். இம்மூவகையன்றி
வேறுபட்டுவருவனவுளவே லமைத்துக்கொள்க: இன்னுந்தன்வினை
க்கும் பிறவினைக்கும் பொதுவாய்வரும் பகுதிகள் - தன்வினைப்

பொருள்கொள்ளுமிடத்துத் தகரவிடைநிலைவந்து மெல்லொற்று மிகப்பெற்றுங்கின் றிடைநிலையும் வகர விடைநிலையும்வந் திப்பாலாகப்பெற்றும்வரும் - பிறவினைப்பொருள்கொள்ளுமிடத்துத் தகரமுங்கின்றும் பகரமுமாகிய மூன்றிடைநிலைகளும்வந்து வல்லொற்று மிகப்பெற்றுவரும் - வரலாறு - மடிந்தான் - மடிகின்றான் - மடிவான் - தேய்ந்தான் - தேய்கின்றான் - தேய்வான் - எம். மடித்தான் - மடிக்கின்றான் - மடிப்பான் - தேய்த்தான் - தேய்க்கின்றான் - தேய்ப்பான் - எம். வரும். சிறுபான்மை யிவற்றிற் பிறழ்ந்துவருவனவுளவே லவையுங்கொள்க.

௭௩. விகுதியாவதெத்தனை வகையினை யுடைத்தாம்.—

பெயர்விகுதியும் - தொழிற்பெயர்விகுதியும் - பண்புப்பெயர்விகுதியும் - முற்றுவினைவிகுதியும் - பெயரெச்சவினைவிகுதியும் வினையெச்சவினைவிகுதியும் - என வறுவகையினையுடைத்தாம்.

௭௪. பெயர்களுக்குவரும் விகுதிகளியாவை.

அன் - ஆன் - மன் - ன் - அள் - ஆள் - இ - ள் - அர் - ஆர் - மார் - கள் - ர் - து - அ - வை - வ் - என்னு மிப்பதினேழு மிவைபோல்வன பிறவும் பெயர்கட்குவரும்விகுதிகளாம். உம். குழையன் - வானத்தான் - வடமன் - பிறன் - குழையள் - வானத்தாள் - அரசி - மகள் - குழையர் - வானத்தார் - தேவிமார் - கோக்கள் - பிறர் - அது - குறுந்தாளன - அவை - அவ் - எனவரும்.

௭௫. தொழிற்பெயர்கட்குவரும் விகுதிகளியாவை.—

தல் - அல் - அம் - ஐ - கை - வை - பு - உ - சி - வி - உள் - காடு - மை - து - என்னு மிப்பதினான்கு மிவைபோல்வன பிறவுந் தொழிற்பெயர்கட்குவரும் விகுதிகளாம். உம். வருதல் - ஆடல் - வாட்டம் - கொலை - நடக்கை - பார்வை - நடப்பு - வரவு - புணர்ச்சி - புலவி - விக்குள் - சாக்காடு - உண்ணாமை - நடந்தது - எனவரும்: இவற்றுள் - தல்விகுதியே பெரும்பாலும் வருமெனவும் - துவ்விகுதி அவர் நடந்ததை - நடக்கின்றதை - நடப்பதை என முக்கால விடைநிலைகளையுஞ்சேர்ந்துவருமெனவுங்கொள்க.

௭௬. பண்புப்பெயர்கட்குவரும் விகுதிகளியாவை—

மை - ஐ - சி - பு - உ - கு - றி - று - அம் - நர் - என்னு மிப்பத்து மிவைபோல்வன பிறவும் பண்புப்பெயர்கட்கு வரும் விகுதிகளாம். உம். நன்மை - தொல்லை - மாட்சி - மாண்பு - மழவு - நன்கு - நன்றி - நன்று - நலம் - நன்னர் - எனவரும்: இவற்றுள் மை விகுதியே சிறந்துவருமெனக்கொள்க. இவ்விடத்திற்கூறிய பண்புப்பெயர் விகுதிகளுக்கும் - மேற்கூறிய தொழிற்பெயர்விகுதிகளுக்கும் - தம்மையேற்ற முதனிலைகளைப்பெயர்த் தன்மைபெறச் செய்து நிற்றலே பொருளாமெனவறிக.

௭௭. முற்றுவினைகளுக்கு வரும்விகுதிகளியாவை—

அன் - ஆன் - அள் - ஆள் - அர் - ஆர் - ப - மார் - அ - ஆ - கு - டு - து - று - ஏன் - என் - அல் - அம் - ஆம் - ஏம் - எம் - ஓம் - கும் - டும் - தும் - றும் - ஐ - ஆய் - இ - இர் - ஈர் - தி - இய - இயர் - உ - ஆல் - எல் - காண் - மின் - உம் - என்னுமிந்நாற்பது மிவைபோல்வன பிறவுந் தெரிநிலைவினைமுற்றுக்களுக்கு வரும் விகுதிகளாம். உம். நடந்தனன் - நடந்தான் - நடந்தனள் - நடந்தாள் - நடந்தனர் - நடந்தார் - நடப்ப - நடமார் - நடந்தன - நடவா - உண்கு - உண்டு - நடந்தது - கூயிற்று - நடந்தனென் - நடந்தேன் - நடப்பல் - நடப்பம் - நடப்பாம் - நடந்தனெம் - நடப்பேம் - நடப்போம் - உண்கும் - உண்டும் - வருதும் - சேறும் - நடந்தனை - நடந்தாய் - நடத்தி - நடந்தனிர் - நடந்தீர் - வாழ்க - வாழிய - வாழியர் - அருளு - மாறல் - அழேல் - சொல்லிக்காண் - நடமின் - உண்ணும் - எனவரும். இந்நாற்பதுவிகுதிகளுள் - படர்க்கையிடத்து வருகின்ற - அன் - ஆன் - அள் - ஆள் - அர் - ஆர் - அ - டு - து - று - என்னும் பத்துவிகுதிகளும் - தன்மையிடத்து வருகின்ற - ஏன் - என் - அம் - ஆம் - ஏம் - எம் - ஓம் - என்னுமெழுவிகுதிகளும் - முன்னிலையிடத்துவருகின்ற - ஐ - ஆய் - இர் - ஈர் - என்னு நான்கு விகுதிகளும் - ஆகிய விருபத்தொரு விகுதிகளு மிவைபோல்வன பிறவும் வினைக்குறிப்பு முற்றுக்களுக்கும் விகுதிகளாம். உம். கரியன் - கரியான் - கரியள் - கரியாள் - கரியர் - கரியார் - கரியன - குறுந்தாட்டு - கரிது - குழையிற்று -

கரியென் - கரியேன் - கரியம் - கரியாம் - கரியெம் - கரியேம் - கரியோம் - கரியை - கரியாய் - கரியிர் - கரியீர் - எனவரும்; இன்னு மிவற்றுள் - நடந்தவன் - கரியவன் - என விருவகைவினையாலணையு ம்பெயர்கட்கும் விகுதியாய்வருவனகாண்க.

எஅ. முற்கூறிய நாற்பது வினைமுற்றுவிகுதிகளுள்ளும் - இடைநிலையேலாது தாமே காலங்காட்டி வருவனவுளவோ—

சிலவுளவாம். அவை - கு - டு - து - று - கும் - டும் - தும் - றும் - என்னுந் தன்மைவினைமுற்றிற்குவரும் விகுதிகளெட்டும் - இ - என்னுமுன்னிலைவினைமுற்றிற்குவரும் விகுதியொன்றும் - ப - மார் - என்னும் படர்க்கைவினைமுற்றிற்குவரும் விகுதி யிரண்டும் - க - இய - இயர் - அல் - என்னும் வியங்கோண் முற்றிற்குவரும் விகுதிநான்கும் - ஆய் - உ - ஆல் - எல் - காண் - மின் - உம் - என்னுமுன்னிலையேவன்முற்றிற்குவரும் விகுதியேழும் - உம் - என்னுஞ் செய்யுமென்முற்றிற்குவரும் விகுதியொன்றும் - ஆகிய விருபத்துமூன்று விகுதிகளுமிடைநிலையேலாது தாமே. காலங்காட்டுவனவாம். உம். சென்று - சென்றும் - சேறு - சேறும் - வந்து - வந்தும் - வருது - வருதும் - என - று - றும் - து - தும் - இந்நான்கு விகுதிகளுமுறையே யிறந்தகாலமு மெதிர்காலமும் - உண்டு - உண்டும் - என - டு - டும் - இவ்விரு விகுதிகளு மிறந்தகாலமும் - உண்கு - உண்கும் - என - கு - கும் - இவ்விரண்டு விகுதிகளுமெதிர்காலமும் - சேறி - உண்ப - நடமார் - எம். வாழ்க - வாழிய - வாழியர் - உண்ணல் எம். நடவாய் - அருளு - மருல் - அழேல் - சொல்லிக்காண் - நடமின் - உண்ணும் - எம். முறையேவரும் வினைமுற்று விகுதிகளும் வியங்கோள் விகுதிகளுமேவல் விகுதிகளு மெதிர்காலமுங் காட்டுவனவாம்: இவற்றுள் பவ்விகுதி எதிர்வேயன்றிச் சிறுபான்மை யிறந்தகாலமும் உம் விகுதிசெய்யுமென்னும் வாய்பாட்டு முற்றிற்குவருங்கா னிகழ்காலமு மெதிர்காலமுங் காட்டிவருமாறறிக.

எகூ. பெயரெச்சவினைகளுக்குவரும் விகுதிகளியாவை—

அ - உம் - என்னு மிரண்டும் பெயரெச்சத் தெரிநிலைவினைகட்கு வரும் விகுதிகளாம். உம். நடந்த - நடக்கின்ற - நடக்கும் எனவரும்: இவற்றுள் - கரிய - பெரிய - எனப் பெயரெச்சவினைக்

குறிப்பிற்கும் அகர விகுதிவருமெனவும் - உம் விகுதி இடைநிலையேய லாது தானே யெதிர்காலங்காட்டுமெனவுங்கொள்க.

௮௰. வினையெச்ச வினைகளுக்கு வரும் விகுதிகளியாவை—

உ - இ - ய் - பு - ஆ - ஊ - என - அ - இன் - ஆல் - கால் - கு - இய - இயர் - வான் - பான் - பாக்கு - மல் - மை - மே - என்னுமிருபதும் இவைபோல்வன பிறவும் வினையெச்சத் தெரிநிலை வினைகளுக்குவரும் விகுதிகளாம்: இவற்றுள் - இகர முதல் - ஊவீ றாகியவைந்து மிறந்தகாலமும் - அகரம்நிகழ்காலமும் - இன்முதல் பாக் கீறாகிய வொன்பது மெதிர்காலமு மிடைநிலையேலாது தாமே விளக்கும். இறுதியிற்கூறிய - மல் - மை - மே - என்னு மூன்று விகுதிகளும் எதிர்மறையாமிடத்திறுதியில் வருமெனக்கொள்க. உம். நடந்து - ஓடி - போய் - உண்ணு - உண்ணூ - நடந்தென - உண்ண - நடக்கின் - நடந்தால் - ஓவித்தக்கால் - உணற்கு - உண்ணிய - உண்ணியர் - வருவான் - உண்பான் - உண்பாக்கு - உண்ணுமல் - உண்ணுமை - உண்ணுமே எனவரும்: வினையெச்சவினைக்குறிப்பிற்கு இவ்விகுதிகளுள் - மல்லொன்றுடன் - து - றி - என்பனவும் பிறவும் விகுதிகளாம். உம். அல்லாமல் - அல்லது - அன்றி - இன்றி - என வரும்.

௮௧. பெயர்விகுதிமுதலியவாக விங்ஙனங்கூறியவறுவகைப்படும் விகுதிகளேயன்றி யிவற்றின்வேறாய் வருவனவுமுளவோ—

சிலவுளவாம். அவை எதிர்மறைவிகுதியும் பிறவினையாக்கும் விகுதியும் வினைமுதன்முதலிய பொருளுணர்த்தும் விகுதியும் என மூன்று வகைப்படுமெனக்கொள்க.

௮௨. எதிர்மறைவிகுதிகளென்பன யாவை—

இல் - அல் - ஆ - என்னு மிம்மூன்று மெதிர்மறைவிகுதிகளாம். இவற்றுள் இல்விகுதி. நடந்திலன் - நடக்கின்றிலன் என முறையே யிறந்தகால விடைநிலையோடு மெதிர்கால விடைநிலையோடுங் கூடிவருவதாம். அல் விகுதியும் - ஆவிகுதியும். உண்ணலன் - உண்ணுதான் - என விடைநிலையோடுகூடாது தாமே பெரும்பாலு மெதிர்கால முணர்த்திவருவனவாம். - இவ்வெதிர்மறை ஆவிகுதிமுன் - தகரமெய் எழுத்துப்பெயராய்த்தோன்றுமெனக்கொள்க.

௮௩. பிறவினையாக்குதற்குவரும் விகுதிகளியாவை —

வி - பி - கு - சு - டு - து - பு - று - என்னுமெட்டும் பிறவினையாக்குதற்குவரும் விகுதிகளாம். இவற்றிற்குதாரணம் விகுதிபெற்றுவரும் பிறவினைப்பகுதிகளுக்குக் காட்டியனவேயாம்.

௮௪. வினைமுதன்முதலிய பொருளுணர்த்தவரும் விகுதிகளியாவை —

வினைமுதற்பொருளையுணர்த்தவரும் - இகரவிகுதியும். செயப்படுபொருளையுணர்த்தவரும் - ஐ விகுதியும். துணிவுப்பொருளையுணர்த்தவரும் - விடு - ஒழி - என்னும் விகுதிகளும். தன்மைப்பொருளையுணர்த்தவரும் - மைவிகுதியும். இன்னும் பிறபொருட்களையுணர்த்தவரும் பிறவிகுதிகளுமாம். உம். சேர்ந்தாரைக்கொல்லி - அலரி - இவற்றுள் இகரவிகுதிவினைமுதற் பொருளுணர்த்திற்று. உடுக்கை - தொடை - இவற்றுள் ஐ விகுதிசெயப்படு பொருளுணர்த்திற்று. வந்துவிட்டான் - கேட்டொழிந்தான் - இவற்றுள்-விடு-ஒழி - என்பன துணிவுப் பொருளுணர்த்தின. பொன்மை - ஆண்மை - இவற்றுள் - மைவிகுதி தன்மைப்பொருளுணர்த்திற்று: கூறிய நியமந்தப்பி யிவ்விகுதிகளுட் சிலவேறுபொருளை யுணர்த்திவருதலும் வேறுவிகுதிகளிப் பொருளுணர்த்திவருதலும் பிறவு மாராய்ந்தமைத்துக்கொள்க: இன்னும் - எழுந்திருக்கின்றான் - உண்டிடுகின்றான் - என்பவற்றுள் - இரு - இடு - என்பன தமக்கென வேறு பொருளின்றி வருதலாற் பகுதிப்பொருள் விகுதியாமென்றறிக.

௮௫. இதுவரையிற் கூறிவந்த விகுதிகளுள் - பகுதியோடுபுணர்ந்து பின்கெடுவனவுமுளவோ—

உளவாம் - அவை பெரும்பாலுமுன்னிலையேவலொருமையையுணர்த்தும் - ஆய் விகுதியும். நெடின்முதல் விகுதியீற்றுவினைச்சொற்களில்வருமெதிர்மறை ஆகாரவிகுதியும். தொழிற்பெயர் விகுதியும். வினைமுதற்பொருளையுணர்த்தும் - இகரவிகுதியும். செயப்படுபொருளையுணர்த்தும் - ஐ விகுதியும். பிறவுமாம். இவைகெடினும் புணர்ந்துநின்றாற்போலத்தம்பொருளை யுணர்த்துமெனக்கொள்க. உம். நீநட - நீநடப்பி - நீசெல் - என்பவற்றில் ஆய்விகுதி புணர்ந்துகெட்டது. நடவான் - நடவேன் - என்பவற்றிலெதிர்மறை ஆகாரவிகுதிபுணர்ந்துகெட்டது. கொல்களிறு - ஓடாக்குதிரை - என்ப

வற்றில் பெயரெச்சவிகுதிகள்புணர்ந்து கெட்டன. கெடுவாக்கவயா து - கேடு - இடையீடு - எனவருந்தொழிற்பெயர்களில் தல்விகுதிபு ணர்ந்துகெட்டது. காய் - பூ - தளிர் - என்பவற்றில் வினைமுதற்பொ ருளுணர்த்தும்-இகரவிகுதி புணர்ந்துகெட்டது. ஊண்-எழுத்து- என்பவற்றில் செயப்படுபொருளுணர்த்தும் ஐ விகுதிபுணர்ந்து கெட்டது: சிறுபான்மை வரிப்புனைபந்து - என்பதில் - வரிந்து என் னும் வினையெச்சவிகுதியும் - கொள்வாருங்கள்வருநேர் - என்பதில் நேர்வர் என்னு முற்றுவிகுதியுங் கெட்டுவந்தன - இவ்வாறே பிறவிகு திகளுள்ளுஞ்சிலகெட்டுவருமெனவுங்கொள்க.

அசு. விகுதிகளுள் - கெடுவனவன்றித் திரிந்து வருவதுமுண் டோ—

ஒரோவிடத்துச் சிலபெயர்ச்சொற்களுள் விகுதிகளாய் நின் ற - ஆன் - ஆள் - ஆர் - ஆய் - என்னு நான்கு விகுதிகட்கு முத னின்ற ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்துவருதலுமுண்டு. உம். வில்லோ ன் - தொடியோள் - நல்லோர் - கொடுத்தோய் - எனவரும்.

அஎ. இடைநிலையென்பதெத்தனை வகையினையுடைத்தாம்—

காலங்காட்டாவிடைநிலையுங் காலங்காட்டுமிடைநிலையுமென விருவகையினையுடைத்தாம்.

அஅ. காலங்காட்டா விடைநிலைகளியாவை —

பெயர்ப்பகுபதத்திலும் வினைக்குறிப்புப் பகுபதத்திலும் பகுதி விகுதிகளை வேறுபிரித்துப்பார்க்கும்போது அவ்விரண்டற்கு மிடைநிற்பனவெல்லாங் காலங்காட்டா விடைநிலைகளாம். உம். ஓது வான் - அறிஞன் - வலைச்சி - வண்ணாத்தி - என்னும் பெயர்ப்பகுப தங்களில் - வ - ஞ - ச - த - என்னுமெய்களிடைநிலையாய்வந்தன. குழையினன் - கச்சினன் - என்னும் வினைக்குறிப்புமுற்றில் இன்னி டைநிலைவந்தது. பிறவுமன்ன.

அக. காலங்காட்டுமிடைநிலையெத்தனைவகையினையுடைத்தாம் —

இறந்தகால விடைநிலையு நிகழ்கால விடைநிலையு மெதிர்கா லவிடைநிலையுமென மூன்றுவகையினையுடைத்தாம்: இம்முக்கால விடைநிலைகளுந் தெரிநிலைவினைப் பகுபதத்திற்கு வருமெனக் கொள்க.

௯௰. இறந்தகால விடைநிலைகளென்பனயாவை —

த - ட - ற - என்னுமெய்களூம் இன்னும் ஆகிய நான்குமிறந்தகால விடைநிலைகளாம். இவற்றுள் - தகரமானது குற்றியலுகர மொழிந்த வுயிரீறும் - ய - ர - ழ - என்னு மெய்யீறுமாகிய பகுதிகளின் முன்வருமெனக்கொள்க. உம். நடந்தான் - எழுந்தான் - எம். ஆய்ந்தான் - தேர்ந்தான் - வாழ்ந்தான் - எம். வரும். டகரமானது - ணகர - ளகர மெய்யீற்றுச்சில பகுதிகளின்முன் வருமெனக்கொள்க. உம், கண்டான் - எம். கொண்டான் - கேட்டான் - எம். வரும். றகரமானது - லகர - னகர மெய்யீற்றுச்சில பகுதிகளின் முன் வருமெனக்கொள்க. உம். சென்றான் - கற்றான் - எம். தின்றான் - எம். வரும். இன்னாவது - ய - ர - ழ - வொழிந்த மெய்யீறுங் குற்றிய லுகரவீறுஞ் சிலவுயிரீறுமாகிய பகுதிகளின்முன்வரும். உம். உரிஞினான் - நண்ணினான் - பொருநினான் - திருமினான் - பன்னினான் - புல்வினான் - வவ்வினான் - துள்ளினான் - எம். அஃகினான் - உருட்டினான் - எம். கூவினான் - எம். வரும். சிறுபான்மை - இன்னிடைநிலை - போனான் - என இகரங்குறைந்து வருதலும் - எஞ்சியது - என னகரமெய் குறைந்துவருதலும் - போயது - என்மனார் - என்றிசினோர் - என யகரமெய்யும் - மன் - இசின் - என்பனவு மிடைநிலைகளா யிறந்தகாலங் காட்டிவருதலு முளவெனக்கொள்க.

௯௧. நிகழ்கால விடைநிலைகளென்பன யாவை —

ஆநின்று - கின்று - கிறு - என்னு மூன்றும் - நிகழ்காலங்காட்டு மிடைநிலைகளாம். உம். நடவாநின்றான் - நடக்கின்றான் - நடக்கிறான் - எனவரும்.

௯௨. எதிர்கால விடைநிலைகளியாவை —

ப - வ - என்னுமிருமெய்களு மெதிர்காலங்காட்டு மிடைநிலைகளாம். உம். நடப்பான் - வருவான் - எனவரும். சிறுபான்மை. என்மர் - என மகரமெய் யிடைநிலையாயெதிர்காலங்காட்டலு மிம்முக்கால விடைநிலைகளுள்ளுஞ்சில மயங்கிவருதலும் பிறவு மாராய்ந்தமைத்துக்கொள்க.

௯௩. சாரியைகளென்பனயாவை —

அன் - ஆன் - அம் - ஆம் - அல் - அற்று - அத்து - இன் - இற்று - தன் - தான் - தம் - தாம் - நம் - நும் - அ - ஆ - உ - எ -

ஐ - கு - ன் - என்னு மிருபத்திரண்டு மிவைபோல்வன பிறவும் புணர்ப்பைச்சார்ந்துவருஞ் சாரியைகளாம் - இச்சாரியைகள் விகுதிப்புணர்ச்சிக்கேயன்றிப் பதப்புணர்ச்சிக்கு முருபு புணர்ச்சிக்குஞ் சிறுபான்மையொருமொழிக்கும் வருமெனக்கொள்க. உம். நடந்தனன் - ஒருபாற்கு - மன்றம் - புற்றுஞ்சோறு - தொடையல் - பலவற்றை - அகத்தன் - வண்டின்கால் - பதிற்றுப்பத்து - அவன்றன்னை - அவன்றான் - அவர்தம்மை - அவர்தாம் - எல்லா நம்மையும் - எல்லீர் நும்மையும் - நடந்தது - இல்லாப்பொருள் - உண்ணுவான் - கலனேதாணி - இரட்டை - உண்குவான் - ஆன் - எனவரும். முறையேகாண்க.

௩௪. பகுதிமுதலியவாறு கருவிகளானும் பகுபதங்களெவ்வாறு முடியும்--

பொன்னன் என்னும் பொருட்பெயர்ப்பகுபதம் - பொன் என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும் பெற்றுத் தனிக்குறில்முன்னின்ற மெய் உயிர்வரி னிரட்டுமென்பதாற் பகுதியீற்று னகர மெய்யிரட்டித்து மெய்முன் உயிர்வரின் மெய்யின்மேலேறுமென்பதா லிரட்டித்துவந்த னகர மெய்யின்மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது. நிலத்தன் என்னு மிடப்பெயர்ப்பகுபதம் - நிலம் என்னும் பகுதியும் அன் என்னும் விகுதியும்பெற்றுப் புணர்ச்சிவிதியாற் பகுதியீற்று மகர மெய்கெட்டு அகரவீறாய் நின்று அதன்முன் அத்துச் சாரியைவந்து சாரியைமுதலகரமுமீற்றுகரமுங்கெட்டு உகரங்கெட்ட தகர மெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறிமுடிந்தது. வேனிலான் என்னுங்காலப்பெயர்ப் பகுபதம் - வேனில் என்னும் பகுதியும் ஆன் விகுதியும்பெற்றுப் பகுதியீற்று லகர மெய்யின்மேல் விகுதி ஆகாரமேறிமுடிந்தது. திணிதோளன் என்னுஞ் சினைப்பெயர்ப் பகுபதம் - திணிதோள் என்னும் பகுதியும் ஆன் விகுதியும்பெற்றுப் பகுதியீற்று ளகர மெய்யின்மேல் விகுதி ஆகாரமேறிமுடிந்தது. கரியன் என்னுங் குணப்பெயர்ப்பகுபதம் - கருமை என்னும் பகுதியும் அன் விகுதியும்பெற்றுப் பகுதியீற்றுமை விகுதிகெட்டு நடுநின்ற உகரம் இகரமாய்த்திரிய அதன்முன் யகர வுடம்படுமெய்தோன்றி அதன்மேல் விகுதி அகர வுயிரேறிமுடிந்தது. ஓதுவான் என்னுந்தொழிற்பெயர்ப் பகுபதம். ஓதுதல் என்னும்பகுதியும் ஆன் விகுதியும் வகர விடைநிலையும்பெற்றுப் பகுதியீற்றுத் தல்

விகுதி குறைந்து இடைநிலை வகர மெய்யின்மேல் விகுதி ஆகாரவுயி ரேறிமுடிந்தது. நன்மை என்னும் பண்புப்பெயர்ப் பகுபதம் - நல் என்னும் பகுதியும் - மை விகுதியும்பெற்றுப் பகுதியீற்று லகர மெய் விகுதி மெல்லெழுத்தைநோக்கி னகர மெய்யாகத்திரிந்து முடிந்தது. நடத்தல் என்னுந் தொழிற்பெயர்ப்பகுபதம் - நட என்னும் பகுதியுந் தல்விகுதியும்பெற்றுவந்த வல்லெழுத்து மிகுந்து முடிந்தது. நடந்தனன் என்னு மிறந்தகாலத் தெரிநிலைவினை முற்றுப்பகுபதம் - நட என்னும் பகுதியும் அன் விகுதியும் இறந்த காலங்காட்டுந் தகர்விடைநிலையும் இடைநிலைக்கும் விகுதிக்குநடுவில் அன்சாரியையும்பெற்று இடைநிலைத் தகர மிகுந்து மிகுந்த தகரவல் லொற்று மெல்லொற்றாய் விகாரப்பட்டு இடைநிலைத் தகரமெய்யின் மேற் சாரியை அகர வுயிரேறிச் சாரியையீற்று னகர மெய்யின்மேல் விகுதி அகர வுயிரேறிமுடிந்தது. நடப்பித்தனன் என்னுமிறந்தகா லத் தெரிநிலைப்பிறவினைமுற்றுப் பகுபதம் - நட என்னும் பகுதியும் பிறவினையாக்கும் பிவ்விகுதியும்பெற்றுப் பகர மிகுந்து அனைத்து மோர்பகுதியாகநின்று அன் விகுதியுந் தகர விடைநிலையும் அன் சாரியையும்பெற்று இடைநிலைத் தகர மிகுந்து உயிரேறிமுடிந்தது. நடக்கின்றிலன் என்னுமெதிர்மறைவினைமுற்றுப்பகுபதம் - நடவெ ன்னும் பகுதியும் கின்றென்னு நிகழ்காலவிடைநிலையும் எதிர்மறை இல்விகுதியும்பெற்று அவ்வனைத்துமோர்பகுதியாகநின்று அன் விகு தியோடுபுணர்ந்துமுடிந்தது. இவ்வாறே பகுபதங்களனைத்துமுடித் துக்கொள்க.

கூரு. தமிழிற்கு மாரியத்திற்கும் பொதுவெழுத்துக்களியாவை.

எகரமும் ஒகரமுமொழிந்த வுயிர்பத்தும் ழ ற ன வொழி ந்தமெய் பதினைந்தும் ஆகியவிருபத்தைந்துந் தமிழிற்கு மாரிய த்திற்கும் பொதுவெழுத்துக்களாம்: அ 𑌅 - ஆ 𑌆 - இ 𑌇 - ஈ 𑌈 - உ 𑌉 - ஊ 𑌊 - ஏ 𑌏 - ஐ 𑌐 - ஓ 𑌓 - ஔ 𑌔 - எம். க 𑌕 - ங 𑌙 - ச 𑌚 - ஞ 𑌞 - ட 𑌟 - ண 𑌣 - த 𑌤 - ந 𑌨 - ப 𑌪 - ம 𑌮 - ய 𑌯 - ர 𑌰 - ல 𑌲 - வ 𑌵 - ள 𑌳 - எம். அவ்விருமொழியுள்ளும் பொது வாமாறுகாண்க - வழக்கமிகுதியாலு மொப்புமையாலு மாரியத்திற் குத் தெலுங்கெழுத்துக்கள்காட்டப்பட்டன.

கூசு. தமிழிற்குரியசிறப்பெழுத்துக்களியாவை —

எ ஒ என்னு மிரண்டுயிரும் - ழ ற ன என்னுமூன்றுமெய்யும் - ஆய்தமும் - ஆகிய வாறெழுத்துந் தமிழிற்குரியசிறப்பெழுத்துக்களாம்.

௬௭. ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்துக்களியாவை —

ஆரியமொழி யிலுயிர் பதினைந்தனுள் - ఋ ౠ - ఌ ౡ అం అః - எனுமைந்தும் - மெய்முப்பத்தைந்தனுள் - ఖ గ ఘ ఛ జ ఝ - ఠ డ ఢ - థ ద ధ - ఫ బ భ - శ ష స హ క్ష - என்னு மிருபதும் - ஆகியவிருபத்தைந் தெழுத்துக்களு மாரியத்திற்குரிய சிறப்பெழுத்துக்களாம்: ஆரியத்துள் - உயிரை - அச்சு-சுரம்- எனவும். மெய்யை - அல் - வியஞ்சனம் - எனவுங்கூறுவர்.

௬௮. ஆரியமொழிகளானவை தமிழிலெவ்வாறு வந்துவழங்கும்—

விகாரமின்றியும் - திரிதன்முதலிய விகாரம்பெற்றும் வந்துவழங்கும் : விகாரமின்றி வருவனவற்றைத் தற்சமமென்றும் - திரிதன்முதலியவிகாரம் பெற்றுவருவனவற்றைத் தற்பவமென்றுங்கூறுவர்.

௬௯. தற்சமமாக வரு மாரியமொழிகளியாவை—

కమలం கமலம் - మణి- மணி - మేరు மேரு - వేణు வேணு - என்பன முதலியவாக விகாரமின்றிப் பொதுவெழுத்தால்வருவனவாம்.

௭௰. தற்பவமாக வரு மாரிய மொழிகளுள் எவ்வெவ் வெழுத்து எவ்வெவ்வெழுத்தாகத்திரியும்—

பொதுவெழுத்து மாரியச்சிறப்பெழுத்துமாகிய விருதிறத்தெழுத்துக்களும் வேறு பொதுவெழுத்தாகவுந் தமிழ்ச்சிறப்பெழுத்தாகவுந் திரிந்துவரும். அவை முறையேகூறுகின்றாம்.

உயிருள்.

மொழிக்குமுதனின்ற அகரம் எகரமாகவும் - மொழிக்கிறுதியினின்றஅகரம்அம்மெனவுஞ் சிறுபான்மை திரியும், உம். జంతుః செந்து - జపః செபம் - యంత్రం எந்திரம்-எம். జ్ఞాన ஞானம்- ధర్మ தருமம் - எம். வரும்.

மொழிக்கிறுதியினின்ற ஆகாரம் ஐகாரமாகும். உம். మాలా மாலை - எனவரும்.

மொழியிடை யிறுதிகளினின்ற ஈகாரம் இகரமாகும். உம். అనీకం அனிகம் - పురీ புரி - எம். வரும்.

மொழியிடை யிறுதிகளினின்ற ஊகாரம் உகரமாகும். உம். ముహూర్తం முகுர்த்தம் - எம். స్వయంభూ சுயம்பு - எனவரும்.

ஏழாமுயிர் இகரமாகவேனும் இருவாகவேனுந்திரியும். உம். దృష్టిః திட்டி - எம். ఋషిః இருடி - எம். வரும்.

## மெய்களுள்.

க ச ட த ப என்னுமைந்துவருக்கங்களுள்ளும் இடை நின்ற மூன்றெழுத்துக்களும் பெரும்பாலும் அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்துக்களாகும். உம். నగః நகம் - నాగః நாகம் - మేఘః மேகம் - எம். ఛలవాది சலவாதி - విజయః விசயம் - జర్ఝరః சருச்சனா - எம். పీఠం பீடம் - పీడా பீடை - దృఢం திடம் எம். స్థలం தலம் - దినం தினம் - ధరా தரை - எம். ఫలం பலம் బంధః பந்தம் - భారః பாரம் - எம். வரும்....

....பெரும்பான்மை யிவ்வாறுவருதலன்றியுஞ் சிறுபான்மை - சகரவருக்கத்துமூன்றாமெழுத்து - யகரமுமாகும். உம். అజః அயம் எனவரும்: தகரவருக்கத்து முதலெழுத்து மூன்றாமெழுத்தும் றகரமுமாகும். உம். ఉత్పలం உற்பலம் - எம். అద్భుతం அற்புதம் எம். வரும்: பகரவருக்கத்துமுதலைன்கெழுத்துக்களும் வகரமுமாகும். உம். పాపం பாவம் - எம். కఫః கவம் - எம். బిందుః விந்து எம். భీమః வீமன் - எம். வரும்: அன்றியு மொழியிடை யிறுதிகளினின்ற நகரந் தமிழ்ச்சிறப்பெழுத்தாகிய ணகரமுமாமெனக்கொள்க.

இருபத்தெட்டாமெய்யாகிய லகரம் - சிறுபான்மை றகரமுமாகும். உம். వికల్పః விகற்பம் - எனவரும்.

இருபத்தொன்பதா மெய்யாகிய வகரம் - சிறுபான்மை பகரமாயிரட்டிக்கும். உம். కావ్యం காப்பியம் - எனவரும்.

முப்பதாமெய் சகரமாகத்திரியும் - சிறுபான்மைமொழிக்கிடையில் யகரமுமாகும். உம். శాల சாலை - எம். జ్ఞానం ஞ்யானம் எம். வரும்.

முப்பத்தொன்றாமெய் - மொழிக்குமுதலிலே சகரமும் - இடையிலே டகரமுமாகும். உம். షణ్ముఖః சண்முகன் - எம். మేషం மேடம் - எம். வரும் : அன்றியுஞ்சிறுபான்மை தன்மேனின்ற வுயிர்கெட ழகரமுமாகும். உம். ఔషధం அவிழ்தம் - எனவருதல் காண்க.

முப்பத்திரண்டாமெய் - சகரமும் - சிறுபான்மை மொழிக்கிடையிலே தகரமுமாகும். உம். సిద్ధిః சித்தி - వాసం வாசம் - எம். ఆసనం ஆதனம் - எம். வரும்.

முப்பத்துமூன்றாமெய் - மொழிக்குமுதலிலே அகரமும் - இடையிலே ககரமுமாகும். உம். హరః அரன் - எம். మోహః மோகம் - எம். வரும்.

முப்பத்துநான்காமெய்யாகிய ளகரம் - சிறுபான்மை ழகரமுமாகும். உம். చోళదేశః சோழதேயம் - எனவரும்.

முப்பத்தைந்தாமெய் - மொழிக்குமுதலிலே ஒரு ககரமும் இடையிலே இரண்டு ககரமுமாம். உம். క్షణః கணம் - எம். పక్షః பக்கம் - எம். வரும்.

௭௧. இரண்டுமெய்யிணைந்துநின்ற வாரியமொழிகள் - எவ்வாறு வரும் —

இணைந்துநின்றமெய்களுள் - யரலவென்னுமெய்களுளொன்று பின்னிற்குமாயின் முன்னின்ற மெய்யின்மேல் இகரம்வரும். உம். న్యాయః நியாயம் - వాక్యం வாக்கியம் - எம். ప్రాకారః பிராகாரம் - వక్రః வக்கிரம் - எம். క్లేశః கிலேசம் - శుక్లం சுக்கிலம் எம். வரும்.

இணைந்துநின்றமெய்களுள் - ம - வ - என்பவற்றுளொன்று பின்னிற்குமாயின் முன்னின்றமெய்யின்மேல் உகரம்வரும் - உம். పద్మం பதுமம் - எம். స్వామి சுவாமி - పక్వం பக்குவம் - எம். வரும்.

இணைந்துநின்ற மெய்களுள் நகரம்பின்னிற்குமாயின் முன்னின்றமெய்யின்மேல் அகரமேனும் இகரமேனும்வரும் - உம். రత్నం அரதனம் - எம். విఘ్నః விக்கினம் - எம். வரும்.

இணைந்துநின்ற மெய்களுள் - பெரும்பாலும் ய ா ல வ ழ ந என்னுமாறுமல்லாத மெய்களுளொன்று பின்னிற்குமாயின் முன்னின்றமெய்கெடும். உம். - జ్ఞానం ஞானம் - అర్థః அத்தம் - శక్తి சத்தி - எனவரும்.

இணைந்துநின்றமெய்களுள் - ரகரமானது தனிக்குறிலின் கீழதாய் முன்னிற்குமாயின் அதன்மேல் உகரம்வரும் - உம். గర్భః கருப்பம் - எனவரும்.

இவ்வைவகைப்பட்டவிதிகளிலு மொழிக்கிடையில் வல்லெழுத்துப்பெரும்பாலு மிரட்டுமெனக்கொள்க.

ாஉ. தமிழின்மொழிக்கு முதலாகாத-ரகர லகரங்களையும் யகரத்தையுமுதலாகவுடைய வாரியமொழிகளெவ்வாறுவரும்—

ரகரத்தை முதலாகவுடையசொற்கள் - அ - இ - உ - என்னு மூன்றனுளொன்றைமுன்பெற்றுக்கொண்டுவரும். உம். రంగం அரங்கம்-எம். రామః இராமன் - எம். రోమ உரோமம் - எம், வரும்.

லகரத்தை முதலாகவுடையசொற்கள் - அ இ என்னு மிரண்டனுளொன்றை முன்கொண்டுவரும். உம். లాభః இலாபம் - எம். లోభః உலோபம் - எம். வரும்.

யகரத்தைமுதலாகவுடையசொல் - இகரத்தை முன்கொண்டும் வரும். உம். యక్షః இயக்கன் எனவரும்.

இன்னும் வடமொழிகள் விகாரப்பட்டுவருத லக்ஷணத்தையுங் கூறப்புகின் அளவுபடாமையாற் பெரியோர்கள் செய்யுளிலமைந்து வருதலேவிதியாகக்கொள்க.

ாரு. வடமொழிகளுக்கு முதலடுத்து வெவ்வேறுபொருளைவிளக்கிவரும் உபசர்க்கங்களென்பனயாவை—

பிர - பரா - அப - சம் - அநு - அவ - நிர் - துர் - வி - ஆ - நி - அதி - அபி - சு - உத் - பிரதி - பரி - உப - இப்பதினெட்டுமாம். உம். பிரயோகம் - பராபவம் - அபகீர்த்தி - சங்கதி - அநு

பவம் - அவமானம் - நிர்க்குணம் - திர்க்குணம் - விகாரம் - ஆகா
ரம் - நிவாசம் - அதிமதுரம் - அபிவிருத்தி - சுதினம் - உற்பாதம் -
பிரதிகூலம் - பரிபாகம் - உபயோகம் - எனவரும்.

௱௪. வடமொழியுள் வருமொழிப்பொருளை - இன்மையும் - பிறி
தும் - எதிர்மறையும் - ஆகிய மூன்றனு ளொன்றுக்குவனயாவை—

அ-அந்-ந-நி-கு-வி - என்னுமாறும் அம்மூன்றனுளொன்று
க்குவனவாம். உம். அரூபம் - அப்பிராமணன் - அதருமம் - எம்.
அநங்கன் - அநேகம் - அநுசிதம் - எம். நமித்திரன் - எம். நிமல
ன் - எம். குரூபி - குதர்க்கம் - எம். விமலன் - விதிக்கு - எம்.
வரும் - பிறவுமிவ்வாறேகாண்க.

௱௫. தமிழிற் பெரும்பாலும் வேறுபடாதுவந்து வழங்கும் வட
மொழிச்சந்தி யெத்தனைவகையினையுடைத்தாம்—

தீர்க்கசந்தியுங் குணசந்தியும் விருத்திசந்தியு மென மூன்று
வகையினையுடைத்தாம்.

௱௬. அம்மூன்றனுள்ளே தீர்க்கசந்தியென்பதியாது—

அகர ஆகாரங்களின்முன்-இவ்விரண்டனு ளொன்றுவரின் -
ஆகாரமும். இகர ஈகாரங்களின்முன் - இவ்விரண்டனு ளொன்றுவரி
ன் - ஈகாரமும். உகர ஊகாரங்களின்முன் - இவ்விரண்டனு ளொன்
றுவரின்-ஊகாரமும். நிலைமொழியீறும்வரு மொழிமுதலுங் கெடத்
தோன்றுதல் - தீர்க்கசந்தியாம்.

உம்.

பத - அம்புயம் - பதாம்புயம். பரம - ஆனந்தம் - பரமானந்தம்.
கங்கா - அமிர்தம் - கங்காமிர்தம். மகா - ஆனந்தம் - மகானந்தம். } எம்.

சுசி - இந்திரம் - சுசீந்திரம். கிரி - ஈசன் - கிரீசன் . . . . . .
மகி - இந்திரன் - மகீந்திரன். மகி - ஈசன் - மகீசன் . . . . } எம்.

குரு - உதயம் - குரூதயம். தரு - ஊனம் - தரூனம். . . } எம்.
சுயம்பு-உபதேசம்-சுயம்புபதேசம். சுயம்பு-ஊர்ச்சிதம் - சுயம்பூர்ச்சிதம். } வம்.

௱௭. குணசந்தியென்பதியாது—

அகர ஆகாரங்களின்முன் - இகர ஈகாரங்களு ளொன்று
வரின் - ஏகாரமும். இவற்றின்முன் - உகர ஊகாரங்களு ளொன்று

வரின்-ஒகாரம். நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெடத்தோன்றுதல்-குணசந்தியாம். உம்.

நர - இந்திரன் - நரேந்திரன். சுர - ஈசன் - சுரேசன் . . . . } எம்.
தர - இந்திரன் - தரேந்திரன். மகா - ஈசன் - மகேசன் . . }

பாத - உதகம் - பாதோதகம். ஞான - ஊர்ச்சிதன் - ஞானோர்ச்சிதன். } எம்.
தயா - உற்பத்தி - தயோற்பத்தி. தயா - ஊர்ச்சிதன்- தயோர்ச்சிதன். } வம்.

௩அ. விருத்திசந்தியென்பதியாது—

அகர ஆகாரங்களின்முன் - ஏகார ஐகாரங்களு ளொன்று வரின் - ஐகாரமும். இவற்றின்முன் - ஓகார ஔகாரங்களு ளொன்று வரின்-ஔகாரமும். நிலைமொழியீறும் வருமொழிமுதலுங்கெடத்தோன்றுதல்-விருத்தி சந்தியாம்.

உம்.

சிவ - ஏகத்துவம் - சிவைகத்துவம். சிவ - ஐக்கியம் - சிவைக்கியம். } எம்.
தர-ஏகவீரன்-தரைகவீரன்.மகா-ஐசுவரியம்-மகைசுவரியம் }

கோமள - ஓடதி - கோமளௌடதி. திவ்விய - ஔடதம் - திவ்வியௌடதம். } எம்.
மகா - ஓடதி - மகௌடதி. மகா - ஔடதம்-மகௌடதம். } வம்.

௩௯. ஆதிவிருத்தியென்பதியாது—

ஒருமொழியுள்ளே மொழிக்குமுதனின்ற - இகர ஈகார ஏகாரங்கள் - ஐகாரமாகவும். உகர ஊகார ஓகாரங்கள்-ஔகாரமாகவும். அகரம் - ஆகாரமாகவும். ஏழாமுயிர் - ஆர் - ஆகவுந் திரிந்துவருதல்-ஆதிவிருத்தியாம். உம். சிவனைத்தொழுவோன் - சைவன். வீரத்தின்றன்மை - வைரம். கேவலத்தின்றன்மை - கைவல்லியம். எம். புத்தனைத்தொழுவோன் - பௌத்தன். சூரன்றன்மை-சௌரியம். கோசலன்புத்திரி - கௌசலை. எம். தசரதன்புத்திரன் - தாசரதி. எம். கிருத்திகையின்புதல்வன் - கார்த்திகேயன். எம். வரும். தற்பவமுதலிய வடமொழிவிதி கூறுதலாற் றமிழிற்குவேண்டிய வவற்றின்சந்தியுமொற்றுமைபற்றி யிவ்விடத்திற்கூறப்பட்டன.

---

பதவியல் முற்றிற்று.

# மூன்றாவது புணரியல்.

௱ய. புணர்ச்சியாவதியாது—

முற்கூறிய பதங்க ளொன்றோடொன்று வேற்றுமைப் பொருளினாலாயினும் அல்வழிப்பொருளினாலாயினும் பொருந்துமிடத்து நிலைமொழியீறும் வருமொழிமுதலும் இயல்போடும் விகாரத்தோடும் புணர்வது புணர்ச்சியாம்.

௱யக. வேற்றுமைப்புணர்ச்சியாவதியாது—

ஐ - ஆல் - கு - இன் - அது - கண் - என்னுமாறுருபுகளு மிடையேதொக்கும் விரிந்தும் வரப்புணர்வது வேற்றுமைப்புணர்ச்சியாம்.

உம்.

| வேற்றுமைத்தொகை | வேற்றுமைவிரி | |
|---|---|---|
| நிலங்கடந்தான் | நிலத்தைக்கடந்தான் | ஐ. |
| கல்லெறிந்தான் | கல்லாலெறிந்தான் | ஆல். |
| கொற்றன்மகன் | கொற்றற்குமகன் | கு. |
| மலைவீழருவி | மலையின்வீழருவி | இன். |
| சாத்தன்புத்தகம் | சாத்தனதுபுத்தகம் | அது. |
| குன்றக்கூகை | குன்றத்தின்கட்கூகை | கண். |

எனவரும்.

௱யஉ. அல்வழிப்புணர்ச்சியாவதியாது—

வேற்றுமையல்லாத வழியிற்புணர்வது - அல்வழிப்புணர்ச்சியாம்.

௱யரு. அவ்வல்வழிப்புணர்ச்சியெத்தனைவகையினையுடைத்தாம்—

கொல்யானை - - - - - எனவரும்வினைத்தொகையும்.

கருங்குதிரை - - - -
ஆயன்சாத்தன் - - - } எனவரும்பண்புத்தொகையும்.

மதிமுகம் - - - - - எனவருமுவமைத்தொகையும்.
சேரசோழபாண்டியர் - எனவருமும்மைத்தொகையும்.
பொற்றொடி - - - - எனவருமன்மொழித்தொகையும்.
சாத்தன்வந்தான் - - - எனவருமெழுவாய்த்தொடரும்.
சாத்தாவா - - - - - - எனவரும்விளித்தொடரும்.
வந்தான்சாத்தன் - - எனவருந்தெரிநிலைவினைமுற்றுத்தொடரும்.
குழையன்கொற்றன் - - எனவருங்குறிப்புவினைமுற்றுத்தொடரும்.
வந்தசாத்தன் - - - - எனவரும்பெயரெச்சத்தொடரும்.
வந்துபோயினான் - - - எனவரும்வினையெச்சத்தொடரும்.
அதுமற்றம்ம - - - - எனவருமிடைச்சொற்றொடரும்.
நனிபேதையே - - - எனவருமுரிச்சொற்றொடரும்.
பாம்பு - பாம்பு - - - எனவரும் அடுக்குத்தொடரும்.

ஆகியபதினான்கு வகையினையுடைத்தாம்.

௱௩௪. இயல்புபுணர்ச்சியாவதியாது—

நிலைமொழியீறும் வருமொழிமுதலும் விகாரமின்றி முடிவதியல்பு புணர்ச்சியாம். உம். பொன்மலை - புகழழகித் - ஒளிமணி எனவரும்.

௱௩௫. விகாரப்புணர்ச்சியாவதியாது—

நிலைமொழியேனும் வருமொழியேனு மிவ்விருமொழியுமேனுந் தோன்றன்முதலியவிகாரத்தோடு புணர்வது விகாரப்புணர்ச்சியாம். உம். நிலம் - வளம் - நிலவளம் - எம். பொன் - தீது பொன்றீது - எம். நிலம் - பனை - நிலப்பனை - எம். வரும்.

௱௩௬. விகாரமென்பதெத்தனைவகையினையுடைத்தாம்—

புணர்ச்சிவிகாரமுஞ் செய்யுள்விகாரமும் புணர்ச்சியில் விகாரமுமெனமூன்று வகையினையுடைத்தாம்.

௱௩௭. புணர்ச்சிவிகாரங்களென்பனயாவை—,

எழுத்தேனுஞ் சாரியையேனுந் தோன்றலுந் திரிதலுங் கெடுதலுமாகிய மூன்றும் புணர்ச்சிவிகாரங்களாம். உம். வாழை - பழம் - வாழைப்பழம் - எம். பொன் - குடம் - பொற்குடம் எம். நிலம் - வலையம் - நிலவலையம் - எம். வரும்.

௱௰அ. செய்யுள் விகாரங்களென்பனயாவை—

செய்யுளிலடிதொடை முதலிய நோக்கிவரும் வலித்தலுமெ லித்தலு நீட்டலுங் குறுக்கலும் விரித்தலுந் தொகுத்தலு மென்னு மாறும். முதற்குறை - யிடைக்குறை - கடைக்குறையென்னுமூன் றுமாகிய வொன்பதுஞ் செய்யுள் விகாரங்களாம்.

உம்.

குறுத்தாட்பூதஞ்சுமந்த வறக்கதிராழி யெம்மடிண்ணலைத் தொழுமே
இது - குறுந்தாள் எனற்பாலது குறுத்தாளெனவலித்தவாறு.

தண்டையினினக்கிளிகடிவோள் பண்டையளல்லண்மடாநோக்கினளே
இது-தட்டை எனற்பாலது தண்டையென மெலித்தவாறு.

தீத் தொழிலேகன்றித் திரிதந்தெருவைபோற் போத்தருவார்புல்லறிவி னார்
இது - பொத்தருவோனற்பாலதுபோத்தருவோனநீட்டியவாறு.

திருத்தார்நன்றென்றேன்றியேன்
இது - தீயேனெனற்பாலது தியேனெனக்குறுக்கியவாறு.

சிறியிலைவெதிரினெல்விளையும்மே
இது - விளையுமேயெனற்பாலதுவிளையும்மே-எனவொற்றில்வழியொ ற்றைவிரித்தவாறு.
இன்னுமிது - சிறியவிலையெனற்பாலது சிறியிலையெனத் தொகுத்த வாறு.

மரையிதழ்புரையு மஞ்செஞ்சீறடி
இதில் - தாமரையென்பதின் முதல்குறைந்தது.

வேதினவெரிநினோதிமுதுபோத்து
இதில் - ஓந்தியென்பதின் னிடைகுறைந்தது.

நீலுண்டுகிலிகைகடுப்ப
இதில் - நீலம் என்பதின் கடைகுறைந்தது.

இச்செய்யுள் விகாரம் புணர்ச்சிக்கும் வருதல்பற்றி யிவ்வி டத்தே கூறப்பட்டன.

௱௰௯. புணர்ச்சியில் விகாரங்களென்பனயாவை—

ஒருமொழியிலுந் தொடர்மொழியிலும் விதியின்றிவரும் - தோன்றல் - திரிதல் - கெடுதல் - நீளல் - நிலைமாறுதல் - என்னப்ப

டடைந்திடன் - மருவிவழங்குதலும் - ஒத்துநடத்தலும் - என்னுமிரண்டுங்கூட்ட ஆகியவேழும் புணர்ச்சியில்விகாரங்களாம் - தோன்றன்முதலிய வெழுவகை விகாரமுமுறையேகூறுகின்றாம்.

## முதலாவது தோன்றல்.

உம். யாது-யாவது - எம். குன்று-குன்றம்-எம். செல்உழி - செல்வுழி - எம். விண் - அத்து - விண்வத்து - எம். முறையே-ஒருமொழியிலுந் தொடர்மொழியிலு மெழுத்துஞ் சாரியையும் விதியின்றித் தோன்றினவாறுகாண்க.

## இரண்டாவது திரிதல்.

உம். மாகி-மாசி-எம். மழைபெயின்விளையும்-மழைபெயில்விளையும் - எம். ககரஞ் - சகரமாகவும் னகரம் - லகரமாகவுந்திரிந்தன.

## மூன்றாவது கெடுதல்.

உம். யார் - ஆர் - எம். யானை - ஆனை - எம். யாவர் - யார் - எம். மெய்யுமுயிர்மெய்யுங்கெட்டன.

## நான்காவது நீளல்.

உம். பொழுது-போழ்து - எம். பெயர்-பேர் - எம். குற்றெழுத்து நெட்டெழுத்தாய் நீண்டன.

## ஐந்தாவது நிலைமாறுதல்.

உம். வைசாகி-வைகாசி-எம். நாளிகேரம்-நாரிகேளம் எம். தசை-சதை - எம். ஞிமிறு - மிஞிறு - எம். சிவிறி - விசிறி - எம். வரும். இவற்றுள் எழுத்துக்கள் ஒன்றுநின்றவிடத் தொன்றுசென்று மாறிநின்றன. இந்நிலைமாறுதல் - எழுத்துக்கேயன்றி - கண்மீ - மீகண்-நகர்ப்புறம் - புறநகர் - எனச்சொற்களுக்கு முண்டெனக்கொள்க.

## ஆறாவது மருவிவழங்குதல்.

உம். அருமருந்தன்னபிள்ளை - அருமந்தபிள்ளை - எம். என்றந்தை - எந்தை - எம். பலவாறுவிகாரப்பட்டு மருவிவந்தன.

௱௨௰. ஏழாவது - ஒத்துநடத்தலாவதென்னை—

ஓரெழுத்து நின்றவிடத்து மற்றோரெழுத்துவந்து வேற்றுமையின்றியொத்துநடத்தலாம்.

அன்வவருமாறு.

அஃறிணையியற்பெயருள் - குறிலிணையின்கீழ் மகர நின்றவிடத்து னகரம்வந்தொத்துநடக்கும். உம். அகம் - அகன். முகம் - முகன். நிலம் - நிலன் - எனவரும்.

மொழியிடையிறுதிகளில் - சகர ஞகர யகரங்களின்முன் - அகர நின்றவிடத்து - ஐகாரம்வந்தொத்துநடக்கும். உம். பசல் - பைசல். மஞ்சு - மைஞ்சு. மயல் - மையல். எம். அமச்சு - அமைச்சு. இலஞ்சி - இலைஞ்சி. அயர் - அயைர் - எம். வரும்.

சிலமொழிகளில் - நகர நின்றவிடத்து ஞகரம்வந்தொத்துநடக்கும். உம். நண்டு - ஞண்டு, நெண்டு - ஞெண்டு. நமன் - ஞமன். ஐந்நூறு - ஐஞ்ஞூறு - எம். வரும்.

சிலமொழியீற்றில் லகர மிருந்தவிடத்து - ரகரம் வந்தொத்து நடக்கும். உம். சாம்பல் - சாம்பர். பந்தல் - பந்தர் - எனவரும்.

சிலமென்றொடர்க்குற் றுகரமொழிக ளிறுதியிற் குற்றியலுகர நின்றவிடத்து - அர் - வந்தொத்துநடக்கும். உம். அரும்பு - அரும்பர் - சுரும்பு - சுரும்பர் - எனவரும். பிறவு மிவ்வாறுவருதல்காண்க.

உயிரீற்றுப்புணர்ச்சி.

ாஉக. உயிரீற்றின்முன் னுயிர்வரினிருவழியுமெவ்வாறுபுணரும் —

இ - ஈ - ஐ - என்னுமூன்றீற்றின்முன் - யகரமெய்யும். ஏகாரவீற்றின்முன் - யகரமெய்யும் - வகரமெய்யும். ஒழிந்த - அ ஆ உ ஊ ஏ ஒ ஓ ஔ - என்னுமெட்டுயிரீற்றின்முன்னுஞ் சுட்டெழுத்தாகிய - இகரத்தின்முன்னும் - வகரமெய்யும். உயிர்வரினுடம்படுமெய்யென்று தோன்றப்பெறும்.

உம். மணி - அழகிது - மணியழகிது - தீயழகிது - மலையழகிது - என - இ ஈ ஐ முன் யகரந்தோன்றிற்று. ஆசனே - அவன் - ஆசனேயவன் - எம். சே - அழகிது - சேவழகிது - எம். ஏகாரத்தின்முன் யகரமும் வகரமுந்தோன்றின - விள - அழகிது - விளவழகிது - பலாவழகிது - கடுவழகிது - பூவழகிது - எவ்வணி - நொவ்வழகா - கோவழகிது - கௌவழகிது - இவ்வணி - அ ஆ உ ஊ எ ஒ ஓ ஔ - என்னுமெட்டுயிர்களின்முன்னும் இகரச்சுட்டி

னமுன்னும் வகரந்தோன்றிற்று - அல்வழிக்கண்வந்தன. மணியழகு - சேவழகு - விளவழகு - எனவேற்றுமைக்கண்ணு மவ்வாறு வருதல்காண்க.

௱௨௨. குற்றியலுகர வீற்றின்முன்னும். சிலமுற்றியலுகர வீற்றின் முன்னும். உயிரும் யகரமும்வரி னிருவழியுமெவ்வாறுபுணரும்—

குற்றியலுகரம் உயிர்வரிற் றானேறிநின்ற வல்லினமெய்யை விட்டுக்கெடும்-யகரம்வரின் இகரமாகத்திரியும்-சிலமுற்றியலுகரமும் அவ்விருவிதியும்பெறும். உம்.

| | | | |
|---|---|---|---|
| நாகு - அரிது - நாகரிது. | நாகு - அருமை - நாகருமை | | |
| நாகு - யாது - நாகியாது. | நாகு - யமன் - நாகியமன் | | எனவரும். |
| கதவு - அரிது - கதவரிது. | கதவு - யாது - கதவியாது | | |

௱௨௩. உயிரீற்றின்முன் மூவினமெய்களும்வரி னிருவழியு மெவ்வாறு புணரும்—

உயிரீற்றின்முன் வல்லெழுத்துவரினவைமிகுந்தும் - மெல்லெழுத்து மிடையெழுத்தும்வரினவையியல்பாகியும்-புணரும். உம்.

நம்பி - கொற்றன் - நம்பிக்கொற்றன். தாரா-கடிது-தாராக்கடிது.
செட்டி - தெரு - செட்டித்தெரு. கடு -காய் -கடுக்காய்.

எனவுயிரீற்றுப்பெயர்மு னிருவழியும் வல்லெழுத்துமிக்கன.

விளஞான்றது. விளமாட்சி.. பலாஞான்றது. பலாமாட்சி..
விளயாது. . . விளவன்மை. பலாயாது. . . பலாவன்மை.

எனவுயிரீற்றுப்பெயர்மு னிருவழியுமெல்லெழுத்து மிடையெழுத்துமியல்பாயின.

பூத்துக்காய்த்தது - ஆடிக்கொண்டான் - உண்ணக்கொண்டான் - உண்ணூக்கொண்டான் - உண்ணக்கொண்டான் - உண்பாக்குக்கொண்டான் - இருளின்றிக்கண்டான் - எனப்பலவகைவினைச்சொற்களின்முன்னும். மற்றைச்சாதி - எனவிடைச்சொன்முன்னும். கடிக்கமலம் - என வுரிச்சொன்முன்னும். சொன்றிக்குழிசி - எனத்திசைச்சொன்முன்னும். கங்கைச்சடை - எனவடசொன்முன்னும். வல்லெழுத்துமிக்கன. நம்பிக்கு - மலைக்கண் - என வேற்றுமையுருபு வந்தவழியுமிகுதல்காண்க.

௱௨௪. உயிரீற்று மரப்பெயர்களின்முன் வேற்றுமைப்பொருளில் வல்லெழுத்தை முதலிலுடைய பெயர்வரி னெவ்வாறுபுணரும்—

சிலமரப்பெயர்முன் பொதுவிதியால்வந்த வல்லெழுத்து மிகுந்தும் - சிலமரப்பெயர்முன்வந்த வல்லெழுத்திற்கின மெல்லெழுத்து மிகுந்தும் - சிலமரப்பெயர்முன் அம் என்னுஞ் சாரியைபெற்றும்-புணரும். உம்.

ஆத்தி - காய் - ஆத்திக்காய். } என்சிலமரப்பெயர் முன்
கொன்றை - காய் - கொன்றைக்காய். } வல்லெழுத்துமிக்கது.

விள - காய் - விளங்காய். } எனச்சில மரப்பெயர் முன்
மா - காய் - மாங்காய். } மெல்லெழுத்துமிக்கது.

புளி - காய் - புளியங்காய். } எனச்சில மரப்பெயர் முன்
வேம்பு - காய் - வேப்பங்காய். } அம் பெற்றது.

அன்றியும் - வேறுசில மரப்பெயர்முன் - யாக்கொடு - யாங்கோடு எனவொருகால் வல்லெழுத்துமொருகான் மெல்லெழுத்து மிகுமெனவும். சிலமரப்பெயர்முன் - ஒடுங்கொடு - ஒடுவங்கோடு எனவொருகான் மெல்லெழுத்துமொருகாலம் முச்சாரியையும் பெறுமெனவுங்கொள்க.

௱௨௫. ஐகாரவீற்று மரப்பெயர்களுள் -அம்முச்சாரியை பெறுங்காலீற் றைகாரங்கெட்டு வருவனவுளவோ—

சிலவைகாரவீற்று மரப்பெயர்ளினீற்றைகாரங்கெட்டுவருவனவுமுளவாம். உம்.

மாதளை - காய் - மாதளங்காய். } எனவீற்றைகாரங்
வழுதுணை- காய் - வழுதுணங்காய். } கெட்டு அம்முப்
பனை - காய் - பனங்காய். } பெறுதல்காண்க.

௱௨௬. அ இ உ - என்னுமுச்சுட்டின்முன்னும் - எகரவினாமுன்னும் - மெல்லெழுத்துமிடையெழுத்தும்வரி னெவ்வாறுபுணரும்—

பொதுவிதியா லியல்பாகாமல் யகரம்வரின் வகரம்பெற்றும் — ஞ ந ம வ என்னுமற்றை மெய்கள்வரி னவைமிகுந்தும் — புணரும். உம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | - யானை | - அவ்யானை. | எ் | - யானை | - எவ்யானை. | எனவரும். |
| அ | - ஞானம் | - அஞ்ஞானம். | எ் | - ஞானம் | - எஞ்ஞானம். | |
| அ | - நலம் | - அந்நலம். | எ் | - நலம் | - எந்நலம். | |
| அ | - மலை | - அம்மலை. | எ் | - மலை | - எம்மலை. | |
| அ | - வழி | - அவ்வழி. | எ் | - வழி | - எவ்வழி. | |

இகர உகரச்சுட்டுக்களோடு மிவ்வாறேயொட்டுக. இன்னு மிச்சுட்டும் வினவும் - அந்த - இந்த - எந்த - என மரூஉ மொழியாய் வருமிடத்துப்பொதுவிதியானிலை யியல்பேயாம்.

௱௨௭. அகரவீற் றஃறிணைப் பன்மைப்பெயர்முன் வேற்றுமைப் பொருளிற்பெயரேனும் உருபேனும்வரினெவ்வாறுபுணரும்—

இடையே அற்றுச்சாரியைபெற்றுப்புணரும். உம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பல - அழகு - பலவற்றழகு. | பல - ஐ - பலவற்றை. | எனவரும். |
| பல - கோடு - பலவற்றுக்கோடு. | பல - கு - பலவற்றுக்கு. | |

கரிய - பெரிய - சிறிய - முதலியவற்றோடு மிவ்வாறேயொட்டுக.

௱௨௮. இயல்பினாலும் விதியினாலும் அகரவீறாகநின்றபால் பகாவஃறிணைப்பெயர்முன் வேற்றுமைப்பொருளிற் பெயரேனும் உருபேனும்வரினெவ்வாறுபுணரும்—

இடையே அத்துச் சாரியை பெற்றுப் புணரும்-அங்ஙனம் புணருமிடத்துச் சாரியையின்முதனின்ற அகரங்கெடும். உம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மக | - கை | - மகத்துக்கை. | மக | - ஐ | - மகத்தை. | எனவரும். |
| மர | - கோடு | - மரத்துக்கோடு. | மர | - ஐ | - மரத்தை. | |

௱௨௯. அஃறிணைப் பன்மைப்பெயரும் - பலவகைப்பெயரெச்சமும் - செய்யியவென்னும் வினையெச்சமும் - ஆறும் வேற்றுமையின் அகர வுருபும் - அம்மவென்னு மிடைச்சொல்லும் - ஆகிய அகரவீற்றிவ்வைந்தன்முன்னும் வல்லெழுத்துவரினெவ்வாறு புணரும்—

பொதுவிதியால்வந்த வல்லெழுத்து மிகாதியல்பாகப்புணரும் - உம். - பலகுதிரைகள் - பலகொடுத்தான் - எம். - உண்டசாத்தன் - உண்கின்றசாத்தன் - உண்ணாதசாத்தன் - பெரியசாத்தன் - எம். - உண்ணியகொண்டான் - எம். - தனகைகள் - எம். - அம்மகொற்றா - எம் அவ்வைவகைச்சொற்கண்முன்னும்வல்லெழுத்தியல்பாயின.

௱௩௰. பல - சில - என்னுமிருபெயருந் தம்முன்னேதாம் வரினெவ்வாறு புணரும்.—

பலபல - சிலசில - எனவியல்பாகியும். பலப்பல - சிலச்சில - என வல்லெழுத்துமிகுந்தும். பல்பல - சில்சில - என நிலைமொழியீற்றகரங்கெட்டு - லகரமியல்பாகியும். பற்பல - சிற்சில - என அகரங்கெட்டுநின்ற - லகரம் - றகரமாகியும் புணரும்.

௱௩௧. பல - சில - என்னுமவ்விருசொல்லும் அல்வழியிற் பிறபெயர்கள் வரின் - அந்நிலைமொழிகள் விகாரப்படுதலின்றே —

நிலைமொழியீற்றினின்ற - அகரமொருகாற்கெடுதலுமொருகாற்கெடாது நிற்றலும்பெறும். உம். பலவணி - பல்லணி. பலகுதிரை - பல்குதிரை. பலமணி - பன்மணி. பலவளை - பல்வளை. எனவரும் - சிலவென்பதினகரமுமிவ்வாறாதல்காண்க.

௱௩௨. அல்வழியில்வரும் - ஆ - மா - என்னுமிருபெயரும். மொழியீற்றில்வரும் - ஆகாரவினாவும். யாவினாவும். மியாவென்னுமிடைச்சொல்லும். ஆகியவைதன்முன்னும் வல்லெழுத்துவரினெவ்வாறுபுணரும்.—

பொதுவிதியான்மிகாதியல்பாகப்புணரும். உம். - ஆகுறிது - மாகுறிது - எம். அவனாகொண்டான் - எம். யாகுறிய - எம். கேண்மியாகொற்றா - எம் வரும்.

௱௩௩. ஆ - மா - என்னு மிருபெயரும் வேற்றுமையிலெவ்வாறு வரும்.—

னகரச்சாரியைபெற்றேனும் - இன்சாரியைபெற்றேனும் இவ்விரண்டனுளொன்றும் பெறாதேனும்வரும். ஆயினுங்குவ்வுருபிற்குத்தனித்தும் அவ்விரு சாரியையோடும் - உகரச்சாரியைவருமெனக்கொள்க. உம்.

ஆ - ஐ - ஆனை - ஆவினை - ஆவை...... } எனவரும்.
ஆ - கு - ஆனுக்கு - ஆவினுக்கு - ஆவுக்கு }
மாவென்பதனோடுமிவ்வாறேயொட்டுக.

௱௩௪. யா - என்னும் வினைப்பெயர் - வேற்றுமைப்பொருளிற் பெயரோனும் உருபேனும்வரினெச்சாரியைபெறும்—

அற்றுச்சாரியை பெறும். உம். யா - னோடு - யாவற்றுக் னோடு. யா - ஐ - யாவற்றை எனவரும்

௱௩௫. குற்றெழுத்தின்கீழ்நின்ற ஆகாரவீற்றுமொழிகள் செய்யுளிடத்தெவ்வாறுவரும்—

தனிக்குறிலின்கீழ்நின்ற ஆகாரம் அகரமாகக்குறுகுதலும் - அதனோடு உகரம்பெறுதலும் - இவ்விருதிறனுமின்றியியல்பாகநிற்றலும் - ஆகியமூன்றுவிதியும்பெறும். உம்.

சுறமறிவன துறையெல்லாம் - எம்.
சுறவுக்கோட்டன்ன - எம்.
சுறுவெழுந் துகளும் - எம். வரும்.
நிலா - நிலவு - நில - எனப்பிறவுமிவ்வாறுவருதல்காண்க.

௱௩௬. இகரவீற் றஃறிணைப்பெயர்முன் - வல்லெழுத்துவரினெவ்வாறுபுணரும்—

அல்வழியில் இகரவீற்றுச்சிலபெயர்முன் வல்லெழுத்துப் பொதுவிதியான் மிகுதலும் - சிலபெயர்முனியல்பாதலும் - சிலபெயர்முனெருகரியல்பாதலு மொருகான் மிகுதலும் - ஆகிய மூன்றுவகையிற்புணரும். ஐகாரவீற் றஃறிணைப்பெயர்முன்னு மிவ்விதிபெறும். உம்.

மாசி - திங்கள் - மாசித்திங்கள். } எனச்சிலபெயர்முன்
சித்திரை - திங்கள் - சித்திரைத்திங்கள். } பொதுவிதியான்மிகும்

பருத்திகுறிது . . ஒ்திகுறிது . . } எனச்சிலபெயர்முன்பொது
யானைகுறிது . . . குதிரைகுறிது } விதிபெறாதியல்பாம்.

கிளிகுறிது . . . . கிளிக்குறிது } எனச்சிலபெயர்முன்மிகாது
தினைகுறிது . . . , தினைக்குறிது } மிகுந்துமுறழ்ந்துவரும்.

௱௩௭. வேற்றுமையில் இகர ஐகாரவீற்றஃறிணைப்பெயர்களின் முன்பொதுவிதியான் மிகுதலன்றிவேறுவிதிபெறுதோ—

பெரும்பாலும் பொதுவிதியான் மிக்கேவரும் - ஆயினு மோரோவிடத்துச்சிலபெயர் முனியல்பாகவும் புணரும். உம். எரிகணை - மலைகிழவன் - எனவரும்.

௱௫௮. முற்றுகரவீறாகிய - ஒடு - அது - என்னும்வேற்றுமையுருபுகளும். அது - இது - உது - என்னுஞ்சுட்டுப்பெயர்களும். எது என்னும்வினாப்பெயரும். ஒரு - இரு - அறு - எழு - என்னுமெண்ணுப்பெயரும். ஆகியபத்துச்சொன்முன்னும் வல்லெழுத்து வரினெவ்வாறுபுணரும்—

பொதுவிதியால்வந்த வல்லெழுத்துமிகா தியல்பாகப்புணரும். உம்.

சாத்தனொடுகொண்டான் - சாத்தனதுகை - எம். அது குறிது - அதுகண்டான் - எம். எதுகுறிது - எதுகண்டான் - எம். ஒருகரும்பு - எம். வரும். பிறசுட்டுப்பெயரோடும் எண்ணுப்பெயரோடுமிவ்வாறேயொட்டுக.

அன்றியுஞ்செய்யுளில் - அதுமுன் அன்றுவரின் அதான்று - எம். உதுமுன் காணென்னுஞ் சொல்வரின் உதூக்காண் - எம். வருதலுமுளவெனக்கொள்க.

௱௫௯. அது - இது - உது - எது - என்னு முற்றியலுகரவீற்று நான்குபெயர்களும் வேற்றுமைப்பொருளிற் பெயரேனு முருபேனும்வரி னன்சாரியைபெறும்---

இந்நான்குசொல்லும் அன்சாரியைபெறும். உம்.

அது - அழகு-அதனழகு. அது-ஐ-அதனை. அது-கண்-அதன்கண். எது - அழகு-எதனழகு. எது -ஐ-எதனை. எது -கண்-எதன்கண்.

எனவரும்: அன்றியு மிவைசிறுபான்மை அதை - இதை - எனச்சாரியைபெறாதும் வரும். பிறவற்றோடு மிவ்வாறே யொட்டுக.

௱௬௰. இருவழியிலும் வன்றொடரும். அல்வழியொன்றின்மென்றொடருமாகிய விவையொழிந்த குற்றியலுகரவீற்று மொழிகளின் முன்வல்லெழுத்துவரினெவ்வாறுபுணரும்—

பொதுவிதியான் மிகாது வந்தவல்லெழுத்தியல்பாகப்புணரும். உம்.

நாகுகால். எஃகுகடுமை. வர்குகதிர். தெள்குகடுமை. என வேற்றுமையில் வன்றொடரு மென்றொடருமொழிந்தவற்றின் முன் வந்தவல்லெழுத் துமிகாதியல்பாயிற்று.

நாகுகடிது. எஃகுகடிது. வர்குகடிது. குரங்குகடிது. தெள்குகடிது. எனவல்வழியில் வன்றொடரொழிந்தவற்றின்முன்வந்த வல்லெழுத்துமிகாதியல்பாயிற்று.

நாகின்கடுமை. எனவேற்றுமையி லின்சாரியைபெறுதலும் - நர்ட்டுபுகழ். எனவல்வழியில் வினைத்தொகையாய்வரும்வன்றொடர் முனியல்பாதலும். பிற்கூறும் விதியாற்பெறப்படும்.

௱௪௧. டு - று - என்னு மிரண்டெழுத்து மீறாகிய நெடிற்றொடர் குற்றியலுகரமொழிகளிலும். உயிர்த்தொடர் குற்றியலுகரமொழிகளிலும். ஈற்றுகரப்பற்றுக்கோடாகிய - டகர றகரமெய்களிரண்டும் நாற்கணமும்வரப் பெரும்பாலுமெவ்வழியிலிரட்டித்துவரும் — அவ்விரண்டுமெய்களும் பெரும்பாலும் வேற்றுமையிலிரட்டித்துவரும்.

| | | | |
|---|---|---|---|
| மாடு - | கால் | - மாட்டுக்கால். | என நெடிற்றொடர் குற்றியலுகர மொழியில் - டகர மெய்யிரட்டித்துவந்தது. |
| | மயிர் | - மாட்டுமயிர். | |
| | வலி | - மாட்டுவலி. | |
| | அடி | - மாட்டடி. | |
| ஆறு - | பெருக்கு | - ஆற்றுப்பெருக்கு. | எனநெடிற்றொடர்குற்றியலுகரமொழியில் - றகரமெய் யிரட்டித்துவந்தது. |
| | நீர் | - ஆற்றுநீர். | |
| | வளம் | - ஆற்றுவளம். | |
| | அழகு | - ஆற்றழகு. | |
| உதடு - | கவின் | - உதட்டுக்கவின். | எனவுயிர்த்தொடர் குற்றியலுகரமொழியில்-டகர மெய்யிரட்டித்துவந்தது. |
| | மாட்சி | - உதட்டுமாட்சி. | |
| | வனப்பு | - உதட்டுவனப்பு. | |
| | அழகு | - உதட்டழகு. | |
| வயிறு - | தீ | - வயிற்றுத்தீ. | எனவுயிர்த்தொடர் குற்றியலுகரமொழியில்-றகர மெய்யிரட்டித்துவந்தது. |
| | நோய் | - வயிற்றுநோய். | |
| | வலி | - வயிற்றுவலி. | |
| | அழகு | - வயிற்றழகு. | |

டகர றகர மெய்கள் வேற்றுமையிற் பெரும்பாலுமிரட்டுமெனவே காவிரிபுரக்குநாடு கிழவோனே - எனவேற்றுமையிற் சிறுபான்மை யிரட்டாமையும். காடு - ஆண் - காட்டாண் - எம். ஏறு - பன்றி - ஏற்றுப்பன்றி - எம். குருடு - கண் - குருட்டுக்கண் - எம். களிறு - யானை - களிற்றியானை - எம். சிறுபான்மை யவ்விரண்டு மெய்யு மல்வழியிற்பண்புத்தொகையிலிரட்டுதலும். வெருகு-கண்-வெருக்குக்கண் - எம். எருது - மாடு - எருத்திமாடு - எம். சிறுபான்மையிருவழியிலும்பிறமெய்களுமிரட்டுதலுமுளவெனக்கொள்க.

௱௪௨. மென்றொடர் குற்றியலுகரமொழிகளுட்சில நாற்கணமும் வந்து புணர்வன் றொடராய்த்திரிதலுமுண்டோ—

வேற்றுமையிற் சிலமென்றொடர் குற்றியலுகரமொழிகள் வன்றொடராய்த்திரிந்துவருதலுமுண்டு. உம்.

இரும்பு - தூண் - இருப்புத்தூண்.
மருந்து - பை - மருத்துப்பை.
கன்று - ஆ - கற்றா. . . .
என வேற்றுமையில் வன்றொடர்மென்றொடராயின.

சிலவன்றொடராமெனவே வண்டுக்கால் - பந்துத்திரட்சி. என வன்றொடராகாதுவருவன பலவாமெனக்கொள்க.

௱௪௩. சிலமென்றொடர் குற்றியலுகரமொழிகளீற்றி லைகாரச்சாரியைபெற்றுவருதலுமுண்டோ—

சிலமென்றொடர் ஐகாரச்சாரியைபெறுதலுமுண்டு. உம்.

பண்டு - காலம் - பண்டைக்காலம். .
இன்று - நாள் - இற்றைநாள். . .
ஒன்று - ஒற்றை. இரண்டு - இரட்டை.
எனவரும்.

௱௪௪. குற்றியலுகரவீற்றுத்திசைப்பெயர்களோடு திசைப்பெயர்களும் பிறபெயர்களும்வந்து புணரினிலைமொழிகள் விகாரப்படுதலுண்டோ—

அந்நிலைமொழிகள் பெரும்பாலும் விகாரப்படும்: அவை விகாரப்பட்டுவருமாறு கூறுகின்றாம்.

வடக்கு - குணக்கு - குடக்கு - என்னுஞ்சொற்களினீற் றுயிர்மெய்யுங் ககரவொற்றுங்கெடும். உம்.

வடக்கு-மேற்கு-வடமேற்கு. வடக்கு -மலை -வடமலை.
குடக்கு-திசை -குடதிசை. குணக்கு-கடல்-குணகடல்.
எனவரும்.

கிழக்கு - என்ப தீற்றுயிர்மெய்யுங் ககரவொற்றும் ழகரமெ ய்யின்மேனின்ற அகரவுயிருங்கெட்டு முதனீண்டுவரும். அங்ஙனம் வருமிடத்து வல்லெழுத்தியல்பாகியு மொரோவிட்த்து மிகுந்தும் புணரும். உம்.

கிழக்கு - பால் - கீழ்பால்.
திசை - கீழ்த்திசை. } எனவரும்.

தெற்கு - என்ப தீற்றுயிர் மெய்கெட்டு றகரம் னகரமாய்த்திரி ந்துவரும். உம்.

தெற்கு - கிழக்கு - தென்கிழக்கு.
மலை - தென்மலை. } எனவரும்.

மேற்கு - என்பதீற்றுயிர்மெய்கெட்டு றகரம் லகரமாய்த் திரி ந்துவரும்.

மேற்கு - கடல் - மேல்கடல்.
வீதி - மேல்வீதி. } எனவரும்.

இன்னு மித்திசைப்பெயர்களுள்- கீழைச்சேரி - மேலைச்சேரி - என வைகாரம்பெற்றுவருதலும் - மேற்றிசை - என மேற்கினது றகரந் தகரம்வரத் திரியாமையயுமுளவாம்.

௱௪௫. குற்றியலுகரவீற்றுத் திசைப்பெயர்கள் பெரும்பாலும் விகாரப்படுமென்றதனாற் சிறுபான்மை யிவ்விகாரமின்றியும் வரு மோ—

சிறுபான்மை யிவ்விகாரமின்றியும்வரும். உம். வடக்குவாயி ல் - வடக்குத்திசை - கிழக்கூர் - கிழக்குத்திசை - மேற்குமலை - தெற்குமலை - குடக்குமலை - குணக்குமலை - எனவரும்.

௱௪௬. ஒன்று - இரண்டு - மூன்று - நான்கு - ஐந்து - ஆறு - எட்டு - எனவருங் குற்றியலுகரவீற் றிவ்வேழெண்ணுப்பெயர்களுந் தம்முன்னே எண்ணுப்பெயர்முதலிய பெயர்ச்சொற்கள்வரின் விகா ரப்படுதலுண்டோ—

அந்நிலமொழிகளெழும் பெரும்பாலும் விகாரப்பட்டன் றிவாராவாம். அவை விகாரப்படுமாறுமுறையே கூறுகின்றாம்.

ஒன்று - என்பதீற்றுயிர்மெய்கெட்டு - னகரமெய் ரகரமாய்த் திரிந்து - வந்ததுயிராயின் முதனீண்டும் - மெய்யாயின் முதனீளா து திரிந்துநின்ற ரகர மெய்மேலுகரம்பெற்றும்வரும். உம்.

ஒன்று - ஆயிரம் - ஓராயிரம். உயிரெழுத்து.
கலம் - ஒருகலம். } வல்லெழுத்து.
நூல் - ஒருநூல். } மெல்லெழுத்து.
வீசை - ஒருவீசை. } இடையெழுத்து.

இரண்டு - என்பதீற்றுயிர்மெய்யும் ணகரமெய்யும் ரகரத்தின் மேனின்ற அகர வுயிருங்கெட்டு - வந்த துயிராயின் ஒன்றென்பது போல முதனீண்டும் - மெய்யாயின் முதனீளாது ரகரத்தின்மே லுகரம்பெற்றும்வரும். உம்.

இரண்டு - ஆயிரம் - ஈராயிரம். உயிரெழுத்து.
கலம் - இருகலம். } வல்லெழுத்து.
நூல் - இருநூல். } மெல்லெழுத்து.
வழி - இருவழி. } இடையெழுத்து.

மூன்று - என்பது முதல்குறுகி யீற்றுயிர் மெய்கெட்டு - நின்ற மெய்யானது - வந்தவையுயிரும் வகரமுமாயிற்றூனு முடன்கெட்டு ம். வந்தவைவன்கணமு மென்கணமுமாயினவ்வந்த வெழுத்தாய்த் திரிந்தும். யகரமாயின் வகரமாய்த்திரிந்தும்வரும் ஆயினுமிவற்றுள் உயிர்வருங்காலெடுமுதல் குறுகுதலன்றிக் குறுகாதும்வரும். உம்.

மூன்று - ஆயிரம் - முவ்வாயிரம். மூவாயிரம். } உயிர்.
வளை - முவ்வளை. மூவளை. } வகரம்.
கலம் - முக்கலம். } வல்லெழுத்து.
நாழி - முந்நாழி. } மெல்லெழுத்து.
யாழ் - முவ்யாழ். . யகரம்.

சிறுபான்மை மூவொன்று - மூவகை - எனச்சிலவுயிர்முதன்மொழி வரிற் குறுகாதுநிற்றலுமுண்டு.

நான்கு - என்பதீற்றுயிர் மெய்கெட்டு - நின்ற னகரமெய்யானது - வந்தவையுயிரு மிடைக்கணமுமாயின் - லகரமாய்த்திரியவும். வன்கணமாயின் - றகரமாய்த்திரியவும் - மென்கண்மாயி னியல்பாகவும்பெறும். உம்.

| | | | |
|---|---|---|---|
| நான்கு - ஆயிரம் | - நாலாயிரம். | } | உயிரொழுத்து. |
| யானை | - நால்யானை. | } | இடையெழுத்து. |
| கலம் | - நாற்கலம். | . | வல்லெழுத்து. |
| மணி | - நான்மணி. | . | மெல்லெழுத்து. |

ஐந்து-என்பதீற்றுயிர்மெய்கெட்டு-நின்ற நகரமெய்யானது-வந்த வையுயிர்க்கண்மாயிற்றானு முடன்கெடவும்-வன்கணமாயினவற்றிற்கினமாய்த்திரியவும்-மென்கணமுமிடைக்கணமுமாயினவ்வந்த வெழுத்தாய்த்திரியவும்பெறும். உம்.

| | | | |
|---|---|---|---|
| ஐந்து - ஆயிரம் | - ஐயாயிரம். | . | உயிரொழுத்து. |
| கலம் | - ஐங்கலம். | . . | வல்லெழுத்து. |
| மூன்று | - ஐம்மூன்று. | } | மெல்லெழுத்து. |
| வண்ணம் | -ஐவ்வண்ணம். | } | இடையெழுத்து. |

நகரமுதன்மொழிவரின் ஐந்நூறு என வீறுகெட்டு-நின்ற நகரமெய்யியல்பேயாம்.

ஆறு - என்பது வந்ததுயிராயிற் பொதுவிதியான் முடிந்தும் மெய்யாயின் முதல் குறுகியும்வரும். உம்.

| | | | |
|---|---|---|---|
| ஆறு - ஆயிரம் | - ஆறாயிரம். | | உயிரொழுத்து. |
| கலம் | - அறுகலம். | } | வல்லெழுத்து. |
| மணி | - அறுமணி. | } | மெல்லெழுத்து. |
| வழி | - அறுவழி. | } | இடையெழுத்து. |

எட்டு - என்பதீற்றுயிர்மெய்கெட்டு-நின்ற டகரமெய்யானது தாற்கணத்தின்முன்னும் ணகரமெய்யாய்த்திரிந்துவரும். உம்.

| | | | |
|---|---|---|---|
| எட்டு - ஆயிரம் | - எண்ணாயிரம். | } | உயிரொழுத்து. |
| கலம் | - எண்கலம். | } | வல்லெழுத்து. |
| மணி | - எண்மணி. | } | மெல்லெழுத்து. |
| வளை | - எண்வளை. | } | இடையெழுத்து. |

௨௪௭. ஒன்றுமுதலெட்டீறாகிய குற்றியலுகரவீற்றிவ்வேழெண்ணுப்பெயர்களுந் தம்முன் - எண்ணுப் பெயர்முதலியனவரிற் பெரும்பாலுமிங்ஙனம் விகாரப்படுமென்றதனாற் சிறுபான்மையிவ்விகாரமின்றியும்வருமோ—

ஓரோவிடத்துச் சிறுபான்மையிவ்விகாரமின்றியும் வரும். உம். ஒன்றுதேரினன் - இரண்டுபடி - மூன்றுவழி - நான்குபொருள் - ஆறுமுகம் - எட்டுத்தொகை - எனவரும்.

௨௪௮. ஒன்பது - என்னு மெண்ணுப்பெயர்முன் - பத்தும் - நூறும் - வரினெவ்வாறுபுணரும்—

ஒன்பதி னீற்றுயிர் மெய்களிரண்டுங்கெட்டு முதலுயிரோடு தகரமெய்சேர்ந்து - நின்ற னகரமெய்யானது - வருமொழிகளாகிய பத்து நூறெனத்திரிய ணகரமாகியும் - நூறு ஆயிரமெனத்திரிய ளகரமாகியுந்திரிந்து புணரும். உம்.

ஒன்பது - பத்து - தொண்ணூறு.
நூறு - தொள்ளாயிரம்.
} எனவரும்.

தொள்ளாயிரமென்ப திக்காலத்துத் தொளாயிரமெனவும் வழங்கும்.

௨௪௯. ஒன்றுமுதலெட்டீறாகநின்ற குற்றியலுகரவீற்றெண்ணுப் பெயர்கண்முன் பத்தென்னு மெண்ணுப்பெயர்வரினெவ்வாறுபுணரும்—

வருமொழியாகிய பத்தென்பதினடுநின்ற தகரமெய்கெட்டும் ஆய்தமாய்த்திரிந்தும்புணரும். ஆயினும் - அப்பத்தென்பதோடு ஒன்று முத லொன்ப தெண்ணுப்பெயரும் பின் புணர் வரின் அத்தகரமெய் கெடுதலுந் திரிதலுமின்றி யியல்பாகநிற்கும். உம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று - பத்து - | ஒருபது. | ஒருபஃது. | ஒருபத்தொன்று. | |
| இரண்டு | இருபது. | இருபஃது. | இருபத்திரண்டு. | எனவரும். |
| மூன்று | முப்பது. | முப்பஃது. | முப்பத்துமூன்று. | |
| நான்கு | நாற்பது. | நாற்பஃது. | நாற்பத்துநான்கு. | |
| ஐந்து | ஐம்பது. | ஐம்பஃது. | ஐம்பத்தைந்து. | |
| ஆறு | அறுபது. | அறுபஃது. | அறுபத்தாறு. | |
| எட்டு | எண்பது. | எண்பஃது. | எண்பத்தெட்டு. | |

௱௫௮. ஒன்றுமுதலெட்டீறாகிய குற்றியலுகரவீற்றெண்ணுப்பெயர்கள் வேற்றுமைப்பொருளிற் பெயரேனும் உருபேனும்வரி னெச்சாரியைபெறும்—

அவை அன்சாரியையேனும் இன்சாரியையேனும்பெறும்: ஆயினும் அன்சாரியை பெறுதலே சிறப்புடைத்தாம். உம்.

ஒன்று - கூட்டம் - ஒன்றன் கூட்டம். ஒன்றின் கூட்டம்.
ஐ ,, ஒன்றனை ஒன்றினை

எனவரும். இரண்டுமுதலியவற்றோடுமிவ்வாறேயொட்டுக.

௱௫௯. ஒருபது - ஒருபஃது - என்பனமுதல் எண்பது - எண்பஃது - என்பன வீறாகநின்ற வெண்ணுப்பெயர்கள் வேற்றுமைப் பொருளிற்பெயரேனு முருபேனும்வரி னெச்சாரியைபெறும்—

நிலைமொழியிறுதியினின்ற - பது - பஃது - என்பவற்றுட் பகரமெய்யொன்று நிற்க வேனையவெல்லாங்கெட்டு ஆன்சாரியை பெற்றுவரும். உம்.

ஒருபது } கூட்டம் - ஒருபான் கூட்டம். }
ஒருபஃது } ஐ ஒருபானை } எனவரும்.

பிறவற்றோடுமிவ்வாறேயொட்டுக. இவை சிறுபான்மை - ஒருபதை - ஒருபஃதை - எனச்சாரியைபெறாது பொதுவிதி பெறுதலு முண்டு.

௱௬௰. பத்து - ஒன்பது - என்னுங்குற்றியலுகரவீற்றெண்ணுப் பெயர்கள் - தம்முன் எண்ணுப்பெயர்முதலியபெயர்கள்வரி னெச் சாரியைபெறும்—

அவ்விருபெயரும் இன்சாரியையேனும் இற்றுச்சாரியை யேனும்பெறும் - அங்ஙனம் பெற்றுவருமிடத்துப் பத்தென்பதி னீற்றுயிர்மெய்கெடும். உம்.

பத்து - ஒன்று - பதினொன்று. பதிற்றொன்று.
ஒன்பது - ஆயிரம் - ஒன்பதினாயிரம். ஒன்பதிற்றொன்று.
எனவரும்.

௱௬௧. பத்து - ஒன்பதின்முன் இரண்டென்பதுவரின் முற்கூறிய விதியினின்று வேறுபடுதலுண்டோ—

மேற்கூறிய விதியான் முடியாது நிலைமொழியாகிய பத்தென்பதி னீற்றுயிர்மெய் கெட்டு - நின்ற தகரமெய்யானது னகரமெய்யாய்த்திரியும். உம்.

பத்து - இரண்டு - பன்னிரண்டு - எனவரும்.

௱௫௪. ஒன்று - இரண்டு - மூன்று - நான்கு - ஐந்து - ஆறு - எட்டு - பத்து - என்னுங் - குற்றியலுகரவீற் றிவ்வெண்ணுப்பெயர் களெட்டு மிரட்டித்துத்தம்முன்னேதாம்வரி னிலைமொழிக ளெவ்வாறும்—

இந்நிலைமொழிகளின் முதலெழுத்தொன்றுநிற்ப வேனைய வெல்லாங்கெட்டு-நெடின்முதல்குறுகி-வந்ததுயிராயின் வகரவொற்றும் மெய்யாயின் வந்தவெழுத்துந்தோன்றப்பெறும். உம்.

ஒன்று - ஒன்று - ஒவ்வொன்று - உயிர்வந்தது.
இரண்டு - இரண்டு - இவ்விரண்டு - உயிர்வந்தது.
மூன்று - மூன்று - மும்மூன்று - மெய்வந்தது.
நான்கு - நான்கு - நந்நான்கு - மெய்வந்தது.
ஐந்து - ஐந்து - ஐவ்வைந்து - உயிர்வந்தது.
ஆறு - ஆறு - அவ்வாறு - உயிர்வந்தது.
எட்டு - எட்டு - எவ்வெட்டு - உயிர்வந்தது.
பத்து - பத்து - பப்பத்து - மெய்வந்தது.

சிறுபான்மை ஒரோவொன்று-ஒன்றொன்று-எனவருதலுமுண்டு.

௱௫௫. யாது - எது - அஃது - இஃது - உஃது - எனவருங் குற்றியலுகரவீற் றிவ்வைந்துபெயரும் வேற்றுமைப் பொருளிற் பெயரோனு முருபேனும் வரின் எச்சாரியைபெறும்—

இந்நிலைமொழிக ளைந்தும் அன்சாரியைபெறும். இவற்றுள் - அஃது - முதலிய மூன்றுஞ் சாரியைபெறுமிடத்து நடு நின்ற வாய்தங்கெட்டுவரும். உம்.

யாது - கால் - யாதன்கால். யாது - ஐ - யாதனை.
அஃது - கால் - அதன்கால். அஃது - ஐ - அதனை.

எனவரும்.

பிறவற்றோடு மிவ்வாறேயொட்டுக-இவையுருபேற்கும்போது-யாண்டை - அஃண்டை - எனச்சாரியைபெறாது வருதலுமுண்டு.

௱௫௬. பூ - என்னும் பெயர்ச்சொல்லின்முன் வல்லெழுத்துவரி னெவ்வாறுபுணரும்—

பொதுவிதியால்வந்த வல்லெழுத்து மிகுதலும். அதற்கின மிகுதலும்பெறும். உம். பூ - கொத்து-பூக்கொத்து. பூங்கொத்து. எனவரும்.

௱௫௭. ஊ - என்னுமிறைச்சிப் பெயர்வேற்றுமையி லெச்சாரியைபெற்றுவரும்—

அது - னகரச்சாரியையும் - அதனோடின்சாரியையும் பெற்றுவரும். உம். ஊ - ஐ - ஊனை. ஊனினை. எனவரும்.

௱௫௮. அவை - இவை - உவை - என்னுஞ் சுட்டுப்பெயர்களும். எவை - யாவை - என்னும் வினாப்பெயர்களும். கரியவை - பெரியவை - எனவரு மஃறிணைப்பன்மைப் பண்புகொள்பெயரும் ஆகிய வைகாரவீற்றுச்சொற்கள்வேற்றுமைப்பொருளிற் பெயரோனு முருபேனும்வரினெச்சாரியைபெறும்—

அவைகளனைத்து மீற்றைகாரங்கெட்டு அற்றுச்சாரியை பெறும். ஆயினு மவற்றுள்-சுட்டுப்பெயர்களும்-எவை - என்னும் வினாப்பெயருஞ் சாரியைபெறுமிடத் தீற்றைகாரங்கெடுதலன்றிக் கெடாது நிற்றலும்பெறும். உம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அவை - | அழகு - | அவற்றழகு. | அவையற்றழகு. | எனவும். |
| | ஐ | அவற்றை. | அவையற்றை. | |
| எவை - | அழகு - | எவற்றழகு. | எவையற்றழகு. | |
| | ஐ | எவற்றை. | எவையற்றை. | |

யாவை -அழகு-யாவற்றழகு. யா -ஐ-யாவற்றை.
கரியவை-அழகு-கரியவற்றழகு. கரியவை-ஐ-கரியவற்றை. } எனவும்.
வரும் - பிறவற்றோடு மிவ்வாறேயொட்டுக.

௱௫௯. இடைச்சொல்லாய்வரும் - எகார ஒகாரங்களின்முன்-வல்லெழுத்துக்கள்வரி னெவ்வாறுபுணரும்—

அவ்விரண் டீற்றின்முன்னும் பொதுவிதியான் வல்லெழுத்துமிகா தியல்பாகப்புணரும். உம். அவனே கொண்டான் - அவனோகொண்டான் - எனவரும் பிறவுமன்ன.

## மெய்யீற்றுப்புணர்ச்சி.

௱௬௰. மெய்யீற்றின்முன் - உயிர்வரி னிருவழியு மெவ்வாறுபுணரும்—

நிலைமொழியீற்றினின்ற மெய்யின்மேல் - வருமொழிமுதனின்ற வுயிரேறிப்புணரும். உம்.

புகழ்-அழகிது -புகழழகிது -எம்.புகழழித்தான் -எம். } வரு
கால் -ஒடிந்தது-காலொடிந்தது-எம்.காலொடித்தான்-எம். } ம்.

௱௬௧. தனிக்குறின் முன்னின்றமெய் - உயிர்வரினிருவழியுமெவ்வாறும்—

தனிக்குறிலைச் சார்ந்துநின்றமெய் உயிர்வந்து புணருங்கா லிருவழியுமிரட்டித்துநிற்கும். உம்.

மண் -அரிது-மண்ணரிது. மண் -அருமை-மண்ணருமை.
பொன்-அரிது-பொன்னரிது. பொன்-அருமை-பொன்னருமை.

௱௬௨. மெய்யீற்றுமொழிகளின்முன் - ஞ - ந - ம - என்னு மெல்லெழுத்துக்களும் - ய - வ - என்னு மிடையெழுத்துக்களும் வரி னிருவழியு மெவ்வாறுபுணரும்—

மெய்யீற்றின் முன் அவ்வைந்தெழுத்துக்களு மியல்பாகப் புணரும். ஆயினுமிவற்றுள்-ண ள ன ல-என்னுநான்கன்முன்னும்-வந்த நகரந்திரியும். உம். உரிஞ் - மண் - பொருந்-மார்ம்-பொன்-வேய்-வேர்-வேல்-தெவ்-யாழ் - வாள் - என்பவற்றோடு - ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது - எம். ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு - வன்மை - எம். இருவழியினு மிவ்வருமொழிகளைக் கூட்டி

| | | | |
|---|---|---|---|
| உரிஞு ஞான்றது | -உரிஞு ஞாற்சி. | உரிஞ்யாது | -உரிஞ்யாப்பு. |
| மண்ஞான்றது | -மண்ஞாற்சி. | மண்யாது | -மண்யாப்பு. |
| பொருநுஞான்றது | -பொருநுஞாற்சி. | பொருந்யாது | -பொருந்யாப்பு. |
| மார்ஞான்றது | -மார்ஞாற்சி, | மார்ம்யாது | -மார்யாப்பு. |
| பொன்ஞான்றது | -பொன்ஞாற்சி. | பொன்யாது | -பொன்யாப்பு. |
| வேய்ஞான்றது | -வேய்ஞாற்சி. | வேயாது | -வேயாப்பு. |
| வேர்ஞான்றது | -வேர்ஞாற்சி. | வேர்யாது | -வேர்யாப்பு. |
| வேன்ஞான்றது | -வேன்ஞாற்சி. | வேல்யாது | -வேல்யாப்பு |
| தெவ்வுஞான்றது | -தெவ்வுஞாற்சி. | தெவ்யாது | -தெவ்யாப்பு. |
| யாழ்ஞான்றது | -யாழ்ஞாற்சி. | யாழ்யாது | -யாழ்யாப்பு |
| வாண்ஞான்றது | -வாண்ஞாற்சி. | வாள்யாது | -வாள்யாப்பு. |

எனவருமொழிக ளியல்பாயினவாறுகாண்க - பிறவுமிவ்வாறே யொட்டுக - வருமொழிகளி னியல்புகூறுதலா னிலைமொழிகளி னீறு விகாரப்படுதல் பின்பவ்வவற்றிற்குக் கூறும்விதியாற்பெறப்படும்.

௱௫௰௫. யகரமொழிந்த மெய்களானவை தம்முன் யகரமுதன் மொழிவரின் இகரச்சாரியைபெறுதலுமுண்டோ—

இயல்பாதலன்றி யிருவழியும் இகரச்சாரியைப் பெறுதலு முண்டு. உம். வாள்யாது-வாளியாது. எம். மண்யானை-மண்ணியானை. எம். வரும்.

௱௫௰௬. ஞ ண ந ம ல வ ள ன - என்னுமெட்டுமெய்களையு மீறாகவுடையனவாய்விகுதிகுன்றிநிற்கு முதனிலைத்தொழிற்பெயர்களும் அவ்வாறுநிற்குமேவல்வினைகளுந் தம்முன் - யகரமொழிந்த மெய்கள்வந்துபுணரின் எச்சாரியைபெறும்—

யகரமொழிந்த மெய்கள்வரின் அவ்விருவகைப்பட்ட நிலைமொழிகளும் உகரச்சாரியைபெறும். ஆயினுஞ் சிலமுன்னிலையேவல்வினைகள் அச்சாரியை பெறாது நிற்றலுமுளவாம். உம்.

| | | | |
|---|---|---|---|
| உரிஞ்-கடிது | -உரிஞுக்கடிது. | உரிஞ்-கடுமை | -உரிஞுக்கடுமை. |
| நீண்டது | -உரிஞுநீண்டது. | நீட்சி | -உரிஞுநீட்சி. |
| வலிது | -உரிஞுவலிது. | வன்மை | -உரிஞுவன்மை. |

எனவரும். உண் - பொருந் - திரும் - செல் - வவ் - கொள் - தின் என்னுந்தொழிற்பெயரோடுமிவ்வாறேயொட்டுக - இவை உரிஞுதல் - உண்ணல்-என்புழிவரும்விகுதிகுன்றி நின்றமைகாண்க.

| | | |
|---|---|---|
| உரிஞ்-கொற்றா | -உரிஞுகொற்றா. | என ஞகரவீற்றேவல்வினை உகரச்சாரியைபெற்றது உண்முதலியபிறவற்றோடுமொட்டுக. |
| நாகா | -உரிஞுநாகா. | |
| வளவா | -உரிஞுவளவா. | |

இவற்றுள்ளே ண ள ன ல என்னுமீற்றேவல்வினைகள்-உண்ணுகொற்றா - தின்னுகொற்றா-என வுகரம்பெறுதலன்றியு மொரோவிடத்து உண்கொற்றா - தின்கொற்றா - என வுகரம்பெறாதும் வரும் - இவை-உரிஞாய்-உண்ணாய்-என்புழிவரும். ஆய்விகுதிகுன்றிநின்றன. ஏவலுகரத்தின்முன் வல்லெழுத்தியல்பாமெனக்கொள்க.

௱௬௫. மேற்கூறிய முதனிலைத்தொழிற் பெயர்கள்போலப் பிற பெயர்களுள் யகரமொழிந்த மெய்கள்வந்துபுணருங்கால் - உகரச் சாரியை பெறுவனவுமுளவோ —

ஈம் - கம் - எம். வல் - எம். வெவ் - எம். புள் - வள் - எம். மின் - பின் - பன் - கன் - எம். வருகின்ற பெயர்களுஞ் சிறுபான்மைப்பிறபெயர்களும் இருவழியும் யகரமொழிந்த மெய்கள்வரின் உகரச்சாரியைபெறும். உம்.

ஈம் - கடிது - ஈமுக்கடிது. ஈம் - கடுமை - ஈமுக்கடுமை.
ஞான்றது - ஈமுஞான்றது. ஞாற்சி - ஈமுஞாற்சி.
நீண்டது - ஈமுநீண்டது. வன்மை - ஈமுவன்மை.

எனவரும். பிறவற்றோடு மிவ்வாறேயொட்டுக - இவற்றுட்சில - ஈமக்குடம் - கம்மக்குடம் - வல்லப்பலகை - என அகரச்சாரியைபெறுதலும் புள்கடிது - மின்கடிது - எனச்சாரியை பெறாதுவருதலுமுளவாம். ஈம்-சுடுகாடு. கம் - கம்மியர்தொழில். உரும்-இடி. வல்-சூதாடுகருவி. கன்-சிறுதராசுத்தட்டு.

௱௬௬. ணகரவீற்றுச்சொல்லின்முன் மூவினமெய்களும்வரினிருவழியுமெவ்வாறுபுணரும் —

நிலைமொழியீற்று ணகரமானது வேற்றுமையில் வல்லெழுத்துவரின் - டகரமாகும். மெல்லினமுமிடையினமும் வரினியல்பாகும். அல்வழியின் மூவினமெய்கண்முன்னுமியல்பேயாகும். உம். மண் - குடம் - மட்குடம். மண்மாட்சி. மண்வன்மை. எம். மண் கடிது. மண்மாண்டது. மண்வலிது. எம். வரும்.

௱௬௭. தனிக்குறிலைச்சாராது நெடின் முதலியவற்றைச்சார்ந்து நின்ற ணகரம் யாண்டுங்கெடுதலின்றோ —

வருமொழிமுதலிலிருக்கின்ற நகரமானது ணகரமாய்த்திரிந்தபின் அந்நிலைமொழியீற்று ணகரங்கெடும். உம்.

பாண் - நன்று - பாணன்று. பாண் - நன்மை - பாணன்மை.
பசுமண் - நன்று - பசுமணன்று. பசுமண் - நன்மை - பசுமணன்மை.
எனவரும்.

௱௬௮. நிலைமொழியீற்று ணகரம் வல்லெழுத்துவரின்வேற்றுமையிலே திரியாதுவருதலும் அல்வழியிலேதிரிந்துவருதலும் எங்குமில்லையோ —

பாண் - உமண் - என்னுஞ்சாதிப்பெயரும். அமண்-என்னுங்குழூஉப்பெயரும் பரண் - கவண் - என்னும் பெயர்களும் ஆகியவிவற்றிறுதியினின்ற ணகரமானது வேற்றுமையிற்றிரியாதியல்பாகும். எண்ணின்றிரிசொல்லாகிய - எண்-என்பதற்கும். சாண்-என்பதற்குமீறாகிய ணகரம் அல்வழியிலியல்பாதலன்றித் திரிந்தும்வரும். உம். பாண்குடி - உமண்குடி - பரண்கால் - கவண்கால் என விவற்றுள் ணகரம் வேற்றுமையிலியல்பாயிற்று - எட்கடிது. சாட்கோல் என்விவற்றுள் ணகரமல்வழியிற்றிரிந்தும்வந்தது.

௱௬௯. மகரவீற்றுச்சொற்களின்முன்-நாற்கணமும்வரி னிருவழியு மெவ்வாறுபுணரும்—

நிலைமொழியீற்று மகரமெய்கெட்டுவிதியுயிரீறாகநிற்க- உயிர்வரினுடம்படுமெய்பெற்றும் வல்லினம்வரி னவைமிகுந்தும். மெல்லினமு மிடையினமும்வரி னவையியல்பாகியும். புணரும். உம்.

| | |
|---|---|
| வட்டம் - அணை - வட்டவணை. | மரம் - அடி - மரவடி. |
| கடல் - வட்டக்கடல். | கால் - மரக்கால். |
| நேமி - வட்டநேமி. | நார் - மரநார். |
| வளை - வட்டவளை | வேர் - மரவேர். |

என விருவழியுநிலைமொழியீற்று மகரமெய்கெட்டுயிரீறாய்நிற்க - வந்தநாற்கணமும் பொதுவிதியான் முடிந்தன.

௱௭௰. மகரவீற்றின்முன் அந்நாற்கணமும்வரி னிருவழியும்-நிலைமொழியீற்று மகரங்கெடுதலன்றி வேறுவிதிபெறுதலின்றோ—

நிலைமொழியீற்று மகரமெய் மென்கணமொழிந்த மற்றை முக்கணமும்வரின் வேற்றுமையிற் சிறுபான்மையும் அல்வழியிற்பெரும்பாலுங் கெடாதுநிற்கும் அவையங்ஙனமாமாறுகூறுகின்றாம்.

வேற்றுமையில் அம்முக்கணமும்வரின்-நிலைமொழியீற்று மகரம் வினையாலணையும் பெயர்க்கீறாய்நிற்கினும் அல்லது வருமொழி வினைச்சொல்லாகப்பெறினுங்கெடாதுநிற்கும்- நின்றவிடத்துப்பகரமொழிந்தவல்லெழுத்துவரின மெல்லெழுத்தாய்த்திரியும். உம்.

| | |
|---|---|
| சிறியேம் - அன்பு - சிறியேமன்பு. | உயிர்வந்தது. |
| பண்பு - சிறியேம் பண்பு. | பகரம்வந்தது. |
| வாழ்வு - சிறியேம் வாழ்வு. | இடையெழுத்து. |
| கரம் - சிறியேங்கரம். | - வல்லெழுத்து. |

| | | | |
|---|---|---|---|
| நலம் - | ஒழிந்தான் | - நலமொழிந்தான். | உயிர்வந்தது. |
| | பிரிந்தான் | - நலம்பிரிந்தான். | பகரம்வந்தது. |
| | வழங்கினான் | - நலம்வழங்கினான். | இடை[illegible]ந்தது |
| | கெட்டான் | - நலங்கெட்டான். | - வலிவந்தது. |

எனவரும் பிறவுமன்ன - இன்னுஞ் சிறுபான்மை வேற்றுமையிற் குளக்கரை - குளங்கரை எனவிகற்பித்துவருதலும் - மரம் - அடி - மராடி. குளம் - ஆம்பல் - குளாம்பல். என நிலைமொழியீறும்-வருமொழிமுதலும் விகாரப்பட்டுவருதலு முளவெனக்கொள்க - மரம்- ஐ - மரத்தை - என வேற்றுமையில் அத்துச்சாரியைபெற்றுவருதல் அகரவீற்றிற்கு விதிகூறியவழியே கூறப்பட்டது.

அல்வழியில் அம்முக்கணமும் வரின்- நிலைமொழியீற்று மகரஞ் சிலபண்புத்தொகை யுவமைத்தொகைகளிற் பொதுவிதியாற் கெடுதலன்றி மற்றெவ்விடத்துங்கெடாது நிற்கும். நின்றவிடத்து அம்மகரம் பகரமொழிந்த வல்லெழுத்துவரி னினமெல்லெழுத்தாய்த் திரியும். உம்.

| | | | |
|---|---|---|---|
| மரம் - | அசைந்தது | - மரமசைந்தது. | உயிர்வந்தது. |
| | பெரிது | - மரம்பெரிது. | பகரம்வந்தது. |
| | வளர்ந்தது | - மரம்வளர்ந்தது. | இடையெழுத்து. |
| | கொடிது | - மரங்கொடிது. | - வல்லெழுத்து. |

எனவரும் பிறவுமன்ன.

௱௭௧. தனிக்குறிலைச்சேர்ந்துநின்ற மகரமெய் நாற்கணமும் வரி னிருவழியிலுமெவ்வாறும்—

அம்மகரமெய் நாற்கணத்தின்முன்னு மிருவழியிலுங்கெடாது நிற்கும் - நின்றவிடத்துக் ககர-சகர-தகரங்களின்முன்னினமெல்லெழுத்தாயும் ஞகர - நகரங்களின் முன் அவ்வந்தவெழுத்தாயுந் திரியும். உம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அம் - | அரிது | - அம்மரிது. | அம் - அருமை | - அம்மருமை. |
| | பெரிது | - அம்பெரிது. | பெருமை | - அம்பெருமை. |
| | மாண்டது | - அம்மாண்டது. | மாட்சி | - அம்மாட்சி. |
| | யாது | - அம்யாது. | யாப்பு | - அம்யாப்பு. |

அம்- கடிது - அங்கடிது.
சிறிது - அஞ்சிறிது.
தீது - அந்தீது.
அம்-கடுமை - அங்கடுமை.
சிறுமை - அஞ்சிறுமை.
தீமை - அந்தீமை.

ஞான்றது - அஞ்ஞான்றது.
நீண்டது - அந்நீண்டது.
ஞாற்சி - அஞ்ஞாற்சி.
நீட்சி - அந்நீட்சி.

எனவரும் பிறவுமன்ன.

௱எ௨. தனிக்குறிலைச்சாராத மகரமெய் மெல்லெழுத்துக்கள்வரி னெங்குங்கெடாது நிற்றலின்றே—

தனிக்குறிலைச் சாராது நெடில் குறிலிணை முதலியவற்றைச் சார்ந்துநின்றமகரமெய் மெல்லெழுத்துவரிற் கெடுதலன்றிக்கெடாது நிற்றலில்லை.

௱எ௩. எல்லாம் - எல்லாரும் - எல்லீரும் - என்னுமூன்றுபெயர் களும் - வேற்றுமைப்பொருளிற் பெயரோனும் உருபேனும்வரின் வச்சாரியைபெறும்—

எல்லாமென்பது அஃறிணையில்வரும்போது அற்றுச்சாரி யையும் - உயர்திணையில்வரும்போது நம்முச்சாரியையும்-பெற்று-வ ருமொழியின்பின் முற்றும்மையும் பெறும். எல்லாருமென்பது தம்முச்சாரியையும்-எல்லீருமென்பது நம்முச்சாரியையும் பெற்று இவற்றி னும்மைவரு மொழியின்பின்னடுத்துவரப்பெறும். உம்.

எல்லாம்-கோடு-எல்லாவற்றுக்கோடும். எல்லாம்-ஐ-எல்லாவற்றையும்
கை - எல்லா நங்கையும். ஐ-எல்லா நம்மையும்.
எல்லாரும்-கை-எல்லார்தங்கையும் எல்லாரும்-ஐ-எல்லார்தம்மையும்
எல்லீரும் -கை -எல்லீர் நுங்கையும். எல்லீரும்-ஐ-எல்லீர் நும்மையும்.
எனவரும் - சிறுபான்மை - எல்லாவையும். எல்லீரையும். எனச்சா ரியை பெறாதுவருதலுமுளவெனக்கொள்க.

௱எ௪. ய ர ழ - என்னுமூன்றுமெய்களையு மீறாகவுடையசொற்க ளின்முன் வல்லெழுத்துக்கள்வரி னிருவழியுமெவ்வாறுபுணரும்—

அம்மூன்றுமெய்முன்னும்வரும் வல்லெழுத்துக்கள் அல்வழியியல்பாகியும் வேற்றுமையின் மிகுந்தும்புணரும்: ஒற்றுமை பற்றி ழகரவீறுஞ்சேர்த்துக்கூறப்பட்டது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வேய் - | குறிது - | வேய்குறிது. | நாய் - | கால் - | நாய்க்கால். | எனவரும். |
| வேர் | | வேர்குறிது. | தேர் | | தேர்க்கால் | |
| யாழ் | | யாழ்குறிது. | பூழ் | | பூழ்க்கால். | |

௨௭௫. ய ர ழ வீற்றின்முன்வரும் வல்லெழுத்துக்கள் அல்வழியியல்பாதலும் வேற்றுமையின் மிகுதலுமன்றி வேறுவிதிபெறுதலின்றோ—

அம்மூன் றீற்றின்முன்னும் வல்லெழுத்துக்கள் பண்புத்தொகைமுதலியவிடங்களி லல்வழியிலுமிகும். ஒரோவழிவேற்றுமையிலும் வரும் வல்லெழுத்துமிகுந் தும் அவற்றிற்கினமெல்லெழுத்து மிகுந்து முறழ்ந்துவரும். உம்.

| | | | |
|---|---|---|---|
| பொய் - | சொல் - | பொய்ச்சொல். | எனவல்வழியிற் பொது விதியாலியல்பாகாது மிக்கன. |
| கார் - | பருவம் - | கார்ப்பருவம். | |
| வீழ் - | தூண் - | வீழ்த்தூண். | |

| | | | | |
|---|---|---|---|---|
| வேய் - | குறை - | வேய்க்குறை. | வேய்ங்குறை. | என வேற்றுமையினு முறழ்ந்துவந்தன |
| வேர் | | வேர்க்குறை. | வேர்ங்குறை. | |
| வீழ் | | வீழ்க்குறை. | வீழ்ங்குறை. | |

௨௭௬. தனிக்குறிலைச்சாராது நெடின்முதலியவற்றைச்சார்ந்து நின்ற யகரந் தன்முன் யகரமுதன்மொழிவரினெவ்வாறும்—

அந்நிலைமொழியீற்றினின்ற யகரங்கெடும். உம்.

காய் - யாது - காயாது. நோய் - யானை - நோயானை. எனவரும்.

௨௭௭. எழ் - என்னுமெண்ணுப்பெயர்-எண்ணுப்பெயர்முதலிய பெயர்கள்வந்து புணருமிடத்தெவ்வாறும்—

அது-ஆறென்னுமெண்ணுப்பெயர்போலவந்ததுயிராயின் முதல்குறுகுதலின்றியும் - வந்ததுமெய்யாயின் முதல்குறுகி உகரம் பெற்றும்-வரும். உம்.

ஏழ் - ஆயிரம் - எழாயிரம். உயிரெழுத்து.
கலம் - எழுகலம். } வல்லெழுத்து.
நாழி - எழுநாழி. } மெல்லெழுத்து.
வகை - எழுவகை. } இடையெழுத்து.

எனவரும் - சிறுபான்மை எழாயிரம் என வுயிர்வந்தவிடத்துக் குறுகியும்-எழ்தாமரை என மெய்வந்தவிடத்துக்குறுகுதலின்றியும்-எழுபஃது எனக்குறுகா துகரம்பெற்றும்வரும்: எவ்வேழ் - எழுனே-என ப்பிறவிடங்களிலும் ஆறென்பதற்குக் கூறியவாறே முடியுமெனக் கொள்க.

௱௭௮. லகரவீற்றுச்சொல்லின்முன் மூவினமெய்களும்வரி னிருவழியுமெவ்வாறுபுணரும் —

நிலைமொழியீற்று லகரமானது வல்லெழுத்துவரின்வேற்றுமையில். றகரமாகும்- அல்வழியிலொருகால் றகரமாகியு மொருகாலியல்பாகியு முறழ்ந்துவரும். மெல்லெழுத்துவரினிருவழியும் னகரமாகும். இடைமெழுத்துவரி னிருவழியுமியல்பாகும். உம்.

கல் - குறை - கற்குறை. கல்- குறிது-கற்குறிது-கல்குறிது. } என
மாட்சி- கன்மாட்சி. மாண்டது- கன்மாண்டது. } வரு
யாப்பு - கல்யாப்பு. யாது - கல்யாது. } ம்.

இன்னுஞ்சிறுபான்மை நிலைமொழியீற்று லகரம்-கால்குதித்தோடிக் கடல்புகமண்டி-எனவேற்றுமையிற் றிரியாதியல்பாதலும். கால்குறிது எனவல்வழியினுறழாதியல்பேயாதலும்வேற்படைஎனத்திரிந்தேவருதலுமுளவெனக்கொள்க.

௱௭௯. தனிக்குறிலைச்சாராது நெடின்முதலியவற்றைச்சார்ந்து நின்ற லகரம் எவ்விடத்துங்கெடுதலின்றே —

அந்நிலைமொழியீற்று லகரம் அல்வழியில் வந்த தகரம்-றகரமாய்த்திரிந்தபின்னும் - இருவழியிலும்வந்த நகரம்-னகரமாய்த்திரிந்தபின்னுங்கெடும் உம்.

வேல் - தீது - வேறீது. }
நன்று - வேனன்று. } எனவரும்.
நன்மை - வேனன்மை. }

சிறுபான்மை தோன்றறீமை எனவேற்றுமையிலுந் தகரந்திரிந்தபின் கெடுதலுண்டு.

௱௮௰. அவ் - இவ் - உவ் - என்னுஞ் சுட்டுப்பெயர் மூன்றன்மு ன்னும் மூவினமெய்களும்வரின் அல்வழியிலெவ்வாறுபுணரும்.

அம்மூன்றுசொற்களினீற்று வகரமெய்வல்லினம்வரின் ஆய் தமாய்த்திரியும். மெல்லினம்வரின் வந்தவெழுத்தாய்த்திரியும். இடை யினம்வரி னியல்பாகும் உம்.

அவ் - கடிய - அஃகடிய.
ஞாணம் - அஞ்ஞாணம்
யாவை - அவ்யாவை.
} எனவரும் பிறவற்றோடு மிவ்வாறேயொட்டுக.

௱௮௧. அவ் - இவ் - உவ் - எவ் - என்னு மிந்நான்குசொற்களுந் தம்முன் வேற்றுமைப்பொருளிற் பெயரோனும். உருபேனும்வரி னெச்சாரியைபெறும்—

அந்நான்குசொற்களும் அற்றுச்சாரியைபெறும். உம்.

அவ் - அழகு - அவற்றழகு. அவ் - ஐ - அவற்றை.
எவ் - அழகு - எவற்றழகு. எவ் - ஐ - எவற்றை.
} எனவரும்.

௱௮௨. ளகரவீற்றுச்சொல்லின்முன் மூவினமெய்களும்வரி னிரு வழியுமெவ்வாறுபுணரும்—

நிலைமொழியீற்று ளகரமானது வல்லெழுத்துவரின் வேற்று மையில் டகரமாகும். அல்வழியிலொருகால் டகரமாகியு மொருகா லியல்பாகியு முறழ்ந்துவரும். மெல்லெழுத்துவரின் ணகரமாகும். இடையெழுத்துவரி னியல்பாகும். உம்.

முள் - குறை. - முட்குறை. முள் - குறிது - முட்குறிது - முள்குறிது.
மாட்சி - முண்மாட்சி. மாண்டது - முண்மாண்டது.
யாது - முள்யாது. யாது - முள்யாது.
}
எனவரும்.

இன்னுஞ் சிறுபான்மை நிலைமொழியீற்று ளகரம் - வாள்போழ்ந்த ட்ட நீள்கழன்மறவர் - எனவேற்றுமையிற்றிரியாதியல்பாதலும். மர ங்கள் கடிய - என வல்வழியினுறழா தியல்பேயாதலும் - வாட்ப டை எனத்திரிந்தேவருதலு முளவெனக்கொள்க.

௱௮௫. தனிக்குறிலைச்சாரா து நெடின்முதலியவற்றை ச்சார்ந்து நின்ற ளகரம் எவ்விடத்துங்கெடுதலின்றே—

அந்நிலைமொழியீற்று ளகரம் அல்வழியில்வந்த தகரம்-டகரமாய்த்திரிந்தபின்னும் இருவழியிலும்வந்த நகரம்-ணகரமாய்த்திரிந்தபின்னுங்கெடும். உம்.

வாள் - தீது - வாடீது.
நன்று - வாணன்று.
நன்மை - வாணன்மை. } எனவரும்.

இன்னுஞ் சிறுபான்மை. வேடீமை என வேற்றுமையிலுந்தகரந்திரிந்தபின்கெடுதலுமுண்டு.

௱அ௪. குற்றெழுத்தைச்சார்ந்துநின்ற லகர ளகர மெய்கள்-எவ்விடத்தாயினும் ஆய்தமாய்த்திரிந்துவருதலுமுண்டோ—

அந்நிலைமொழியீற்று லகர ளகர மெய்களிரண்டும் அல்வழியில் வந்த தகரம்-றகரமாய்த்திரிந்தபின்-றகர டகரங்களாய்த்திரிதலன்றி யாய்தமாகவுந்திரியும். உம்.

கல் - தீது - கற்றீது - கஃறீது.
முள் - தீது - முட்டீது - முஃடீது. } எனவரும்.

௱அ௫. ணகரவீற்றுச்சொல்லின்முன் மூவினமெய்களும்வரினிருவழியு மெவ்வாறுபுணரும்—

நிலைமொழியீற்று ணகரமானது வேற்றுமையில் வல்லினம்வரின் - றகரமாகும். மெல்லினமு மிடையினமும்வரி னியல்பாகும் அல்வழியின் மூவினமெய்கண்முன்னு மியல்பாகும். உம். பொன் - குடம் - பொற்குடம். பொன்மாட்சி, பொன்வன்மை. எம். பொன் கடிது. பொன்மாண்டது. பொன்வலிது. எம்.வரும்.

௱அ௬. தனிக்குறிலைச்சாராது நெடின்முதலியவற்றைச்சார்ந்துநின்ற னகரம் - எவ்விடத்துங்கெடுதலின்றோ—

வருமொழிமுதலிலிருக்கின்ற நகரமானது-னகரமாய்த்திரிந்தபின் அந்நிலைமொழியீற்று னகரங்கெடும். உம்.

மான் - நன்று - மானன்று. மான் - நன்மை - மானன்மை.
அரசன் - நல்லன் - அரசனல்லன். அரசன் - நன்மை - அரசனன்மை. }
எனவரும்.

௱௮௭. ண ள ன ல - என்னு நான்குமெய்முன்னும்-தகர நகரங் கள்வரி னிருவழியுமெவ்வாறுபுணரும்—

அந்நான்குமெய்முன்னும் வருந் தகரமு நகரமுமியக்கவி தியில்லாமையாலிருவழியுந்திரியும். அத்திரிபு[illegible]கூறுகின்றாம்.

ணகர ளகரங்களின்முன்வந்த தகரம்-டகரமாகும். உம்.

கண்-தீது-கட்டீது. கண்-தீமை-கட்டீமை.
முள்-தீது-முட்டீது. முள்-தீமை-முட்டீமை. } எனவரும்.

ணகர ளகரங்களின்முன்வந்த நகரம்-ணகரமாகும். உம்.

கண்-நன்று-கண்ணன்று. கண்-நன்மை-கண்ணன்மை.
முள்-நன்று-முண்ணன்று. முள்-நன்மை-முண்ணன்மை. } எனவரும்.

னகர லகரங்களின்முன்வந்த தகரம்-றகரமாகும். உம்.

பொன்-தீது-பொன்றீது. பொன்-தீமை-பொற்றீமை.
கல் -தீது-கற்றீது. கல் -தீமை-கற்றீமை. } எனவரும்.

னகர லகரங்களின்முன்வந்த நகரம் - னகரமாகும். உம்.

பொன்-நன்று-பொன்னன்று. பொன்-நன்மை-பொன்னன்மை.
கல் -நன்று-கன்னன்று. கல் -நன்மை-கன்னன்மை. }
எனவரும்.

௱௮௮. தான் - தாம் - நாம் - எம். யான் - யாம் - நீர் - நீ - எம். சொல்லப்பட்ட விருதிணைக்கும் பொதுவாகிய வேழுபெயர்களும் வேற்றுமைத்தொகை நிலையிலுந் தொகா நிலையிலு நிலைமொழிகளாய் நிற்குமிடத் தெவ்வாறாம்—

தான் - தாம்-நாம்-என்னு மூன்றும்-முறையே - தன்-தம்-நம் - எனமுதல் குறுகிநிற்கும். யான் - யாம் - என்பன -என்-எம்-எனவும். நீ-என்பது-நின்-அல்லது உன் - எனவும். நீர் - என்பது - நும்-அல்லது-உம்-எனவுந்திரிந்துநிற்கும். உம்.

தான் - அழகு - தன்னழகு. தான் - ஐ - தன்னை.
நாம் - அழகு - நம்மழகு. நாம் - ஐ - நம்மை. } முதல்குறுகின.

யான் - அழகு - என்னழகு. யான் - ஐ - என்னை.
நீ - அழகு - நின்னழகு. நீ - ஐ - நின்னை.
உன்னழகு. உன்னை. } திரிந்து வந்தன.

பிறவற்றோடு மிவ்வாறே யொட்டுக.

## உயிரு மெய்யுமாகியவிருவகையீற்றின் பொதுப்புணர்ச்சி.

௱அகூ. உயிரையு மெய்யையு மீறாகவுடைய வெவ்வெவ் வகைப்பட்டசொற்களின்முன்-க-ச-த-ப-என்னும் வல்லெழுத்துக்கள்வரி னிலைமொழியீறும் வருமொழிமுதலு மியல்பாம்—

உயர்திணைப்பெயரும். பொதுப்பெயரும். விளிப்பெயரும்: வினைமுற்றும். வினைத்தொகையும். ஆகியவைவகைச்சொற்களின் முன்னும் வல்லெழுத்துக்கள்வரிற் பெரும்பாலு நிலைமொழியீறும் வருமொழிமுதலு மியல்பாகும். அவற்றிற்கு உதாரண முறையே கூறுகின்றாம்.

நம்பிகுறியன் - நங்கைசிறியள் - அவர்தீயர் - அவன்பெரியன்-எனவல்வழியிலும். நம்பிகை - நம்பிகண் - எனவேற்றுமையிலும் உயிருமெய்யுமீறாகிய வுயர்திணைப்பெயர்முன் வல்லெழுத்துவர் நிலைமொழியீறும் வருமொழிமுதலு மியல்பாயின. —— பெரும்பாலு மியல்பாமென்றதனாற்சிறுபான்மை, கபிலபரணன்-என நிலைமொழியீறுகெடுதலும்-குமரகோட்டம்-குமரக்கோட்டம்-எனவதுகெட்டு வல்லெழுத்துமிகாதுமிக்கு முறழ்தலுமுள.

சாத்திகுறியள்-சாத்திகுறிது-நீகுறியை-தாய்குறியள் - தாய்குறிது-சாத்தன்குறியன்-சாத்தன்குறிது-எனவல்வழியிலும். சாத்திகை-சாத்திகண் - எனவேற்றுமையிலும் உயிருமெய்யு மீறாகிய பொதுப்பெயர்முன் வல்லெழுத்துவர் நிலைமொழியீறும் வருமொழி முதலு மியல்பாயின.——பெரும்பாலு மியல்பா மென்றதனாற் சிறுபான்மை. தன்பகை - தற்பகை - என நிலைமொழியீற்றுமெய்திரியாதுந் திரிந்து முறழ்ந்துவருதலுமுள.

நங்கைப்பெண் - சாத்திப்பெண் - எனவுயிரீற் றுயர்திணைப்பெயர் முன்னும் பொதுப்பெயர்முன்னும் வல்லெழுத்து மிகுதன்மே லுயிரீற்றிற்குக்கூறிய பொதுவிதியுளடங்கும்.

வேந்தேகேளாய் - சாத்தாசொல்லாய் - வண்டேபோகாய் - நங்காய்காணாய் - தாய்சொல்லாய் - கிள்ளாய்தீயை - எனவுயிரீறு மெய்யீறுமாகிய மூவகை விளிப்பெயர்முன்னும் வல்லெழுத்துவர்

நிலைமொழியீறும் வருமொழிமுதலு மியல்பாயின.——பெரும்பா லுமியல்பாமென்றதனாற் சிறுபான்மை. ஆடூஉக்கூருய்-புரும்கொடி யை - எனவல்லெழுத்தியல்பாகாது மிகுதலுமுள.

வந்தான்கொற்றன் - வந்தாள்சாத்தி - வந்தார்தேவர் - வந்த துபுலி - வந்தனபுலிகள் - உண்ணுகுதிரைகள் - வந்தேன்சிறியேன்- வந்தாய்கொற்று - வந்தீர்சாத்தீரோ - வந்தனைதேவா - வருதிபூதா- வாராய்கொற்று - நடகொற்று - நடத்துகொற்று - நடப்பிகொற்று- வாழ்ககொற்று-வாழியகொற்று. குழையன்கொற்றன் - கரியனகுதி ரைகள் - என மெய்யீறு முயிரீறுமாகிய வினைமுற்றின்முன் வல்லெ ழுத்துவர் நிலைமொழியீறும் வருமொழிமுதலு மியல்பாயின.—— பெரும்பாலுமியல்பாமென்றதனாற்சிறுபான்மை. நொக்கொற்று- துக்கொற்று-கூயிற்றுக்குயில் - எனச்சில வினைமுற்றின்முன் வல்லெ ழுத்து மிகுதலுமுள.

எறிபடை - விடுகணை - அறைபுகழ் - உண்கலம் - தின்பண்டம்- எய்கணை-சேர்புகழ்-வாழ்குமரி-கொள்கடை - எனவுயிரீறுமெய்யீறு மாகிய வினைத்தொகை முன் வல்லெழுத்துவர் நிலைமொழியீறும் வருமொழிமுதலு மியல்பாயின.——பெரும்பாலுமியல்பா மென் றதனாற் சிறுபான்மை. நட - கால் - நடந்திடுகால். தா - பொருள் - தருபொருள். எனச்சிலவினைத்தொகைகள் - மற்றவைபோல முதனி லையாகவே நில்லாது திரிந்துவருதலுமுள.

ணகர ளகர னகர லகர மெய்யீற்றிவ்வைவகைச்சொல்
வின்முன்னுந் தகரந் திரிதலும்-மகரவீறியல்பாகா
து திரிதலுங் கெடுதலும்-பிறவுமுன் பவ்வவற்றிற்குக்
கூறியவிதியுளடங்கும்.

௱௬௯. உயிரையு மெய்யையு மீறுகவுடைய வெல்லாப்பெயர்ச் சொற்களுந் தம்முன்வேற்றுமைப்பொருளிற் பெயரோனு முருபே னும்வரி னெச்சாரியைபெறும்——

மேவிச்சொல் விச்சாரியைபெறுமெனவிதித்தன வொழிந்தமற் றைப்பெயர்களெல்லாம் பெரும்பாலும் இன்சாரியைபெறும். உம்.

விளவின்கோடு-கல்வின்கடுமை - நாகின்கால் - எம். விளவினை - பலாவினை-கிளியினை-தீயினை-கடுவினை-பூவினை-சேவினை- தினையினை -

சோவினை - வெளவினை - எம். மண்ணினை - பொன்னினை - வேயினை - நாரினை - கல்லினை - தெவ்வினை - யாழினை - முள்ளினை - நாகினை - எம். வினவினால் - விளவிற்கு - விளவினது - விளவின்கண் - எம். வரும்.

௱௩௧. உயிரொடு மெய்யையு மீறாகவுடைய வெண்ணுப்பெயரு நிறைப்பெயரு மளவுப்பெயருமாகிய மூவகைப்பெயர்களின்முன் அவைகளிற்குறைந்தவவ்வப்பெயர்கள்வரின் எச்சாரியைபெறும்—

அவைபெரும்பாலும் - ஏ - என்னுஞ்சாரியைபெறும். உம். ஒன்றேகால் - காலேகாணி - எம். தொடியேகஃசு - எம். கலனேதூணி - எம். மூவகைப்பெயரும் ஏகாரச்சாரியை பெற்றன.—— பெரும்பாலுமென்றதனாற் சிறுபான்மை - ஒன்றரை - தொடியரை - தூணிப்பதக்கு - எனமூவகைப்பெயரும் அச்சாரியைபெறாதும்வந்தன.

௱௩௨. வேற்றுமைப்புணர்ச்சிகளுள் - மேற்கூறிய விதிபெறாது வேறுபட்டுவருவனவுமுளவோ—

வேறுபட்டுவருவனவுஞ்சிலவுள - அவைமுறையே கூறுகின்றாம்.

இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சியுண் மேற்கூறிய விதிபெறாது - தலைவற்புகழ்ந்தான் - எனவியல்பாகவேண்டியவிடத்து விகாரமாகவும். வரைபிளந்தான் - பொன்கொணர்ந்தான் - எனவிகாரமாகவேண்டியவிடத்தியல்பாகவும். அரசனைவணங்கினான் - நின்னைவணங்கினான் - எனவுயர்திணைப்பெயரிடத்தும் பொதுப்பெயரிடத்தும் பெரும்பாலுமுருபு விரிந்தும். அரசற்கண்டேன் - நிற்கண்டேன் - எனச்சிறுபான்மை யவ்விருபெயரிடத்துந் தொக்கும். வருவனசிலவுளவாம்.

மூன்றாம்வேற்றுமைப்புணர்ச்சியுள் ஆறுருபுதொக்கநிலைமொழிகளின்முன் - வல்லெழுத்துக்களைமுதலிலுடைய செயப்பாட்டுவினைவரின் - புலிகடிக்கப்பட்டான் - நாய்கௌவப்பட்டான் - எனவல்லெழுத்தியல்பாகியும். வளிகொல்லப்பட்டான் - வளிக்கொல்லப்பட்டான் - சூர்கொல்லப்பட்டான் - சூர்க்கொல்லப்பட்டான் - எனவல்லெழுத்தொருகான்மிக்கு மொருகான்மிகாது முறழ்ந்தும்வரும்.

நான்காம்வேற்றுமைப்புணர்ச்சியிற் குவ்வுருபு - நம்பிக்கு-அவற்கு - அவனுக்கு - எனவியல்பாகவேண்டியவிடத்து விகாரமாகவும்வரும். இவ்வாறுவருதல் சிறுபான்மையெனக்கொள்க.

ஏழாம்வேற்றுமைப்புணர்ச்சியுள். வருமொழி வினைச்சொல்லாயின் - வரைபாய்வருடை - மண்புகுந்தும் விண்பறந்தும் - என விகாரமாகவேண்டியவிடத் தியல்பாகவும்வரும்.

௱௯௫. இன்னு மிப்புணர்ச்சிவிதிகளுள் வேறுபட்டு வருவனவுமுளவோ—

இடைச்சொல்லும்-உரிச்சொல்லும்-வடசொல்லும்- ஆகிய மூவகைச்சொற்களுள்ளு மிதுவரையிற்கூறிவந்த புணர்ச்சிவிதிபெறு தி வருவனவும். பிறசொற்களுள்ளுஞ் சிறுபான்மைவேறுபட்டுவருவனவும். நிலைமாறி நிற்கின்ற பொலிமொழிகளும். பலவாறுவிகாரப்பட்டுப்புணர்ந்துநிற்குமரூஉமொழிகளும்பிறவுமுளவாமிது சுருங்கிய நூலாதலிற் பெரும்பாலும் பயன்படுவனவன்றி யேனையவற்றை விரித்தில மவையெல்லாம் வழக்குஞ் செய்யுளு நோக்கியாராய்ந்தமைத்துக்கொள்க.—— உம். ஆன்கன்று- வண்டின்கால்- எனவேற்றுமையிற்சாரியையிடைச்சொல் வல்லெழுத்தின்முன்னியல்பாயின. மழகளிறு - தடந்தோள் - எனவுரிச்சொல்லின்முன் வல்லெழுத்தியல்பாகியு மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன ஆதிபகவன் - அளிகுலம் - தனதடம் - என வடசொன்முன்வல்லெழுத்தியல்பாயின. பனை - அட்டு - பனாட்டு. நாழி - உரி - நாடுரி. நாவுரி. எனப்பிறசொற்களுண் முற்கூறிய விதிபெறாதுமுடிந்தன. இல் - முன்-முன்றில். எனச்சொன்னிலைமாறிய பொலிமொழி றகரமெய்தோன்றப்புணர்ந்தன. அருமருந்தன்னபிள்ளை-அருமந்தபிள்ளை. சோழநாடு - சோணாடு - எனமரூஉமொழிகள் - நிலைமொழி வருமொழிகளிற்பலவாறு விகாரப்பட்டுப்புணர்ந்தன பிறவுமிவ்வாறுவருதல்காண்க.

எழுத்ததிகாரமுடிந்தது.

OFFICE OF THE CURATOR
RECEIVED
CHEPAUK, MADRAS-5
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

# சொல்லிலக்கணம்.

## முதலாவது சொல்லியல்.

க. சொல்லிலக்கணமென்பதியாது—

சொற்களுக்குரியவிதியே சொல்லிலக்கணமாம்.

உ. அச்சொல்லிலக்கணமெத்தனை யியல்களாலுணர்த்த ப்படுகின்றது—

சொல்லியலும் - வேற்றுமையியலும் - ஒழிபியலும் - ஆகிய மூன்றியல்களாலுணர்த்தப்படுகின்றது.

௩. சொல்லென்பதியாது—

எழுத்துக்களாலாக்கப்பட்டுத் தனிமொழியுந் தொடர்மொழியுமென விருவகையினையுடைத்தா யிருதிணையாகியவைம்பாற்பொருளையு மூவிடத்தைப்பற்றிநின்று விளக்குவதேசொல்லாம்.

௪. தனிமொழிகளென்பனயாவை—

பகாப்பதமாயினும் பகுபதமாயினும் வேறுசொல்லோடு கலவாதுதனித்துநின்று பொருளையுணர்த்துவன தனிமொழிகளாம். ——உதாரணம் பொன் - பொன்னன் - எனவும். நட - நடந்தான் - எனவும். மன் - கொல் - எனவும். உறு - நனி - எனவும் வரும்.

௫. தொடர்மொழிகளென்பனயாவை—

அவ்விருவகைப்பதங்களுந் தொகைநிலை வகையாலுந் தொகாநிலைவகையாலு மிரண்டு முதலியனவாகத்தொடர்ந்து வருவன தொடர்மொழிகளாம்.——உம். குடம்வனைந்தான் - இராப்பகல்

என்பன தொகைநிலைத்தொடர். குடத்தை வனைந்தான் - இராவும் பகலும் - வாளாற்பகைவனைவெட்டியவரசன் - என்பன தொகாநிலைத்தொடர்.

சா. இருதிணையென்பனயாவை—

உயர்திணையு மஃறிணையுமாகும்.

எ. உயர்திணையென்பனயாவை---

உயர்வாகிய சாதியையுடைய - மக்களும் - தேவரும் - நரகரும் - ஆகிய மூவகைப்பொருளு முயர்திணையாம்.

அ. அஃறிணையென்பனயாவை-—

உயர்வல்லாத சாதியையுடைய - விலங்கு - பறவை - மாமுதலிய வுயிருடையனவும். நிலம் - நீர் - முதலிய வுயிரில்லாதனவுமாகிய பொருள்களனைத்து மஃறிணையாம்.

சு. ஐம்பாலென்பனயாவை—

ஆண்பாலும் பெண்பாலும் பலர்பாலு மொன்றன்பாலும் பலவின்பாலும் ஆகியவைந்துமாம்.

ய. உயர்திணை யெத்தனைப்பால்களையுடைத்தாம்---

ஆண்பால் - பெண்பால் - பலர்பால் - என்னு மூன்றுபால்களையுடைத்தாம்.

இவற்றுட் பலர்பாலாவது - ஆடவர் - காளையர் - என்பனமுதலிய வாண்பன்மையும். பெண்டிர் - மங்கையர் - என்பனமுதலிய பெண்பன்மையும். மக்கள் - அவர் - என்பனமுதலிய வவ்விருவர் பன்மையும். அடக்கி நின்றது.

யக. அஃறிணை யெத்தனைப்பால்களையுடைத்தாம்—

ஒன்றன்பால் - பலவின்பால் - என்னு மிரண்டுபால்களையுடைத்தாம்.

அஃறிணையுள்ளும் - களிறு - சேவல் - என்பன முதலிய வாண்பாலும். பிடி - பேடை - என்பனமுதலிய பெண்பாலு முண்டெனினும். உயிருள்ளவற்றுள் - புழு - மாமுதலியசிலவற்றிற்கு முயிரில்லாதனவற்றிற்குமில்லாமையால் அப்பகுப்பொழித்தெல்லாவற்றிற்கும் பொருந்த வொன்றன்பாலெனப்பட்டது.

௯௨. மூவிடமென்பனயாவை—

தன்மை - முன்னிலை - படர்க்கை-என்பனவாம்.——உம். யான் - வந்தேன் - என்பன தன்மை. நீ - வந்தாய் - என்பன முன்னிலை. அவன் - வந்தான் - என்பன படர்க்கை. பிறவுமன்ன.

௯௩. தன்மைமுதலிய மூவிடப்பெயர்களாலும்-அம்மூவிடவினைமுற்றுக்களாலும் - இருதிணையு மைம்பாலு மறியப்படுமோ—

படர்க்கைப்பெயராலும் வினைமுற்றாலு மிருதிணையைம்பால்களறியப்படுமன்றிப்பிறவற்றாலறியப்படாவாம்.——உம். அவன்-அவள்-அவர்-அது-அவை-என ப்படர்க்கைப்பெயராலும். வந்தான்-வந்தாள்-வந்தார்-வந்தது-வந்தன - எனப்படர்க்கை வினைமுற்றாலும். இருதிணையு மைம்பாலுமறியப்பட்டன.

௯௪. தன்மைமுன்னிலைப்பெயர்களாலுந் தன்மைமுன்னிலைவினைமுற்றுக்களாலு மறியப்படுவனயாவை—

அவ் வீரிடத்து ப்பெயர்களாலும் வினைமுற்றுக்களாலும் - இருதிணையைம்பாலுள் - ஒருமையும் பன்மையுமறியப்படும்.——உம். யான் - யாம் - எனத்தன்மைப்பெயராலும். நீ-நீர்-என முன்னிலைப்பெயராலும், வந்தேன் - வந்தேம் - என த்தன்மை வினைமுற்றாலும். வந்தாய் - வந்தீர்-எனமுன்னிலைவினைமுற்றாலும். ஒருமையும் பன்மையும்பெறப்படுதல்காண்க.

மூவிடங்களு ளொன்றற்குரிய பெயராலும்வினைமுற்றாலும் பெறப்படுவன விவையெனவே யிவ்விடங்கட்குப்பொதுவாகிய பெயர்வினைகள் சிறப்புச்சொன் முதலியவற்றோடும் இடைச்சொற்களும் உரிச்சொற்களும் பெயர்வினைகளுளொன்றோடுங்கூடி யோரிடத்திற்குரிமையாய்ப்பொருளையுணர்த்துமெனக்கொள்க.

௯௫. மூவிடத்தைப்பற்றிநிற்குஞ்சொற்கள் - இருதிணை யைம்பாற்பொருள்களையெவ்வாறுணர்த்தும்—

அவையப்பொருள்களைவெளிப்படையினாலாயினுங்குறிப்பினாலாயினுமுணர்த்திநிற்கும்,——உம். நிலம் - நீர் - தீ - காற்று - ஆகாயம் - என்றாற்போல்வன வெளிப்படையாற் பொருளையுணர்த்துவனவாம். இவ்வாறன்றித்தாமரைமுகம். என்புழித்தாமரையென்ப

ததன்மலனையும். பொற்றொடிதந்தபுனைமடல் - என்புழிப்பொற்றொடி யென்பதுதனை யுடையாளையும். அலங்குளைப்புரவியைவொடு சினைஇ - என்புழியைவரென்பது பாண்டுமக்களைவரையும். உணர்த்தின இவ்வாறுவருவன குறிப்பாற்பொருளையுணர்த்துவனவாம்.

௰௬. இவ்வாறாகிய சொல்லான தெத்தனை வகையினை யுடைத்தாம்—

இயற்சொல்லெனவுந் திரிசொல்லெனவுஞ் சொல்லப்படுமியல்பினையுடைய - பெயர்ச்சொல்லும் - வினைச்சொல்லும் - இடைச்சொல்லும் - உரிச்சொல்லும் - ஆகிய நான்குவகையினையுடைத்தாம் - இந்நான்கனோடு திசைச்சொல்லையும் வடசொல்லையுங் கூட்டித்தொகைசெய்யும்போது ஆறுவகையினையுடைத்தாமென்றுஞ் சொல்லப்படும்.

எனவே இயற்சொல்லுந் திரிசொல்லுமாகிய விரண்டும் - பெயரியற்சொல் - வினையியற்சொல் - இடையியற்சொல் - உரியியற்சொல் - எம். பெயர்த்திரிசொல் - வினைத்திரிசொல் - இடைத்திரிசொல் - உரித்திரிசொல் - எம். ஒவ்வொன்று நந்நான்காமெனக்கொள்க.

௰௭. இயற்சொல்லென்பனயாவை—

பாண்டிவளநாடென்னப்பட்ட செந்தமிழ்நிலத்துமொழிகளாகி யுலகவழக்கிலுஞ் செய்யுள்வழக்கிலுநின்று கற்றாருங் கல்லாதாருமாகிய வெல்லார்க்குந் தம்பொருளையியல்பாக விளக்கி வருவன வியற்சொற்களாம்.——உம். மண் - பொன் - மரம் - என்பன பெயரியற்சொல் : நடந்தான் - வந்தான் - என்பன வினையியற்சொல் : அவனை - அவனால் - என்பவற்றுள்-ஐ-ஆல்-என்பன விடையியற்சொல்: இளமை - அழகு - என்பன வுரியியற்சொல் : பிறவுமன்ன.

௰௮. திரிசொல்லென்பனயாவை—

செந்தமிழ்நிலத்துமொழிகளாயினும் பாட்டு முரையுமாகிய செய்யுட்கேயுரியவாய்க் கற்றார்க்குமாத்திரந் தம்பொருளைவிளக்குவன திரிசொற்களாம் : இத்திரிசொற்களொருபொருள்குறித்த பலசொல்லாகியும்பலபொருள்குறித்தவொருசொல்லாகியும்வருமெனக்கொள்க.——உம். கிள்ளை - தத்தை - என்பனகிளியென்னு மொருபொருள்குறித்த பலபெயர்த்திரிசொல் : வாரணம்-என்பது-யானையும்-கோழியும்-சங்கும்-முதலாகிய பலபொருள்குறித்த வொருபெயர்த்

திரிசொல் : சென்முன் - படர்ந்தான் - என்பன - போயினனென்னு மொருபொருள் குறித்த பலவினைத்திரிசொல் : வரைந்தான் - என் பது - கொண்டான் - நீக்கினன் - என்னும் பலபொருள்குறித்த வொருவினைத்திரிசொல்: வருதும்-சேறும்-இவற்றுள்- தும்-றும்-என் னும் விகுதிகள் - தன்மைப்பன்மையென்னுமொருபொருள்குறித் த பலவிடைத்திரிசொல் : கொல் - என்பது - ஐயமும் - அசைநிலை யும் - ஆகிய பலபொருள்குறித்தவோரிடைத்திரிசொல் : உறு-தவ- என்பனமிகுதியென்னுமொருபொருள்குறித்த பலவுரித்திரிசொல் : கடி - என்பது - காவலும் - கூர்மையுமுதலாகிய பலபொருள்குறி த்த வோருரித்திரிசொல் : எனவரும் பிறவுமன்ன.

௰௯. திசைச்சொல்லென்பனயாவை—

செந்தமிழ்நாட்டைச்சூழ்ந்த தென்பாண்டிமுதலிய கொ டுந்தமிழ்நாடு பன்னிரண்டிற்குந் தெலுங்குமுதலிய பிறநாட்டிற்கு முரியமொழிகளாய் அத்திசைகளினின்றும்வந்து செந்தமிழ்நாட்டு மொழிகளோடு மொரோவிடத்திற்கலந்து வழங்குவன திசைச்சொற் களாம்.

கொடுந்தமிழ்நாடுபன்னிரண்டாவன - தென்பாண்டிகுட்டங்குடங் கற்காவேண்பூழி பன்றியருவாவதன்வடக்குநன்முயசீதமலாடுபுனனா டு செந்தமிழ்சேரோதமில்பன்னிருநாட்டெண்-என்பனவாம். தென் பாண்டிநாட்டார் - ஆவினைப்பெற்றமென்பர் - குட்டநாட்டார் - தாயைத்தள்ளையென்பர். குடநாட்டார்-தந்தையை அச்சனென்பர். கற்காநாட்டார் - வஞ்சரைக் கையரொன்பர். வேணாட்டார் - தோட் டத்தைக்கிழாரென்பர். பூழிநாட்டார்-சிறுகுளத்தைப்பாழியென்ப ர். அருவாநாட்டார்-செய்யைச்செறுவென்பர். அருவாவடதலையார். புளியையெகினென்பர். சீதநாட்டார் - தோழனையெலுவனென்பர் பிறவுமன்ன.

௨௰. வடசொல்லென்பனயாவை—

மேலெழுத்ததிகாரத்துட் பதவியலிடத்துத்-திரியாது தற் சமமாகவும். திரிந்துதற்பவமாகவும். தமிழில்வந்துவழங்குமென்ற வாரியமொழிகளாம்.—— உம். கமலம் - மேரு - காரணம் - எம். சுகி - போகி - சுத்தி - அரன் - எம். வரும் பிறவுமன்ன.

# பெயர்ச்சொல்.

உக. பெயர்வினை யிடையுரியென்னு நால்வகைச்சொற்களுட் பெயர்ச்சொல்லென்பதியாது—.

இடுகுறியுங் காரணக்குறியுமென விருவகையினையுடைத்தா- யெழுவாய் வேற்றுமைமுதலியவெட்டுவேற்றுமைகளுஞ்சார்தற்கிட மாகி-யிருதிணை யைம்பான் மூவிடங்களு ளொவ்வொன்றற்குரிமை யாகியும்பலவற்றிற்குப்பொதுவாகியும் வருவதுபெயர்ச்சொல்லாம்.

உஉ. இடுகுறிப்பெயரென்பனயாவை.

ஒருகாரணமும்பற்றாமற் பொருள்களை யுணர்த்தி நிற்கும் பெயர்களாம். உம், கடல்-நிலம்-யாறு-சோறு-மரம்-எனவரும்.

இன்னு மரமென்பது பலபொருள்களுக்குப்பொதுவாய் நிற் கையா லிடுகுறிப்பொதுப்பெயரென்றும்-விள-பலா-என்பன வொ வ்வொருபொருளையேயுணர்த்தி நிற்கையா லிடுகுறி ச்சிறப்புப்பெய ரென்றும் பெயர்பெறுமெனக்கூறுவர்.

உங. காரணப்பெயரென்பனயாவை—

யாதேனுமொருகாரணம்பற்றி ப்பொருள்களையுணர்த்தி நி ற்கும் பெயர்களாம். உம். பொன்னையுடையவனை ப்பொன்னனெ ன்றும்-பறத்தலையுடையபுள்ளை ப்பறவையென்றும்- அணியப்படுவ தையணியென்றும்.வழங்குவன காரணப்பெயர்களாம். பிறவுமன்ன.

இன்னும் அணியென்பது இடுவன தொடுவன கட்டுவன கவி ப்பன முதலியவாபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாய்நிற்கையா ற் காரண ப்பொதுப்பெயரென்றும்-முடி-கழல் என்பன முடியிற் கவிப்பதுங் கழலிற்கட்டுவதுமாகிய வொவ்வொன்றனையே யுணர்த் தலாற்காரணச்சிறப்புப்பெயரென்றும்பெயர்பெறுமெனக்கூறுவர்.

உச. அந்தணன்-முள்ளி-கறங்கு-என்றாற்போல வரும்பெயர்க ளிடுகுறிகாரணமென்னு மிரண்டனு ளெதனிலடங்கும்—

இவ்வாறுவரும்பெயர்கள்காரணங்கருதியவழி-அக்காரணங்க ளையுடையபலபொருள்களுக்குஞ்செல்லுகையாலுங் காரணங்கருதா தவழி யிடுகுறிமாத்திரையாய்நின் றொவ்வொருபொருட்கேசெல்லு கையாலு மிவையெல்லாங் காரணவிடுகுறியென ப்பெயர்பெறும்: வடநூலார் இடுகுறியை ரூடி என்றுங் காரணக்குறியை யோகமெ ன்றுங் காரணவிடுகுறியை யோகரூடியென்றுங்கூறுவர்.

௨௫. உயர்திணையாண்பாற்குரியபெயர்கள்யாவை—

பொருளிடங்கா லஞ்சினைகுணந் தொழிலென்னு மறுவகைப்பெயர்களோடும்- அ- இ- உ- என்னுஞ்சுட்டுக்களும்- எ- ஏ- யா- என்னும் வினாக்களும்- பிற- மற்று- என்பனவுமாகிய வெட்டிடைச்சொற்களோடும். பொருந்திவரும்னகரமெய்யீற்றுச்சொற்களும், நம்பிமுதலியனவுமுயர்திணையாண்பாற்குரியபெயர்களாம்: அவைமுறையே கூறுதும்.

பொருளால்வருபெயர்கள் - சுற்றமுமெண்ணுங் குழூஉவு முதலிய பொருள்களைப் பற்றிவருவனவாம்.———— உம்.

தமன்- நமன்- நுமன்- எமன்- என்பன சுற்றத்தால்வருபெயர்.
ஒருவன்- என்பதெண்ணால்வருபெயர்.
அவையத்தான்- அத்திகோசத்தான்- என்பன குழூஉவால்வருபெயர்.
பொன்னன்- முடியன்- என்பன பிறபொருள்களால்வருபெயர்.

இடத்தால் வருபெயர்கள்- குறிஞ்சி முதலிய வைந்திணையுந் தேயமு மூரும் வானுமகம் புறங்களுமுதலியவிடங்களைப்பற்றி வருவனவாம்.———— உம்

வெற்பன்- பொருப்பன்- என்பனகுறிஞ்சித்திணையால்வருபெயர்.
மறவன் - எயினன் - என்பன பாலைத்திணையால்வருபெயர்.
ஆயன் - இடையன்- என்பன முல்லைத்திணையால்வருபெயர்.
ஊரன் - உழவன் - என்பன மருதத்திணையால்வருபெயர்.
சேர்ப்பன் - திறைவன் - என்பன நெய்தற்றிணையால்வருபெயர்.
அருவாளன் - சோழியன்- என்பன தேயத்தால்வருபெயர்.
கருவூரான் - மதுரையான்- என்பன வூரால்வருபெயர்.
வானத்தான்- விசும்பான் - என்பன வானால்வருபெயர்.
அகத்தான் - புறத்தான் - என்பன வகம்புறங்களால்வருபெயர்.
மண்ணகத்தான்- பாதலத்தான்- என்பனபிறவிடங்களால்வருபெயர்,

**கா**லத்தால் வருபெயர்கள்-வருடமும்-பருவமு மாதமு-நாளு-முதலிய காலங்களைப்பற்றிவ ருவனவாம். ——————— உம்.

பிரபவன்-மூவாட்டையான்-என்பன வருடத்தால்வருபெயர்.
வேனிலான்-காரான்-என்பன பருவத்தால்வருபெயர்.
தையான்-சித்திரையான்-என்பன மாதத்தால்வருபெயர்.
ஆதிரையான்-விசாகத்தான்-என்பன நாளால்வருபெயர்.
நெருநலான்-காலையான்-என்பன பிறகாலத்தால்வருபெயர்.

**சி**னையால் வருபெயர்கள் - தோளுங் குழலும் காதுங் கண்ணுமுதலிய வுறுப்புக்களைப்பற்றி வருவனவாம். ——————— உம்.

திணிதோளன் -செங்குஞ்சியன்-வரைமார்பன்.
செங்கண்ணன்-குழைக்காதன்-நெடுங்கையன். } என்பனதோண்முதலிய வுறுப்புக்களால் வருபெயர்.

**கு**ணத்தால்வருபெயர்கள்-அளவு மறிவு மொப்பும் வடிவு நிறமுங் கதியுஞ் சாதியுங் குடியுஞ் சிறப்பு முதலிய குணங்களைப்பற்றி வருவனவாம். ——————— உம்.

பெரியன்-சிறியன்-என்பன வளவால்வருபெயர்.
அறிஞன்-புலவன்-என்பன வறிவால்வருபெயர்.
பொன்னொப்பான்-அமுதனையான்-என்பனவொப்பால்வருபெயர்.
குறளன்-கூனன்-என்பன வடிவால்வருபெயர்.
கரியன்-சிவப்பன்-என்பன நிறத்தால்வருபெயர்.
தேவன்-மானுடன்-என்பன கதியால்வருபெயர்.
பார்ப்பான்-வேளாளன்-என்பன சாதியால்வருபெயர்.
சேரன்-சோழன்-என்பன குடியால்வருபெயர்.
ஆசிரியன்-படைத்தலைவன்-என்பன சிறப்பால்வருபெயர்.
நல்லன்-தீயன்-என்பன பிறகுணத்தால்வருபெயர்.

**தொ**ழிலால்வருபெயர்கள்-ஓதலும்-ஈதலுமுதலியசெயலைப்பற்றிவருவனவாம்.உம்.

ஓதுவான்-ஈவான் -உறங்குவான்.
கணக்கன்-தச்சன்-செக்கான், } என்பன வோதலீதன் முதலிய தொழிலால்வருபெயர்.

சுட்டுமுதலிய வெட்டிடைச்சொற்களாலும் வரு
பெயர்களுக்கு. ———————— உம்.

அவன் - இவன் - உவன் - என்பன சுட்டிடைச்சொற்களால்வருபெயர். ஏவன் - எவன் - யாவன் - என்பன வினாவிடைச்சொற்களால்வருபெயர். பிறன் - மற்றையான் - என்பன பிறமற்றென்பவற்றால்வருபெயர்.

நம்பி முதலிய பெயர்களுக்கு. ———————— உம்.

நம்பி - ஆடூ - விடலை - கோ - வேள் - குரிசில் - தோன்றல் - ஏந்தல் - அண்ணல் - செம்மல் - வில்லி - வாளி - சென்னி - கிள்ளி - எனவுயர்திணை யாண்பாற் பொருள்குறித் துவருவனவெல்லாங்கொள்க.

உசு. உயர்திணைப்பெண்பாற்குரியபெயர்கள்யாவை —

மேற்கூறிய பொருளாதியாறனுள்ளும் - சுட்டுமுதலியவிடைச்சொற்களுள்ளும் - ளகரமெய்யை யிறுதியிற் பெறுதற்குரியனவும். இகரத்தை யிறுதியிற்பெறுதற்குரியனவும். தோழி முதலியனவுமுயர்திணைப்பெண்பாற்குரியபெயர்களாம். உம்.

பொருளால் வருபெயர்.

தமள் - நமள் - நுமள் - எமள் - எம். ஒருத்தி - எம். அவையத்தாள் - அவையத்தி - எம். பொன்னாள் - பொன்னி - எம். வரும்.

இடத்தால்வருபெயர்.

குறத்தி - எயிற்றி - இடைச்சி - உழத்தி - பரத்தி - எம். மலையாட்டி - அருவாட்டி - எம். கருவூராள் - கருவூரி - எம். வானத்தாள் - வானத்தி - எம். மண்ணகத்தாள் - மண்ணகத்தி - எம். வரும்.

காலத்தால்வருபெயர்.

மூவாண்டினாள் - எம். வேனிலாள் - எம். தையாள் - எம். ஆதிரையாள் - எம். நெருநலாள் - எம். வரும்.

சினையால்வருபெயர்.

திணிதோளாள் - திணிதோளி - எம். நெடுங்கையாள் - எம். வரும்.

### குணத்தால் வருபெயர்.

பெரியள்-எம். அறிவள்-எம். பொன்னொப்பாள்-எம். கூனி-எம். கரியள்-எம். தேவி-எம். பார்ப்பனி-எம். படைத்தலைவி-எம். வரும்.

### தொழிலால்வருபெயர்.

ஈவாள்-உறங்குவாள்-ஆடுவாள்-பாடுவாள்-எனவரும்.

### சுட்டுமுதலிய விடைச்சொற்களால்வருபெயர்.

அவள்-இவள்-உவள்-எம். எவள்-எவள்-யாவள்-எம். பிறள்-மற்றையாள்-எம். வரும்-பிறவுமன்ன.

### தோழிமுதலியபெயர்கள்.

தோழி-செவிலி-மகடூ-நங்கை-மாது-மடந்தை-இகுளை-எனவுயர்திணைப்பெண்பால் குறித்துவருவனவெல்லாங்கொள்க.

௨௭. உயர்திணைப்பலர்பாற்குரியபெயர்கள்யாவை—

மேற்சொல்லிய பொருளாதியாறனோடும்-சுட்டுமுதலிய விடைச்சொற்களோடும் பொருந்திவரும் ரகரமெய்யீற்றுச்சொற்களுங்-கள்ளென்னும்விகுதியீற்றுப்பெயர்களுளிவ்விடத்திற்குப்பொருந்திவனவுமுயர்திணைப் பலர்பாற்குரியபெயர்களாம். உம்.

### பொருளால்வருபெயர்.

தமர்-நமர்-நுமர்-எமர்-எம். இருவர்-மூவர்-எம். அவையத்தார்-எம். பொன்னர்-எம். வரும்.

### இடத்தால்வருபெயர்.

வெற்பர்-குறத்தியர்-எம். சோழியர்-எம். கருவூரர்-எம். வானத்தார்-எம். அகத்தார்-புறத்தார்-எம். மண்ணகத்தார்-எம். வரும்;

### காலத்தால்வருபெயர்.

மூவாட்டையார்-எம். வேனிலார்-எம். தையார்-எம். ஆதிரையார்-எம். நெருநலார்-எம். வரும்.

### சினையால்வருபெயர்.

திணிதோளார்-எம். செங்குஞ்சியர்-எம். நெடுங்கையர்-எம். வரும்.

குணத்தால்வருபெயர்.

பெரியர்-எம். அறிஞர்-எம். பொன்னெப்பார்-எம். கூனர்-எம். கரியன்-எம். தேவர்-தேவிமார்-எம். பார்ப்பார்-எம். சோர்-எம். ஆசிரியர்-எம். நல்லர்-எம். வரும்.

தொழிலால்வருபெயர்.

ஓதுவார்-ஈவார்-கணக்கர்-தச்சர்-எனவரும்.

சுட்டுமுதலிய விடைச்சொற்களால் வருபெயர்.

அவர்-இவர்-உவர்-எம். எவர்-ஏவர்-யாவர்-எம். பிறர்-மற்றையர்-எம். வரும். பிறவுமன்ன.

இவ்விடத்திற்கேற்குங்கள்விகுதிப்பெயர்கள்.

கோக்கள்-வேள்கள்-மனுக்கள்-தோழிகள்-செவிலிகள்-பாங்கிகள்-எனவருவனவாம். இன்னும்-மாந்தர்-மக்கள்-மகார்-சிறூர்-எல்லாரும்-என்றாற்போலவுயர்திணைப் பன்மைப்பொருள்குறித்து வருவனவெல்லாங்கொள்க: கள்விகுதி-பொன்னர்கள்-அரசர்கள்-எனவிகுதிமேல்விகுதியாய்வருதலுமுண்டு.

௨அ. அஃறிணையொன்றன்பாற்குரியபெயர்கள்யாவை—

பொருண்முதலியவாறனோடுஞ்சுட்டுமுதலிய விடைச்சொற்களோடும்பொருந்திவருந் துவ்விகுதியீற்றுப்பெயர்களும். ஒன்றென்னுமெண்ணுப்பெயரும். அஃறிணையொன்றன்பாற்குரியபெயர்களாம். உம்.குழையது-நிலத்தது-ஆதிரையது-குறுந்தாளது-கரியது-ஆடலது-எம். அது-அஃது-இது-இஃது-உது-உஃது-எம்.எது-ஏது-யாது-எம். பிறிது-மற்றையது-எம். ஒன்று-எம். வரும். பிறவுமன்ன.

௨௯. அஃறிணைப்பலவின்பாற்குரிய பெயர்கள்யாவை—

பொருளாதியாறனோடுஞ் சுட்டுமுதலிய விடைச்சொற்களோடும்பொருந்திவரும் வகர வைகார வீற்றுப்பெயர்களும். அப்பொருளாதியாறனோடும் பொருந்திவரும் அகரவீற்றுப்பெயர்களும். வகரமெய்யீற்றுச் சுட்டுப்பெயர்களும்-வினாப்பெயர்களும். கள்ளென்னும் விகுதியீற்றுப்பெயர்களுளிவ்விடத்திற்குப் பொருந்துவ

னவும். இரண்டுமுதலியவெண்ணுப்பெயர்களும். அஃறிணைப்பலவின் பாற்குரியபெயர்களாம். உம்.

குழையனவை - நிலத்தவை - பழையனவை - குறுந்தாளனவை - கரியனவை - ஊணவை - எம். அவை - இவை - உவை - எம். எவை - எவை - யாவை - எம். மற்றவை - எம். வையீற்றுப்பெயர்கள்வந்தன. உரைத்தவை - உரைக்கின்றவை - உரைப்பவை - எனக்காலவிடைநிலையேற்றுவருவன வீறுதிரிந்த வினையாலணையும்பெயர்களாம்.

குழையன - குழைய - நிலத்தன - நிலத்த - ஆதிரையன - ஆதிரைய - குறுந்தாளன - குறுந்தாள - கரியன - கரிய - ஊவன - ஊவ - எம். மற்றையன - மற்றைய - எம். அன்சாரியைபெற்றும் பெறாதும்அகரவீற்றுப்பெயர்கள்வந்தன.

அவ் - இவ் - உவ் - எம். எவ் - எம். வகரமெய்யீற்றுச்சுட்டுப்பெயர்களும் வினாப்பெயரும்வந்தன.

யானைகள் - பூனைகள் - யாடுகள் - மாடுகள் - எனக்கள்விகுதியீற்றுப்பெயர்களுமேற்பனவந்தன.

இரண்டு - மூன்று - நூறு - ஆயிரம் - என விரண்டு முதலிய வெண்ணுப் பெயர்கள்வந்தன. யா - பிற - எனவருவனவுங்கொள்க.

௫௰. இருதிணையைம்பான்மூவிடங்களுட் பலவற்றிற்குப்பொதுவாய்வருமென்றபெயர்களுளிருதிணைக்கும் பொதுவாவனயாவை—

ஆண்மையும் - பெண்மையும் - ஒருமையும் - பன்மையும் - ஆகியநான்கனுளேற்பனபற்றி வரும்பெயர்க ளிருதிணைக்கும் பொதுப்பெயர்களாம்: இந்நான்கனுள், —— ஆண்மையைப் பற்றிவரும் பொதுப்பெயர்க ளுயர்திணையாண்பாலுக்கு மஃறிணையாண்விலங்கிற்கும்பொதுவாவனவாம்.——பெண்மையைப்பற்றிவரும் பொதுப்பெயர்க ளுயர்திணைப்பெண்பாலுக்கு மஃறிணைப் பெண்விலங்கிற்கும் பொதுவாவனவாம்.——ஒருமையைப் பற்றிவரும் பொதுப்பெயர்க ளுயர்திணையாண்பாலுக்கும் பெண்பாலுக்குமஃறிணையொன்றன்பாலுக்கும் பொதுவாவனவாம்.——பன்மையைப் பற்றிவரும்பொதுப்பெயர்க ளுயர்திணைப்பலர்பாலுக்கும் அஃறிணைப்பலவின்பாலுக்கும் பொதுவாவனவாம்: உயர்திணைக்குச் சிறந்தபெயர்களஃறிணையிடத்துமஃறிணைக்குச்சிறந்தபெயர்களுயர்திணையிடத்தும்

விரவிவருதலாலிவை விரவுபெயரெனவும்பெயர்பெறும் : விரவுதல்-கலத்தல்.

௫௧. அவ்வாண்மைமுதலிய நான்கனுளேற்பனபற்றிவருமென்ற பெயர்கள்யாவை—

முதற்பெயருஞ் சினைப்பெயருஞ் சினைமுதற்பெயரு முறைப்பெயரும்-தான்-தாம்-என்னும் பெயர்களுமாகிய படர்க்கைப்பெயர்களும். தன்மைப்பெயர்களும். முன்னிலைப்பெயர்களும். எல்லாமென்னு மூவிடப்பொதுப்பெயருமாம்.

௫௨. தன்மை முன்னிலைப்பெயர்கள் யாவை—

யான்-நான்-யாம்-நாம்-என்பன நான்குந்தன்மைப்பெயராம். நீ-நீர்-நீயிர்-நீவிர்-எல்லீர் - என்னுமைந்து முன்னிலைப்பெயராம்.

௫௫ முதற்பெயர்முதல் எல்லாமென்ப தீறாகச் சொல்லப்பட்டவற்று ளெவ்வெப்பெயர்கள்-ஆண்மைமுதலிய நான்கனுளெவ்வெவற்றைப்பற்றியிருதிணைக்கும்பொதுப்பெயர்களாம்—

அவையாமாறுமுறையேகூறுதும்.

முதற்பெயர் சினைப்பெயர் சினைமுதற்பெய ரென்கின்ற மூவகைப்பெயர்களு மாண்மை பெண்மை யொருமை பன்மை - என்னு நான்கனையும்பற்றி யிருதிணைக்கும் பொதுப்பெயர்களாம். ஆகவே

| | | |
|---|---|---|
| சாத்தன் | -ஆண்மைமுதற்பெயர். | எனமுதற்பெயர் நான்காயின. |
| சாத்தி | -பெண்மைமுதற்பெயர். | |
| கோதை | -ஒருமைமுதற்பெயர். | |
| கோதைகள் | -பன்மைமுதற்பெயர். | |

| | | |
|---|---|---|
| முடவன் | -ஆண்மைச்சினைப்பெயர். | எனச்சினைப்பெயர் நான்காயின. |
| முடத்தி | -பெண்மைச்சினைப்பெயர். | |
| செவியிலி | -ஒருமைச்சினைப்பெயர், | |
| செவியிலிகள் | -பன்மைச்சினைப்பெயர். | |

| | | |
|---|---|---|
| முடக்கொற்றன் | -ஆண்மைச்சினைமுதற்பெயர். | எனச்சினைமுதற்பெயர் நான்காயின. |
| முடக்கொற்றி | -பெண்மைச்சினைமுதற்பெயர். | |
| கொடும்புறமருதி | -ஒருமைச்சினைமுதற்பெயர். | |
| கொடும்புறமருதிகள் | -பன்மைச்சினைமுதற்பெயர். | |

### இப்பன்னிருபெயர்களும் பொதுவாதற் குதாரணம்.

சாத்தனிவன்-சாத்தனிவ்வெருது-எனவாண்மைமுதற்பெயரிருதிணையாணுக்கும்பொதுவாயிற்று.——சாத்தியிவள்-சாத்தியிப்பசு - எனப்பெண்மைமுதற்பெயரிருதிணைப்பெண்ணுக்கும் பொதுவாயிற்று——கோதையிவன்-கோதையிவள்-கோதையிது-என்வொருமைமுதற்பெய ரிருதிணை யொருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.——கோதைகளிவர்-கோதைகளிவை-எனப்பன்மைமுதற்பெய ரிருதிணைப்பன்மைக்கும்பொதுவாயிற்று : ஆண்மைச்சினைப்பெயர்முதலிய வெட்டுமிவ்வாறேயொட்டிப்பொதுவாதல்காண்க.

முறைப்பெயர் ஆண்மை பெண்மை யிரண்டனையும்பற்றி யிருதிணைக்கும்பொதுப்பெயராம். ஆகவே.

| | |
|---|---|
| தந்தை-ஆண்மைமுறைப்பெயர்.<br>தாய் -பெண்மைமுறைப்பெயர். | } எனமுறைப்பெயரிரண்டாயின. |

### முறைப்பெயரிரண்டும் பொதுவாதற்குதாரணம்.

தந்தையிவன்-தந்தையிவ்வெருது-எம். தாயிவள்-தாயிப்பசு - எம். வரும். முறைப்பெயர் பிறவுமிவ்வாறுபொதுவாதல்காண்க.

தான்-தாம்-என்னு மிரண்டனுள்-தானென்ப தொருமையையும். தாமென்பது பன்மையையும்பற்றி யிருதிணைக்கும் பொதுப்பெயராம்.

### தான்-தாம்-என்னும்பெயர்கள்பொதுவாதற்குதாரணம்.

அவன்றான்-அவடான்-அதுதான்-எம். அவர்தாம்-அவைதாம்-எம். வரும்.

யான்-நான்-யாம்-நாம்-என்னுந் தன்மைப்பெயர் நான்கனுள்-யான்-நான்-என்னுமிரண்டுமொருமையையும். யாம்-நாம்-என்னுமிரண்டும் பன்மையையும்பற்றி யிருதிணைக்கும்பொதுப்பெயர்களாம்.

### தன்மைப்பெயர் நான்கும் பொதுவாதற்குதாரணம்.

யானம்பி-யானங்கை-யான்பூதம்-எம். யாமக்கள்-யாம்பூதங்கள்-எம். வரும். நானென்பது-யானென்பதுபோலவு நாமென்பது-யாமென்பதுபோலவும் பொதுவாதல்காண்க.

நீ - நீர் - நீயிர் - நீவிர் - எல்லீர் - என்னு முன்னிலைப் பெயரைந்தனு ள்-நீயென்பதொருமையையும், மற்றைய நான்கும்பன்மையையும்ப ற்றியிருதிணைக்கும்பொதுப்பெயர்களாம்.

முன்னிலைப்பெயரைந் தும்பொதுவாதற்குதாரணம்.

நீநம்பி-நீநங்கை-நீபூதம்-ஏம். நீர்மக்கள்-நீர்பூதங்கள்-எம். வரும்.

நீயிர் முதலியன நீயென்பதுபோலப்பொதுவாதல்காண்க.

எல்லாமென்னும் பெயர் பன்மையைப்பற்றி யிருதிணைக்கும் பொதுப்பெயராம்.

அதுபொதுவாதற்குதாரணம்.

யாமெல்லாம்-நீரெல்லாம்-அவரெல்லாம் -அவையெல்லாம் - எனவ ரும். மூவிடத்திற்கும்வருதலா விதுவே யிடப்பொதுவுமாம்.

௩௪. உயர்திணையிற்பாற் பொதுவாய்வரும் பெயர்கள்யாவை—

ஊமை-ஒருவர்-என்னுமிரண்டுமுயர்திணையாண்பெண்ணெ ன்னு மிருபாற்கும்பொதுவாம்.——உம். ஊமையவன் - ஊமை யவள்-எம். ஆடவருளொருவர்-பெண்டிருளொருவர்-எம். வரும்.

௩௫. மேற்சொல்லப்பட்ட வொருவரென்னு முயர்திணைப்பெயர் பகுதிக்கேற்ப வொருமைச்சொல்லைக்கொண்டுமுடியுமோ அல்லது விகுதிக்கேற்பப் பன்மைச்சொல்லைக்கொண்டுமுடியுமோ—

ஒருவர்வந்தான்-வந்தாள்-எனப்பகுதிக்கேற்பவொருமைச் சொல்லைக்கொள்ளாது - ஒருவர்வந்தாரென விகுதிக்கேற்பப் பன் மைச்சொல்லையேகொண்டுமுடியும்- இன்னுஞ் சாத்தனர்-தேவனர்- என்பனவும் பொருட்கேற்பவொருமைச்சொல்லைக்கொள்ளாது வி குதிக்கேற்பப் பன்மைச்சொல்லையேகொண்டுமுடியும்.

௩௬. அஃறிணையிற்பாற் பொதுவாய் வரும்பெயர்கள் யாவை—

பால்பகுத்தலையொழிந் துநின்ற வஃறிணைப்பெயர்க ளனைத் தி மத்திணையொன்றுபல்லென்னுமிருபாற்கும்பொதுப்பெயர்களா ம்.——உம். யானைவந்தது-யானைவந்தன-எம். குதிரையொன்று- குதிரைபல-எம். மரமது-மரமவை-எம். வரும். இவற்றைப்பால் பகா வஃறிணைப்பெயரென்றுமஃறிணையியற்பெயரென்றுங்கூறுவர்.

கூஎ. சூரியன்-சந்திரன்-சுக்கிரன்-என்றாற்போலவருந் தெய்வப் பெயர்க ளஃறிணைச்சொல்லைக்கொண்டு முடிதலுமுண்டோ—

அவைதெய்வமாக்கிக்கூறியவழியுயர்திணைச்சொல்லையும்பொருளாக்கிக்கூறியவழியஃறிணைச்சொல்லையுங்கொண்டுமுடியும்.—உம். சூரியனுதித்தான்-சூரியனுதித்தது-எனவரும் பிறவுமன்ன.

கூஅ. ஆகுபெயரென்பனயாவை—

பொருளும்-இடமும்-காலமும்-சினையும்-குணமும் - தொழிலும்-அளவையும்-சொல்லும்-தானியும்-காரணமும் - காரியமும்-கருத்தனும்-உவமையும்-ஆகிய பதின்மூன்றனு ளொருபொருளினியற்பெயராலதற்குச் சம்பந்தமாகிய பிறிதொருபொருளைத்தொன்றுதொட்டுவழங்குவன வாகுபெயராம். உம்.

பொருளாகுபெயர்.

தாமரைபுரையுங்காமர்சேவடி - என்புழித் தாமரையென்னு முதற்பொருளின்பெயர் அதன்சினையாகியமலருக்காயிற்று.

இடவாகுபெயர்.

அகனமர்ந்துசெய்யாளுறையும் - என்புழியகமென்னு முள்ளிடப்பெய ரதனுக் கிடமாகியமனதிற்காயிற்று.

காலவாகுபெயர்.

காரறுத்தது-என்புழிக்காரென்னுமொருபருவகாலத்தின்பெயர் அப்பருவத்தில் விளையும்பயிருக்காயிற்று.

சினையாகுபெயர்.

வெற்றிலைநட்டான்-என்புழிவெற்றிலையென்னுஞ்சினைப்பெயர் அதன்முதலாகிய கொடிக்காயிற்று.

குணவாகுபெயர்.

நெறிநீரிருங்கழிநீலமுஞ்சூடாள்-என்புழி நீலமென்னுங் குணப்பெய ரதனையுடைய குவளைக்காயிற்று.

தொழிலாகுபெயர்.

வற்றலோடுண்டான்-என்புழிவற்றலென்னுந்தொழிற்பெயர் அதனைப்பொருந்தியதோருணவுக்காயிற்று.

எண்ண லெடுத்தன் முகத்தனீட்ட லென்னு
நால்வகையளவை யாகு பெயர்.

ஒன்றுவந்தது-என்புழியொன்றென்னு மெண்ணுப்பெயரதனு லெண்ணப்படுமொருபொருளுக்காயிற்று.—— துலாக்கோல்-என்புழித்துலாமென்னுமெடுத்தலளவைப்பெயர் அதன்கருவியாகியதராசுக்காயிற்று.——நாழியுடைந்தது - என்புழிநாழியென்னு முகத்தலளவைப்பெயர் அதன்கருவிக்காயிற்று.——கீழைத்தடி-என்புழித்தடியென்னு நீட்டலளவைப்பெயரதனு லளக்கப்படுங் கழனிக்காயிற்று.

சொல்லாகுபெயர்.

இந்நூற்குரைசெய்தான்-என்புழி யுரையென்னுஞ்சொல்லின்பெயர் அதன்பொருளுக்காயிற்று.

தானியாகுபெயர்.

விளக்குமுரிந்தது-என்புழிவிளக்கென்னுந் தானியின்பெயர் அதற்குத்தானமாகிய தண்டிற்காயிற்று.

காரணவாகுபெயர்.

திருவாசகம்-என்புழிவாசகமென்னுங்காரணத்தின்பெயர் அதன்காரியமாகிய வொருநூலுக்காயிற்று.

காரியவாகுபெயர்.

இந்நூலலங்காரம்-என்புழியலங்காரமென்னு மிலக்கணமாகிய காரியத்தின்பெயர் அதன்கருவியாகிய நூலுக்காயிற்று.

கருத்தாவாகுபெயர்.

இந்நூறிருவள்ளுவர்-என்புழித் திருவள்ளுவரென்னுங் கருத்தாவின்பெயர் அவராற்சொல்லப்பட்ட நூலுக்காயிற்று.

உவமையாகுபெயர்.

தோகைவந்தாள்-பாவைபோனுள்-என்புழித்தோகை பாவை யென்னு முவமையின்பெயர்கள் அவற்றை யுவமையாகக்கொண்டபெண்களுக்காயின. பிறவுமன்ன.

௩௯. மேற்சொல்லப்பட்ட வாகுபெயர்க ளின்னுமெவ்வெவ்வ கையிற் பெயர்பெற்றுவழங்கும்—

விடாதவாகுபெயர்-விட்டவாகுபெயர்-எம். இருமடியாகு பெயர் மும்மடியாகுபெயர் நான்மடியாகுபெயர்-எம். அடையடுத் தவாகுபெயர்-எம். இருபெயரொட்டாகுபெயர்-எம். பெயர்பெற் றுவழங்கும்.

ஆயிரங்குதிரையா லவ்வூர் கொள்ளையிடப்பட்டது-என்புழிக்குதிரை யென்னும்பெயர் தன்னியற்பொருளாகியபரிமாவைவிடாம லவைக ளைச்செலுத்துஞ்சேவகரையுமுணர்த்துதலால்விடாதவாகுபெயராம். கங்கைக்க ணிடைச்சேரியென்புழிக்கங்கையென்னும் பெயர்தன்னி யற்பொருளாகியவெள்ளத்தைவிட்டு அதன்கரையைமாத்திரமுணர்த் துதலால் விட்டவாகுபெயராம்.——கார்-என்னுங் கருநிறத்தின்பெ யர் மேகத்திற்காகுபெயராயும் அம்மேகம் பெய்யும்பருவத்திற்கிரு மடியாகுபெயராயும். அப்பருவத்தில்விளையும்பயிருக்குமும் மடியா குபெயராயும்வரும். நான்மடியாகுபெயரும் பிறவுமிவ்வாறுவருதல் காண்க. —— வெற்றிலைநட்டான்-அறுபதமுரலும்- என்பவற்றுள் இலை-பதம்-என்னுஞ்சினைப்பெயர்கள் அடையடுத்து முதலுக்கான மையாலடையடுத்தவாகுபெயராம். —— வகரக்கிளவி-மக்கட்சுட்டு- என்பவற்றுள் வகரமு மக்களுமாகிய வடைமொழிகள்-கிளவி-சுட்டு என்னு மியற்பெயர்ப்பொருளை விசேடித்துநில்லாது-எழுத்தும்- பொருளுமாகிய வாகுபெயர்ப்பொருளை விசேடித்துநிற்கக்கிளவிசு ட்டென்பனவே யாகுபெயர்ப்பொருளையுணர்த்த விருபெயருமொ ட்டிநிற்றலா லிவையிருபெய ரொட்டாகுபெயராம்.

௪௰. பெயர்களனைத்து மெத்தனைவகையுளடங்கும்—

பொருட்பெயரும் வினையாலணையும்பெயருந் தொழிற்பெ யரும் பண்புப்பெயருமென நால்வகையுளடங்கும். உம். பொன்- பொன்னன்-மலை-மலையன்-வேனில்-வேனிலான்-என்றாற்போல்வன பொருட்பெயர். உண்டவன்-கரியவன் என்றாற்போல்வனவினையால ணையும்பெயர். நடத்தல்-வருதல்-என்றாற்போல்வனதொழிற்பெயர். கருமை-செம்மை.அன்பு-அழகு-என்றாற்போல்வனபண்புப்பெயர் பிறவுமிவற்றுள்ளேயடங்குதல்காண்க. சண்டை-கூத்து-வேட்டை- என்றாற்போல்வனமுதனிலையில்லாத்தொழிற்பெயர்களாம்.

# வினைச்சொல்.

௪௧. வினைச்சொல்லென்பதியாது—

கருத்தாவுங் காரணமு மிடமுஞ் செயலுங் காலமுஞ் செயப்படுபொருளுமாகியவாறுங் காரணமாகத்தோன்றும் பொருளது புடைபெயர்ச்சியைவிளக்குவது வினைச்சொல்லாம்: சிறுபான்மை யவ்வாறனோடு - இன்னதற்கு - இதுபயன் - என்னுமிரண்டுங்கூட்டி யெட்டென்பாருமுளர் இவ்விரண்டுமேதுவின்பாற்பட்டுக் காரணத்துளடங்கும்.

குயவன்மண்ணினால்வீட்டினுணேற்றுக்குடத்தைப்பிறர்க்குக் கூலிக்குவனைந்தான்-இத்தொடரினுள் வனைந்தான் என்னுந் தெரிநிலைவினைக்கு-குயவன்கருத்தா. மண்காரணம். வீடிடம். நேற்றுக்காலம். குடஞ்செயப்படுபொருள். பிறர்க்கு இன்னதற்கு. கூலி இதுபயன். இவ்வாறே செயலு மவ்வினைக்குக்காரணமாம்-செயலென்பது குடத்திற்குமண்போல வனைதற்கு முதற்காரணமாகிய செய்கை.——இவனிதனாலிவ்விடத் திப்பொழுதிதையின்னார்க் கிப்பயன்கருதியுடையன்-இத்தொடரினுள் உடையனென்னுங்குறிப்புவினைக்கு-செயலொழிந்தமற்றையேழுங் காரணமாகவந்தன. இவ்வாறேயிவ்வுடைமை வினைக்குமுதற்காரணமாகியசெயலுமொன்றுண்டு.

௪௨. எல்லா வினைகளுக்குங் கருத்தாமுதலியவாறு காரணமுங்குறையாதுவருமோ—

சிலவினைகளுக் கவ்வாறனுட் சில குறைந்தும் வரும்.——உம். கொடியாடிற்று-என்னுந்தெரிநிலைவினையிற் செயப்படுபொருள்குறைந்து வந்தது. குழையினன்-என்னுங்குறிப்புவினையில்-ஒன்றைக்குழையினன் ஒன்றாற்குழையினன்-என வாராமையாற்செயப்படுபொருளுங் காரணமுங்குறைந்து வந்தன. பிறவுமன்ன.

௪௩. அவ்வினைச்சொல் எத்தனைவகைப்பட்டெவ்வாறுவழங்கும்—

அது தெரிநிலைவினையுங்குறிப்புவினையுமெனப்பொதுவகையாலிருவகைப்பட்டும் அவ்விரண்டுஞ்சிறப்புவகையான்முற்றும்பெயரெச்சமும் வினையெச்சமுமென்னு மும்மூன்றுவகைப்பட்டு மிருதிணை

யைம்பாான் மூவிடங்களுளொன்றற் குரிமையாகியும் பலவற்றிற்குப் பொதுவாகியும்வழங்கும். எனவே தெரிநிலைவினைமுற்றும். தெரிநிலைவினைப்பெயரெச்சமும். தெரிநிலைவினை வினையெச்சமும். குறிப்புவினைமுற்றும்-குறிப்புவினைப்பெயரெச்சமும். குறிப்புவினை வினையெச்சமுமெனவறுவகையாயின.

சச. தெரிநிலைவினைகளென்பனயாவை—

நட-வா-நடப்பி-வருவி-முதலிய முதனிலையடியாகத்தோன்றிவேற்றுமைகொள்ளாது இடைநிலைமுதலியவைகளாற் காலந்தெரியநிற்பன தெரிநிலைவினைகளாம்.——உம். நடந்தான்-வந்தான்-நடப்பித்தான்-வருவித்தான்-எம். நடந்த-வந்த-நடப்பித்த-வருவித்த-எம். நடந்து-வந்து-நடப்பித்து-வருவித்து-எம். வரும்.

சரு. குறிப்புவினைகளென்பனயாவை—

பொருளிடங் காலஞ் சினை குணந் தொழிலென்னு மறுவகை முதனிலையடியாகத் தோன்றி வேற்றுமை கொள்ளாது காலத்தைக் குறிப்பால் விளக்கிவருவன குறிப்புவினைகளாம். —— உம். குழையினன்-பொன்னன்-எம். நிலத்தினன்-அகத்தினன்-எம். வேனிலான்-ஆதிரையான்-எம். குறுந்தாளன்-செங்கண்ணன்-எம். கரியன்-நெடியன்-எம். ஊணன்-உடையன்-எம். கரிய-நெடிய-எம். அன்றி-இன்றி-எம். வரும். இவைபண்டுகுழையினன்-இதுபொழுதுகுழையினன்-நாளைக்குழையினன் - எனக்காலமேற்றுவருதல்காண்க.

சசு. வினைச்சொற்களுள் எழுவாய்முதலியவேற்றுமை கொள்ளுவனவெவையுமில்லையோ—

முற்றெச்சங்களுளொன்றுமில்லை-ஆனால் வினைச்சொல்லாயினும் பெயர்த்தன்மையெய்திநின்றதொழிற்பெயரும்வினையாலணையும்பெயரும் வேற்றுமைகொண்டுவரும்.

சஎ. முற்றுவினைகளென்பனயாவை—

பால்காட்டும் விகுதிகுறைந்துநின்ற வெச்சங்களைப்போலல்லாமல் அவ்விகுதியோடுகூடிநிறைந்து நின்றுபொருளிடங்காலஞ் சினை குணந் தொழிலென்னு மறுவகைப்பெயராயும், பயனிலையாகக்கொண்டுமுடிவன தெரிநிலைவினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம்.——

செய்தானவன்-குளிர்ந்தது நிலம்-வந்ததுகார்-குவிந்தது கை - பரந்தது பசப்பு - ஒழிந்தது பிறப்பு - எம். நல்லனவன்-நல்லது நிலம். நல்லது கார்-நல்லது கை-நல்லது பசப்பு-நல்லது பிறப்பு-எம். வரும் பிறவுமன்ன.

சஅ. திணைபாலிடங்களொன்றற்குரிய வினைகளுள் உயர்திணையாண்பாற் படர்க்கைக்குரியனயாவை—

அன் - ஆன் - என்னுமிருவிகுதியு மிறுதியாகியமொழிகளுயர்திணையாண்பாற் படர்க்கைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். உம்.

வி-கு-தெரி-இறந்த தெரி-நிகழ் - தெரி-எதிர் - குறிப்பு
அன்-நடந்தனன்-நடக்கின்றனன்-நடப்பன் -குழையன். } அவன்.
ஆன்-நடந்தான் -நடக்கின்றான் -நடப்பான்-குழையான். }

சகூ. உயர்திணைப்பெண்பாற்குரிய வினைகள்யாவை—

அள் - ஆள் - என்னுமிரண்டுவிகுதிகளையு மிறுதியாகவுடைய மொழிகள்-உயர்திணைப்பெண்பாற்படர்க்கைக்குரிய வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். உம்.

வி - தெரி-இ தெரி-நி தெரி-எ குறிப்பு
அள்-நடந்தனள்-நடக்கின்றனள்-நடப்பள் -குழையினள். } நங்கை.
ஆள்-நடந்தாள் -நடக்கின்றாள் -நடப்பாள்-குழையாள். }

ருய. உயர்திணைப்பலர்பாற்குரியவினைகள்யாவை—

அர் - ஆர் - ப - மார் - என்னுநான்குவிகுதிகளையு மிறுதியாகவுடையமொழிகள்-உயர்திணைப் பலர்பாற்படர்க்கைக்குரிய வினைமுற்றுக்களாம். இவற்றுள் பவ்விகுதியும்-மார்விகுதியும் பதவியலுட் கூறியவாறே தாமேயெதிர்காலங்காட்டுவன வாதலிற் குறிப்புவினையினிடத்துவாராவாம். உம்.

வி - தெரி-இ தெரி-நி தெரி-எ குறிப்பு
அர்-நடந்தனர்-நடக்கின்றனர்-நடப்பர் -குழையர். } அவர்.
ஆர்-நடந்தார் -நடக்கின்றார் -நடப்பார்-குழையார். }

பவ்விகுதி-நடப்பவர். மார்விகுதி-பாடன்மாரெமர் - எனவரும். சிறுபான்மை மார் விகுதிபொதுவிதியாற் பெயரையேயன்றி - ஆர்த்தார் கொண்மார் வந்தார் எனவினையைக்கொண்டுமுடிதலுமுண்டு.

௩௧. அஃறிணையொன்றன்பாற்குரிய வினைகள்யாவை—

து - று - டு - என்னுமூன்றுவிகுதிகளையுமிறுதியாகவுடைய மொழிகள்- அஃறிணைப்படர்க்கை யொன்றன்பாற்குரியவினைமுற்றுக்களாம். இவற்றுள்-டுவ்விகுதிகுறிப்பு வினையிடத்தன்றித் தெரிநிலை வினையிடத்துவாராது. றுவ்விகுதி நிகழ்கால வெதிர்கால விடைநிலைகளோடு கூடிவாராது உம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வி - | தெரி-இ | தெரி-நி | தெரி-எ | குறிப்பு |
| து - | நடந்தது- | நடக்கின்றது- | நடப்பது- | குழையது. |
| று - | கூயிற்று- | | | -அற்று. |
| டு - | | | | -குண்டுகட்டு. |

} அது.

௩௨. அஃறிணைப்பலவின்பாற்குரியவினைகள்யாவை—

அ - ஆ - என்னு மிரண்டுவிகுதிகளையு மிறுதியாகவுடைய மொழிகள் - அஃறிணைப்படர்க்கைப்பலவின்பாற்குரியவினைமுற்றுக்களாம். இவற்றுள் - ஆவிகுதி யெதிர்மறைவினையிடத்துவரும். உம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வி - | தெரி இ | தெரி-நி | தெரி-எ | குறிப்பு |
| அ { | நடந்தன - | நடக்கின்றன - | நடப்பன - | குழையன. |
| | நடந்த - | நடக்கின்ற - | நடப்ப - | குழைய. |

} அவை

இவ்வாறே அகாவிகுதி அன்சாரியைபெற்றும் பெறுதும்வரும்-நடவாகுதிாகள்-உண்ணுவவை-எண ஆகாரவிகுதி வெதிர்மறையிடத்து வந்தது.

௩௩. இருதிணையைம்பான் மூவிடங்களுட் பலவற்றிற்குப்பொதுவாய்வருமென்ற வினைகளுளிருதிணைக்கும் பொதுவாய் வருவனயாவை—

ஒருமை பன்மைகளைப்பற்றிவருந் தன்மைவினை முற்றுக்களும் - முன்னிலைவினைமுற்றுக்களும் - முன்னிலையேவல்வினைமுற்றுக்களும் - ஆகிய மூவகைவினைமுற்றுக்களுஞ் - செய்யுமென்வாய்பாட்டுப்படர்க்கை வினைமுற்றும்-இருதிணைக்கும் பொதுவினைகளாம்.

௩௪. தன்மையொருமைவினைமுற்றுக்கள்யாவை—

கு - டு - து - று - அல் - அன் - என் - ஏன் - என்னுமெட்டுவிகுதிகளையு மிறுதியாகவுடையமொழிகள் - ஆண் பெண்ணென்றென்னுமிருதிணைமுக்கூற்றொருமைத்தன்மைவினைமுற்றுக்களாம் -

இவற்றுள்-கு-டு-து-று-என்னுநான்குந்தாமேகாலங்காட்டுவனவாதவிற்குறிப்புவினையிடத்துவாராவாம்-அல்-அன்-என்னுமிரண்டுவிகுதிகளுமெதிர்காலவிடைநிலையோடன்றிவாராவாம். உம்.

விகு தெரி-இ. தெரி-எ

கு - - உண்கு.
டு - உண்டு.
து - வந்து - வருது.
று - சென்று - சேறு.
அல் - - உண்பல்.
அன் - - உண்பன்.

யான் - உண்கு - உண்பேன் - எம்.
உண்டு - உண்டேன் - எம்.
வந்து - வந்தேன் - எம்.
வருது - வருவேன் - எம்.
சென்று - சென்றேன் - எம்.
சேறு - செல்வேன் - எம்.
பொருள்படுதல்காண்க.

| வி | தெரி-இ | தெரி-நி | தெரி-எ | குறிப்பு. | |
|---|---|---|---|---|---|
| என்- | உண்டனென்- | உண்கின்றனென்- | உண்குவென்- | குழையினென். | யான். |
| ஏன்- | உண்டேன் | -உண்கின்றேன் | -உண்பேன் | -குழையேன். | |

௫௫. தன்மைப்பன்மை வினைமுற்றுக்கள்யாவை—

தன்னிலையினிற்பதன்றி-அம்-ஆம் -என்னு மிரண்டுவிகுதிகளையு மிறுதியாகவுடையமொழிகள் - முன்னிலையாளையும், எம்-ஏம்-ஓம்-என்னு மூன்றுவிகுதிகளையு மிறுதியாகவுடையமொழிகள்-படர்க்கையிடத்தாளையும். கும்-டும்-தும்-றும்-என்னு நான்குவிகுதிகளையு மிறுதியாகவுடையமொழிகள் - முன்னிலைபடர்க்கையென்னு மீரிடத்தாளையும், தன்னுடன்சேர்க்குமுளப்பாட்டுப் பலர்பலவென்னு மிருகூற் றிருதிணைத்தன்மைப்பன்மைவினைமுற்றுக்களாம், இவற்றுள்-கும்-டும்-தும்-றும்- என்னுநான்குந்தாமே காலங்காட்டுவனவாதலிற் குறிப்புவினையிடத்து வாராவாம். உம்.

| விகு | தெரி-இ | தெரி-நி | தெரி-எ | குறிப்பு. | |
|---|---|---|---|---|---|
| அம்- | உண்டனம்- | உண்கின்றனம்- | உண்பம் | -குழையினம். | யாம். |
| ஆம்- | உண்டாம் | -உண்கின்றாம் | -உண்பாம்- | குழையினும். | யானு நீயும், |

விகு தெரி-இ தெரி-நி தெரி-எ குறிப்பு.

எம்-உண்டனெம்-உண்கின்றனெம்-உண்குவெம்-குழையினெம்.
ஏம்-உண்டேம் -உண்கின்றேம் -உண்பேம் -குழையினேம்.
ஓம்-உண்டோம் -உண்கின்றோம் -உண்போம் -குழையினோம்.
} யாம். யானுமவனும்.

விகு தெரி-இ தெரி-எ.

கும்- -உண்கும்.
டும்-உண்டும்
தும்-வந்தும் -வருதும்,
றும்-சென்றும்-சேறும்.
} யாம். யானுமவனு நீயும்.

௫௬. முன்னிலையொருமைவினைமுற்றுக்கள்யாவை—

ஐ-ஆய்-இ-என்னு மூன்றுவிகுதிகளையு மிறுதியாகவுடைய மொழிகள் ஆண் பெண்ணொன்றென்னுமிருதிணைமுக்கூற்றொருமை முன்னிலைவினைமுற்றுக்களாம். இவற்றுள் இகரவிகுதிமேற் பதவியலு ட்கூறியவாறேதானே யெதிர்காலங்காட்டுவதன்றியுஞ் சிறுபான்மை யிடைநிலையோடுகூடி மற்றைக்காலங்களையுங் காட்டிவரும். உம்.

விகு தெரி-இ தெரி-நி தெரி-எ குறிப்பு.

ஐ -உண்டனை-உண்கின்றனை-உண்டை -குழையினை.
ஆய்-உண்டாய்-உண்கின்றாய் -உண்பாய் -குழையாய்.
இ -உண்டி -உண்ணாநின்றி-சேறி -வில்லி.
} நீ.

௫௭. முன்னிலைப்பன்மைவினைமுற்றுக்கள்யாவை—

இர்-ஈர்-என்னுமிரண்டுவிகுதிகளையுமிறுதியாகவுடையமொழிகள்-பலர்-பல-என்னுமிருகூற்றிருதிணைப்பன்மைமுன்னிலை வினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம். உம்.

விகு தெரி-இ தெரி-நி தெரி-எ குறிப்பு.

இர்-நடந்தனிர்-நடக்கின்றனிர்-நடப்பிர்-குழையினிர்.
ஈர்-நடந்தனீர்-நடக்கின்றீர் -நடப்பீர்-குழையீர்.
} நீர்.

௫௮. முன்னிலையேவலொருமை வினைமுற்றுக்கள்யாவை—

ஆய்-உ-ஆல்-எல்-காண்-என்னுமைந்துவிகுதிகளையுமிறுதி யாகவுடையமொழிகளும். ஆய்விகுதிகுன்றிய-நட-வா-முதலியவிகு

பத்துமூன்றீற்றனவாய்வருமொழிகளும். ஆண் பெண்ணென்றென்னுமுக்கூற்றிருதிணையொருமை முன்னிலையேவல்வினைமுற்றுக்களாம் - இவற்றுள் - ஆல் - எல் - என்னுமிருவிகுதிகளு மெதிர்மறையிடத்துவரும்.——உம். நடவாய் - அருளு - மருல் - அழேல் - சொல்லிக்காண். நீ - எம். நட - வர் - முடி - சீ - விடு - கூ - வே - வை - நொ - போ - வௌ - உரிஞ் - உண் - பொருந் - திரும் - தின் - தேய் - பார் - செல் - வவ் - வாழ் - கேள் - அஃகு. நீ - எம். நடப்பி - நடப்பிப்பி - நடத்து - நடத்துவி. நீ - எம் வரும். சிறப்பான்மை - நீநடத்தி - நீயோதுதி - எனவிகரவீற்றுமுற்றுவினையேயேவலாயும்வரும். அருளு - புல்லு - என்பவற்றினுகரம்வருமொழி நோக்காதுநிற்றலிற் சாரியையன்று விகுதியேயாம். அல்விகுதி - நீயுண்ணல் - நீபோகல் - என முன்னிலையேவலொருமை யெதிர்மறைவினையினிடத்துவருதலுமுண்டு.

௫௯. முன்னிலையேவற்பன்மைவினைமுற்றுக்கள்யாவை——

மின் - உம் - என்னு மிரண்டுவிகுதிகளையு மிறுதியாகவுடையவாயிடைநிலையேலாதெதிர்காலத்தைக்கொண்டுவருமொழிகள் - பலர் - பலவென்னுமிருதிணைப்பன்மைமுன்னிலை யேவல்வினைமுற்றுக்களாம்.——உம். நடமின் - உணாயும். நீர் - எனவரும்.

௬௰. செய்யுமென்வாய்பாட்டுப்படர்க்கைவினைமுற்றிருதிணைக்கும்பொதுவாமாறென்னை——

அதுபடர்க்கையிடத்தனவாகியவைம்பாலுள் - பலர்பாலொழிந்த ஆண் - பெண் - என்னுமுயர்திணையிருபாலும் - ஒன்று - பல - என்னுமஃறிணையிருபாலும் ஆகிய நான்குபாலுக்கும் பொதுவாம்.——உம். அவனுண்ணும் - அவளுண்ணும் - அதுவுண்ணும் - அவையுண்ணும் - எனவரும்.

௬௧. ஒருதெரிநிலைவினைப்பகுதியின்மேல் - படர்க்கையினைம்பால்விகுதிகளும். தன்மைமுன்னிலைகளி னொருமைபன்மைவிகுதிகளும். முக்காலத்தையுங்கொண்டுவருவழியெத்தனைமுற்றுவினைகளாகும்——

படர்க்கையைம்பால்வினைமுற்றுவிகுதிகளை முக்காலத்தோடுந்தனித்தனிகூட்டப்படர்க்கைவினைமுற்றுக்கள் பதினைந்தும். தன்மைமுன்னிலைகளினொருமை பன்மைவினைமுற்றுவிகுதிகளை முக்காலத்தோடுந் தனித்தனிகூட்ட முறையேதன்மை வினைமுற்றுக்களாறும். முன்னிலைவினைமுற்றுக்களாறும். ஆகவிருபத்தேழாம். உம்.

| | | இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். |
|---|---|---|---|---|
| படர்க்கை. | ஆண்பால் | --நடந்தான் | -நடக்கின்றான் | -நடப்பான். |
| | பெண்பால் | --நடந்தாள் | -நடக்கின்றாள் | -நடப்பாள். |
| | பலர்பால் | --நடந்தார் | -நடக்கின்றார் | -நடப்பார். |
| | ஒன்றன்பால் | -நடந்தது | -நடக்கின்றது | -நடப்பது. |
| | பலவின்பால் | -நடந்தன | -நடக்கின்றன | -நடப்பன. |
| தன்மை. | ஒருமை | ---நடந்தேன் | -நடக்கின்றேன் | -நடப்பேன். |
| | பன்மை | ---நடந்தேம் | -நடக்கின்றேம் | -நடப்பேம். |
| முன்னிலை. | ஒருமை | ---நடந்தாய் | -நடக்கின்றாய் | -நடப்பாய். |
| | பன்மை | ---நடந்தீர் | -நடக்கின்றீர் | -நடப்பீர். |

எனத்தெரிநிலைவினை முற்றொருபகுதியின்மே லிருபத்தேழாயவாறு காண்க.

கூஉ. இருதிணையைம்பான் மூவிடங்கட்கும் பொதுவாய்வரும் வினைகள்யாவை—

வியங்கோள் வினைமுற்றுக்களும், வேறு - இல்லை - உண்டு - என்னுமூன்றுவினைக்குறிப்புமுற்றுக்களும், வேண்டும் - தகும் - படும் - என்னுமூன்றுதொழிற்பெயர்களும், பெயரொச்சமும், வினையெச்சமும், இருதிணையைம்பான் மூவிடங்கட்கும்பொதுவினைகளாம்.

கூரு. வியங்கோண்முற்றுக்களென்பனயாவை—

க - இய - இயர் - அல் - என்னு நான்குவிகுதிகளையுமீறாகவுடையன வியங்கோள் வினைமுற்றுக்களாம். வியங்கோளென்பதேவலாம் ஆயினு முன்னிலையொன்றற்கேயுரியவேவலை யேவலென்றும் இருதிணையைம்பான் மூவிடங்கட்கும்பொதுவாகிய வேவலைவியங்கோளென்றுஞ்சொல்லுதலாசிரியர்வழக்கென்றுகொள்க. உம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ககரவிகுதி | -வாழ்க | -உண்க | -ஆடுக. | யான்-யாம்-நீ-நீர்-அவன்-அவள்-அவர்-அது-அவை. |
| இயவிகுதி | -வாழிய | -உண்ணிய | -ஆடிய. | |
| இயர்விகுதி | -வாழியர் | -உண்ணியர் | -ஆடியர். | |
| அல்விகுதி | -உண்ணல் | -எனல் | -கொளல். | |

எனவியங்கோள் வினைமுற்றிருதிணை யைம்பான் மூவிடங்கட்கும் பொதுவாய் எதிர்காலங்காட்டிநிற்குதல்காண்க.

கூச. வேறு-இல்லை-உண்டு-என்னும் வினைக்குறிப்பு முற்று மூன்றும். வேண்டும்-தகும்-படும்-என்னுந்தொழிற்பெயர்மூன்றும். ஆகியவாறுசொற்களுந் திணைபாலிடங்கட்குப்பொதுவாதற்குதாரணம் யாவை—

அவைகூறுதும்.——உம். யான்வேறு-யாம்வேறு - நீவேறு-நீர்வேறு-அவன்வேறு-அவள்வேறு-அவர்வேறு-அதுவேறு - அவைவேறு. இல்லை - உண்டு - என்பவற்றையுமூவிடப்பெயர்களோடுமொட்டுக. இல்லையென்பது-சிறுபான்மையீறுகெட்டு இல்-என நிற்றலுமுண்டு.——அவனோதல்வேண்டும்-நீபோகல்வேண்டும் - யானுண்ணல்வேண்டும்-எம்.இவராலிக்காரியஞ்செய்யத்தகும்-இச்சோறுண்ணத்தகும்-இந்நீர்குடிக்கத்தகும்-எம். வஞ்சனையஞ்சப்படும்-அவரிதனை யாக்கப்படும்-எம்.வரும்.வேண்டுந் தகும் படுமென்னுமூன்றுந்தொழிற்பெயராயொருபொருட்கிளவியாய்த்தேற்றப்பொருள்பட்டேநிற்கும்.

கூரு பெயரெச்சங்களென்பனயாவை—

வினைமுற்றுதகுறைசொற்களாய்-அகரமும்-உம்மும்-ஆகியவிருவிகுதிகளையும்பெற்றுக்கருத்தாவுங்காரணமுமிடமுஞ்செயலுங்காலமுஞ்செயப்படுபொருளுமாகிய வாறுபெயர்களு ளொன்றைக்கொண்டுமுடிவனபெயரெச்சங்களாம். இவ்விருவிகுதிகளுள்-அகரம் இறந்தகால நிகழ்காலவிடை நிலைகளோடுங்குறிப்புவினையோடுங்கூடிவரும். உம்விகுதி தானே யெதிர்காலங்காட்டுவதாதலிற் பெயரெச்சக்குறிப்பினிடத்துவாராது——உம்

| | | |
|---|---|---|
| உண்ட -உண்பித்த. | } | சாத்தன்-கருத்தா. கலம்-கருவி. |
| உண்கின்ற-உண்பிக்கின்ற. | } | நிலம்-இடம். ஊண்-செயல். |
| உண்ணும் -உண்பிக்கும். | } | பகல்-காலம். சோறு-கருமம். |

கரியகுதிரை-பெரியகளிறு-முகத்தயானை-படத்தபாம்பு-நெடியவில்-தீயசொல்-புதியநட்பு எனப்பெயரெச்சக்குறிப்புவருதல்காண்க. பிறவுமன்ன.

சாசா. வினையெச்சங்களென்பனயாவை—

வினைமுற்றுத குறைசொற்களாய் - பதவியலிலென்பதாம்

வினாவிடையிற்சொல்லிய உகாரமுதலாகிய விகுதிகளைப்பெற்றுவினைச்சொற்களைக்கொண்டுமுடிவன வினையெச்சங்களாம் - அவைஇறந்தகாலவினையெச்சமும்- நிகழ்காலவினையெச்சமும்- எதிர்கால வினையெச்சமும்- எனமூவகைப்படும்.

௯௭. இறந்தகாலவினையெச்சங்கள்யாவை—

உகாரமும்- இகாரமும்-யகரமெய்யும்-புகரமும்- ஆகாரமும்-ஊகாரமும்-எனவும்-ஆகியவேழுவிகுதிகளையும்பெற்றுவருவன இறந்தகாலங்காட்டுந் தெரிநிலைவினையெச்சங்களாம். இவற்றுள் உகரமொழிந்தவாறு மிடைநிலைபெறாது தாமே யிறந்தகாலங்காட்டி நிற்கும். இகரவீறும் யகரமெய்யீறும் உகரவீற்றுச்செய்து என்னும்வாய்பாடுபற்றிவருவனவாம். உம்.

| | | |
|---|---|---|
| உகாரவிகுதி | நடந்து- நடப்பித்து- தேர்ந்து.<br>உண்டு -உண்பித்து -கேட்டு.<br>சென்று- செல்வித்து -கற்று. | வந்தான்.<br>எனவரும். |

| | | | | |
|---|---|---|---|---|
| இகரவிகுதி | -ஆடி | -ஓடி | -எண்ணி. | வந்தான். எனவரும். |
| யகரவிகுதி | -ஆய் | -போய் | -பாய். | |
| புகரவிகுதி | -உண்குபு | -காண்குபு | -தேடுபு. | |
| ஆவிகுதி | -உண்ணா | -காணா | -தேடா. | |
| ஊவிகுதி | -உண்ணூ | -காணூ | -தேடூ. | |
| எனவிகுதி | -உண்டென | -கண்டென | -நடந்தென. | |

௯௮. இறந்தகாலவினையெச்சங்களுள் விகுதிவிகாரப்பட்டுவருதலும் விகுதிபெறாது பகுதியே விகாரப்பட்டுவருதலுமுள்வோ—

அவ்வாறுவருவனவுஞ்சிலவுளவாம். உம்.

தழுவிக்கொண்டான்- தழீஇக்கொண்டான் -எம்.
உடுத்துவந்தான் -உடீஇவந்தான் -எம்.

விகுதிவிகாரப்பட்டுவந்தன.

| | | |
|---|---|---|
| புகு | -புக்குவந்தான் | விகுதிபெறாதுசிலபகுதியேவிகாரப்பட்டு வினையெச்சமாயின. |
| விடு | -விட்டுவந்தான் | |
| பெறு | -பெற்றுவந்தான் | |

௯௯. நிகழ்காலவினையெச்சங்கள்யாவை—

அகரவிகுதியைப்பெற்றுவருவன நிகழ்காலங்காட்டுந் தெரிநிலைவினையெச்சங்களாம் - இவ்விகுதி யிடைநிலையோடுகூடாதுதானே நிகழ்காலங்காட்டும். உம்.

அகரவிகுதி { நடக்க - நடப்பிக்க. / உண்ண - உண்பிக்க. } கூண்டான் - எனவரும்.

எய. எதிர்காலவினையெச்சங்கள்யாவை —

இன் - ஆல் - கால் - கு - இய - இயர் - வான் - பான் - பாக்கு - என்றுசொன்பதுவிகுதிகளையும் பெற்றுவருவன வெதிர்காலங் காட்டுந் தெரிநிலைவினையெச்சங்களாம்; இவையெல்லாமிடைநிலைபெறாது தாமேயெதிர்காலங்காட்டிவரும். உம்.

| | | | | |
|---|---|---|---|---|
| இன்விகுதி | - நடக்கின் | - நடப்பிக்கின் | - உண்ணின். | வருவான். எனவரும். |
| ஆல்விகுதி | - நடந்தால் | - நடப்பித்தால் | - உண்டால். | |
| கால்விகுதி | - நடந்தக்கால் | - ஒலித்தக்கால் | - உண்டக்கால். | |
| குவ்விகுதி | - நடத்தற்கு | - நடப்பித்தற்கு | - உணற்கு. | |
| இயவிகுதி | - ஆடிய | - நடத்திய | - உண்ணிய. | |
| இயர்விகுதி | - ஆடியர் | - நடத்தியர் | - உண்ணியர். | |
| வான்விகுதி | - விடுவான் | - நடத்துவான் | - உண்ணுவான். | |
| பான்விகுதி | - நடப்பான் | - நடப்பிப்பான் | - உண்பான். | |
| பாக்குவிகுதி | - விடுபாக்கு | - கொல்பாக்கு | - உண்பாக்கு. | |

எக. இவ்வினையெச்சங்களெதிர்மறையில்வரும்போது எவ்வெவ்விகுதிகளைப்பெற்றுவரும் —

உகரமும் - மையும் - மலும் - மேயும் - மையுடன்குகரமும் - ஆகியவிவ்வைந்துவிகுதிகளையும்பெற்றுவரும். உம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உகரவிகுதி | - நடவாது | - நடப்பியாது | - உண்ணாது. | வருவான். எனவரும். |
| மைவிகுதி | - நடவாமை | - நடப்பியாமை | - உண்ணாமை. | |
| மல்விகுதி | - நடவாமல் | - நடப்பியாமல் | - உண்ணாமல். | |
| மேவிகுதி | - நடவாமே | - நடப்பியாமே | - உண்ணாமே. | |
| மைக்குவி | - நடவாமைக்கு | - நடப்பியாமைக்கு | - உண்ணாமைக்கு. | |

எஉ. வினையெச்சக்குறிப்புக்கள்யாவை —

மல் - து - றி - என்னு மூன்றுவிகுதிகளையும்பெற்று வருவன வினையெச்சக்குறிப்புக்களாம். உம்.

மல்விகுதி - அறமல்லாமல் - அருளில்லாமல்.
துவ்விகுதி - அறமல்லாது - அருளல்லது.
றிவ்விகுதி - அறமன்றி - அருளின்றி.
} செய்தான். எனவரும்.

௭௩. இவ்வினையெச்சங்களுள் - தன்கருத்தாவின் வினையைக்கொண்டுமுடிவனவெவ்வை. தன்கருத்தாவின்வினையையும்பிறகருத்தாவின் வினையையுங்கொண்டு முடிவனவெவை—

உகரமும் - இகரமும் - யகரமெய்யும் - புகரமும் - ஆவும் - ஊவும் - ஆகியவாறுவிகுதியீற்றிறந்தகாலவினையெச்சங்களும் - வானும் - பானும் - பாக்கும் - ஆகியமூன்றுவிகுதியீற்றெதிர்காலவினையெச்சங்களுந் தன்கருத்தாவின்வினையைக்கொண்டுமுடியும். ஒழிந்தவினையெச்சங்களெல்லாந் தன்கருத்தாவின்வினையையும். பிறகருத்தாவின் வினையையுங்கொண்டுமுடியும்.——உம். சாத்தனுண்டுவந்தான் - என்னுந் தொடரினுள் உண்ணுதலும் வருதலுஞ் சாத்தன் வினையாதல்காண்க - ஆடி - போய் - உண்ணுபு - உண்ணூ - உண்ணா - உண்ணுவான் - உண்பான் - உண்பாக்கு - என்பவற்றைத்தனித்தனி உண்டு என்பது நின்றவிடத்திலவைத்துக்காண்க. —— மழைபெய்யமுழங்கும் - மழைபெய்ய நெல்விளைந்தது - அகரவீற்றுப்பெய்யவென்னுஞ்செயவெனெச்சமானது முழங்குமென்னுந் தன்கருத்தாவின்வினையையும் விளைந்ததென்னும்பிறகருத்தாவின்வினையையுங்கொண்டுமுடிந்தது - பிறவுமிவ்வாறுமுடிதல்காண்க.

௭௪. மேற்பிறகருத்தாவின்வினையைக்கொண்டுமுடியாவென்ற வினையெச்சங்கள் சினைப்பொருளின்வினையாயின் அவைமுதற்பொருளின் வினையைக்கொண்டுமுடிதலுமுண்டோ—

அவ்வாறுவருஞ்சினைவினையெச்சினைவினையைக்கொண்டு முடிதலுமன்றி யொற்றுமைபற்றி முதல்வினையையுங்கொண்டுமுடியும். ——உம். காலொடிந்துவீழ்ந்தான் - என்னுந்தொடரினுள் ஒடிதல்சினைவினையும் வீழ்தன்முதல்வினையுமாம். கண்வருவான் கதிரவனைத்தொழுதானென்பதுமது. பிறவுமன்ன.

௭௫. வினையெச்சங்களுள் ஒன்றுமற்றொன்றாய்த் திரிதலுமுண்டோ—

அவ்வாறு திரிந்துவருவனவுஞ்சிலவுளவாம். திரிந்துவரினும் பொருள்வேறுபடாவாம்.——உம். ஞாயிறுபட்டுவந்தான் என்புழிப்படவென்பதுபட்டெனத்திரிந்துநின்றது. யான்கொள்ளுவான் பொன்கொடுத்தான் என்புழிக்கொள்ள வென்பதுகொள்ளுவானெனத்திரிந்துநின்றது. பிறவுமிவ்வாறேயோரோவிடத்தில் வருதல்காண்க.

௭௬. வினையெச்சங்கள் வினையைக்கொண்டுமுடியுங்காலெவ்வெவ்வினையைக்கொண்டுமுடியும்—

உடம்பாடு மெதிர்மறையும்பற்றிவருந்தெரிநிலையுங்குறிப்புமாகிய வினைமுற்றும்-பெயரெச்சமும்-வினையெச்சமும்- வினையாலணையும்பெயரும்-தொழிற்பெயரும்-ஆகியவைவகை வினைச்சொற்களையுங்கொண்டுமுடியும்.——உம்.

உண்டுவந்தான் - உண்டுவாரான் - தெரிநிலைவினைமுற்று.
உண்டுவந்த - உண்டுவாராத - தெரிநிலைப்பெயரெச்சம்.
உண்டுவந்து - உண்டுவாராது - தெரிநிலைவினையெச்சம்.
உண்டுவந்தவன் - உண்டுவாராதவன் - தெரிவினையா லணையும் பெயர்.
உண்டுவருதல் - உண்டுவாராமை - தெரிநிலைத்தொழிற்பெயர்

எனவரும். கற்றுவல்லன்-கற்றுவல்ல-கற்றுவல்லவன்-எனக்குறிப்புவினைமுற்றும்பெயரெச்சமும்வினையாலணையும்பெயருங்கொண்டது.

௭௭. பெயரெச்சவினையெச்சங்கள்-திணைபாலிடங்கட்குப்பொதுவாதற்குதாரணம்யாவை—

அவைசொல்லுதும்.——உம். யானுண்டவூண்-யாமுண்டவூண்-நீயுண்டவூண்-நீருண்டவூண்-அவனுண்டவூண் - அவளுண்டவூண்-அவருண்டவூண்-அதுவுண்டவூண்-அவையுண்டவூண்-எம். நடந்துவந்தேன்-நடந்துவந்தேம்-நடந்துவந்தாய் - நடந்துவந்தீர்-நடந்துவந்தான்-நடந்துவந்தாள் - நடந்துவந்தார் - நடந்துவந்தது-நடந்துவந்தன-எம். வரும். பிறவுமன்ன.

௭௮. இருதிணையுள்ளும்பாற்பொதுவாய்நிற்கும்வினைகளியாவை-

யாரென்னும்வினைக்குறிப்புமுற்று உயர்திணைமுப்பாலுக்கும். எவனென்னும் வினைக்குறிப்புமுற்று அஃறிணையிருபாலுக்கும். பொதுவினைகளாம்.——உம். அவன்யார் அவள்யார்- அவர்யார்-எம். அஃதெவன்-அவையெவன்-எம், வரும். சிறுபான்மையார்-ஆரென்றும். எவன். என்ன-என்னை-என்-என்றுந்திரிந்தும்வரும்.

எகூ. முற்றுவினைகளெவ்விடத்தாயினு மெச்சவினைகளின் பொருளைத்தந்து நிற்றலுமுண்டோ—

தமக்குரிய பயனிலைகொள்ளாது எச்சத்திற் குரிய பயனிலைகொள்ளுமிடத்துத் தெரிநிலைவினை முற்று-வினையெச்சப் பொருளைத்தரும். குறிப்புவினைமுற்று-வினையெச்சப்பொருளையும் பெயரெச்சப்பொருளையுந்தரும். உம்.——கண்டனன்வணங்கினான் என்புழிக்கண்டனனென்னுந் தெரிநிலைவினைமுற்று-கண்டு அல்லது கண்டனாகி எனவினையெச்சப்பொருளைத் தந்தது.——நாளன்றுபோகி என்புழிஅன்று என்னும் வினைக்குறிப்புமுற்று அன்றியென்னும் வினையெச்சப்பொருளைத்தந்துநின்றது.வில்லினன்கண்டான் என்புழி வில்லினனாகியெனப் பொருள்படுதலாலிதுவுமது.——வெந்திறலினன்விறல்வழுதியொடு என்புழித்திறலினனென்னும்வினைக்குறிப்புமுற்று-திறலினனாகியவென்னும்பெயரெச்சப்பொருளைத்தந்துநின்றது. பிறவுமன்ன.

அ௰. குறிப்பு வினைச்சொற்களின்னு மெத்தனைவகையிற் பிரிவுபடும்—

வினைக்குறிப்புச்சொற்கள் ஆக்கவினைக்குறிப்பு மியற்கை வினைக்குறிப்பு மெனவிருவகைப்படும் அவற்றுள் ஆக்கவினைக்குறிப்பிற்கு ஆக்கச்சொல் விரிந்தாயினுந் தொக்காயினும்வரும். உம்.——சாத்தனல்லனாயினான்-சாத்தனல்லன்-கல்வியாற்பெரியனாயினான்-கல்வியாற்பெரியன்-கற்றுவல்லாராயினார்-கற்றுவல்லார் என வாக்கவினைக்குறிப்பிற் காக்கச்சொல்விரிந்துந் தொக்கும்வந்தது. நல்லனென்பதியற்கைவினைக்குறிப்பாயிற் சாத்தனல்லனென வாக்கச்சொல்வேண்டாதுவரும்.

அக. தெரிநிலைவினைச்சொற்கள் இன்னுமெவ்வெவ்வகையிற்பிரிவுபட்டுவழங்கும்—

செயப்படுபொருள்குன்றியவினை-செயப்படுபொருள்குன்றாதவினை-எம். தன்வினை-பிறவினை-எம். செய்வினை-செயப்பாட்டுவினை-எம். விதிவினை-மறைவினை-எம். வேறுவேறு வகையிற்பிரிவுபட்டுவழங்கும்.

அஉ. செயப்படுபொருள் குன்றியவினைகள்யாவை செயப்படுபொருள்குன்றாதவினைகள்யாவை—

நட-வா-செல்-உறங்கு-என்றற்றொடக்கத்துச் செயப்படுபொருளைவேண்டாதுவருமுதனிலைகளையுடையனசெயப்படுபொருள் குன்றியவினைகளாம்.—உம். நடந்தான்-நடந்த-நடந்து-நடக்கை-எனவரும். இதனைநடந்தானெனவாராமைகாண்க.

புர-தா-கொல்-அருந்து-என்றற்றொடக்கத்துச் செயப்படுபொருளைவேண்டிவருமுதனிலைகளையுடையனசெயப்படுபொருள் குன்றாதவினைகளாம்.—உம். இதனைப்புரந்தான்-புரந்த-புரந்து-புரத்தல்-எனவரும்.—முடிந்தான்-என்னும்வினைபகைவரான் முடிந்தானெனவரும்போதுசெயப்படுபொருள்குன்றியவினையும்பணத்தைமுடிந்தானெனவரும்போதுசெயப்படுபொருள்குன்றாதவினையுமாம். பிறவுமன்ன.

அரு. தன்வினைகளென்பனயாவை பிறவினைகளென்பனயாவை—

நட-வா-செல்-உறங்கு-எம். புர-தா-கொல்-அருந்து-எம். வருமித்தொடக்கத்துமுதனிலைகள்-தம்மெழுவாய்க்கருத்தாவின் புடைபெயர்ச்சியாய் நிற்பக்கொண்டுவருவன தன்வினைகளாம்: இத்தன்வினையையியற்றும் வினைமுதலா னிகழும்வினையெனவுங்கூறுவர்.—உம். சாத்தனடந்தான்-புரந்தான்-எனவரும். நடக்கையும் புரத்தலுஞ் சாத்தனென்னுமெழுவாய்க்கருத்தாவின் புடைபெயர்ச்சியாதலறிக.

அத்தன்வினைமுதனிலைகள் பதவியலுட்கூறியவாறே-நடப்பி-நடத்து-வருவி-செல்வி-செலுத்து-உறங்குவி-எம். புரப்பி-கடத்து-தருவி-கொல்வி-அருந்துவி-எம். விகுதிபெற்றும். உறக்கு-அருத்து-எனவிகாரப்பட்டுந் தம்மெழுவாய்க்கருத்தாவைவிட்டுப் பிறகருத்தாவின் புடைபெயர்ச்சியாய் நிற்பக்கொண்டுவருவனபிறவினைகளாம். இப்பிறவினை அப்புடைபெயர்ச்சியையுண்டாக்குங்கருத்தாவைத் தனக்கெழுவாயாகக்கொண்டுவரும். இப்பிறவினையை ஏவும்வினைமுதலா னிகழும் வினையெனவுங்கூறுவர்.—உம். சாத்தனடப்பித்தான்-புரப்பித்தான்-எனவரும். நடக்கையும் புரத்தலுஞ் சாத்தன் புடைபெயர்ச்சியாகாது பிறகருத்தாவின் புடைபெயர்ச்சியாதல் காண்க.

அசு. நட-வா-புர-தா முதலியமுதனிலைகளெழுவாயைவிட்டுப் பிறவினைகளிற்பிறகருத்தாவின்புடைபெயர்ச்சியாமென்றவின் அவை தமக்குரியவக்கருத்தாவையெங்ஙனம்வாக்கொள்ளும்—

செயப்படுபொருள்வேண்டாதுவருமுதனிலைகள்-கொற்றனை நடப்பித்தான் வருவித்தானெனத்தங்கருத்தாவைச் செயப்படுபொருளாய் வரக்கொள்ளும். செயப்படுபொருளைவேண்டிவருமுதனிலைகளுட்சில-கொற்றனைக்கடப்பித்தான் அருத்தினன்-எனச்செயப்படுபொருளாகவும் சில-கொற்றனாற்புரப்பித்தான் செல்வித்தான்-எனமூன்றாம்வேற்றுமைக் கருத்தாவாகவும்வரக்கொள்ளும்.

௮௫. நடப்பி-நடத்து-முதலியபிறவினைப்பகுதிகளோரோவிடத்தில்-நடப்பிப்பி-நடத்துவி-நடத்துவிப்பி-என. வி-பி-என்னும் விகுதிகளுள் ஒன்று மிரண்டும்பெற்றுவரின் ஏவுதற்கருத்தா விரண்டு மூன்றும்வருதலால் அவையெல்லா மெழுவாயாகவே வரப்பெறுமோ—

சாத்தான்பூதனாற்கொற்றனை நடத்துவித்தான்-எம். சாத்தன்பூதனைக்கொண்டுதேவனாற்கொற்றனை நடத்துவிப்பித்தான்-எம். வருதலால்-முதனிலைப்புடைபெயர்ச்சியையுண்டாக்குதற்குமூலமாக நின்ற கருத்தாவொன்றே யெழுவாய்வேற்றுமையில்வரப்பெறுமெனவும் பின்வருங்கருத்தாக்கண்மூன்றாம் வேற்றுமையில் வரப்பெறுமெனவுங்கொள்க.

௮௬. தன்வினைக்கும் பிறவினைக்கும்பொதுவாய்நிற்குமுதனிலைகளுமுளவோ—

சிலவுளவாம்-அவை-அழி-கெடு-கரை-தேய் - என்றாற்போலவருவனவாம்.——உம். அழிந்தான்-கெட்டான்-கரைந்தான்-தேய்ந்தான்-எனத்தன்வினையிலும். அழித்தான்-கெடுத்தான்-கரைத்தான்-தேய்த்தான்- எனப்பிறவினையிலும்வரும். நீயழி-காட்டையழி-நீகெடு-அவன்குடியைக்கெடு-நீகரை - புளியைக்கரை - நீதேய் - கட்டையைத்தேய்எனப்பொதுவாதல்காண்க.

௮௭. தன்வினை பிறவினைப் பொருளையும். பிறவினை தன்வினைப் பொருளையுந்தருதலுண்டோ—

ஓரோவிடத்துண்டு.——உம். அரசன்செய்ததேர்-செய்வித்த-குடிபொன்றிக்குற்றமுமாங்கேதரும்-பொன்றுவித்து. கோழிகூவிப்பொழுதுபுலர்ந்தது. கூவுவித்து-எனத்தன்வினை பிறவினைப் பொருளைத்தந்துநின்றன. நிலையாமைச்சேர்க்குநெடுங்குன்றநாட-சேரும்- நட்பாட்டேற்றாதவர்-தேறாதவர்-எனப்பிறவினைதன்வினைப் பொருளைத்தந்துநின்றன.

அஅ. செய்வினையென்பனயாவை செயப்பாட்டு வினையென்பன யாவை—

படுவிகுதிபுணராத-நட-வா-உண்-தின்-நடப்பி-முதலியமுதனிலைகளையுடையவாயெழுவாய்க்கருத்தாவைக்கொண்டுவருவனவெல்லாஞ்செய்வினைகளாம்.——உம். சாத்தனடந்தான்-வந்தான்-உண்டான்-நடப்பித்தான்-எனவரும்.

உண்ணப்படு-தின்னப்படு-நடப்பிக்கப்படு-எனப்படுவிகுதிபுணர்ந்த முதனிலைகளையுடையனவாய் மூன்றும்வேற்றுமைக்கருத்தாவைக்கொண்டுவருவன செயப்பாட்டுவினைகளாம். படுவிகுதிசெயப்படுபொருள்குன்றிய முதனிலையோடு புணராதெனவுமற்றைமுதனிலையோடு புணருங்கா லகரச்சாரியை தன்முன்வரப்பெறுமெனவுங்கொள்க.——உம். சாத்தனாலிம்மாடுநடப்பிக்கப்பட்டது. கொற்றனாலிச் சோறுண்ணப்பட்டது-எனவரும்.

அகூ. செய்வினை-செயப்பாட்டுவினைப்பொருளையும். செயப்பாட்டுவினை-செய்வினைப்பொருளையுந் தருதலுமுண்டோ—

ஒரோவிடத்துண்டு.——உம். உண்டசோறு-உண்ணப்பட்ட-இல்வாழ்வானென்பான்-என்றுசொல்லப்படுவான்-எம். செய்வினைசெயப்பாட்டுவினைப்பொருளைத்தந்துநின்றன. உண்ணப்பட்டசாத்தன்-உண்ட-எம். பயனிலையுமேற்கப்படுதல்-ஏற்றல்-எம்.செயப்பாட்டுவினைசெய்வினைப்பொருளைத்தந்துநின்றன.

கூ0. விதிவினையென்பனயாவைமறைவினையென்பனயாவை—

இல்-அல்-ஆ-என்னும்விகுதிகள்புணராத-நட-வா-முதலியமுதனிலைகளையுடையவாய்ப்புடைபெயர்ச்சியினது நிகழ்ச்சியையுணர்த்துவன விதிவினைகளாம்.——உம். நடந்தான்-நடந்த-நடந்து-டக்கை-எனவரும். விதிவினையெனினும் உடம்பாட்டு வினையெனினுமொக்கும்.

நடந்தில்-நடக்கின்றில்-நடக்கில்-என இல்விகுதியாயினும். நடக்கல் - உண்ணல்-என அல்விகுதியாயினும். நடவா-உண்ணா-என ஆவிகுதியாயினும் புணர்ந்தமுதனிலைகளையுடையவாய்ப் புடைபெயர்ச்சியினது நிகழ்வில்லாமையைவிளக்கிவருவன மறைவினைகளாம்.

——உம். நடந்திலன்-நடக்கின்றிலன்-நடக்கிலன்-எம். நடக்கல
ன்-எம். நடவாதான்-எம். நடவாத-நடவாது-நடவாமை-எம். வரு
ம். நடவான்-நடவேன்-நடவாய்-என்பன-ஆவிகுதிகெட்டுநின்றன.

௯௧. விதிவினைக்கு மறைவினைக்கும்பொதுவாய்வரும்வினைகளும்
உளவோ—

அங்ஙனம்வருவனவுஞ்சில்வுளவாம்——உம். நோவான்-சா
வான்-உண்ணாய்-உண்ணீர்-எனவரும்.

௯௨. பலவகைப்பட்டதெரிநிலைகுறிப்பென்னு மிருவகைவினைச்
சொற்களுள் எவ்வெவ்வினைச்சொல் எவ்வெவ்விதத்திற் பெயராய்வரு
ம்—

நட-வா-முதலியமுதனிலைவினைகள்பதவியலுள்-எரு.ம். வினை
விடையிற்கூறிய-தல்-முதலியவிகுதிகளிலொன்றுபெற்றுவரிற்றொழி
ற்பெயராம்.——உம். நடத்தல்-வருதல்-எனவரும். சிறுபான்மை-
ஆட்டு-போக்கு - எனவிகாரப்பட்டு விகுதியின்றிவருதலுமுண்டு.

முன்பொரு பொருளின் புடைபெயர்ச்சியாய் நின்ற வினை
முற்றுக்கள் பின்பப்பொருளுக்குப்பெயராய் வருமெனின்வினையா
லணையும்பெயராம். அவை சிறுபான்மையியல்பாகியும் பெரும்பாலு
மிறுதிவிகாரப்பட்டும்வரும்-நடந்தானை-குழையானை - குழையின
னை-எம். நடந்தோன் - குழையோன் - நடந்தவன் - குழையவன்-
எம். நடந்தன - குழையன - எம். நடந்தவை - குழையவை-எம்.
வரும் இன்னுஞ்சிறுபான்மை அம்பலத்தாடினன்-அம்பலத்தாடி-
மானேந்தினன்-மானேந்தி - என விகாரவீறுகத்திரிந்தும்வரும்.

நடந்த-நடக்கின்ற-நடவாத - எனப்பிறிதோர் பெயரைக்
கொண்டுமுடியநிற்கும்வினைகள். நடந்தமை - நடக்கின்றமை - நட
வாதமை-எனமைவிகுதிபெற்றுப் பெயர்த்தன்மை யெய்தி நிற்றலு
முண்டு.——ஓதுவான் - என்னுஞ்சொல்லொன்றே எதிர்காலத் தெரி
நிலைவினைமுற்றாயுமெச்சமாயுந் தொழிலடியாகப்பிறந்தவினைக்குறிப்
புமுற்றாயும்வினையாலணையும்பெயராயுந் தொழிற்காரணம்பற்றிவரு
ம்பெயராயும்பலவகைப்படும்.—— இன்றுமிவ்வினைச்சொலிலக்கண
ம் விரிக்கிற்பெருகுதலாலொருவாற்றாற்சுருக்கிக்கூறப்பட்டது.

# இடைச்சொல்.

௬௩. இடைச்சொலென்பதியாது—

தனித்துநடக்குமாற்றலின்றிப்பெயர்வினைகளினகத்தும் புறத்துமொன்றும்பலவுமாகிச்சார்ந்துவருந்தன்மையதிடைச்சொல்லாம்.——உம். ஓதுவான்-அறிஞன்-எனப்பெயரினகத்தும். நடந்தான்-நடக்கின்றான்-எனவினையினகத்தும். விகுதியு மிடைநிலையுமாகிய விடைச்சொற்கள்வந்தன.——அதுமன்-கொன்னூர்-எனப்பெயரின்புறத்தும். வருவான்கொல் - மற்றறிவாம்-என வினையின்புறத்து மிடைச்சொற்ள் வந்தன.

௬௪. அவ்விடைச்சொலெத்தனைவகைப்படும்—

அன்-ஆன்-அள்-ஆள்-முதலியவிகுதியுருபுகளும்.——தடற மெய்களுமின்னுமுதலியவிடைநிலையுருபுகளும்.——அன்-ஆன்-இன்-அல்-முதலிய சாரியையுருபுகளும்.——ஐ-ஆல்-கு-இன்-முதலியவேற்றுமையுருபுகளும்.—— போல-மான-புரைய-பொருவமுதலியவுவமையுருபுகளும்.——பிறவாறு தத்தமக்குரியபொருளையுணர்த்திவரும்-ஏ-ஓ-உம்-மன்-முதலியனவும்.—— இசை நிறைத்தலேபொருளாகவருவனவும்.—— அசைத்தலே பொருளாகநிற்பனவும். எனவெண்வகைப்படும். விகுதிமுதலியவைந்துருபுகளுக்கு மவ்வவற்றிற்குவிதிகூறும்வழியுதாரணங்காண்க.

௬௫. பிறவாறு தத்தமக்குரியபொருள்களை யுணர்த்திவருமென்றவிடைச்சொற்களின்பொருள்கள்யாவை —

தேற்றமும்-ஐயமும்-தெரிநிலையும்-முற்றும்-எச்சமும்-எண்ணும்-சிறப்பும்-எதிர்மறையும்-சுட்டும்-வினாவும்-ஒழியிசையும்-பிரிநிலையும்-கழிவும்-ஆக்கமும்-இரக்கமும்-காலமும்-இடமும்-அதிசயமும்-இகழ்ச்சியும்-அச்சமும்-ஆகியவிருபது மிவைபோல்வன பிறவும் அவ்விடைச்சொற்களின்பொருள்களாம்.

௬௬. தேற்றமுதலிய பொருள்களுள்ளும்- இசைநிறை - அசைநிலை - என்பவற்றுள்ளும் - ஏகாரவிடைச்சொல் எவ்வெப்பொருளைத்தரும்—

தேற்றமும்-வினவும்-எண்ணும்-பிரிநிலையும்-எதிர்மறையும்-ஈற்றசையும்-ஆகிய வைந்துபொருளையுந்தரும். அன்றியும் ஈற்றசையாயுதிற்கும்.—உம். உண்டேயெமறுமை யென்பது உண்டென்பதற்கையமில்லையென்னுந்தெளிவுப்பொருளைத்தருதலிற்றேற்றம்.—நீயேகொண்டாய் என்பது நீயாவென்னும் பொருளைத்தருமிடத்து வினா.—நிலனே நீரே தீயே வளியே என்பது நிலனுநீருந்தீயும்வளியுமென வெண்ணிநிற்றலினெண்.—இவனே கொண்டானென்பது ஒருகூட்டத்தினின்றுமொருவனைப் பிரித்துநிற்குமிடத்துப்பிரிநிலை.—யானேகொண்டேன் என்பது யான் கொள்கிலே னென்னும் பொருளைத்தருமிடத்தெதிர்மறை.—இயம்புவ னெழுத்தே யென்பது இறுதியிலசைத்துநிற்றலினீற்றசை.

௬௭. ஓகாரவிடைச்சொல்லெவ்வெட்பொருள்களைத்தரும்—

ஒழியிசையும்-வினவும்-சிறப்பும்-எதிர்மறையும்-தெரிநிலையும்-கழிவும்-பிரிநிலையும் - ஐயமும்-ஆகியவெட்டுப் பொருள்களையுந்தரும். அன்றியுமசைநிலையுமாம்.—உம். உண்ணுதற்கோ வந்தான் என்பது கலகஞ்செய்யவந்தான் என வொழிந்தசொற்களைத் தருதலினொழியிசை —கொற்றனோவந்தான் என்பது கொற்றனாவென்னும்பொருளைத்தருதலின்வினா.—சிறப்பு உயர்வுசிறப்பு மிழிவுசிறப்புமெனவிருவகைப்படும். ஓஒபெரியன் என்பதுயர்வுசிறப்பு-ஓஒகொடியனென்பதிழிவுசிறப்பு.—அவனோகொண்டான் என்பது கொண்டில னென்னும் பொருளைத்தருதலி னெதிர்மறை.—அலியையநோக்கி ஆணோவதுவுமன்று பெண்ணோவதுவுமன்று என்பது அத்தன்மையில்லாமைதெரிந்தவழிநிற்றலிற்றெரிநிலை.—உறுதி யுணராதுகெட்டாரை ஒஒ தமக்கோருறுதியுணரரோ என்பது கழிந்ததற்கிரங்கலிற்கழிவு.—இவனோகொண்டான் என்பது பலருணின்றுமொருவனைப்பிரித்துநிற்குமிடத்துப் பிரிநிலை.—குற்றியோ மகனோ என்பது ஐயப்பொருளைத் தருதலினையும்.—காணியவம்மினோகங்குலதுநிலையே என்பது அசைநிலை.

௬௮. உம்மென்னுமிடைச்சொலெவ்வெட்பொருளைத்தரும்—

எதிர்மறையும்-சிறப்பும் - ஐயமும்-முற்றும்-எச்சமும் - எண்ணும்-தெரிநிலையும்-ஆக்கமும் - ஆகிய வெட்டுப் பொருளையுந்தரும்.—உம். ஒருவன்பாவங்களைச்செய்யினும் புறங்கூறலை விடல்

வேண்டும். என்பது பாவங்களையுஞ்செய்யலாகாதென்னும் பொரு
ளைத்தருதலினெதிர்மறை.——சிறப்பு உயர்வுசிறப்பு மிழிவுசிறப்பு
மெனவிருவகைப்படும். பார்ப்பானுங்கள்ளுண்டான் என்பதுயர்வு
சிறப்பு. புலையனுங் கள்ளுண்ணா னென்ப திழிவுசிறப்பு.——அவன்
வெல்லினும்வெல்லும் என்பனையம்.——எல்லாரும்வந்தார் என்ப
துமுற்று. —— எச்சவும்மை இறந்ததுதழீஇயதும் எதிரதுதழீஇய
தும்எனவிருவகைப்படும். சாத்தனும்வந்தானென்பது கொற்றன்வ
ந்ததன்றியென்னும்பொருளைத்தரினிறந்ததுதழீஇயவெச்சவும்மை.
இனிக்கொற்றனும்வருவானென்னும்பொருளைத்தரி னெதிரது தழீ
இயவெச்சவும்மை.—— இராவும்பகலும் என்ப தெண்.——ஆணு
மன்று பெண்ணுமன்று என்பது தெரிநிலை.——பாலுமாயிற்று என்
பது அதுவேமருந்துமாயிற்றென்னும்பொருளைத்தருதலினாக்கம்.

௬௬. முற்றும்மையெவ்விடத்தாயினு மெச்சவும்மைப் பொருளை
த்தருதலுமுண்டோ—

எதிர்மறைவினையடுத்துவருமிடத்து முற்றுப் பொருளையே
யன்றியெச்சப்பொருளையுந்தரும்.——உம். எல்லாரும்வந்திலர் எ
ன்பது சிலர்வந்தாரென்னும் பொருளையுந்தருதலி னெச்சவும்மைப்
பொருளைத்தந்ததுகாண்க.

௱. அ - இ - உ - எம். எ - ஆ - யா - எம். வருமிடைச்சொற்க ளெவ்
வெப்பொருளைத்தரும்—

அ - இ - உ - என்னுமூன்றும் - அக்கொற்றன் - இக்கொற்றன் -
உக்கொற்றன் எனச்சுட்டுப்பொருளையும். எ - ஆ - யா - என்னு மூன்று
ம்-எக்கொற்றன்-கொற்றனா-யாவன்-எனவினாப்பொருளையுந்தரும்.

௱௧. மன்-என்னுமிடைச்சொலெவ்வெப்பொருளைத்தரும்—

ஒழியிசையும்-ஆக்கமும்-கழிவும்-மிகுதியும்-ஆகிய நான்கு
பொருளையுந்தரும். அன்றியுமசைநிலையுமாம்.——உம். கூரியதோ
ர் வாண்மன் - என்புழி யிரும்பையறத்துணித்ததென்னுஞ் சொல்
லொழிய நிற்றலினொழியிசை.——பண்டுகாடுமன் - என்புழியின்று
கழினியாயிற்றெனா ஆக்கப்பொருட்டருதலினாக்கம்.—— சிறியகட்பெ

றினே யெமக்கீயு மன்னே-என்புழி இப்பொழு தவனிறத்தாலீதல் கழிந்ததெனப் பொருடருதலாற் கழிவு.——எந்தைமெக் கருளுமன்-என்புழி மிக்திப்பொருடருதலின் மிகுதி.——அதுமற்கொண்கன்றேரோ-என்புழி மன் அசையாய்நின்றது.

௱௨. கொன்-என்னுமிடைச்சொலெவ்வெப்பொருளைத்தரும்—?

அச்சமும்-பயனின்மையும்-காலமும்-பெருமையும்-ஆகிய நான்குபொருளையுந்தரும் ——உம். கொன்வாளி-என்புழி அஞ்சும் வாளியெனப் பொருடருதலினச்சம்.——கொன்னேகழிந் தன்றிளமை-என்புழிப்பயனின்றிக் கழிந்ததெனப்பொருடருதலிற் பயனின்மை.——கொன்வரல்வாடை-என்புழிக்காதலர்நீங்கிய காலமறிந்துவரும்வாடையெனப்பொருடருதலிற்காலம்.——கொன்னூர்துஞ்சினும்-என்புழிப் பெரியவூருறங்கினுமென்னும்பொருடருதலிற் பெருமை.

௱௩. மற்றென்னுமிடைச்சொலெவ்வெப்பொருளைத்தரும்—

வினைமாற்றும்-பிறிதும்-ஆகிய விரண்டுபொருளையுந்தரும். அன்றியுமசைநிலையுமாம்.——உம். மற்றறிவா நல்வினை-என்பது விரைந்தறிவாமென்னும் வினையையொழித்து விரையா தறிவாமென்னும் வினையைத்தந்துநின்றமையால் வினைமாற்று.——ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று-என்பது ஊழல்லதொான றென்னும்பொருளைத்தருதலாற்பிறிது.——மற்றென்னையாள்க-என்பது அசைநிலை.

௱௪. அந்தில்-ஆங்க-என்னுமிடைச்சொற்களெவ்வெப்பொருளைத்தரும்—

இடப்பொருளைத்தரும். அன்றியுமசைநிலையுமாம்.——உம். சேயிழையந்திற்கொழுநற்காணிய - என்பது அவ்விடத்தென்னும் பொருடருதலினிடம்.——அந்திற்கழலினன் கச்சினன் - என்பது அசைநிலை.——ஆங்காங்காயினுமாக-என்பதிடம்.——ஆங்கத்திறனல்லயாங்கழற-என்பதசைநிலை.

௱௫. என-என்று-என்னுமிரண்டிடைச்சொற்களுமெவ்வெவ்விடத்துவரும்—

வினையும்-பெயரும்-குறிப்பும்-எண்ணும்-பண்பும்- ஆகிய வைந்திடத்தும்வரும்,——உம். மைந்தன்பிறந்தானெனத் தந்தை

யுவந்தான் - என்பது வினை.——அழுக்காறெனவொருபாவி - என்பது பெயர். —— பொள்ளெனவாங்கேபுறம்வேரார் - என்பது குறிப்பு. நிலனென நீரென - என்பதெண். —— வெள்ளெனவிளர்த்தது - என்பது பண்பு.—— என்றென்பதனையுமிவ்வாறேயொட்டுக.

௱௬. மேற்சொல்லியகுறிப்பெவ்வெவற்றைப்பற்றிவரும்—

ஒலியும் - அச்சமும் - விரைவும் - ஆகியவிவைமுதலிய பற்றிவரும்.——உம். அம்மென் - இம்மென - கஃஃஃறென - சுஃஃஃறென - கோவென - சோவென - திடுமென - முகேரென - ஒல்லென - இழுமென - எம். கடகடென - களகளென - திடுதிடென - நெடநெடென - நெறநெறென - படபடென - எம். வருவனவொலிக்குறிப்பாம். அனுகரணவோசையெனவும்பெயர்பெறும்.—— துண்ணென - துணுக்கென - திட்கென - திடுக்கென - என்றாற்போலவருவனவச்சக்குறிப்பு.—— கதுமென - ஞெரேலென - சரேலென - பொருக்கென - பொள்ளென - என்றாற்போலவருவனவிரைவுக்குறிப்பு - பிறவுமிவ்வாறுவருன காண்க.

௱௭. தொகைபெற்றும்பெறாது மெண்ணுப்பொருளைக்குறித்து வருமிடைச்சொற்களெத்தனை—

எனவும் - எனாவும் - என்றும் - என்றாவும் - ஒடுவும் - ஓடுவும் - ஏயும் - உம்மும் - ஆகியவெட்டுந்தொகைபெற்றேனும்பெறாதேனும்வருமெண்ணிடைச்சொற்களாம்.—— உம். நிலனென நீரெனத்தீயெனக்காற்றென வாகாயமெனப்பூதங்களைந்து எனத்தொகைபெற்றும் - நிலனென நீரெனத்தீயெனக்காற்றென வாகாயமெனவாகிய வுலகம் எனத்தொகைபெறாதும்வருதல்காண்க.

௱௮. இரக்கப்பொருளைத்தருமிடைச்சொற்கள்யாவை—

அந்தோ - அச்சோ - அன்னோ - ஐயோ - ஆஅ - ஓஒ - என்றாற்போலவருவன விரக்கப்பொருளை யுணர்த்து மிடைச்சொற்களாம். ——உம். அந்தோவிசையைப்பட்டனள் - அம்மருங்குற்கன்னோபரற்கானமாற்றினகொல்லோ - ஓஒ வுழக்குந்துயர் - ஐயோ வென்செய்வேன் - எனவரும். பிறவுமன்ன.

௱௯. இகழ்ச்சிப்பொருளைத்தருமிடைச்சொற்கள்யாவை—

ஏ-சீ-சீசீ-சிச்சீ-சை - என்றாற்போலவருவன விகழ்ச்சிப்பொருளைத்தருமிடைச்சொற்களாம்.——உம். ஏஏ யிவளொருத்தி பேடியோவென்றார்-சீயென்செய்தாய்போ-சீசீ யவன்கெட்டான் - எனவரும். பிறவுமன்ன.

௱௰. அதிசயப்பொருளைத்தருமிடைச்சொற்கள்யாவை—

ஆஅ-ஆவா-ஆகா-ஓஒ-ஓகோ-அம்மா - அம்மம்மா - அச்சோ-என்றாற்போல்வருவன வதிசயப்பொருளைத்தரு மிடைச்சொற்களாம்.——உம். ஆஅவிதனையெப்படியறிந்தான்-ஓகோ நன்றாச்சொன்னாய்-அம்மம்மாவெப்படிப்பட்டகூத்து-எனவரும்.

௱௰௧. அச்சப்பொருளைத்தருமிடைச்சொற்கள்யாவை—

கூ-கூகூ-ஐயோ-ஐயையோ-என்றாற்போலவருவன வச்சப்பொருளைத்தருமிடைச்சொற்களாம்.——உம். கூகூகொன்றான்-ஐயையோதிருடன்வந்தான்-எனவரும்.

௱௰௨. இசைநிறையிடைச்சொற்கள்யாவை—

ஒடு-தெய்ய-என்றாற்போலவிசைநிறைத்துவருவனவாம்.——உம். விதைக்குறுவட்டிபோதொடுபொதுள-எம். சொல்லேன் றெய்யநின்னெடுபெயர்த்தே-எம். வரும்.

௱௰௩. அசைநிலையிடைச்சொற்கள்யாவை—

மியா-இக-மோ-மதி-அத்தை-இத்தை-வாழிய-மாள-வீயாழ-என்னும்பத்துமுன்னிலையசைகளாம்.——உம். சிலையன் செழுந்தழையன்சென்மியாவென்றுமலையகலான்வாடிவரும்-எனவரும்

யாகா-பிற-பிறக்கு-அரோ-போ-மாது-இகும்-சின் - குரை-ஒரும்-போலும்-அன்று-ஆம்-தாம்-தான்-என்-ஆல்-என்ப-என்னும் பதினெட்டுமெல்லாவிடத்தும்வரு மசைநிலைகளாம்.——உம். புறநிழற்பட்டாளோவிவளிவட்காண்டிகா - எனவரும்.—— மாவென்பது உப்பின்று புற்கையுண்கமாகொற்கையோனே எனவிய்ங்கோளசையாம் அம்ம. என்பது அதுமற்றம்மவெனவுரையசையாம்.

௱௰௪. இன்னுமிவ்வாறுவருமிடைச்சொற்களுமுளவோ—

பலவுளவாம். அவை விரிக்கிற்பெருகுதலால் - விரிந்தநூலுட்காண்க. இனி என்பது இனியெம்மெல்லை என்புழி யிடத்தையும் இனிவருவான் என்புழிக்காலத்தையுமுணர்த்திற்று. பிறவுமன்ன.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

# உரிச்சொல்.

௱௰௫. உரிச்சொல்லென்பதியாது—

உயிரும்-உயிரல்லனவும்-ஆகிய பொருள்களின்பலவகைக்குணங்களையுணர்த்தும்பெயராகிவருவதுரிச்சொல்லாம். ஆயினுமிவற்றுட்சில-உறு-தவ-எனவினையையொத்துவருவனவுமுள.

௱௰௬. அவ்வுரிச்சொல்லெத்தனைவகைப்படும்—

குறிப்பும்-பண்பும்-இசையும்-எனமூன்றுவகைப்படும். ஆனலம்மூன்றுங் குணப்பண்புந் தொழிற்பண்புமாகியவிருவகையுள்ளேயடங்கும்.——குறிப்பாவன மனத்தாற்குறித்தறியப்படுவன-அவை - வறுமை - சிறுமை - என்பனபோலவருவனவாம்.—— பண்பு பொறிகளாலறியப்படுங்குணம் - அவை-செம்மை-வெம்மை-என்பனபோலவருவனவாம்.—— இசையாவனவோசையாம் - அவை-ஒலி-கலி- என்பனபோலவருவனவாம்.

௱௰௭. தொழிற்சொல்லைமேலே வினைச்சொல்லென்றும் இவ்விடத்துரிச்சொல்லென்றுஞ்சொல்லியதென்ன—

குணப்பண்பும். முதனிலையளவிற்பெறப்படுந்தொழிற்பண்பும். ஆகியபொருட்பண்பையுணர்த்துஞ்சொல்லுரிச்சொல்லெனவும்-பொருட்புடைபெயர்ச்சியாகிய தொழிற்பண்பின் காரியத்தையுணர்த்துஞ்சொல் வினைச்சொல்லெனவும்-சொல்லப்படும். பண்புந் தொழிலுமோரோ விடத்திற்பொருளெனவும்படுமாதலினவற்றை யுணர்த்துமுரிச்சொல்லைப்பெயரெனவுமேற்கூறினும்.

௱௰௮. உயிராகியபொருள்களின் குணப்பண்புகள்யாவை—

அறிவு. மயக்கம். அருள். விருப்பு. வெறுப்பு. இன்பம். துன்பம். நினைப்பு. மறப்பு. நட்பு. பகை. ஐயம். துணிவு. மகிழ்ச்சி. இரக்கம். பொறுமை. நாணம். அச்சம். மானம். என்றற்றொடக்கத்தனவுடம்போடுகூடிய வுயிர்ப்பொருளின்குணப்பண்புகளாம்.

௱௰௯. உயிராகியபொருள்களின்றொழிற்பண்புகள்யாவை—

உண்ணல்-உடுத்தல்-உறங்கல்-அணிதல்-தொழுதல்-நடத்தல்-ஆக்கல்-காத்தல்-அழித்தல்-என்றற்றொடக்கத்தனவுடலோடுகூடியவுயிர்ப்பொருளின்றொழிற்பண்புகளாம்.

௱௨௰. உயிரல்லாதபொருள்களின் குணப்பண்புகள்யாவை—

வட்டம். இருகோணம். முக்கோணம். சதுரம். முதலியபல வடிவுகளும். — நறுநாற்றம். தீநாற்றம். என்னுமிருநாற்றமும்.—— வெண்மை. செம்மை. கருமை. பொன்மை. பசுமை- என்னுமைந்துவண்ணமும்.—— கைப்பு. புளிப்பு. துவர்ப்பு. உவர்ப்பு. கார்ப்பு. இனிப்பு. என்னுமறுசுவைகளும்.—— வெம்மை. தண்மை. மென்மை. வன்மை. நொய்மை. சீர்மை. இழுமெனல். சருச்சரை. என்னுமெட்டூறும். உயிரல்லாதபொருள்களின்குணப்பண்புகளாம்.

௱௨௧. உயிரல்லாதபொருள்களின்றொழிற்பண்புகள்யாவை—

தோன்றல். மறைதல். வளர்தல். சுருங்கல். நீங்கல். அடைதல். நடுங்கல். ஒலித்தல். என்றற்றொடக்கத்தன உடம்போடுகூடியவுயிரின்றொழிலாதலேயன்றிப் பிறபொருள்களின் றொழிற்பண்புமாம்.—— உம். உயிர்தோன்றிமறைந்தது. உடம்புதோன்றிமறைந்தது. நெருப்புத்தோன்றிமறைந்தது. எனவரும்.

௱௨௨. குறிப்பும். பண்பும். இசையும். ஆகிய மூவகைப்படு முரிச்சொற்களும் பொருட்குணங்களையெவ்வாறுணர்த்திவரும்—

தாம்பலவாய்நின்றொருகுணத்தையும். ஒன்றாய்நின்று பலகுணங்களையுமுணர்த்திவரும். சிறுபான்மையொன்றாய்நின்றொருகுணமுணர்த்துமுரிச்சொல்லுமுண்டு.

௱௨௩. தாம்பலவாய் நின்றொருகுணத்தையுணர்த்துமுரிச்சொற்களியாவை—

குறிப்பு.

உறு-தவ-நனி-சால்-கூர்-கழி-என்னுமாறுமிகுதியென்னுங்குறிப்பையுணர்த்துவனவாம். உம். உறுபுகழ்-தவப்பல-நனிவருந்தினன்-சாலக்கொண்டான்-துயர்கூர்ந்தான்-கழிநலம்- எனவரும். ——பையுள்-சிறுமை-என்னுமிரண்டும்- நோயையுணர்த்துவனவாம். வெறுப்பு-உறப்பு-என்னுமிரண்டுஞ் செறிவையுணர்த்துவனவாம். இலம்பாடு-ஒற்கம்-என்னுமிரண்டும் வறுமையையுணர்த்துவனவாம். கறுப்பு-சிவப்பு-என்னுமிரண்டும் வெகுளியையுணர்த்துவனவாம். பிறவுமன்ன.

பண்பு.

குரு-கெழு-என்னுமிரண்டும்- நிறமென்னும் பண்பையுணர்த்துவனவாம். உம். குருமணித்தாலி -கெழுகிளாகலம் - எனவரும்.

——நொசிவு - நுழைவு - நுணங்கு - என்னுமூன்றும். நுண்மையையு ணர்த்துவனவாம். பிறவுமன்ன.

இசை.

ஒலி - கலி - முழக்கம் - ஆர்ப்பு - கம்பலை - கவ்வை - கும்மை - என் றற்றொடக்கத்தன ஓசையென்னுமிசையையுணர்த்துவனவாம்.—— மாற்றம். உரை - கிளவி - நொடி - மொழி - என்றற்றொடக்கத்தனசொ ல்லென்னுமிசையை யுணர்த்துவனவாம். பிறவுமன்ன.

௱உச. ஒன்றாய்நின்று பலகுணங்களையுணர்த்து முரிச்சொற்களி யாவை—

குறிப்பு.

படர் என்பது - நினைத்தலுஞ் செல்லுதலு நோவுமாகிய மூ ன்றுகுறிப்பையுமுணர்த்துவதாம். உம். வள்ளியோற்படர்ந்துபுள் ளிற்போகி - நினைப்பு. கறவைகன்றுவயிற்படர - செலவு. படர்கொ ண்டுடன்மெலிந்தான் - நோவு. எனவரும்.——செழுமையென்பது வளனுங்கொழுப்புமாகியவிரண்டுகுறிப்பையுமுணர்த்துவதாம். தா வென்பது - வலியையும்வருத்தத்தையுமுணர்த்துவதாம். பிறவுமன்ன.

பண்பு.

வார்தல் - போகல் - ஒழுகல் - என்பனமூன்றும். நேர்வும் - நெ டுமையுமாகிய விருபண்பையுமுணர்த்துவனவாம். உம். வார்ந்தில ங்குவெயிறு - போகுகொடிமருங்குல் - ஒழுகுகொடிமருங்குல் - இ வைநேர்வு. வார்மணல்டைகரை - போகுகைக்களிறு - மால்வரையொ ழுகியவாழை - இவைநெடுமை.——தடவென்பது - கோணலும் பெ ருமையுமாகிய விரண்டையுமுணர்த்துவதாம். பிறவுமன்ன.

இசை.

அழுங்கலென்பது - ஒலியும் - புலம்பலுமாகிய விசையையுண ர்த்துவதாம். உம். இவ்வழுங்கலூர் - ஒலி. அழுங்குகுரல்கேட்டான் - புலம்பல் - எனவரும்——கலியென்பது ஒலியாகிய விசையையுஞ் செருக்காகிய குறிப்பையுமுணர்த்துவதாம். பிறவுமன்ன: இவ்வாறு வரும் பிறவுரிச்சொற்களையு மேற்சொல்லிய பெயர்வினையிடைகளிற் சொல்லாதொழிந்தபிறவற்றையுந் திவாகரமுதலியவற்றுட்காண்க.

சொல்லியன்முற்றிற்று.

இரண்டாவது

# வேற்றுமையியல்.

௱௨௫. வேற்றுமையென்பதியாது—

தன்னையேற்ற பெயர்ப்பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம்:— வேற்றுமையைச்செய்யுமுருபை வேற்றுமையென்றது காரியவாகுபெயர்.

௱௨௬. அவ்வேற்றுமையெத்தனைவகையினையுடைத்தாம்—

முதல்வேற்றுமை-இரண்டாம்வேற்றுமை - மூன்றாம்வேற்றுமை-நான்காம்வேற்றுமை-ஐந்தாம்வேற்றுமை - ஆறாம்வேற்றுமை-எழாம்வேற்றுமை - எட்டாம்வேற்றுமை - எனவெண்வகையினையுடைத்தாம். இவற்றுண் முதல்வேற்றுமை எழுவாயெனவும் எட்டாம்வேற்றுமைவிளியெனவும் பெயர்பெறும்.—இவ்வெட்டனுள் எட்டாவதுமாறாவதுமொழிந்தவாறுவேற்றுமைப் பொருள்களும்வினைகொண்டு முடியிற் காரகமெனப் பெயர்பெறும். அவைவருமாறு - சாத்தனானவன்கொடுத்தான்-பொருளைக்கொடுத்தான்-கையாற்கொடுத்தான் - கொற்றற்குக்கொடுத்தான் - மலையின்வீழருவி-காட்டின்கட்சென்றான் - எனவாறுகாரகங்களும்வந்தன. சாத்தனது வரவு-எனவாறாவ தன்பொருளும் வினைகொளின்ப்பெயர்பெறும்.

௱௨௭. எவ்வெப்பெயர்கள்வேற்றுமைகளையேற்றுவரும்—

பகாப்பதமும்பகுபதமுமாகியபொருட்பெயர்களும்வினையாலணையும்பெயருந்தொழிற்பெயரும் பண்புப்பெயருமாகியபெயர்களனைத்தும் வேற்றுமைகளையேற்றுவரும்.

௱௨௮. வேற்றுமைகட் கிலக்கண மெத்தனைவகையாற் கூறப்படும்—

உருபும்-அவ்வுருபுவேற்றுமைசெய்யுமாறும்- அவ்வுருபின் பொருளும்-எனமூன்றுவகையாற்கூறப்படும்.

௱௨௯. உருபுகளென்பனயாவை—

உருபுகள்-ஐ-ஆல்-கு-இன்-அது-கண்-எனவருவனவாம். இவ்வளவுசிறப்பின்றிச்சிறுபான்மை வருஞ்சொல்லுருபுகளுஞ் சிலவுள. அவை-ஆனவன்-கொண்டு-பொருட்டு-நின்றும்-உடையு-இடத்து-எனவருவனவாம்.

௱௩௰. முதல்வேற்றுமைக்குருபியாது—

முதல்வேற்றுமைக்கு-ஐ-முதலியவுருபேற்றலாகிய திரிபில்லாதபெயரேயுருபாவதன்றி வேறுருபில்லை. ஆயினுஞ்சிறுபான்மை-ஆனவன்-ஆகின்றவன்-ஆவான்முதலிய வைம்பான் மொழியாகிய சொல்லுருபுகள்-சாத்தனானவன்வந்தான்-சாத்தியானவள்வந்தாள்-சாத்தரானவர்வந்தார்-யானையானதுவந்தது-யானைகளானவைவந்தன-எனவதததற்குரியபெயர்களோடுசேர்ந்துவருதலுமுண்டு.

௱௩௧. அவ்வெழுவாய்வேற்றுமையுருபாகிய திரிபில்லாத பெயர் தானே தன்பொருளையெவ்வாறுவேற்றுமைசெய்யும்—

தன்னைமுடிக்கவரும் வினைச்சொல்லின்றொழிற்கு வினைமுதற்பொருளாகவேற்றுமைசெய்யும்: வினைமுதல்-கருத்தா-செய்பவன்-என்பனவொருபொருட்சொற்கள்.——உம். சாத்தன்வந்தான்-சாத்தன்வாழ்க-சாத்தன்கரியன்-ஆவுண்டு-எனவரும்.

௱௩௨. அவ்வெழுவாயுருபின்பொருள்யாது—

மேற்சொல்லப்பட்ட வினைமுதலேயாம். இவ்வாறேயிரண்டாம் வேற்றுமையுருபுமுதலியவற்றிற்கும் அவ்வவ்வுருபுகள் வேற்றுமைசெய்யும்பொருளேபொருளாமெனக்கொள்க.

௱௩௩. வினைமுதற்பொருளென்பதியாது—

தன்புடைபெயர்ச்சியாகிய தொழிற்சுதந்தரமுடையபொருளாம், சாத்தன்வந்தான்-என்புழிச்சாத்தனென்னும்பெயர்ப்பொருளாகிய வோராண்மகன்-தன்புடைபெயர்ச்சியாகிய வருதற்றொழிற்சுதந்தரமுடைய பொருளாய்வினைமுதலாதல்காண்க.

௱௩௪. எழுவாயுருபுவினையையன்றிப் பெயரைத் தன்னைமுடிக்குஞ்சொல்லாகக்கொள்ளுதலின்றே—

சிறுபான்மை-இன்னது-இவ்வளவிற்று-என்னும்பொருள்பட வரும்பெயரையும் வினைப்பெயரையுமுடிக்குஞ்சொல்லாகக்கொள்ளுதலுண்டு.—உம். சாத்தனிவன்-கொற்றனவன்-எம். ஆவொன்று-யானைநூறு-எம். சாத்தனெவன்-புலியெது-எம். வரும்.

௱௫. இவ்வினைமுதற்பொருள் எழுவாயோடன்றி மற்றைவேற்றுமையுருபுகளோடுவருதலின்றே—

சிறுபான்மை மூன்றனுருபோடும் - நான்கனுருபோடும்-ஆறனுருபோடும்-வரும்.—உம். அவராற்செய்யத்தகுமக்காரியம்-௩-ஆல்: அவர்க்குச்செய்யத்தகுமக்காரியம்-௪-கு: அவரதுவரவு-௬-அது: எனவரும்.

௱௬. இரண்டாம்வேற்றுமையுருபியாது—

ஐ-ஒன்றுமேயாம்.

௱௭. அவ்வையுருபு தன்னையேற்றபெயர்ப்பொருளையெவ்வாறு வேற்றுமைசெய்யும்—

உண்டாக்கப் படுபொருளும் - வேறுபடுக்கப் படுபொருளும்-எய்தப்படுபொருளும்-பிறவுமாகிய செயப்படுபொருளாகவேற்றுமைசெய்யும். எனவேவச்செயப்படுபொருளே யவ்வுருபின்பொருளாமென்பதாயிற்று. செயப்படுபொருள்-கருமம்-காரியம்-என்பனவொரு பொருட்சொற்கள்.—உம். குடத்தை வனைந்தான்-கோட்டையைக்கட்டினன்-ஆக்கப்படுபொருள்.—கயிற்றையறுத்தான் - வேலியைப்பிரித்தான் - வேறுபடுக்கப்படுபொருள்.—பொன்னையுடையன்-ஊரைச்சார்ந்தான்-மதியையொக்குமுகம்-பணத்தையெண்ணினன்-எய்தப்படுபொருள், எனவரும்.

௱௮. செயப்படுபொருளென்பதியாது—

வினைமுதற்றொழிற்பயனுறுவது - குடத்தை வனைந்தான் என்புழி மண்கூட்டலுந் திரிகைசுழற்றலுமுதலியன வினைமுதற்றொழில். குடந்தோன்றுதல் அத்தொழிலின்பயன். அப்பயனுறுவது குடமாதலாற் குடஞ்செயப்படுபொருளாதலறிக.—அன்றியும்வீட்டைவிரும்பினன்-பொருளையறிந்தான் என்பவற்றுள்; விரும்பலுமறிதலுமுதலிய வினைமுதற்றொழில்களுக்கு வீடும் பொருளும் விடயமாயினு மிவ்வுஞ்செயப்படுபொருளாமெனக்கொள்க.

௱௩௯. அச்செயப்படுபொருளெத்தனைவகையினையுடைத்தாம்—

கருத்துண்டாய்ச்செயப்படுவதும்- கருத்தின்றிச்செயப்படுவதும்-இருமையுமாய்ச்செயப்படுவதும்-எனமூன்றுவகையினையுடைத்தாம்.——உம். சோற்றையுண்டான் - சோற்றைக்குழைத்தான்-பிதாவையு நெல்லையும்பணத்திற்குக்கொண்டான்-எனவரும்.

௱௪௰. ஒரோவிடத்தீருருபினைந் திரண்டுசெயப்படுபொருள் வருதலுண்டோ—

செயப்படுபொருள்குன்றாதமூதனிலைகளின்மேல்-வி-பி-முதலியனபுணர்ந்துவருவனவாகிய சிலபிறவினைகளிலீருருபினைந் திரண்டுசெயப்படுபொருள்வருதலுண்டு.——உம். பகைவரைச்சிறைச்சாலையையடைவித்தான்-சாத்தனைச்சோற்றையுண்பித்தான். எனவரும். —— சிலபிறவினைகளிலிவ்வாறுவருமெனவே சிலவற்றுள்-சாத்தனாற்கொற்றனைப்புரப்பித்தான்-கொற்றனாற்பூதனைக்கொல்வித்தான் - எனவிவ்வாறுவாராவெனக்கொள்க.

௱௪௧. சிலபிறவினைகளிலன்றிச் செயப்படுபொருள்குன்றாதவினைகளி லெங்குமீருருபினைந் திரண்டு செயப்படுபொருள் வருதலின்றோ—

கறத்தல்-குறைத்தல்-முதலியசிலவினைகளிலவ்வாறுவருதலுமுண்டு. வரினுமுன்னின்றசெயப்படுபொருள் சிறப்புடைத்தன்றெனக்கொள்க.——உம். பசுவினைப்பாலைக்கறந்தான்-யானையைக்கோட்டைக்குறைத்தான்-எனவரும். பசுவினது-யானையினது எனவாறுவதன்பொருளாகவும் வருதலிற்சிறப்புடைத்தன்றென்றாம்.

௱௪௨. இன்னுமச்செயப்படுபொருளெவ்வாறுவரும்—

அகநிலையாகவும். தானே கருத்தாவாகவும்வரும்.——உம். நடத்தலைச்செய்தான் - உண்டலைச்செய்தான்- எனத்தெரிநிலைவினைகளை விரித்துரைக்குமிடத்துச்செயப்படுபொருள் அகநிலையாய்வந்தது. தன்னைக்குத்தினான்-தன்னைப்புகழ்ந்தான்-எனச்செயப்படுபொருளே கருத்தாவுமாயிற்று.

௱௪௩. இச்செய்ப்படுபொருள் ஐயுருபோடன்றி மற்றைவேற்றுமையுருபுகளோடு வருதலின்றோ—

சிறுபான்மை-ஏழுவாய்வேற்றுமையுருபுமுதல் - ஏழாம்வே
ற்றுமை யுருபீருயவுருபுகளெல்லாவற்றோடும்வரும்.——உம். சோ
றடப்பட்டது-ஏழுவாய்: அரிசியாற்சோறாக்கினான்-௩-ஆல்: மதியொ
டொக்குமுகம்-௩-ஒடு: அவட்குக்கொள்ளுமிவ்வணிகலம்-௪-கு: பழி
யினஞ்சும்-௫-இன்: நூலதுகுற்றங்கூறினான்-௬-அது: தூணின்கட்
சார்ந்தான்-௭-கண்: எனவரும்.

௱௪௪. மூன்றாம்வேற்றுமையுருபுகள்யாவை—

ஆல்-ஆன்-ஒடு-ஓடு - என்றுசொல்லப்பட்ட நான்குமாம்.
அன்றியுஞ் சிறுபான்மை.—கொண்டு-என்பது-ஆல்-ஆன்-நிற்ற
ற்குரியவிடத்து வாள்கொண்டுவெட்டினான் - எனச்சொல்லுருபாய்
வரும்.——உடன்-என்பது-ஒடு-ஓடு - நிற்றற்குரியவிடத்து மகனு
டன்றந்தைவந்தான்-எனச்சொல்லுருபாய்வரும்.

௱௪௫. அம்மூன்றாம்வேற்றுமையுருபுகள்-தம்மையேற்றபெயர்ப்
பொருளையெவ்வாறுவேற்றுமைசெய்யும்—

கருவியாகவும்-வினைமுதலாகவும்-உடனிகழ்ச்சிப்பொருளா
கவும்-வேற்றுமைசெய்யும். எனவேயக்கருவிமுதன்மூன்று மவ்வுரு
புகளின்பொருளாமென்பதாயிற்று. கருவி-காரணம்-ஏது-என்பன
வொருபொருட்சொற்கள்.——உம்.மண்ணினாற்குடத்தைவனைந்தா
ன்-ஊசியொடுகுயின்றதூசும்பட்டும்-என்பனகாரணம்.——குலா
லனாற்குடம்வனையப்பட்டது - கொடியொடுதுவக்குண்டான் - என்
பனவினைமுதல்.——தூங்குகையாலோங்குநடைய - மந்திரியொடு
மன்னவன்வந்தான்-என்பனவுடனிகழ்ச்சிப்பொருள். ஆனுருபுமோ
டுருபுமிவ்வாறேயொட்டுக.

௱௪௬. அந்நான்குருபுகளுள் எவ்வெவ்வுருபுகட்கு - அம்மூன்று
பொருள்களுள் எவ்வெப்பொருள்சிறந்தன—

ஆல்-ஆன்-என்னுமிரண்டுருபுகட்குங்காரணமும்வினைமுத
லுஞ்சிறந்தனவாம். ஒடு-ஓடு-என்னுமிரண்டுருபுகட்குமுடனிகழ்ச்சி
ப்பொருள் சிறந்தனவாம். ஆகவே ஊசியொடுகுயின்றதூசும்பட்டு
ம்- கொடியொடுதுவக்குண்டான் - என்பவற்றை ஊசியாற்குயின்ற
தூசும்பட்டும்-கொடியாற்றுவக்குண்டான்-எனவும் - தூங்குகையா
லோங்குநடைய என்பதைத் தூங்குகையோடோங்குநடைய வென
வுந்திரித்துக்கொள்க.

௱௪௭. காரணமுதலியமூன்றும்யாவை—

காரணமாவதுவினைமுதற்றொழிற்பயனைச்செயப்படுபொருளிற்சேர்ப்பது- மண்ணாற்குடத்தைவனைந்தான் - கோலாற்குடத்தைவனைந்தான்-என்புழிக்குடந்தோன்றுதலாகிய வினைமுதற்றொழிற்பயனைக்குடமாகியசெயப்படுபொருளிலே சேர்க்கையான் மண்ணுங்கோலுங்காரணமாதலறிக.

வினைமுதன்மேலெழுவாயின்பொருள்கூறியவிடத்திற்கூறினும்.

உடனிகழ்ச்சிப்பொருளாவது-முடிக்கவருஞ்சிறப்புப்பொருளின்றொழிலைத் தன்னிடத்து முடனிகழ்வதாகவுடையவுருபேற்றபெயர்ப்பொருளாம். மாணாக்கனோடாசிரியன்வந்தான் என்புழி யாசிரியன் முடிக்கவருஞ்சிறப்புப்பொருள் - வருதலச்சிறப்புப்பொருளின்றொழில் - மாணாக்கனுருபேற்றபெயர்ப்பொருள் - இம்மாணாக்கனவ்வருகைத்தொழிலைத்தன்னிடத்துமுடனிகழ்வதாகக்கொள்ளுதல்காண்க.

௱௪௮. ஆல்-ஆன்-என்னுமிரண்டுருபுகட்குஞ்சிறந்தபொருளாகிய காரணமும் வினைமுதலுமெத்தனைவகைப்படும்—

காரணம்-முதற்காரணமும்- துணைக்காரணமும்- என விருவகைப்படும். அவற்றுள்—— முதற்காரணமாவது காரியத்தோடொற்றுமையுடையது. மண்ணாற்குடத்தைவனைந்தான்- அறிவாலறிந்தான்- என்புழிமண்ணுமறிவுமுதற்காரணம்.—— துணைக்காரணமாவது முதற்காரணத்துக்குத் துணையாய் அது காரியப்படுமளவுமுடனிகழ்வது. கோலாற்குடத்தைவனைந்தான்- புகையானெருப்புண்டெனவறிந்தான்- என்புழிக்கோலும்புகையுந் துணைக்காரணம்.

வினைமுதல்-இயற்றும் வினைமுதலும்-ஏவும் வினைமுதலும்-என விருவகைப்படும். அவற்றுள்.—— இயற்றும்வினைமுதலாவது காரணங்களைத்தொழிற்படுத்துவது. தச்சனாற்கோவில்கட்டப்பட்டது-என்புழித்தச்சனியற்றும்வினைமுதல்.——ஏவும்வினைமுதலாவது அவ்வியற்றும்வினைமுதலையேவுந்தொழிலுடையது.அரசனாற்கோவில்கட்டுவிக்கப்பட்டது - என்புழியரசனேவும்வினைமுதல். தச்சனாகியகோயில்-எனவரினிமித்தகருத்தாவென்பாருமுளர்.

௱௪௯. அம்மூன்றும்வேற்றுமையுருபுகள்- தம்மையேற்றபெயர்ப்பொருளைக்காரணமுதலியமூன்றாகவன்றி வேறுபொருளாக வேற்றுமைசெய்தலில்லையோ—

சிறுபான்மை-ஆல் - ஆன் - என்னுமிரண்டுருபுகளூ முதற் பொருண்மேலேற்றிக்கூறும் விகாரத்தையுடைய சினைப்பொருளாக வும் வேற்றுமைசெய்யும். ——உம். கண்ணாற்குருடன்-காலான் முடவன்-எனவரும். அன்றியுமோரோவிடத்து ஊராரனோர்தேவகுலம். எனவருவழி-ஊர்தோறுமொருதேவகுலமென்றுகொள்ளப்படுதலின்-ஆல்-ஆன்-உருபுகள்தொறுவென்னும்பொருளையுந்தரும்.

சிறுபான்மை-ஒடு-ஓடு-என்னுமிரண்டுருபுகளும் வேறுவினையுட னிகழ்ச்சிப்பொருளாகவும் - வினையில்பொருளாகவும்-ஒற்றுமைப்பொருளாகவும் - கலப்புறுபொருளாகவும் - வேற்றுமைசெய்யும். ——உம். தொடியொடுதொல்கவின்வாடியதோள்-வேறுவினையுடனிகழ்ச்சிப்பொருள். தொடிக்குவாடுதலின்றிக் கழலுதலாகிய வேறுவினையுடனிகழ்தல்காண்க. ——மலையொடுபொருதமாலியானை - வினையில்பொருள்-பொருதல் யானைக்கல்லதுமலைக்கில்லாமைகாண்க. ——எழுத்தொடுபுணர்ந்தசொல்-ஒற்றுமைப்பொருள் - எழுத்துச் சொல்லோடொற்றுமையாதல்காண்க.——பாலொடுதேன்கலந்தற்று-கலப்புறுபொருள்-பாலிற்றேன்கலத்தல்காண்க.

௱௫௰. கருவிமுதலாகிய மூன்றும்வேற்றுமையுருபின் பொருள்கள்-மற்றைவேற்றுமையுருபுகளோடுவருதலின்றே—

அவற்றுள்-கருவிப்பொருளானது சிறுபான்மை-எழுவாயுருபோடும்-நான்கனுருபோடும்-ஐந்தனுருபோடும் - ஆறனுருபோடும்வரும்.——உம். கண்ணனதுகாணும்-எழுவாய் : கண்ணிற்குக்காணலாம்-சு-கு : கண்ணினிற்காணலாம்-ரு-இன் : கண்ணதுகாட்சி-சு-அது-எனவரும்.

௱௫௧. நான்காம்வேற்றுமையுருபியாது—

கு-ஒன்றுமேயாம். அன்றியுமோரோவிடத்துப்பொருட்டு என்பது கூலிக்குவேலைசெய்தான்-எனவருமிடத்துக்கூலியின்பொருட்டு வேலைசெய்தான்-எனச்சொல்லுருபாய்வரும்.

௱௫௨. அக்குவ்வுருபு-தன்னையேற்ற பெயர்ப்பொருளை யெவ்வாறுவேற்றுமைசெய்யும்—

கோடற்பொருளாகவும்-ஆதிகாரணகாரியமாகவும்-நிமித்த காரணகாரியமாகவும்-பிறிதொருபொருளைத்தனக்கு- தகுதி- நட்பு-

பகை-நன்மை-தீமை-உபகாரம் - என்பனமுதலியவற்றுளொன்று டையதாகப் பெறும்பொருளாகவும்-வேற்றுமைசெய்யும். எனவே கோடற்பொருண்முதலியன அவ்வுருபின்பொருளாமேன்பதாயிற்று. ஆயினுமிவற்றுட் குவ்வுருபிற்குக் கோடற்பொருளே சிறந்ததெனக் கொள்க —— உம். இரப்பார்க்குப்பொன்னைக்கொடுத்தான் - கோடற்பொருள். —— கடிசூத்திரத்திற்குப்பொன் - ஆதிகாரணகாரியம். —— கூழிற்குக் குற்றேவல்செய்தான். —— நிமித்தகாரணகாரியம். —— அருமறையந்தணர்க்குரித்து - தகுதி. —— அவனுக்குத்தோழனிவன்-நட்பு.——அவனுக்குப்பகைவனிவன்-பகை.——அவனுக்கு நல்லதிது-நன்மை.—— அவனுக்குத்தீயதிது-தீமை. —— மயிருக்கெண்ணெய்-உபகாரம்.—— எனவரும். பிறவுமன்ன.

௱௫௫. கோடற்பொருளென்பதியாது—

பிறனொருவராலேகொடுக்கப்பட்டதொன்றையேற்றுக்கொள்வதாம். இரப்பவர்க்குப்பொன்னைக்கொடுத்தான்என்புழிப்பிறனொருவராலேகொடுக்கப்பட்டது-பொன். அதனையேற்றுக்கொள்ளுதலாலிரப்பவர் கோடற்பொருளாதலறிக. அன்றியும்-கொடைச்சொல்லானது-மாணாக்கனுக்கு நூற்பொருளுரைத்தான்-எனப்பிறவாய்பாட்டாற்கூறப்படுதலும். கொடைப்பொருளானது-மாணாக்கனுக்கறிவுகொடுத்தான்-எனக்கொடுப்பான்பொருளாய்க்கொள்வான்கட்செல்லாதாண்டுத்தோன்றுதலும் பிறவுமுளவெனக்கொள்க.

௱௫௬. அக்கோடற்பொருளினேற்றலெத்தனைவகைப்படும்—

ஆவிற்குநீர்விட்டான்-எனவருங்கேளாதேற்றலும்.——வறியார்க்கீந்தான்-எனவருங் கேட்டேயேற்றலும். மாணாக்கனுக்கறிவுகொடுத்தான்-எனவருமேலாதேற்றலும்.—— தனக்குச்சோறிட்டான்-எனவருமீவோனேற்றலும். —— அரனுக்குக்கண்ணலர்கொடுத்தானரி-எனவருமுயர்ந்தோனேற்றலும்.—— அரிக்குச்சக்கரங்கொடுத்தானரன்-எனவருமிழிந்தோனேற்றலும்.—— சோழற்குவிருந்திட்டான்சேரன்-எனவருமொப்போனேற்றலும். —— சோற்றிற்குநெய்விட்டான்-எனவருமறிவின்றியேற்றலும். —— கள்ளனுக்குக்கசையடிகொடுத்தான்-எனவரும்வெறுப்பாயேற்றலும்.—— தலைவனுக்கின்பங்கொடுத்தாள் - எனவரும் விருப்பாயேற்றலுமுதலாகிய பலவகைப்படும்.

௱௫௫. அக்கோடற்பொருள்-குவ்வுருபோடன்றி மற்றைவேற்றுமையுருபுகளோடுவருதலின்றே—

சிறுபான்மை-எட்டாநீவேற்றுமையொழிந்தவெல்லாவுருபுகளோடும்வரும்.——உம். இரப்பவரொன்பெறினுங்கொள்வர்-எழுவாய்: செய்யவடவ்வையைக்காட்டிவிடும்-௨-ஐ: நாகர்க்குப்பலி-௩-ஆல்: நாகரினன்புசெய்தான்-௫-இன்: நாகரதுபலி-௬-அது: நாகர்கணன்புசெய்தான்-௭-கண்: எனவரும்.

௱௫௬. ஐந்தாம்வேற்றுமையுருபுகள்யாவை—

இன்-இல்-என்னுமிரண்டுமாம். அன்றியுஞ் சிறுபான்மைநின்றும்-என்பது-மலையின்வீழருவி என்பதுபோலவரு நீக்கப்பொருளின்-மலையினின்றும்வீழருவி என வவ்வுருபின்மேற் சொல்லுருபாய் வரும்.

௱௫௭. அவ்விரண்டுருபுகளுந் தம்மையேற்ற பெயர்ப்பொருளை யெவ்வாறுவேற்றுமைசெய்யும்—

நீக்கப்பொருளாகவும்-எல்லைப்பொருளாகவும்-ஒப்புப்பொருளாகவும்-ஏதுப்பொருளாகவும்-வேற்றுமைசெய்யும். எனவே நீக்கப்பொருண்முதலிய நான்குமவ்வுருபுகளின்பொருளாமென்பதாயிற்று. ஆயினுமிவ்வுருபுகட்குநீக்கப்பொருளேசிறந்ததெனக்கொள்க.——உம். மலையின்வீழருவி - நீக்கப்பொருள்.—— காக்கையிற்கரிதுகளம்பழம்-ஒப்புப்பொருள்.——கோட்டினிற்செய்ததேர்-ஏதுப்பொருள் - எனவரும்.

காக்கையிற்கரிதுகளம்பழம்-நாயிற்கடைப்பட்டநம்மை-என வருவனவற்றையொப்புமைகருதா துயர்வுதாழ்வுகருதியவழி நீக்கப்பொருளாமெனக்கொள்க.

௱௫௮. நீக்கப்பொருளென்பதியாது—

நீக்கத்தையுண்டாக்குந்தொழிலின்றி நீக்கமொன்றையே தன்னிடத்துடையபொருளாம். ஊரினீங்கினான்சாத்தன் - என்புழிச்சாத்தனது செல்லுகை நீக்கத்தையுண்டாக்குந்தொழில்-அதுதன்னிடத்தின்றிப் பிரிவொன்றையே தன்னிடத்துடைமையானூர் நீக்கப்பொருளாதல்காண்க. சாத்தன் பிரிவு மதனையுண்டாக்குந்தொழிலுமாகியவிரண்டுமுடையபொருளாம்.

௱௫௯. இவ்விவந்தாம்வேற்றுமைப்பொருள்கள் - மற்றைவேற்றுமையுருபுகளோடுவருதலின்றோ—

சிறுபான்மை நீக்கப்பொருளானது-மதுரையைநீங்கினன்-என விரண்டனுருபோடுவரும்.

சிறுபான்மையெல்லைப்பொருளானது மதுரைக்குவடக்குச்சிதம்பரம்-என நான்கனுருபோடுவரும்.

௱௬0. ஆறாம்வேற்றுமையுருபுகள்யாவை—

அது-ஆது-அ-என்னுமூன்றுமாம். ஆயினுமிம்மூன்றனுள்-முடிக்குஞ்சொல்லஃறிணையொருமையாயின்-தனதுதலை - தனாதுதலை-என-அது-ஆது-என்னுமிரண்டும். முடிக்குஞ்சொல்லஃறிணைப்பன்மையாயின்-தனகைகள்-என அகரமும்வரும். அன்றியுஞ் சிறுபான்மை உடையவென்பது சொல்லுருபாய்வரும்.

௱௬௧. முடிக்குஞ்சொல் லுயர்திணையொருமையாயும் பன்மையாயும்வரின்-அதுமுதலியமூன்றனு ளோருருபும்வருதலின்றோ—

வருதலில்லை. ஆனால் - உடையவென்னுஞ்சொல்லுருபேனும்-குவ்வுருபேனும்வரும்.——உம். சாத்தனுடையபுதல்வன்- புதல்வர்-எம். சாத்தற்குப்புதல்வன்-புதல்வர்-எம். வரும்.

௱௬௨. அவ்வாறாம்வேற்றுமையுருபுகள்-தம்மையேற்ற பெயர்ப்பொருளையெவ்வாறுவேற்றுமைசெய்யும்—

முடிக்கவருந்தற்கிழமைப்பொருளோடும்-பிறிதின்கிழமைப்பொருளோடும் - சம்பந்தமுடையபொருளாகவேற்றுமைசெய்யும். எனவே சம்பந்தப்பொரு ளவ்வுருபுகளின் பொருளாமென்பதாயிற்று. கிழமை-உரிமை-என்பனவொருபொருட்சொற்கள்.

௱௬௩. தற்கிழமைப்பொருளென்பதியாது—

சாத்தனது கை என்பதுபோலவருந் தன்னோடொற்றுமையுடையபொருளாம்—

௱௬௪. அத்தற்கிழமைப்பொருளெத்தனைவகைப்படும்—

உறுப்பும்-பண்புந்-தொழிலும்-ஒன்றன்கூட்டமும் - பலவின்கூட்டமும் - ஒன்றுதிரிந்தொன்றாயதும்- எனவறுவகைப்படும்.

——உம். சாத்தனதுகை-உறுப்புத்தற்கிழமை. —— காக்கையது கருமை-பண்புத்தற்கிழமை.——அவனதுவருகை-தொழிற்றற்கிழமை.——நெல்லதுகுப்பை-ஒன்றன்கூட்டத்தற்கிழமை.——படையதுதொகுதி-பலவின்கூட்டத்தற்கிழமை.—— மஞ்சளதுபொடி-ஒன்றுதிரிந்தொன்றாயதன்றற்கிழமை. எனவரும்.

௱௬௫. பிறிதின்கிழமைப்பொருளென்பதியாது—

சாத்தனதுபசு என்பதுபோலவருந் தன்னொடொற்றுமையில்லாதபொருளாம்.

௱௬௬. அப்பிறிதின்கிழமைப்பொருளெத்தனைவகைப்படும்—

பொருளும்-இடமும்-காலமும் - எனமூன்றுவகைப்படும். ——உம். சாத்தனதுபசு- முருகனதுவேல் - பொருட்பிறிதின்கிழமை.——சாத்தனதுவீடு-புலியதுகாடு - இடப்பிறிதின்கிழமை. —— வெள்ளியதுவாரம்-மாரனதுவேனில்-காலப்பிறிதின்கிழமை - எனவரும்.

௱௬௭. இச்சம்பந்தப்பொருள் - அதுமுதலியவுருபுகளோடன்றி மற்றைவேற்றுமையுருபுகளோடுவருதலின்றே—

சிறுபான்மை-ஐந்தனுருபோடும்- ஏழனுருபோடும்வரும். ——உம். மரத்தினீங்கினகொம்பு-ரு-இன்: உயிரின்கணுணர்வு- எ-கண்: எனவரும்.

௱௬௮. ஏழாம்வேற்றுமையுருபுகள்யாவை—

கண்-கால்-அகம்-புறம்-உள்-கீழ்-மேல்-முன்-பின்-சார்-அயல்-புடை-திசை-தேம்-தலை-இடை-கடை-வலம்-இடம்-உழை-உழி-வயின்-வாய்-பால்-இல்-என்னுமிருபத்தைந்து மிவைபோல்வனபிறவுமேழாம்வேற்றுமையுருபுகளாம்: இவ்வுருபுகளனைத்தும்வருதற்குதாரணம்.——ஊர்க்கணிருந்தான்-கண்.——ஊர்க்கானிவந்தபொதும்பர்-கால்.——ஊரகத்திருந்தான்- அகம். —— ஊர்ப்புறத்திருந்தான்-புறம்.——இல்லுளிருந்தான்-உள். —— பிண்டிக்கண்ணார்நிழற்கீழெழுந்தமடிகள்-கீழ். —— பகைவர்மேற் சென்றான்-மேல்.——கற்றார்முற்றோன்றாகழிவிரக்கம்-முன். —— காதலிபின்சென்றதம்ம-பின். —— காட்டுச்சாரோடுங்குறுமுயால்-சார். —— தலைவனயற்பணிசெய்கின்றான்-அயல்.—— மதிற்புடைவைகினான்-

புடை. —— ஊர்த்திசைபுற்றான்-திசை. —— காணுங்காலைதலைமகடேத்தே - தேம். —— வலைத்தலைமானன்னநோக்கியர்-தலை. —— நல்லாரிடைப்புக்கு-இடை. —— வேலின்கடைமணிபோற்றிண்ணியான்-கடை.——கைவலத்துள்ளதுகொடுத்தான்-வலம்.——இல்வீடப்பாத்தலை - இடம்.——அவனுழைநின்றான்-உழை.——அவருழிச்சென்றான்-உழி.——அவர்வயிற்சென்றான்-வயின்.—— கடல்வாயமுதது-வாய்.——என்பாலிருந்தான்-பால்.——வீட்டிலிருந்தான்-இல். எனவரும்.

இனிக்கண்கான்முதலியவை யிடவிகற்பங்களை யுணர்த்தும்வழியேழனுருபுகளாகாது-கண்ணகன்ஞாலம்-அகத்திலிருந்தான் -மேலிடத்திருத்தான்-முன்னின்றான்-புறக்கணிருந்தான்-இடைச்சுரம்-தென்றிசை-எனப்பலவகைப்பட்டவிடப்பெயர்களாய்வரும்.

௱௬௬. அக்கண்முதலியவுருபுகள்-தம்மையேற்றபெயர்ப்பொருளையெவ்வாறுவேற்றுமைசெய்யும்—

தம்மையேற்றபொருளிடங்காலஞ் சினைகுணந்தொழிலென்னுமறுவகைப்படும்பெயர்ப்பொருள்களைமேற்கூறியவிருகிழமைப்பொருளுக்குமிடமாகவேற்றுமைசெய்யும். எனவேயவ்விடப்பொருளவ்வுருபின்பொருளா மென்பதாயிற்று. உம்.

| | | |
|---|---|---|
| மணியின்கணொளி -மணியின்கணிருந்தவொளி - தற் | பனையின்கணன்றில்-பனையின்கணிருந்தவன்றில்-பிறி | பொருளிடமாயிற்று. |
| ஊரின்கணில்லம் -ஊரின்கணிருந்தவில்லம் - தற் | ஆகாயத்திற்பருந்து-ஆகாயத்திற்பறந்ததுபருந்து-பிறி | இடமிடமாயிற்று. |
| நாளின்கணாழிகை-நாளின்கணிருந்ததுநாழிகை-தற். | வேனிற்கட்பாதிரி-வேனிற்கட்பூத்ததுபாதிரி. -பிறி. | காலமிடமாயிற்று. |
| கையின்கண்விரல் -கையின்கணிருந்ததுவிரல் -தற். | கையின்கட்கடகம்-கையின்கட்கிடந்ததுகடகம்-பிறி. | சினையிடமாயிற்று. |
| கறுப்பின்கணழகு -கறுப்பின்கணிருந்ததழகு-தற். | இளமையின்கட்செல்வம்-இருந்ததுசெல்வம் -பிறி. | குணமிடமாயிற்று |
| ஆடற்கட்சதி -ஆடற்கணிகழ்ந்ததுசதி -தற். | ஆடற்கட்பாட்டு-ஆடற்கட்பாடப்பட்டதுபாட்டு-பிறி. | தொழிலிடமாயிற்று. |

௱எ௰. அவ்வேழனுருபுகட்கின்னும்வேறுபொருளுண்டோ—

கூட்டிப்பிரிக்குங்கூட்டமும்-பிரித்துக்கூட்டுங்கூட்டமும்-இருவரின்முடியுமொருவினைத்தொழிலுமாகிய விடமல்லாதவிடங்களு மூவ்வுருபுகளின்பொருளாம்.——உம். குறிலைந்தனுள் அ இ உ இம்மூன்றுஞ்சுட்டு. அவருள்வல்லவனிவன்-கூட்டிப்பிரிக்குங்கூட்டம்.——கல்வியில்லாதவனை விலங்குகளுள் வைத்தெண்ணப்படும்-தருமஞ்செய்பவன்றேவருள்வைக்கப்படுவன் - பிரித்துக்கூட்டுங்கூட்டம்.——அவனுமிவனும்போர்செய்தற்கண்மழைபெய்தது - சூதாடற்கட்டுேக்கம்வந்தது-இருவரின்முடியுமொருவினைத்தொழில். என வரும்.

௱எக. இவ்விடப்பொருள் கண்முதலியவுருபுகளோடன்றிமற்றை வேற்றுமையுருபுகளோடுவருதலின்றோ—

சிறுபான்மை-எழுவாயுருபோடும் - இரண்டனுருபோடும்-நான்கனுருபோடும்வரும்.——உம். தூண்போதிகையைத்தொட்டது-எழுவாய்: தூணைச்சார்த்தான்-உ-ஐ: இன்றைக்குவருவான்-௪-கு: எனவரும்.

௱எஉ. எட்டாம்வேற்றுமையுருபுகள்யாவை—

பெயரீறுதிரிதலும் - கெடுதலும்-மிகுதலும் - இயல்பாதலும் -ஈற்றயலெழுத்துத்திரிதலும்-எட்டாம்வேற்றுமையுருபுகளாம்.

௱எ௩. அவ்வுருபுகள்-தம்மையேற்றபெயர்ப்பொருளை யெவ்வாறுவேற்றுமைசெய்யும்—

தம்மையேற்பனவாகியபடர்க்கை யைம்பாற்பெயர்ப்பொருளையுமுன்னிலையாக வழைக்கப்படுபொருளாக வேற்றுமைசெய்யும். எனவே யவ்வழைக்கப்படுபொருளே யவ்வுருபுகளின்பொருளாமென்பதாயிற்று.

௱எ௪. படர்க்கையிடத்தனவாகிய-உயர்திணைப்பெயர்- அஃறிணைப்பெயர்-பொதுப்பெயர்-என்னு மூவகைப்பெயர்களுக்கும் பொதுவாகவரும் விளியுருபுகள்யாவை—

ஈறியல்பாதலும்-ஏகாரமிகுதலும்-இகரவீறீகாரமாதலும்-ஐகாரவீற்றுப்பெயர் ஆயெனத்திரிதலும்-லகரவீற்றுப்பெயரினீற்றயலெழுத்து நீளலும் பொதுவாய்வருமுருபுகளாம். உம்.

| | |
|---|---|
| முனிகூறாய் -வேந்துகூறாய்-கோக்கூறாய். | } உயர்திணைப்பெ |
| கோன்கூறாய்-வேள்கூறாய் -தோன்றல்கூறாய். | } யரீறியலாயின. |

முனியே-வேந்தே-கோவே -கூறாய். } உயர்திணைப்பெயரீற்றி
கோனே-வேளே -தோன்றலே-கூறாய். } லேகாரமிக்கது.

கிளிவாராய் -புறாவாராய் -குருகுவாராய். } அஃறிணைப்பெயரீ
மான்வாராய்-குயில்வாராய்-நெஞ்சம்வாராய். } றியல்பாயின.

கிளியே-புறாவே-குருகே-வாராய். } அஃறிணைப்பெயரீற்றிலே
மானே-குயிலே-நெஞ்சமே-வாராய். } காரமிக்கது.

சாத்திகூறாய்-அன்னைகூறாய்-தந்தைகூறாய். } பொதுப்பெயரீறி
தாய்கூறாய் -ஆண்கூறாய் -சாத்தன்கூறாய். } யல்பாயின.

சாத்தியே-அன்னையே-தந்தையே-கூறாய். } பொதுப்பெயரீற்றி
தாயே -ஆணே -சாத்தனே -கூறாய். } லேகாரமிக்கது.

நம்பீ-மந்தீ-சாத்தீ. முப்பெயரினீற்றிகரமீகாரமாயிற்று.

நங்காய்-நாராய்-தந்தாய். முப்பெயரினைகாரமாயாயிற்று.

தோன்றால்-முயால்-தூங்கால். { லகாரவீற்றுமுப்பெயரினீற்றயல கரமாகாரமாயிற்று.

அன்றியும்-அன்னை-அன்னா-என்பொதுப்பெயரினீற் றைகாரமாகாரமாதலும். மால்-மாஅல் - என லகரமெய்யீற்றுயர்திணைப் பெயரளபெடுத்தலுமுளவெனக்கொள்க.

௱௭௫. னகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்கட்குப்பொதுவிதியான் வந்தவையன்றியுமின்னும் வரும்விளியுருபுகளுமுண்டோ—

னகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்களுள் - அம்பர்கிழான் - அம்பர்கிழாஅன். சேரமான்-சேரமாஅன்-எனச்சிலவற்றிற் களபெடுத்தலும் ——நண்பன்-நண்ப. புலவன்-புலவ-எனச்சிலவற்றிற்கு ஈறுகெடுதலும்.——பெருமன்-பெருமான்-எனச்சிலவற்றிற்கு ஈற்றயலெழுத்துநீளலும்.——இறைவன்-இறைவா. மன்னன்-மன்னா-எனச்சிலவற்றிற்கு ஈற்றயலெழுத்துநீண்டீறுகெடுதலும்.——ஐயன்-ஐயாவோ. அப்பன்-அப்பாவோ-எனச்சிலவற்றிற்கு ஈற்றயனீண் டீறுகெட்டோகாரமிகுதலும்.——திரையன்-திரையவோ. ஐயன் - ஐயவோ-எனச்சிலவற்றிற்கு ஈறுகெட்டோகாரமிகுதலும்.——வாயிலான்-வாயிலாய். வேனிலான்-வேனிலாய்-எனச்சிலவற்றிற்கு இறுதி

னகரமெய்யகரமெய்யாதலும்.——வாயிலோயே- வேணிலோயே-எனச்சிலவற்றிற்கு ஈற்றுனகரம்யகரமாக அயலிலாகாரமோகாரமாக ஏகாரமிகுதலும்.—— ஐயன்-ஐயே. முருகன்-முருகே- எனச்சிலவற்றிற்கு ஈறுகெட்டயலிலகரமேகாரமாய்த்திரிதலும்-விளியுருபாகும்.

௱௭௬. ளகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்கட்குப் பொதுவிதியான் வந்தவையன்றி யுமின்னும்வரும் விளியுருபுகளுண்டோ—

ளகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்களுள்-வேள்-வேஎள்-எனச்சிலவற்றிற்கு அளபெடுத்தலும்.——மக்கள் - மக்காள்-எனச்சிலவற்றிற்குஈற்றயலெழுத்துநீளலும்.——குழையாள்-குழையாய்-எனச்சிலவற்றிற்கு ளகரமெய் யகரமெய்யாதலும்.—— அடிகள்-அடிகேள்-எனச்சிலவற்றிற்கு ஈற்றயலகரமேகாரமாதலும் - விளியுருபாகும்.

௱௭௭. ரகரமெய்யீற் றுயர்திணைப்பெயர்களுக்குப் பொதுவிதியான்வந்தவையன்றி யின்னும் வரும்விளியுருபுகளுண்டோ—

ரகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்களுள்-சிறார்-சிறாஅர்-எனச்சிலவற்றிற்கு அளபெடுத்தலும்.——தெவ்வர்-தெவ்விர்- எனச்சிலவற்றிற்கு ஈற்றயலகர மிகரமாதலும்.——நாய்கர்-நாய்கீர்- எனச்சிலவற்றிற்கு ஈற்றயலகர மீகாரமாதலும். ——பார்ப்பார்- பார்ப்பீர்-எனச்சிலவற்றிற்கு ஈற்றயலாகாரமீகாரமாதலும் ——சான்றார்-சான்றீரோ-எனச்சிலவற்றிற்கு ஈற்றயலாகார மீகாரமா யேகாரமிகுதலும். ——நம்பியார்-நம்பீரோ-எனச்சிலவற்றிற்கு ஈற்றயல் யாக்கெட்டதனயலிகரமீகாரமாயீற்றிலேகாரமிகுதலும்.——பெண்டிர்-பெண்டிரோ-எனச்சிலவற்றிற்கு இர்ரீற்றிலோகாரமிகுதலும்விளியுருபாகும்.

கடலார்-கழியார்-எனவஃறிணைப்பெயர்களையும் - சாத்தியார்-கொற்றியார்-எனப்பொதுப்பெயர்களையு முயர்திணைப்பெயர்போலச்சிறப்பித்துக்கூறுமிடத்து அவையும்-கடலாரோ-கடலீரோ-எனவும். சாத்தியாரோ-சாத்தியீரோ-சாத்தீரோ-எனவும். இவ்வாறுவிளியுருபேற்குமெனக்கொள்க.

௱௭௮. யகரமெய்யீற் றுயர்திணைப்பெயர்க்குப் பொதுவிதியான் வந்தவையன்றி யின்னுமெவ்வுருபுவரும்—

யவ்வீற் றுயர்திணைப்பெயர்க்கு-சேய்-சேஎய்-எனவளபெடுத்தலும்விளியுருபாம்.

௱௭௯. னகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும் பொதுவிதியான் வந்தவையன்றி யின்னும் வரும்விளியுருபுகளுண்டோ—

இவ்விருவகை னகரமெய்யீற்றுப்பெயர்கட்கும் - அலவுன் - அலவ கழுழன் - கழுழ - எம். சாத்தன் - சாத்த. கொற்றன் - கொற்ற - எம். ஈறுகெடுதலும்.——அலவா - கழுழா - எம். சாத்தா - கொற்றா - எம், ஈறுகெட்டயனீளலும் விளியுருபாகும்.

௱௮௰. இவ்விளியுருபுகளுள் - எவ்வெவ்விளியுருபுக ளெவ்வெவ்விடத்தில்வரும் —

அண்மைவிளியில் - இயல்பும் - ஈறழிவும்வரும். சேய்மைவிளியில் - அளபெடுத்தல்வரும். புலம்பல்விளியில் - ஓதாரமிகுதல்வரும். ஒழிந்த விளியுருபுகளனைத்து மெல்லாவிடத்தும்வரும். அண்மை - சமீபம் - சேய்மை - தூரம்.

௱௮௧. இவ்விளியுருபுகளையேலாதுதிற்கும்பெயர்களுமுளவோ——

தமன் - தமள் - தமர் - முதலியகிளைப்பெய்யர்களும் - அவன் - அவள் - அவர் - அது - அவைமுதலியசுட்டுப்பெயர்களும் - எவன் - எவள் - எவர் - எது - எவை - முதலியவினாப்பெயர்களும். மற்றையான் - மற்றையது - பிறன் - பிறிது - எனமற்றுப்பிறவென்பவற்றைப்பற்றிவருமைம்பாற்பெயர்களும் - தான் - தாம் - என்பனவும் விளியுருபேலாதனவாம்.

௱௮௨. இவ்வெட்டுவேற்றுமையுருபுகளுள்ளுமெவ்வெவ்வுருபுகட்குப்பெயர்வினைகளுள்எவ்வெவ்வெச்சொல் - முடிக்குஞ்சொல்லாம்——

வினைமுதல் - செயப்படுபொருள் - கருவிப்பொருள் - கோடற்பொருள் - நீக்கப்பொருள் - சம்பந்தப்பொருள் - இடப்பொருள் - விளிப்பொருள் - என்னுமெட்டனுள் - சம்பந்தப்பொருளொழிந்த வேழிலும் வருமுருபுகளுக்குப் பெரும்பாலும் வினைமுடிக்குஞ் சொல்லாம் சம்பந்தப்பொருளில் வருமாறனுருபுகளுக்கும் - எல்லைப்பொருளில்வரு மைந்தாம்வேற்றுமையுருபுகளுக்கும் பெயர்முடிக்குஞ்சொல்லாம். ஒழிந்தவற்றிற்கு எற்குமாறுபெயரேனும் வினையேனு முடிக்குஞ்சொல்லாய்வரும்.

௱௮௫. ஒருவேற்றுமையுருபு மற்றொருவேற்றுமைப்பொருளோடுமாறுபட நிற்றலுண்டோ——

உண்டு - ஆயினு மாறுபட நிற்குமுருபைப்பொருளுக்கேற்பத்திரித்துக்கொள்க.——உம். கிழங்குமணற்கீன்றமுளை - மண்ணுளீன்ற - எம். தாகுவேயொடுநக்குவீங்குதோள் - வேயைநக்கு - எம். வரும்.

எட்டுவேற்றுமைக்கும்-உரியவுருபுகளையும்-சிறந்தபொருள்களையும்-உதாரணங்களையும்-தொகுத்துக்கூறுக —

எழுவாய்வேற்றுமைக்கு-உருபு-திரிபில்லாதபெயராம். பொருள்-வினைமுதலாம்-இதனைவடநூலார் கர்த்தாவென்பர். உம். சாத்தன்வந்தான்-எனவரும்.

இரண்டாம்வேற்றுமைக்கு-உருபு-ஐ என்பதாம். பொருள்-செயப்படுபொருளாம்-இதனைவடநூலார் கர்மமென்பர். உம். மரத்தைவெட்டினான்-எனவரும்.

மூன்றாம்வேற்றுமைக்கு-உருபுகள்-ஆல்-ஆன்-ஒடு-ஓடு -என்பனவாம். ஆலானுக்குப்பொருள்-கருவியுங் கர்த்தாவுமாம்- கருவியைவடநூலார் கரணமென்பர். உம். வாளால்வெட்டினான் - சாத்தனால்வெட்டப்பட்டது-எனவரும்.——ஒடுவோடுவுக்குப்பொருள்-உடனிகழ்ச்சிப்பொருளாம். உம். மாணக்கனோடாசிரியன்வந்தான்-எனவரும்.

நான்காம்வேற்றுமைக்கு-உருபு-குவ்வென்பதாம். பொருள்-கோடற்பொருளாம்-இதனைவடநூலார் சம்பிரதானமென்பர். உம். சாத்தற்குக்கொடுத்தான்-எனவரும்.

ஐந்தாம்வேற்றுமைக்கு-உருபுகள்-இன்-இல் - என்பனவாம். பொருள்கள்-நீக்கப்பொருளு மெல்லைப்பொருளுமாம். வடநூலார் நீக்கப்பொருளை அபாதானமென்றும் - எல்லைப்பொருளை அவதியென்றுங்கூறுவர். உம். ஊரினீங்கினான்-எம். மதுரையின்வடக்குச்சிதம்பரம்-எம். வரும்.

ஆறாம்வேற்றுமைக்கு-உருபுகள்-அது-ஆது-அ - என்பனவாம். பொருள்-சம்பந்தப்பொருளாம். இதுகுறைப்பொருளெனவும்படும். இக்குறைப்பொருளை வடநூலார் சேஷார்த்தமென்பர். உம். தனது கை-தனாது கை-தனகைகள்-எனவரும்.

ஏழாம்வேற்றுமைக்கு-உருபுகள்-கண்முதலியனவாம். பொருள்-இடப்பொருளாம். இதனைவடநூலார் அதிகாணமென்பர். உம். ஊர்க்கணிருந்தான்-எனவரும்.

எட்டாம்வேற்றுமைக்கு-உருபுகள் - பெயரீறுதிரிவுமுதலியனவாம். பொருள்-விளிப்பொருளாம். இதனைவடநூலார்சம்போதனமென்பர். உம். அன்னாய்-நம்பீ-எனவரும்.

வேற்றுமையியன்முற்றிற்று.

# ஒழிபியல்.

௱௮௪. ஒழிபியலென்பதெத்தன்மைத்து—

மேலை யிரண்டியல்களுள்ளு மடங்காதொழிந்தவைகளினி லக்கணமுணர்த்துந்தன்மைத்தாம்.

௱௮௫. அவ்வொழிபிலக்கணம்யாவை—

தொடர்மொழிப்பாகுபாடும் - திணைமுதலியவற்றைப்பற்றி வருவனவாகிய வழாநிலைவழுவமைதிகளும்-எச்சமுடிபுமாம்.

௱௮௬. தொடர்மொழியென்பதெத்தனைவகைப்படும்—

முற்றுத்தொடர்மொழியும்-எச்சத்தொடர்மொழியு மென விருவகைப்படும் அவ்விரண்டுந்தொகைநிலையாகவேனுந் தொகா நிலையாகவேனும்வரும்.

௱௮௭. முற்றுத்தொடர்மொழிகளென்பனயாவை—

எழுவாயும் பயனிலையுஞ்-செயப்படுபொருண்முதலியவைக ளோடு கூடாதேனுங் கூடியேனு முடிவுபெற்று நிற்பனவாம். வட நூலாரிம்முற்றுத்தொடரை வாக்கியமென்பர். உம். சாத்தன்வந் தான்-சாத்தன்சோற்றைக் கையாலள்ளியுண்டான்-எனவரும்.

௱௮௮. அம்முற்றுத்தொடருட் பயனிலையாகவரும் வினைமுற்று எத்தனைவகையான் முடிக்கப்படும்—

ஐந்துவகையான்முடிக்கப்படும்-அவைமுறையேகூறுதும்.

முதலாவது.—செயப்படுபொருளுடைவினைமுதலின் முடிப் பு-அதாவது செயப்படுபொருள் குன்றாத வினையை வினைமுதலைக் காட்டும் விகுதியான்முடித்தலாம். இதனை வடநூலார்-சகர்மககர்த் தரிபிரயோகமென்பர். உம். அரசனுண்டான்-எனவரும்.

இரண்டாவது.—செயப்படுபொருளிலாவினைமுதலின் முடிப் பு-அதாவது செயப்படுபொருள்குன்றியவினையை வினைமுதலைக்கா ட்டும் விகுதியான்முடித்தலாம்-இதனை வடநூலார்-அகர்மககர்த்தரி பிரயோகமென்பர். உம். அரசன்வந்தான்-எனவரும்.

மூன்றாவது.—செயப்படுபொருளிரண்டுடைவினைமுதலின் முடிப்பு. அதாவது-இரண்டுசெயப்படுபொருளுடையவினையை வினைமுதலைக்காட்டும் விகுதியான்முடித்தலாம். இதனை வடநூலார்-துவிகர்மககர்த்தரிபிரயோகமென்பர். உம். அரசன்பகைவரைச்சிறைச்சாலையையடைவித்தான்-எனவரும்.

நான்காவது.—செயப்படுபொருளின் முடிப்பு - அதாவது செயப்படுபொருள்குன்றாத வினையை யச்செயப்படுபொருளைக்காட்டும் விகுதியான் முடித்தலாம்-இதனைவடநூலார்-கர்மணிபிரயோகமென்பர். உம். அரசனாற்பகைவர்கொல்லப்பட்டார் - எனவரும்.

ஐந்தாவது.—செயப்படுபொருளிரண்டுடைச்செயப்படுபொருளின்முடிப்பு-அதாவது-இரண்டுசெயப்படுபொருளுடையவினையை அவற்றுளொன்றைக்காட்டும் விகுதியான்முடித்தலாம். இதனை வடநூலார்-துவிகர்மககர்மணிபிரயோகமென்பர் உம். அரசனாற்பகைவர் சிறைச்சாலையை யடைவிக்கப்பட்டார்-எனவரும்.

௱௫௯. எச்சத்தொடர்மொழிகளென்பனயாவை—

நிறைவுபெறு தம்முற்றுத்தொடருக்குறுப்பாக வருவனவாம். உம். யானைக்கோடு-யானையதுகோடு-எனவரும்.

௱௬௰. தொகைநிலைத்தொடர்மொழிகளென்பனயாவை—

வேற்றுமையுருபுமுதலியன நடுவே தொக்குநிற்ப விரண்டுமுதலியபலசொற்கள்-தொடர்ந்துவருவனவாம்.

௱௬௧. அத்தொகைநிலைத்தொடரெத்தனைவகைப்படும்—

வேற்றுமைத்தொகையும்-வினைத்தொகையும்-பண்புத்தொகையும்-உவமத்தொகையும் - உம்மைத்தொகையும் - அன்மொழித்தொகையும்-எனவறுவகைப்படும்.

௱௬௨. வேற்றுமைத்தொகைகளென்பனயாவை—

ஐமுதலியவாறுருபுகளுமிடையிலேதொக்கதொடர்மொழிகளாம்.—உம். நிலங்கடந்தான்-ஐ. கல்லெறிந்தான்-ஆல். கூலிவேலைசெய்தான்-கு. ஊர்நீங்கினான் - இன். சாத்தன்கை - அது. குன்றக்கூகை-கண்-எனவரும்.—அன்றியுங் கையையுடைய களிறு-கைக்களிறு-பொன்னாற்செய்யப்பட்டகுடம்-பொற்குடம். எனவுருபுமுடிக்குஞ்சொல்லுந் தொக்கு வருவனவுமது.

௱௬௩. வினைத்தொகைகளென்பனயாவை—

தமக்குரிய விகுதியுங்காலங்காட்டுமிடை நிலையும்-தொக்குவரு ம்பெயரெச்சத்தொடர்கள் வினைத்தொகைகளாம்.——உம். கொல் யானை-அடுவேல்-ஆடிடம்-திரிதொழில்-புணர்பொழுது-உண்சோ று-எனவரும். இவைவிரியுமிடத்து-கொன்றயானை - எனவிரியினிறந் தகாலவினைத்தொகையும் - கொல்கின்றயானை - எனவிரியினிகழ்கால வினைத்தொகையும்- கொல்லும்யானை - எனவிரியினெதிர்காலவினைத் தொகையுமாம்.

௱௬௪. பண்புத்தொகைகளென்பனயாவை——

வண்ணம்-வடிவு-அளவு-சுவை-முதலியவைகளை யுணர்த்து ம் பண்புப்பெயரோடு பண்பிப்பெயர் அவ்விரண்டுமொன்றுமையை விளக்கவரும் ஆகிய என்னுமுருபு இடையிலேதொக்குநிற்பத்தொட ர்வனபண்புத்தொகைகளாம்.——உம். செந்தாமரை-கருங்குவளை- வண்ணம் வட்டக்கல்-சதுரப்பலகை-வடிவு. ஒருபொருள்-நெடுங் கோல்-அளவு தீங்கனி-துவர்க்காய்-சுவை-எனவரும்.——முதலிய வென்றமையான்மெல்லிலை-நல்லாடை-வெந்நீர்-தண்ணீர்-எனவரு வனவெல்லாங்கொள்க.—— இவைவிரியுமிடத்துச் செம்மையாகிய தாமரை-துவர்ப்பாகியகாய். எனவிரியும்.

௱௬௫. இருபெயரொட்டுப்பண்புத்தொகைகளென்பனயாவை--

அவ்வாகியவென்னு முருபு தொக்குநிற்ப வொருபொருட் கேபொதுவுஞ் சிறப்புமாகவிருபெயர்வருவனவாம்.——உம். ஆய ன்சாத்தன்-சாரைப்பாம்பு-மாமரம்- எனவரும். இவை விரியுமிடத் து-ஆயனாகியசாத்தன்-சாரையாகியபாம்பு-எனவிரியும்.

௱௬௬. உவமத்தொகைகளென்பனயாவை—

போலமுதலியவுவமையுருபுதொக்கதொடர்கள்உவமத்தொ கைகளாம்.——உம். மதிமுகம்-பவளவாய்-பொற்சுணங்கு- எனவ ரும். இவைவிரியுமிடத்து-மதிபோலு முகம்-பவளம்போலும் வாய் பொன்போலுஞ்சுணங்கு-எனவிரியும் ——செயப்படுபொருள்-கு றித்தவிடத்து மதியைப்போலுமுகமெனவையுருபுமுடன்விரியும்.

௱௬௭. உம்மைத்தொகைகளென்பனயாவை—

எண்ணல்-எடுத்தல்-முகத்தல்-நீட்டல் - என்னு நால்வகை

யளவுகளாற் பொருள்களையளக்குங்கால்-தொடரு மவ்வளவுப்பெயருள் உம்மைதொக்கு நிற்பனவாம்——உம். கபிலபரணர்-புலிவிற்கெண்டை- இருபத்தைந்தேகால்-எண்ணகல். கழஞ்சேகால்-தொடியேகஃசு-எடுத்தல். நாழியாழாக்கு-கலனேதூணி-முகத்தல். சாணரை-நீட்டல். இவைவிரியுமிடத்து-கபிலனும் பரணனும்-புலியும் வில்லுங் கெண்டையும்-இருபதுமைந் துங்காலும்-எனவிரியும்.

௱௬௮. உயர்திணை-யஃறிணை - பொதுத்திணையென்னு மூன்றினு மொருமைப்பெயர் பல தொடர்ந்துவரு மும்மைத்தொகையினீறு எவ்வாறுநிற்கும்.

பெரும்பாலும் பன்மைவிகுதிபெற்று நிற்கும்.——உம். கபிலபரணர்-அரசனரசிகள்-எம். நன்மை தீமைகள்-எம். தந்தைதாய்கள் - எம். வரும். பெரும்பாலு மென்றமையாற் சிறுபான்மை-அரசனரசி-நன்மைதீமை-தந்தைதாய் - எனவியல்பாகவும்வரும்.

௱௬௯. அன்மொழித்தொகைகளென்பனயாவை—

வேற்றுமைத்தொகைமுதலியவைந்துதொகைநிலைத்தொடர்மொழிகளின்புறத்து அவையல்லாதபிறமொழிகள்-தொக்குநிற்பன அன்மொழித்தொகைகளாம்.——உம். பூங்குழல்-எம். தாழ்குழல்-எம். கருங்குழல்-எம். துடியிடை-எம். உயிர்மெய்-எம் வரும். இவைவிரியுமிடத்து பூவையணிந்தகுழலையுடையாள் - தாழ்ந்தகுழலையுடையாள். கருமையாகிய குழலையுடையாள். துடிபோன்றவிடையையுடையாள். உயிருமெய்யுங்கூடிப்பிறந்தவெழுத்து-எனவரும்.

௨௱. தொகைநிலைத் தொடர்மொழிகளை விரித்துப்பொருள்கொள்ளுமிடத்து-அவற்றுள் ஒருபொருளைத்தருவனவன்றிப்பலபொருளைத்தருவனவுமுளவோ—

இரண்டுமுதலேழெல்லையாகிய பொருள்களைத்தருவனவுமுளவாம்.—உம். தெய்வவணக்கமென்பது- தெய்வத்தைவணங்கும் வணக்கம்-தெய்வத்திற்குவணங்கும்வணக்கம்-என விருபொருளைத்தந்தது.——தற்சேர்ந்தார்-என்பது-தன்னைச்சேர்ந்தார் - தன்னொடுசேர்ந்தார்-தன்கட்சேர்ந்தார் - எனமூன்றுபொருளைத்தந்தது.—சொல்லிலக்கணம்-என்பது-சொல்லினதிலக்கணம் - சொற்கிலக்கணம்-சொல்லின்கணிலக்கணம் - சொல்லிலக்கணஞ் சொன்னநூல்-என நான்குபொருளைத்தந்தது.——பொன்மணி யென்பது

பொன்னாலாகியமணி-பொன்னினாகிய மணி-பொன்னின்கண் மணி பொன்னோடுசேர்ந்தமணி-பொன்னுமணியும் - எனவைந்துபொருளைத்தந்தது.——மரவேலி-என்பது-மரத்தைக்காக்கும்வேலி - மரத்திற்குவேலி-மரத்தினதுவேலி-மரத்தின்புறத்துவேலி - மரத்தாலாகியவேலி-மரமாகியவேலி-எனவாறுபொருளைத்தந்தது.—— சொற்பொருள்-என்பது-சொல்லாலறியப்படும்பொருள்-சொல்லினதுபொருள்-சொற்குப்பொருள்-சொல்லின்கட்பொருள் - சொல்லும்பொருளும்-சொல்லாகியபொருள் - சொல்லானதுபொருள் - எனவேழுபொருளைத்தந்தது.——புலிகொல்வீரன்-என்பது-புலியைக்கொல்லும்வீரன்-புலியாற்கொல்லப்பட்டவீரன் - எனப்பன்மொழித்தொகைநிலைத்தொடரிருபொருளைத்தந்தது. பிறவுமன்ன.

உ௱க. தொகாநிலைத்தொடர்மொழிகளென்பனயாவை—

முற்றுவினையும்-பெயரெச்சவினையும்-வினையெச்சவினையும் எழுவாயும்-விளியும்-இடைச்சொல்லும்-உரிச்சொல்லும் - ஆகியவேற்றோடும்பிறசொற்கள் புணரும்புணர்ச்சியும்-ஐ முதலிய வாறுருபுமிடையே விரிந்துநிற்பதங்கள்புணரும்புணர்ச்சியும்-அடுக்குமொழியும் - தொகாநிலைத்தொடர்மொழிகளாம்.——உம். உண்டான் சாத்தன்-குழையன் கொற்றன்-எம். உண்டசாத்தன்-கரியகுதிரை-எம். உண்டுவந்தான்-இன்றிவந்தான்-எம். சாத்தன்வந்தான்-எம். சாத்தாவா - எம். அதுகொல்தோழி-எம். நனிபேதையே நயனில்கூற்றம் - எம். வருமிவ்வேழுமுற்றுவினைத் தொகாநிலைத்தொடர்முதலியன. குடத்தை வனைந்தான் - வாளால்வெட்டினான் - இரப்போர்க்கீந்தான் -மலையினிழிந்தான்-சாத்தனதுகை-குன்றத்தின்கட்கூகை- இவ்வாறும்வேற்றுமைத்தொகாநிலைத்தொடர். பாம்புபாம்பு-இது அடுக்குத்தொகாநிலைத்தொடர். பிறவுமன்ன.

உ௱உ. தொடர்மொழிகளுள் வேற்றுமையுருபும்-முற்றெச்சங்களும்-ஒன்றுபலவடுக்கிவரினும். அல்லது வேற்றுமையுருபுகள்வேறுபலவடுக்கிவரினும். அப்பலவுமெவ்வாறுமுடியும்—

அப்பலவுந் தம்மைமுடித்தற்குரிய வொரு சொல்லைக்கொண்டுமுடியும்.——உம். சாத்தனையுங் கொற்றனையுந் தேவனையும் வாழ்த்தினான்-எம்.- சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தேவனுக்குந்

தந்தை-எம். ஐயுங்குவ்வுமொன்றுபலவடுக்கிமுறையே - வாழ்த்தினான்-தந்தை-எனவொருசொல்லைக்கொண்டுமுடிந்தன. அருளாற்றுடையன்-எனவுருபுதொக்கவழியு மவ்வாறு முடிதல்காண்க.

ஓடினான் பாடினான் சாத்தன்-எம். இளையள் வலியள் வனிதை-எம். வினைமுற்றுங் குறிப்புமுற்றும் ஒன்றுபலவடுக்கிமுறையே சாத்தன்-வனிதை-எனவொருசொல்லைக்கொண்டுமுடிந்தன.

கற்றகேட்டபெரியர்-எம் கற்றுக்கேட்டறிந்தார்-எம். பெயரெச்சவினையும்-வினையெச்சவினையும் - ஒன்று பல வடுக்கி முறையே பெரியர்-அறிந்தார்-எனவொருசொல்லைக்கொண்டுமுடிந்தன.

சாத்தன் மரத்தை வளால்வெட்டினான் - எனவேற்றுமையுருபுகள் வேறுபலவடுக்கிவெட்டினான்-எனவொருசொல்லைக்கொண்டுமுடிந்தன, பிறவுமன்ன.

௨௱௫. ஒருதொடரினுள்-இறுதியினின்றபெயர்க்குமாத்திரமுருபு விரிந்துநின்றுமற்றைப்பெயர்களிலுருபுதொக்குவருதலுண்டோ--

சிறுபான்மையும்மைத்தொகையி லவ்வாறு வருதலுமுண்டு. ——உம். பொருளின்பங்களைப்பெற்றான்- சேர சோழபாண்டியர்க்கு விருந்துசெய்தான்-தந்தைதாயினீங்கினான் - எனவரும்.

௨௱௬. ஒருதொடரினுள்-ஒருபொருளுக்கேபலபெயர்வருதலும் அப்பெயர்தோறும் வேற்றுமையுருபுவருதலுமுளவோ—

ஒருபொருளைப் புகழ்ச்சிமுதலியசெய்து கூறுமிடத்துப்பலபெயர்வருதலும் அப்பெயர்தோறு மோருருபுவருதலுமுளவாம். வரினும் பொருளொன்றேயாதலால் எண்ணும்மை பெறுதலில்லை. ——உம். சங்கரனை யெண்குணனைச் சம்புவை நால்வேதனொருகங்காளனை நெஞ்சேகருதி-எனவரும்.

௨௱௭. வேற்றுமையுருபுகளையும்-முற்றுவினைகளையும்- எச்சவினைகளையும்-முடிக்கவருஞ்சொல்லுக்கு நடுவே பிறசொற்கள் வருதலுண்டோ—

அவ்விடத்திற்கேற்பனவாகியவொருசொல்லும் பலசொற்களும்வருதலுமுண்டு. ———உம். சாத்தன் (வயிறார) வுண்டான். பகைவரை (மாய) வெட்டினான். தேவிர்க்குச் (செல்வம்வேண்டிச்) சிறப்

கெடுத்தான்-எம்.——வந்தா(னவ்வூருக்குப்போன)சாத்தன்-எம்.——கொன்ற (கூர்ங்கோட்டி) யானை-எம்.——வந்து (சாத்தனவ்வூருக்குப்) போயினான்-எம். வரும்.

௩௭௬. வேற்றுமையுருபுகளையும்-முற்றெச்சங்களையும்-முடிக்க வருஞ்சொற்கள்-அவற்றிற்குப்பின்னன்றிமுன்வருதலுமுண்டோ—

ஆறனுருபையும்-பெயரெச்சவினையையும் - முடிக்கவருஞ் சொற்கள்-அவற்றின்முன்வருவனவல்ல-ஒழிந்தனவெல்லாஞ்சிறுபான்மை முன்வருதலுமுண்டு.——உம். வந்தான்சாத்தன் - வெட்டினான்மரத்தை-வெட்டினான்வாளால்-கொடுத்தானந்தணர்க்கு - நீங்கினானூரின்-சென்றான்சாத்தன்கண்-வாசாத்தா-எம்.—— சாத்தன் பொயினான்-போயினான்வந்து-எம். வரும்.

௩௭௭. வேற்றுமைத்தொகைநிலைத்தொடருள்ளும் முடிக்குஞ் சொல் அவ்வாறு முன்வருதலுண்டோ.

ஐயுருபுங் கண்ணுருபுந் தொக்க தொடர்மொழிகளுள்-முடிக்குஞ்சொல்-முன்வருதலுமுண்டு.——உம். கடந்தானிலம் - இருந்தான் மாடத்து-எம். வரும்.

௩௭௮. திணைபாலிடங்கட்குப் பொதுவாகிய பெயர்வினைகளின் பொதுமையை நீக்குவனயாவை—

அவற்றைமுடிக்கவருஞ்சிறப்புப்பெயரும்-சிறப்புவினையுங் குறிப்புமாம்.——உம். சாத்தனொருவன்-சாத்தனொன்று-சாத்தன் வந்தான்-சாத்தன்வந்தது-எனத்திணைப்பெயர்ப்பொதுமையைப்பின்வந்த சிறப்புப்பெயரும் வினையுநீக்கின.——மரமொன்று-மரம் பல-மரம்வளர்ந்தது-மரம்வளர்ந்தன - எனப்பாற்பெயர்ப்பொதுமையினைப்பின்வந்தசிறப்புப்பெயரும்வினையுநீக்கின.——யாமெல்லாம் வருவம்-நீயிரெல்லாம்போமின்-அவரெல்லாம்வருவார்-எல்லாமென்னும்பெயரிடப்பொதுமையினைச்சிறப்புப்பெயரும் வினையும் வந்துநீக்கின.——உண்ட-அவன்-அவள்-அவர்-அது-அவை-யான் யாம்-நீ-நீர்-எம். உண்டு-வந்தான்-வந்தாள்-வந்தார்-வந்தது-வந்தன-வந்தேன்-வந்தேம்-வந்தாய்-வந்தீர்-எம். வினைத்திணைபாலிடப்பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும்வந்துநீக்கின.——ஒருவராலறிவுபெற்றேன்-என்புழி-பாற்பொதுமையைச்சொல்லோடுகூடியகுறிப்பு நீக்கி-ஆண்பாலுக்குரிமையாக்கிற்று.

உ௱கூ. வெவ்வேறுவினைகட்குரிய பலபொருள்களை யொருங்கு தழுவிநிற்கும் பொதுச்சொல்லும். அவற்றிற்குரிய சிறப்புச்சொற்களாக வெண்ணலுற்றபலசொற்களும். எவ்வாறுமுடியும்—

அவைதம்முளொன்றற்குரிய சிறப்புவினை கொள்ளாது தமக்கெல்லாம் பொதுவாகிய வினையைக்கொண்டு முடியும்.—உம். அடிசில்-என்பது உண்பன-தின்பன-நக்குவன-பருகுவன- எல்லாவற்றிற்கும் பொதுவாதலான் அதனை-அயின்றார் மிசைந்தார்-என்க அணியென்பது-கட்டுவன-கவிப்பன-இடுவன-தொடுவன- என்பவற்றிற்கெல்லாம் பொதுச்சொல்லாதலின் அதனை-அணிந்தார்-தாங்கினார்-என்க.—இனி யெண்ணலுற்றவழியும்-சிலநாட்சோறுஞ் சில்நாண்மாவுஞ் சிலநாட்பாலுஞ் சிலநாட்சருகும்-அயின்றார்-மிசைந்தார்-என்க முடியுங்குழையுமோதிரமுநெடுநாணுமணிந்தார்-தாங்கினார்-என்க.

உ௱ய. வினை-சார்பு-இனம்-இடம்-முதலியவைகளைப்பொருந்திக்குறித்தபொருள்விளங்காத பலபொருளொருசொற்களை யெவ்வாறுசொல்லப்படும்—

தம்பொருளிவையென விளக்குதற்குரிய சிறப்புச்சொல்லோடுகூட்டிச்சொல்லப்படும்.—உம். மாவென்பது-மாமரத்திற்கும் வண்டிற்குங் குதிரைக்குந் திருவுக்கும் பொதுவான பலபொருளொருசொல்-இப்பொருள்களுள்-மாப்பூத்தது-காய்த்தது-என்றவழி-மாமென்பதுவினையால்விளங்கிற்று.—மாவீழ்மலர்-என்றவழி-வண்டென்பது சார்பால் விளங்கிற்று.—தேருங் களிறுமாவுங் காலாளும்-என்றவழி - குதிரையென்பது - இனத்தால்விளங்கிற்று.—மாவாழ்மார்பன்-என்றவழி-திருவென்பது - இடத்தால்விளங்கிற்று.—இனிமாவேறினான்-மாவியாதி - என்றவழிக்குறித்தபொருளிதுவெனவிளங்காமையால் விளங்குதற்பொருட்டு-பாய்மாவேறினான்-மாமரமேறினான்-பாய்மாயாது- மாமரம்யாது - எனச்சிறப்போடுகூட்டிக்கூறுக.

உ௱யக. திணை-நிலம்-சாதி-குடி-உடைமை - குணம் - தொழில் கல்வி-என்பனமுதலியவைகளைப்பற்றி வருஞ்சிறப்புப்பெயரு மியற்பெயரு-மொருபொருளைக்குறித்துத்தொடர்ந்துவரின் - அவ்விரண்டனுள்ளெதுபின்வரிற்சிறப்பாம்—

இயற்பெயர்பின் வருதலே சிறப்பாம்.——உம். குன்றவன்கொற்றன்-திணை. —— அரிவாளனழகன் - நிலம். ——பார்ப்பான்பாராயணன்-சாதி.——ஊர்கிழான்ஞாணன்-குடி.——பொன்னன் பொறையன்-உடைமை.——கரியன் கம்பன்-குணம் —— நாடகநம்பி-தொழில் ——ஆசிரியனமிழ்தன்-கல்வி-எனவரும் கொற்றன் குன்றவன்-எனவியற்பெயர்முன்வருதல் சிறப்பன்றுமென்க.

௨௱௰௨. படர்க்கைப்பெயரோடு சுட்டுப்பெயர் சேர்ந்துவரின்-அச்சுட்டுப்பெயராதற்கெவ்விடத்துவரும்——

படர்க்கைப்பெயர் - வினையையேனும் பெயரையேனுங் கொண்டுமுடிந்துநிற்பின் அவைகளுக்குப்பின்வரும் வினைபெயர்களைக்கொள்ளாவழி முன்னும் பின்னுமாகிய விரண்டிடத்தும்வரும். ——உம். நம்பிவந்தான் அவனுக்குச்சோறிடுக. எருதுவந்தது அதற்குப்புல்லிடுக-சாத்தன்றெய்வம் அவற்குப்பலியிடுக. எனப்பெயர்வினைகளைக்கொண்டவழிச் சுட்டுப்பெயர் பின்வந்தன —— அவனம்பி-நம்பியவன் - எனப்பெயர்வினைகளைக்கொள்ளாவழிச்சுட்டுப்பெயரீரிடத்தும்வரும்.

௨௱௰௫. முன்வந்தபடர்க்கைப்பெயர்-பெயர்வினைகளைக்கொண்டுமுடியுமிடத்துப்பின்பதனைக்காட்டுதற்குச் சுட்டுப்பெயரன்றி வேறுபெயர்வருதலின்றே——

சிறுபான்மைசெய்யுளிடத்துச்சுட்டின்றன்மைத்தாய் வேறுபெயர்வருதலுமுண்டு.——உம். வையைக்கிழவன் வயங்குதார்மாண்பகலந்தையலாய் நீயின்று நல்கினை நல்காயேற்கூடலார்கோவோடு நீயும்படுதியே நாடறியக்கௌவையொருங்கு. இதில்-கூடலார்கோவென்னும்பெயர் அவனென்னும்பொருட்டாய் வையைக்கிழவனைச்சுட்டிநிற்றல்காண்க.

௨௱௰௪. அடுக்குத்தொடருள்-ஒருசொல்லேயடுக்கிவருங்கால்-எவ்வெவ்விடத்திலெத்தனையெத்தனையடுக்கிவரும்——

அசைநிலைக்கிரண்டும்-விரைவு-வெகுளி-உவகை-அச்சம்-அவலமுதலியபொருணிலைக்கிரண்டு மூன்றும்-இசைநிறைக்கிரண்டுமூன்றுநான்கும்-அடுக்கிவரும்——உம். அன்றேயன்றே-அசைநிலை. ——போபோ-விரைவு.—— எய்யெய்-வெகுளி.——வருகவருக-

உவகை.——பாம்புபாம்பு-தீத்தீத்தீ-அச்சம்.——உய்யேனுய்யேன்-அவலம்.——பாடுகோபாடுகோபாடுகோபாடுகோ- இசைநிறை. பிறவுமன்ன.

௨௱௯௫. ஒருபொருளையே விளக்கிநிற்குமிருசொற்கள் காரணமின்றிக்கூடிவருதலுமுண்டோ—

சொல்லின்பந்தோன்றநிற்குமிடத்தவ்வாறுவருதலுமுண்டு.——உம். நாகிளங்கமுகு-உயர்ந்தோங்குமலை-எனவரும்.

௨௱௯௬. இத்தனையென்றுதொகையுற்றுநிற்கும்பொருளும்- எக்காலத்துமெவ்விடத்துமில்லாதபொருளும் - முடிக்குஞ்சொல்லைப் பெற்றுவருமிடத்து எவ்வாறுவரும்—

முற்றும்மைபெற்றுவரும் ——உம். தமிழ்நாட்டுமூவேந்தரும்வந்தார - இறைவர்க்குக்கண்மூன்றுமுச்சுடர்-எம்.—— நூலிற்கடமென்றுமில்லை - ஒளிமுன்னிருளெங்குமில்லை-எம். வரும்.

௨௱௯௭. செயப்படுபொருளையும்-கருவியையும் - இடத்தையும்-செயலையும்-காலத்தையும்-வினைமுதலைப்போலவைத்து அவ்வினைமுதல்வினையை அவைகளுக்கேற்றிக்கூறுதலுண்டோ—

சிறுபான்மையவ்வாறுகூறுதலுமுண்டு.——உம். இம்மாடியால்கொண்டது-இவ்வெழுத்து நானெழுதியது-செயப்படுபொருள்.—— இவ்வெழுத்தாணியானெழுதியது-கருவி.—— இவ்வீடு யானிருந்தது-இடம்.—— இத்தொழில்யான்செய்தது - செயல்.—— இந்நாள்யான்பிறந்தது-காலம்-எனவரும்.

௨௱௯௮ பொருளிடங் காலஞ் சினை குணந் தொழில் - என்னுமாறுமெவற்றிற்கு அடைமொழிகளாய்வரும்——

இனமுள்ளவைகளுக்குத்தகுதிபற்றியுமினமில்லாதவைகளுக்குச் சிறப்பித்தல்பற்றியும் அடைமொழிகளாய் வரும்.——உம். நெய்க்குடம்-குளநெல்-கார்த்திகைவிளக்கு-கலாபமயில் - செந்தாமரை-ஆடுபாம்பு-இவ்வாறுமினமுள்ளன ——உப்பளம்-வடவேங்கடம்-வேனிற்கோங்கு-சிறைவண்டு-வெண்டிங்கள் - தோய்தயிர்-இவ்வாறுமினமில்லன. பிறவுமன்ன. அடைமொழியைவிசேடணமென்றும். இனச்சுட்டுள்ளவடையைப் பிறிதினியைபுநீக்கியவிசேடணமென்றும். இனச்சுட்டில்லாவடையைத் தன்னோடியையின்மைநீக்கிய விசேடணமென்றுங்கூறுவாருமுளர்.

௨௱௰௯. அடைமொழியினமல்லாததனையுமுணர்த்தலுண்டோ—

ஒரோவிடத்துண்டு.—உம். மேலைச்சேரிச்சேவலலைத்த தென்றவழிக்கீழைச்சேரிச்சேவலலைப்புண்டது-என்வினத்தைத்தரு தலேயன்றி- அச்சேவலையுடையார்க்குவெற்றியுண்டாயிற்று-என்னு மினமல்லாததனையுந்தந்தது.

௨௱௨௰. அடைச்சொல்லும்-சினைச்சொல்லும் - முதற்சொல்லு ம்-ஒன்றேடொன்று எவ்வாறுதொடர்ந்துவருதல்சிறப்பாகும்—

வேற்கைமுருகன்-செங்காலனா-முழங்குதிரைக்கடல் - எ னவோரடையும்- ஒருசினையும்- ஒருமுதலும் - முறையேயொன்றை யொன்றுவிசேடித்துவருதல்சிறப்பாகும்.—அவ்வாறன்றி-சிறுக ருங்காக்கை - எனவிரண்டடைமுதலை அடுத்துவருதலும்.—சிறு பைந்தூவி-எனவிரண்டடை சினையையடுத்துவருதலும்.—பெரு ந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட்பேதை-எனமயங்கிவருதலுமு ள-இவையவ்வளவு சிறப்புடையவல்லவாம்.

௨௱௨௰௧. திணைமுதலியவேழனையும்பற்றிவருமென்றவழாநிலைவழு வமைதிகளென்பனயாவை—

திணை-பால்-இடம்-காலம்-வினா-விடை-மரபு - என்றுசொ ல்லப்பட்டவேழினும்-முடிக்கப்படுஞ்சொல்லோடு முடிக்குஞ்சொ ன்மாறுபடாது நிற்றல் வழாநிலையாம். மாறுபட்டுவரினு மமைத் துக்கொள்ளத்தகுவதுவழுவமைதியாம்.—உம். அவன்வந்தான்- என்றவழிமுடிக்கப்படுஞ்சொல்லோடு முடிக்குஞ்சொல்-உயர்திணை யினு மாண்பாலினும் படர்க்கையிடத்தினும் வழுவாதுநிற்றலின் - திணைவழாநிலையும் பால்வழாநிலையு மிடவழாநிலையுமாம்.—நேற் றுவந்தான் - என்றவழி-இறந்தகாலத்தில்வழுவாதுநிற்றலாற் காலவ ழாநிலையாம் —உயிரொத்தன்மைத்து-என்றவழித்தானறியலுற்ற தவெளிப்படுத்தலால் வினாவழாநிலையாம். — உயிருணர்தற் றன் மைத்து-என்றவழி-வினாய பொருளையறிவுறுத்துநிற்றலால்விடைவ ழாநிலையாம்.—ஆடுமேய்ப்பானை இடையனென்றவழி - உயர்ந் தோரிட்டகுறி மரபு பிறழாதுநிற்றலான் மரபுவழாநிலையாம்.

ஆமையும் பெரியருமைந்தடக்கிநிற்பார்-என்பது திணைவழு வமைதி.—புதல்வனையென்னம்மைவந்தாள்-என்பது பால்வழுவ மைதி. — சாத்தன்றாயிவைசெய்வலோ-என்பது இடவழுவமைதி

—— இக்காட்டிணுட்புகுவனுயிற் கூறைப்பிழந்தான் - என்பது கால்வழுவமைதி. ஆசிரியனிச்சூத்திரத்திற்குப்பொருள்யாது-என்பதுவிஞுவழுவமைதி.——உண்டாயோவென்ற விஞவுக்கு நீயுண்-என்பது விடைவழுவமைதி.——யானைக்கன்றென்பதற்கு யானைக்குட்டி-என்பது மரபுவழுவமைதி.

வழாநிலையும் வழுவமைதியுமிவ்வாறுவருமெனவே வழுவாய்வருவன நீக்கப்படுமெனக்கொள்க. அவையாவன -அவன்வந்தது-திணைவழு ——அவன்வந்தாள்-பால்வழு.——அவன்வந்தேன் - இடவழு.——நேற்றுவருவான்-காலவழு.——கறக்கின்ற வெருமை பாலோசினையோ-விஞவழு ——கடம்பூர்க்குவழியாதோவெனி னிடம்பூணி யென்னுவின்கன்று-என்பது விடைவழு.—— யானைமேய்ப்பானையிடையனென்பதுமரபுவழு.

௨௱௨௨. திணையை யத்திணையும் பாலையத்திணையு மெவ்வெச்சொல்லாற்கூறல்வேண்டும்——

திணையை யத்திணை-உருவு-வடிவு-என்னும்பொதுச்சொற்களாலும். உயர்திணைப்பாலையத்திணை அத்திணைப்பன்மைச்சொல்லாலும். அஃறிணைப்பாலை யத்திணைப்பால் பகாவஃறிணைச் சொல்லாலுங் கூறல்வேண்டும் ——உம். திணையையம்-குற்றியோமகனோவங்குத்தோன்றுநின்றவுரு ——உயர்திணைப்பாலையம்-ஆண்மகனோபெண்மகளோ வங்குத்தோன்றுநின்றவர்.——அஃறிணைப்பாலையம்- ஒன்றோபலவோ கழனியிற்புகுந்தவெருமை-எனவரும்.

௨௱௨௩. திணையையத்திலும் பாலையத்திலும் பொருளிதுவென்றுதுணிந்தவழி-அன்மைச்சொல்லையெதன்மேல்வைத்துக்கூறுதல்சிறப்புடைத்தாம்——

துணிந்த பொருண்மேல்வைத்துக்கூறுதல் சுருங்கச்சொல்லலாகியவழகைப்பிறப்பித்தலாற்சிறப்புடைத்தாம்.——உம் துணிந்தபொருள்-குற்றியெனின் மகனன்று-மகனெனிற்குற்றியல்லன்-ஆண்மகனெனிற்பெண்மகளல்லன் பெண்மகளெனிலாண்மகனல்லள். ஒன்றெனிற்பலவன்று. பலவெனின்றென்றல்ல-எனக்கூறுக.—— இவ்வாறன்றி-மகனல்லனிவ்வுருக்குற்றி-எனிற்சொற்கள் விரிதலாற் சிறப்புடைத்தன்றாம்.

௨௱௨௪. உயர்திணைப்பெயரொழுவாயைச் சார்ந்துநிற்கும் அஃறிணைப்பொருளாதியாறுமெவ்வாறுமுடியும்——

அவ்வெழுவாய்க்குரியவினைக்குறிப்புப்பயனிலையோடுமுடியும்.——உம். நம்பிபொன்பெரியன்-நாடுபெரியன்-வாழ்நாள்பெரியன்-மூக்குக்கூரியன்-குடிமைநல்லன்-நடைகடியன் - எனவரும். சிறுபான்மை-இம்மாடுகோடு கூரிது-என்பதுபோல விவ்வஃறிணையினுமுடியும்.——இவ்வாறுமுடியினும்-நம்பிக்குப்பொன்பெரிது நாடுபெரிது-எனமுடிதலே சிறப்பாம்.

௨௱௨௫. இருதிணைப்பொருள்களும் விரவிநின்றவழி அவையெவ்வாறுமுடியும்——

அவைபலவுஞ்சிறப்பினானுமிகுதியினானுமிழிபினானுமொன்றற்குரிய சொல்லைக்கொண்டுமுடியும்.——உம். ஆமையும்பெரியருமைந்தடக்கிநிற்பார்-திணைவிரவிச்சிறப்பினானுயர்திணைமுடிபேற்றன —— நன்பால்பசுவே துறந்தார் பெண்டிர் பால் பார்ப்பாரொன்பாரையோம்பேனெனின்-திணைவிரவிமிகுதியா னுயர்திணைமுடிபேற்றன.——எச்சிலார்தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தெய்வமுச்சந்தலையோடிவையென்பயாவருந்திட்பத்தாற்றீண்டாப்பொருள்-திணைவிரவிமிகுதியாலொருமுடிபேற்றன.——வடுக ரரிவாளர் வான கருநாடர்சுடுகாடு பே யெருமையென்றிவையாறுங் குறுகாரறிவுடையார்- திணைவிரவியிழிபினாலஃறிணைமுடிபேற்றன.

௨௱௨௬. திணையும் பாலும் வழுக்கிவரி னெவ்வெவ்விடங்களின் வழுவென்றுகளையாதமைத்துக்கொள்ளத்தகும்——

மகிழ்ச்சி-உயர்த்தல்-சிறப்பித்தல்-கோபித்தல்-இகழ்தல்-சொன்னோக்கம்-என்னுமாறிடங்களினுமமைத்துக்கொள்ளத்தகும். ——உம் ஓராவினை யென்னம்மைவந்தாள் - என்பது-மகிழ்ச்சியினுயர்திணை யஃறிணையாயிற்று.——செந்தார்ப்பசுங்கிளியார் சென்றார்க்கோரின்னாதந்தாரேற்றந்தாரொன்னின்னுயிர்-என்பது- உயர்த்தலி லஃறிணை யுயர்திணையாயிற்று.——தம்பொருளென்ப தம்மக்களவர்பொருள்- என்பது-சிறப்பித்தலி லஃறிணையுயர்திணையாயிற்று.——எவவுஞ் செய்கிலான்றான் றேரானவ்வுயிர்போஒ மளவுமோர்நோய்-என்பது-கோபித்தலினுயர்திணை யஃறிணையாயிற்று.——நாமானுடைமை என்பது - இகழ்தலினுயர்திணை யஃறிணையாயிற்று. —— அரசுவந்தது-குழந்தைதந்தது-என்பன - சொன்னோக்கத்தினுயர்திணையஃறிணையாயின.——புதல்வனையென்னம்மைவந்தாள்-என்பது-மகிழ்ச்சியிலாண்பால் பெண்பாலாயிற்று.—— ஒருவனை

யவர் வந்தார்-என்பது - உயர்த்தவிலாண்பால் பெண்பாலாயிற்று.
——தர்தாயுலகுக்கோர்தாயே - என்பது - சிறப்பித்தவிலாண்பால்
பெண்பாலாயிற்று.——எனைத்துணையராயினு மென்னுந் தினைத்து
ணையுந் தேரான்பிறனில்புகல்- என்பது-கோபித்தவிற் பலர்பால் ஒ
ருமைப்பாலாயிற்று. ——பெண்புத்திகேட்பானைப்பார்த்து இவன்
பெண்ணென்பது-இகழ்ந்தவிலாண்பால் பெண்பாலாயிற்று.

௨௱௨௭. மகிழ்ச்சிமுதலியகாரணத்தாலன்றி-ஒருமைப்பாலிற் ப
ன்மைப்பாலும் - பன்மைப்பாலிலொருமைப்பாலும்-வருமோ—
சிறுபான்மை யவ்வாறுவருதலுமுண்டு ——உம். வெயிலெ
ல்லாமறைத்ததுமேகம்-ஒருமையிற்பன்மைவந்தது. இரண்டுகண்
ணுஞ்சிவந்தது-பன்மையிலொருமைவந்தது. பிறவுமன்ன.

௨௱௨௮. மூவிடங்கட்குரியசொற்களுள்-ஓரிடத்திற் குரியசொல்
மற்றோரிடத்தைத்தழுவிவருதலுண்டோ—
சிறுபான்மையவ்வாறுவருதலுமுண்டு.——உம். சாத்தன்
றாயிவைசெய்வேனோ - தன்மையிற்படர்க்கைச்சொல்வந்தது.——
எம்பியையீங்குப்பெற்றேனென்னெனக்கரியதென்றான் - முன்னிலை
யிற்படர்க்கைச்சொல்வந்தது.—— இவ்வாறன்றி நீயோ யானோயா
ரிதுசெய்தேம்-நீயோவவனோயாரிதுசெய்தார்-எனவிரவியோரிடத்
திற்குரியமுடிபேற்றலுமுண்டு.

௨௱௨௯. முக்காலத்திலுந் தொழிலிடையறாது ஒருதன்மைய
வாய்நிகழும்பொருள்களின்வினையை-எக்காலத்தாற்கூறத்தகும்—
நிகழ்காலத்தாற்கூறத்தகும்.——உம். தெய்வமிருக்கின்ற
து. மலைநிற்கிறது. எனவரும்.

௨௱௩௰. முக்காலங்களும்-எவ்வெவ்விடத்திற்பிறழ்ந்துவரும்—
விரைவிலும்-மிகுதியிலும்-தெளிவிலும் - இக்காரணமில்லா
த சிலவிடங்களிலும்-பிறழ்ந்துவரும்.——உம். சோறினியுண்ணும்
படியாகவிருக்கின்றவனை யொருவனின் னுமுண்டிலையோவென் றவ
ழி. உண்டேனுண்டேன் - என்பதிலும் - உண்கின்றனுண்டேனுண்
டேன்-என்பதிலும்-விரைவுபற்றியெதிர்காலமும்-நிகழ்காலமு மிற
ந்தகாலமாயின. —— இக்காட்டிலிவன்றனிவழி போவானாயிற் கூ
றையிழந்தான் - என்பதின்மிகுதிபற்றியெதிர்காலமிறந்தகாலமாயிற்
று. கூறையிழத்தல்-தவறினுந் தவறுமாதலின் மிகுதியெனப்பட்ட
து.——எறும்பு முட்டைகொண்டுதிட்டையேறின்மழைபெய்தது-
என்பதில்-தெளிவுபற்றியெதிர்காலமிறந்தகாலமாயிற்று.——யாமு

ன்விளையாடுவதிச்சோலை - யானிவனைநெடுநாளைக்குமுன்னறிவேன்-என்பனவைகளில்- இயல்பினிறந்தகாலமெதிர்காலமாயிற்று.

௨௱௯௧. வினாவென்பதியாது—

ஒருவன்றானறியலுறுவதை வெளிப்படுத்துவதாம்.

௨௱௯௨. அவ்வினாவெத்தனைவகைப்படும்—

அறியாமை-ஐயம்-அறிவு-கொளல்-கொடை-ஏவல் - என வறுவகைப்படும். இவற்றுள்-முதலிரண்டும் வழாநிலையும் பின்னான்கும் வழுவமைதியுமாம்.——உம். மாணாக்க னிச்சூத்திரத்திற்குப் பொருள்யாது-என்பது-அறியான். வினா.——குற்றியோமகனோவங்குத்தோன்றுகின்றவுரு-என்பது-ஐயவினா.——ஆசிரிய னிச்சூத்திரத்திற்குப்பொருள்யாது-என்பது-அறிவினா.—— வணிகரோயாடையுண்டா-என்பது-கொளல்வினா.——சாத்தற்காடையில்லையோ-என்பது-கொடைவினா.——சாத்தாவுண்டாயோ - என்பது - ஏவல்வினா.——வினா-உசா-கடா-என்பனவொருபொருட்சொற்கள்.

௨௱௯௩. விடையென்பதியாது—

வினாவியபொருளையறிவிப்பதாம்.

௨௱௯௪. அவ்விடையெத்தனைவகைப்படும்—

செவ்வனிறையும்-இறைபயப்பதும்-எனவிருவகைப்படும். அவ்விரண்டனு ளிறைபயப்பது-வினாவெதிர்வினாவலும்-ஏவலும்-மறுத்தலும் - உற்றதுரைத்தலும் - உறுவதுகூறலும் - உடன்படலும்-சொற்றொகுத்திறுத்தலும்-எனவெழுவகைப்படும். முதற்சொல்லப்பட்டசெவ்வனிறையொன்றும்வழாநிலையாம்-பின்னையவேழும்வழுவமைதியாம்.——உம். உயிரெத்தன்மைத்து-என்று வினாயவழி-உணர்தற்றன்மைத்து - என்பது செவ்வனிறை.—— சாத்தா வுண்டாயோவென்று வினாயவழி - உண்ணேனோவென்பது வினாவெதிர்வினாவுதல். நீயுண்ணென்பது ஏவல். உண்ணேனென்பது மறுத்தல். வயிறுநொந்ததென்பது உற்றதுரைத்தல். நோகின்றதென்பதுமிது-வயிறுநோமென்பதுறுவதுகூறல். பசித்தேன்பொழுதாயிற்றென்பது உடன்படல். பயறுளதோ வணிகீர் என்றவழி உளுந்தல்லதில்லையென்பது-சொற்றொகுத்திறுத்தல்.——விடை - செப்பு - உத்தரம் - இறை - என்பனவொருபொருட்சொற்கள்.

௨௱௯௫. மரபென்பதியாது——

தொன்றுதொட்டு-உலகவழக்கிலுஞ் செய்யுள்வழக்கிலுமெப்பொருட்கெப்பெயர்வழங்கிவருமோ அப்பொருளையச்சொல்லாற்

கூறுதலாம்.――உம். ஆனைமேய்ப்பான் பாகன் - ஆடுமேய்ப்பானிடையன். ஆனையிலண்டம் - ஆட்டுப்புழுக்கை - புலிக்குட்டி - ஆவின்கன்று - எனவரும்.

௨௱௫௯. மேற்சொல்லப்பட்ட சொல்வியதுள் அடங்கியு மடங்காதும்வரு மெச்சங்களனைத்துமெத்தனையாம்――

பெயரெச்சம் - வினையெச்சம் - எனவெனெச்சம் - உம்மையெச்சம் - ஒழியிசையெச்சம் - பிரிநிலையெச்சம் - எதிர்மறையெச்சம் - இசையெச்சம் - குறிப்பெச்சம் - எனவொன்பதாம். முன்னையமூன்றற்குமெச்சச்சொற்கள்வாக்கியங்களில் வெளிப்பட்டுநிற்கும் - ஒழிந்தனவருவித்துச்சொல்லப்படும்.

௨௱௬௰. அவ்வொன்பதெச்சங்களுமெவ்வாறுமுடியும்――

அவ்வொன்பதிற் றத்தமெச்சங்களைக்கொண்டு முடியும். ――உம். உண்டசாத்தன் - என்புழிப்பெயரெச்சம்பெயரைக்கொண்டுமுடிந்தது.――உண்டுவந்தான் - தலையிடியெனவிடித்தது - என்புழி - வினையெச்சமும் - எனவெனெச்சமும் - வினையைக்கொண்டுமுடிந்தன.―― சாத்தனும்வந்தான் - என்புழி - உம்மையெச்சம் - முன்கொற்றன்வந்ததன்றியென்னுந்தன்னெச்சங்கொண்டுமுடிந்தது ―― உண்ணுதற்கோவந்தான் - கூரியதோர்வாண்மன் - என்புழி - ஒழியிசையெச்சங்கள் - கலகஞ்செய்யவந்தான் - இரும்பையறத்துணித்தது - என்வொழிந்தசொற்களைக்கொண்டுமுடிந்தன. ―― அவனேகொண்டான் - அவனேகொண்டான் - என்புழி - பிரிநிலை யெச்சமாயிற் பிறர்கொண்டிலரெனப்பிரிக்கப்பட்டசொல்லைக்கொண்டும் - எதிர்மறையெச்சமாயிற்கொண்டிலன் - என்னுமறைச்சொல்லைக்கொண்டுமுடியும் ―― இசையெச்சமாவது - அவ்வவ்விடத்திற் கேற்பவொருசொல்லும் பலசொல்லுங்கொண்டுமுடிவதாம். ―― நல்லனென்று நம்பிவந்தான் - என்பது - நினைத்தென்னுஞ் சொல்லைக்கொண்டது. அந்தாமரையன்னமே நின்னையானகன்றாற்றுவனோ - என்பது - என்னுயிரினுஞ்சிறந்தநின்னை - எனப்பலசொற்களைக்கொண்டுமுடிந்தது.―― ஆகுபெயர் - அன்மொழித்தொகை - முதலியன குறிப்பெச்சமாம். உம். தாமரைமுகம் - என்பது - மலரொன்பது கொண்டது - பொற்றொடி - என்பது - பொற்றொடியை யுடையாளென்விரண்டனுருபும் - அதன்பயனிலையுங்கொண்டது. பிறவுமன்ன.

――――

சொல்லிலக்கணமுற்றிற்று.

# பொருளிலக்கணம்.

க. பொருளென்பதியாது—

இம்மைமறுமைகளிலுயிர்க்குறுதி பயப்பதென நன்மக்களால் வேண்டப்படுவதாம்.

உ. அப்பொருளெத்தனைவகையினையுடைத்தாம்—

அறம்பொருளின்பமென மூன்றுவகையினையுடைத்தாம்—

ங. அம்மூன்றனுள்-அறமென்பதெத்தனைவகைப்படும்—

ஒழுக்கம்-வழக்கு-தண்டம்-எனமூன்றுவகைப்படும். இம்மூன்றையுமுறையே வடநூலார் ஆசாரம்-விவகாரம் - பிராயச்சித்தமென்பர்.

ச. அவ்வொழுக்கமுதலியமூன்றும்யாவை—

அந்தணர்முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியமுதலிய நிலைகளினின்று மனுமுதலிய நூல்களின் விதித்தன செய்தலும்விலக்கியன வொழிதலுமொழுக்கமாம். —— ஒருபொருளைத்தனித்தனியே யெனதெனதென்றிருப்பாரதுகாரணமாகத்தம்முள்-மாறுபட்டு அப்பொருண்மேற்செல்வதுவழக்காம்.——அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழுவினாரை யந்நெறி திறுத்தற்பொருட்டு ஒப்பநாடி யவ்வவ்வழுவிற்குத்தகும்படியாகத் தண்டிப்பதுதண்டமாம்.

ரு. பொருளாவதியாது—

அரசு நீதி துணைக்காரணமாகச் சம்பாதிக்கப்படுவது. அது நெல்-மணி-பொன்-முதலாயின.

சு. இன்பமாவதியாது—

பொருள்- துணைக்காரணமாகவொருகாலத்தில்-ஒருபொருளால் ஐம்புலன்களு நுகர்தற்சிறப்புடையதாம்.

எ. அவ்வறம்பொருளின்பமென்னு மூன்றுபொருளு மிலக்கண நூலுள் எத்தனைவகைப்பட்டுவழங்கும்—

அகப்பொருளும் புறப்பொருளுமென விருவகைப்பட்டு வழங்கும். இவைமுறையே அகத்திணை புறத்திணையெனவும்படும்.

அ. அகப்பொருளென்பதியாது—

அவ்வறமுதலியமூன்றனு ளிறுதிக்கட்கூறப்பட்டவின்பமென்னும்பொருளாம் - அது ஒத்தவன்பினுலொருவனு மொருத்தியுங்கூடியகூட்டத்திற்பிறந்து அவருள்ளத்தின்கண்ணிகழ்வதாதலின் அகப்பொருளெனப்பட்டது.

௯. அவ்வகப்பொருளெவற்றைப்பற்றி நிகழும்—

கைக்கிளைத்திணையும்-ஐந்திணையும்-பெருந்திணையும்-என்னுமிவ்வேழிணையும்பற்றி நிகழும்-இவற்றுள்-கைக்கிளையென்பதொருதலைக்காமம். ஐந்திணையென்ப தன்புடைக்காமம். பெருந்திணையென்பது பொருந்தாக்காமம்.

௰. மேற்சொல்லப்பட்ட வைந்திணைகட்குரிய நிலங்கள்யாவை—

| | | |
|---|---|---|
| குறிஞ்சிக்கு | - மலையுமலைசார்ந்தவிடமும். | நிலமாம். |
| பாலைக்கு | - சுரமுஞ் சுரஞ்சார்ந்தவிடமும். | |
| முல்லைக்கு | - காடுங் காடுசார்ந்தவிடமும். | |
| மருதத்திற்கு | - பழனமும் பழனஞ்சார்ந்தவிடமும் | |
| நெய்தற்கு | - கடலுங் கடல்சார்ந்தவிடமும். | |

௰க. புறப்பொருளென்பதியாது—

அறமும்பொருளுமென்றுசொல்லப்படுந் தன்மைத்தாய்ப் புறம்பேநிகழுமொழுக்கமாம்- இது- எல்லாராலு மனுபவித்தறிந்து பிறர்க்குச்சொல்லப்படுவதாதலிற் புறப்பொருளெனப்பட்டது.

௰உ. அப்புறப்பொருளெத்தனைவகைப்படும் —

வெட்சித்திணை-வஞ்சித்திணை-உழிஞைத்திணை - தும்பைத்திணை-வாகைத்திணை-காஞ்சித்திணை - பாடாண்டிணை- எனவெழுவகைப்படும். இவற்றிற்குச்செய்யுள் - வெட்சிநிரைகவர்தன்மீட்டல்கரந்தையாம்-வட்கார்மேற்செல்வது வஞ்சியாமுட்கா-தெதிரூன்றல்காஞ்சியெயில்காத்தனொச்சி-யதுவளைத்தலாகுமுழிஞையதிரப் - பொருவது தும்பையாம் போர்க்களத்துமிக்கோர்-செருவென்றது வாகையாம். —— இது சுருங்கிய நூலாதலானு மேனையபோற் பெரும்பயனின்மையானும் பொருளிலக்கணத்தைவிரித்திலம்.

பொருளிலக்கணமுற்றிற்று.

# யாப்பிலக்கணம்.

௧. **யாப்**பென்பதியாது—

மேற்சொல்லியபலசொற்களாலும் பொருட்கிடனாகக் கற்றுவல்லபுலவராலணிபெறப்பாடப்படுவதாம்.——யாப்பு-பாட்டு-தூக்கு-தொடர்பு-செய்யுள்-என்பனவொருபொருட்சொற்கள்.

௨. அது-எத்தனைவகைப்படும்—

பாவும் பாவினமுமெனவிருவகைப்படும்.

௩. இவ்விரண்டற்குமுறுப்பாய்வருவனயாவை—

எழுத்து-அசை-சீர்-தளை-அடி-தொடை-என்னுமாறுமவற்றிற்குறுப்பாம்.

௪. எழுத்துக்களென்பனயாவை—

மேலெழுத்திலக்கணத்திற்கூறிய முதல்சார்பென்னு மிருவகையெழுத்துக்களுமாம்——செய்யுளடிக்கெழுத்தெண்ணுங்கான் மெய்களெண்ணப்படாவாம்.——தளைசிதையவருமிடத்துக் குற்றியலிகரமுங் குற்றியலுகரமும்-அளபெடையுந்தள்ளுண்டுபோம்.

௫. அசையென்பதியாது—

எழுத்துக்களாலாக்கப்பட்டுச் சீர்க்குறுப்பாய்வருவதாம்.

௬. அவ்வசையெத்தனைவகைப்படும்—

நேரசையு நிரையசையுமெனவிருவகைப்படும்.

௭. நேரசைகளென்பனயாவை—

குறிலேனு நெடிலேனுந் தனித்துவரினும்- அல்லது ஒற்றடுத்துவரினும்-நேரசைகளாம்——உ-ம். ஆழி. என்னுமொழியில்-நெடிலுங்குறிலுந்தனித்து நேரசையாயின.——சொல்வான்-என்

னுமொழியில்-குறிலுநெடிலுமொற்றடுத்து நேரசையாயின,—— அவன்-என்பதுபோல விட்டிசைத்தவழி யல்லது தனிக்குறின் மொழிக்கு முதலினேரசையாகா து.

அ நிரையசைகளென்பனயாவை—

குறிலிணையெனுங் குறினெடிலெனுந் தனித்துவரினும்-அல்லது ஒற்றடுத்துவரினும்-நிரையசைகளாம்.——உம். அணி-அணில்-குரா-குரால்-எனவரும்.

௯. சீரென்பதியாது.—

அவ்வசை சிறுபான்மை தனித்தும் பெரும்பாலு மிரண்டு முதலியவாகத்தொடர்ந்தும்வருவதாம்.

௰. அச்சீரொத்தனைவகைப்படும்—

ஓரசைச்சீரும்-ஈரசைச்சீரும்-மூவசைச்சீரும்-நாலசைச் சீரும்-என நான்குவகைப்படும்.

௰௧. ஓரசைச்சீர்களென்பனயாவை—

தனித்துவருநேரசையு நிரையசையுமாகிய விரண்டுமாம். இவற்றிற்குதாரணவாய்பாடு-நேர்-நாள்.——நிரை-மலர்-இவை பெரும்பாலும் வெண்பாவினீற்றிலுஞ் சிறுபான்மை யொழிந்தவற்றுள்ளும்வரும்.——உம். மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார் நிலமிசைநீடுவாழ்வார். கற்றதனாலாயபய னென்கொல்வாலறிவனற்றாடொழாஅரெனின். இக்குறள்வெண்பாக்களினிறுதியில்-வார்-நாள்-எம். ரெனில்-மலர்-எம். ஓரசைச்சீரிரண்டும்வந்தனகாண்க.

௰௨. ஈரசைச்சீர்களென்பனயாவை—

நேர்நேர்-நிரைநேர்-நிரைநிரை-நேர்நிரை-என விரண்டசைகூடிவருதலாலாகிய சீர் நான்குமாம். இவற்றிற் குதாரணவாய்பாடு-நேர்நேர்-தேமா. நிரைநேர்-புளிமா. நிரைநிரை-கருவிளம். நேர்நிரை-கூவிளம். இவை அகவற்கேயுரியவாய் - இயற்சீரெனவும்-அகவற்சீரெனவும் பெயர்பெறும்.——வேதப்பொருளாய் விளங்கியசங்கான். பாதத்துணைமனம் பற்றுவோர். போதத்தொளிர் நலம் பொருந்திவாழ்குவரே. இவ்வகவலுள்-வேதப்-தேமா. பொருளாய்-புளிமா. விளங்கிய-கருவிளம். சங்கான்-கூவிளம். எனவீரசைச்சீர்நான்கும்வந்தனகாண்க. பிறவுமன்ன.

௰௩. மூவசைச்சீர்களென்பனயாவை—

மேற்சொல்லப்பட்ட நேர்நேர்முதலிய நான்கினிறுதியினும்-நேரசையு நிரையசையுந் தனித்தனி கூடிவருதலாலாகிய வெட்டுச்சீர்களுமாம். இவற்றிற்குதாரணவாய்பாடு. நேர்நேர்நேர் - தேமாங்காய். நிரைநேர்நேர்-புளிமாங்காய். நிரைநிரைநேர் - கருவிளங்காய் நேர்நிரைநேர்-கூவிளங்காய். நேர்நேர்நிரை-தேமாங்கனி. நிரைநேர்நிரை-புளிமாங்கனி. நிரைநிரைநிரை-கருவிளங்கனி. நேர்நிரைநிரை-கூவிளங்கனி-எனவரும். இவ்வெட்டுமுரிச்சீரெனவும்-இவற்றுட்காய்ச்சீர் நான்கும்வெண்பாவிற்குரியவாய் வெண்சீரெனவும்-கனிச்சீர்நான்கும் வஞ்சிப்பாவிற்குரியவாய் வஞ்சிச்சீரெனவும் பெயர்பெறும். —— உம். ஆனந்தக்கூத்தனடிக்கன்புசெய் மனனேயீனந்தனையொழிவாயின்று. இக்குறள்வெண்பாவினுள்-ஆநந்தக்-தேமாங்காய். கூத்த-தேமா. னடிக்கன்பு-புளிமாங்காய். செய்மனனே-கூவிளங்காய். யீனந்-தேமா. தனையொழிவாய் - கருவிளங்காய். இன்று - காசு - எனக்காய்ச்சீர்நான்கும் வந்தனகாண்க —— மண்ணீரனல்வளிவானொடு-வெண்ணீர்மதி வெங்கதிருயி-ரொண்ணீடுருவியைபசுபதி-நாளும்-என்மனமிடங்கொண்டுறைதலால்-வன்மனக்கொடியர்சொற்கிலமயங்குதலே. இவ்வஞ்சிப்பாவினுள்-மண்ணீரனல்-தேமாங்கனி. வளிவானொடு-புளிமாங்கனி. வெண்ணீர்மதி-தேமாங்கனி. வெங்கதிருயி-கூவிளங்கனி. ரொண்ணீடுரு-தேமாங்கனி. வியைபசுபதி-கருவிளங்கனி-எனக்கனிச்சீர்நான்கும்வந்தனகாண்க.

௰௪. நாலசைச்சீர்களென்பனயாவை—

அம்மூவசைச்சீரெட்டனிறுதியினும்-நேரசையும்-நிரையசையுந்தனித்தனியடுத்துவருதலாலாகியசீர்பதினாறுமாம். இவற்றிற்குதாரணவாய்பாடு. தேமாந்தண்பூ-புளிமாந்தண்பூ-கருவிளந்தண்பூ-கூவிளந்தண்பூ-தேமாநறும்பூ-புளிமாநறும்பூ-கருவிளநறும்பூ-கூவிளநறும்பூ. தேமாந்தண்ணிழல்-புளிமாந்தண்ணிழல் - கருவிளந்தண்ணிழல் - கூவிளந்தண்ணிழல். தேமாநறுநிழல்-புளிமாநறுநிழல்-கருவிளநறுநிழல்-கூவிளநறுநிழல்.—— இவைவெண்பாவினுள்வருவனவல்ல - கலியினுள்ளும்-அகவலுள்ளும் பெரும்பாலுங் குற்றியலுகரம் வந்தவிடத்தன்றிவாரா - வஞ்சிப்பாவினுட்பெரும்பாலும்

வரவு மோரடியுளிரண்டு நாலசைச்சீர்கண்ணுற்று நிற்கவும்பெறும். ——உம். அள்ளற்பள்ளத்தகன்சோணாட்டு வேங்கைவாயின்வியன்குன்றூரன் - இவ்வஞ்சியடியிரண்டு நாலசைச்சீர்வந்தனகாண்க.

௰௫. தளையென்பதியாது—

நின்றசீரினீற்றசையோடு-வருஞ்சீரின் முதலசை யொன்றியேனு மொன்றாதேனுங் கூடிநிற்பதாம். நேர்முன்னேரு நிரைமுன்னிரையும்வருதலொன்றி வருதலாம். அவ்வாறன்றி-நேர்முன்-நிரையும். நிரைமுன்-நேரும்வருதலொன்றாதுவருதலாம்.

௰௬. அத்தளையெத்தனைவகைப்படும்—

நேரொன்றாசிரியத்தளை-நிரையொன்றாசிரியத்தளை-வெண்சீர் வெண்டளை-இயற்சீர்வெண்டளை-ஒன்றியவஞ்சித்தளை - ஒன்றாவஞ்சித்தளை-எனவெழுவகைப்படும்.

௰௭. அவையெவ்வாறுவருவனவாம்—

மாமுன்னேர்வருவது நேரொன்றாசிரியத்தளை. நாள்-முன்னேர்வருவதுமது ——விளமுன்னிரைவருவது நிரையொன்றாசிரியத்தளை-மலர்முன்னிரைவருவதுமது.——காய்முன்னேர் வருவது வெண்சீர்வெண்டளை-பூமுன்னேர்வருவதுமது.—— மாமுன்னிரையும் விளமுன்னேரும்வருவன இயற்சீர்வெண்டளை-நாண்முன்னிரைவருவது மலர்முன்னேர்வருவதுமது.—— கனிமுன்னிரை வருவதொன்றியவஞ்சித்தளை-நிழன்முன்னிரைவருவதுமது.——கனிமுன்னேர்வருவதொன்றாவஞ்சித்தளை-நிழன்முன்னேர்வருவதுமது.——காய்முன்னிரைவருவது கலித்தளை - பூமுன்னிரைவருவதுமது. ——உம்.

தேனார்கஞ்சச்செம்மலாதி-வானோர்மாதர்மங்கலங்களத்திடை-வலியொடுநிலைபெறமலிபெருங்கருணையி-னலைதருமிருள்விட மணிமிடற்றிருத்துந்-தில்லையுட்சிவபிரான்றிருவடி-யொல்லையிற்பரசு நர்க்குயர்கதியெளிதே. இவ்வகவலுள்-தேனார்-கஞ். என மாமுன்னேர்வருதலாலிதுநேரொன்றாசிரியத்தளையாம். மங்கலங்-களத். என விளமுன்னிரைவருதலாலிது நிரையொன்றாசிரியத்தளையாம்.

பெரியவர்தந்நோய்போற்பிறர்நோய்கண்டுள்ள-மெரியினிழுதாவொன்க - தெரியிழாய் - மண்டுபிணியால் வருந்து பிறவுறுப்பைக்கண்டுகலுழுமேகண். இந்நேரிசைவெண்பாவினுள்-பெரியவர்

தந்-நோய்-எனக்காய்முன்னேர்வருதலா லிது வெண்சீர்வெண்டளை யாம். நோய்போற்-பிறர்-எனமாமுன்னிரைவருதலா லிது-இயற்சீர்வெண்டளையாம். பிறவுமன்ன.

மண்ணீரனல்வளிவானெடு-வெண்ணீர்மதி - என்னும் வஞ்சிப்பாவினுள்-மண்ணீரனல்-வளி- எனக்கனிமுன்னிரைவருதலாலிது-ஒன்றியவஞ்சித்தளையாம். வளிவானெடு-வெண் - எனக்கனிமுன்னேர் வருதலாலிது-ஒன்றாவஞ்சித்தளையாம். பிறவுமன்ன.

அஞ்சம்போனடையுடைமையாளகங்களிப்பச்சுரர்பரவ-நெஞ்சஞ் சேர்தருமன்பினெறிமுனிவர்காங்குவிப்ப- விஞ்சுஞ்சீர்த்தனித்தில்லை வியன்பொதுவினடமாடுங்- கஞ்சநந்தாழ்திருவடிகள் கருதிமடனெழி நெஞ்சே-என்னுமிக்கொச்சகக்கலிப்பாவினுள்-அஞ்சம்போ-னடை-எனக்கனிமுன்னிரைவருதலால் இது கலித்தளையாம். பிறவுமன்ன.

௰அ. அடியென்பதியாது—

மேற்சொல்லப்பட்டதளைகளொன்றும் பலவுமடுத்துவருவதாம்.

௰௯. அவ்வடியெத்தனைவகைப்படும்—

குறளடி-சிந்தடி-அளவடி-நெடிலடி-கழிநெடிலடி- என வைந்துவகைப்படும்.

௨௰. அவ்வடிகளைந்துமெவ்வாறுவருவனவாம்—

இருசீரான்வருவது குறளடி - முச்சீரான்வருவது சிந்தடி-நாற்சீரான்வருவது-அளவடி-அல்லது நேரடி - ஐஞ்சீரான்வருவது நெடிலடி- ஐந்தின்மேற்பட்டசீரான்வருவனவெல்லாங் கழிநெடிலடியாம். இவற்றிற்கிலக்கியம் பின்பாவு மின்முங்கூறும்வழிக்காண்க.

௨௧. தொடையென்பதியாது—

பலவடிகளிலேனும் பலசீர்களிலேனு மெழுத்துக்களொன்றிவருவதாம்.

௨௨. அத்தொடையெத்தனைவகைப்படும்—

எதுகைத்தொடையு மோனைத்தொடையு மெனவிருவகைப்படும்.

௨௩. எதுகைத்தொடையென்பதியாது—

அடிதோறு முதலெழுத்தளவொத்துநிற்பவிரண்டாமெழுத்தொன்றிவருவதெதுகைத்தொடையாம்.——உம். துகடீர்பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டுப்-பகடுநடந்தகூழ்பல்லாரோடுண்க-வகடுறயார்மாட்டுநில்லாது செல்வுஞ்-சகடக்காற்போலவரும். இவ்வின்னிசைவெண்பாவினு ளிரண்டாமெழுத் தொன்றிவருதல்காண்க.—— அன்றியுஞ்சொற்போர்புரிவர் நான்மறையாறங்கமுணர்ந்ததொழுகுலத்தோர்-விற்போர்புரிவர்நெடியசிலையிராமனனையவிறல்வேந்தர்-பொற்போர்புரிவர் பிறர்பொருளுந்தமபோற்பேணிப்புரிவணிகர்-நெற்போர்புரிவரந்நகரில் வேளாண்குலத்து நெறியினரோ - எனமூன்றாமெழுத்து முதலியன வொத்துவருதலுங்கொள்க.

ஓரோவிடத்தோரடியுள்ளுஞ்சீர்களினிரண்டாமெழுத்தொன்றி பொன்னி-னன்னபொறிசுணங்கேந்தி-எனவருதலுமுண்டு.——சிறுபான்மை வருக்கவெழுத்தும்-நெட்டெழுத்தும்-இனவெழுத்தும்-பிறவுமெதுகையாகவரப்பெறும் ——உம். வானின்றுலகம்வழங்கிவருதலாற்-றானமிழ்தமென்றுணரற்பாற்று-இது வருக்கவெதுகை.——ஆவாவென்றேயஞ்சினராழ்ந்தாரொருசாரார் - கூகூவென்றே கூவிளிகொண்டாரொருசாரார்-இது நெடிலெதுகை. —— தக்கார் தகவிலரென்ப தவரவ-ரெச்சத்தாற்காணப்படும் - இது வல்லினவெதுகை.

௨௪. மோனைத்தொடையென்பதியாது—

முதற்சீரின்முதலெழுத்தோடுபின்வருஞ்சீர்களிலொன்றனுள்ளேனும் பலவற்றினுள்ளேனு முதலெழுத்தொன்றிவருவது மோனைத்தொடையாம்.——உம். கற்றுளகல்வியுந்திருவுமாற்றலுந்-தற்றெறுமறவினையைத் தடுப்பவல்லவா-முற்றொருங்குணர்பசுபதியை முன்னுறு - திற்றநாளொழித்திடுமுணர்விலிக்கரோ. இச்செய்யுளில்-முதலடியில்ககரமும். இரண்டாமடியில்-தகரமும். மூன்றாமடியில்-முகரமும். நாலாமடியில்-உகரமும். மோனையாகவந்தன.

அன்றியும். அ-ஆ-ஐ-ஔ-என்னுமிந்நான்கு மொன்றற்கொன்றுமோனையாம். இ-ஈ-எ-ஏ-என்னுமிந்நான்குமொன்றற்கொன்றுமோனையாம். உ-ஊ-ஒ-ஓ-என்னுமிந்நான்கு மொன்றற்கொன்றுமோனையாம். ஞ ந வும்-ச தவும்-ம வவும்-ஒன்றற்கொன்று மோனையாம்.——உம். அடல்வேண்டு மைந்தின்புலத்தை விடல்வேண்

டும் வேண்டியதெல்லாமொருங்கு-இதன்முதலடியில்-அகரத்திற்கு ஐகாரமோனையாயிற்று. மோனை-அனு-என்பனவொருபொருள்.

௨௫. எதுகைமோனையின்றிவரும் பாட்டுகளுமுளவோ—

அவ்வாறுவரும்பாட்டுகளுஞ் சிலவுளவாம்.—உம். பூத்த வேங்கைவியன் சினையேறி-மயிலினமகவு நாட-னன்னுதற்கொடிச்சி மனத்தகத்தோனே-எனவரும்.

௨௬. பாவென்பதியாது—

இரண்டுமுதலிய வடிகளாலாக்கப்பட்டு வெண்பாமுதலிய பெயர்பெற்றுவருவதாம்.

௨௭. அப்பாவானதெத்தனைவகைப்படும்—

வெண்பாவும்-அகவற்பாவும்-கலிப்பாவும்- வஞ்சிப்பாவும்-ஆகிய நான்கனோடு-மருட்பா-நூற்பா-வென்னு மிரண்டுங்கூடியவறு வகைப்படும். இவற்றுள்-முன்னான்குமே சிறப்புடையவாம்.

௨௮. அந்நான்குபாவிற்கும் வருமினங்களியாவை—

தாழிசை துறை விருத்தமென ஒவ்வொன்றற்கும்மூன்றும்.

௨௯. வெண்பாவிற்கிலக்கணமென்னை—

ஈற்றடிமுச்சீரடியாகவும்-ஏனையடி நாற்சீரடியாகவும்பெற்று-காய்ச்சீருமகவற்சீரும் வெண்சீர்வெண்டளையு மியற்சீர்வெண்டளையுங்கொண்டு-மற்றச்சீருந்தளையும்பெறாது-காசு- பிறப்பு- நாள் மலர்-என்னும் வாய்பாட்டான் முடிவதுபொதுவிலக்கணமாம்.

௩௰. அவ்வெண்பாவெத்தனைவகைப்படும்—

குறள்வெண்பா-நேரிசைவெண்பா - இன்னிசைவெண்பா-சிந்தியல்வெண்பா-பஃறொடைவெண்பா-எனவைந்துவகைப்படும்.

௩௧. குறள்வெண்பாவெவ்வாறுவரும்—

இரண்டடியாய்-ஒருவிகற்பத்தாலேனும்- இருவிகற்பத்தாலேனும்வரும்.—உம். உடையார்முன்னில்லார்போலேக் கற்றுங் கற்றார்கடையரேகல்லாதவர். இது ஒருவிகற்பக்குறள்வெண்பா-மலரெனமுடிந்தது.— கண்ணுதல் காட்சிகிடைத்தவிழிக்கில்லைவெல் கூற்றின்றேறுந்திறங்கொளல். இது-இருவிகற்பக்குறள்வெண்பா.

௯௨. நேரிசைவெண்பாவெவ்வாறுவரும்—

நான்கடியாயிரண்டாமடியிறுதிச்சீர் தனிச்சொல்லாய்வா வடிமுழுதுமோரெதுகையாகவேனும்-முன்னிரண்டு மோரெதுகையும் பின்னிரண்டு மற்றோரெதுகையுமாகவேனும்வரும். —— உ-ம். கூற்றங்குமைத்த குரைகழற்காற்குப்பிட்டுத்தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற்-சீற்றஞ்செய்-யேற்றின்றில்லையிடத்திருவெண்ணினியாம்-பொற்றிணைக்கும்பொருள். இது ஒருவிகற்பநேரிசைவெண்பா. —— எற்றான்புள்ளூர்ந்தானெயிலெரித்தான்மார்பிடந்தா-னீற்றானிழன்மணிவண்ணத்தான்-கூற்றொருபான் - மங்கையான்பூமகளான்வார்சடையா னீண்முடியான்-கங்கையா னீள்கழலான்காப்பு. இது இருவிகற்பநேரிசைவெண்பா - காசு-என்னும்வாய்பாட்டான் முடிந்தது.

௯௩. இன்னிசைவெண்பாவெவ்வாறுவரும்.—

ஒருவிகற்பத்தாலேனும் பலவிகற்பத்தாலேனு நான்கடியாய்த்தனிச்சொல்லின்றிவரும். —— துகடீர்பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டுப்-பகடுநடந்தகூழ்பல்லாரோடுண்க - வகடுறயார்மாட்டுநில்லாதுசெல்வஞ்-சகடக்காற்போலவரும் இது தனிச்சொல்லின்றியொருவிகற்பத்தான்வந்தவின்னிசைவெண்பா. ——கடற்குட்டம்போழ்வர்கலவர்படைக்குட்டம்-பாய்மாவுடையானுடைக்கிற்குந் தொமி- றவக்குட்டந் தன்னுடையானீந்து மவைக்குட்டங்-கற்றான் கடந்துவிடும் இது தனிச்சொல்லின்றிப்பலவிகற்பத்தான்வந்தவின்னிசைவெண்பா.

அன்றியும்-மழையின்றிமாநிலத்தார்க்கில்லை-மழையுந்-தவமிலாரில்வழியில்லைத்-தவமு-மரசிலாரில்வழியில்லை-யரசனு -மில்வாழ்வாரில்வழியில்-என்வடிதோறுந்தனிச்சொற்பெற்றுவருவதும். —— காதன்மகளிர் கலக்கக்கலக்குண்டு-பேதுற்றார்நெஞ்சம் பிழைத்தகன்றார்நன்னெஞ்சம்-போதம்படரும்புவியூரோ-தாதுண்டு- வண்டுறங்குபூஞ்சடையோன்வைப்பு-எனமூன்றாமடியிறுதி தனிச்சொற்பெற்றுவருவதும். —— அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்குந் - திங்களுஞ்சான்றோருமொப்பர்மற்-றிங்கண் -மறுவாற்றுஞ்சான்றோரஃதாற்றார்தெருமந்து-தெய்வமொருமாசுறின் - எனவிரண்டாமடியிறுதிதனிச்சொற்பெற்றுமூன்றுவிகற்பத்தான்வருவதும்-பிறவாறுநேரிசைவெண்பாவிற்சிறிதுவேறுபட்டுவருவனவு மின்னிசைவெண்பாவாம்.

௯௪. சிந்தியல்வெண்பாவெவ்வாறுவரும்—

மூன்றடியாய் நேரிசை வெண்பாவைப்போல வருவது நேரிசைச்சிந்தியல்வெண்பாவென்றும் - இன்னிசைவெண்பாவைப் போலவருவது இன்னிசைச்சிந்தியல்வெண்பாவென்றும்பெயர்பெற் றுவரும்.——உம். அறிந்தானையேற்றியறிவாங்கறிந்து- செறிந்தா ர்க்குச்செவ்வனுரைப்பச்-சிறந்தார் - சிறந்தமையாராய்ந்துகொண் டு-இது நேரிசைச்சிந்தியல்வெண்பா.——போற்றுமின்போற்றுமி ன்போற்றுமின்போற்றுமின் - கூற்றங்குமைக்க வருமுன்னமரங்கா- ளேற்றுகந்தான்பொற்றாளிணை - இது இன்னிசைச்சிந்தியல்வெண்பா.

௯௫. பஃறொடைவெண்பாவெவ்வாறுவரும்—

நான்கடியின்மிக்கபலவடிகளைப்பெற்றுவரும்.—-உம். வைய கமெல்லாங்கழனியாய்வையகத்துட் - செய்யகமேநாற்றிசையின்றே யங்கள் செய்யகத்துள்-வான்கரும்பேதொண்டைவளநாடுவான்கரு ம்பின் -சாறேயந்நாட்டிற்றலையூர்கள்சாறட்ட - கட்டியேகச்சிப்புற மெல்லாங்கட்டியுட் -டாரேனற்றமான சருக்கரைமாமணியே-யாரே ற்றான்கச்சியகம். இது எழடிப்பலவிகற்பப் பஃறொடைவெண்பா.

௯௬. குறள்வெண்பாவிற்கினம்யாவை—

குறள்வெண்செந்துறையுங் குறட்டாழிசையுமினமாம்.

௯௭. குறள்வெண்செந்துறையெவ்வாறுவரும்—

விழுமியபொருளு மொழுகியவோசையு முடையதாகி யெ னைத்துச்சீரானு மளவொத்தவிரண்டடியாய்வரும்——உம். ஆர்க லியுலகத்தும்மக்கட்கெல்லா-மோதலிற்சிறந்தன்றொழுக்கமுடைமை.

௯௮. குறட்டாழிசையெவ்வாறுவரும்—

நாற்சீரின்மிக்கபலசீரான்வருமடியிரண்டா யீற்றடிகுறைந் துவருவனவும் - விழுமியபொருளுமொழுகியவோசையுமின்றிக்குற ள்வெண்செந்துறையிற்சிதைந்துவருவனவும்-வேற்றுத்தளைவிரவிய குறள்வெண்பாவுமென மூன்றுவகைப்பட்டுவரும்.——உம் நண் ணுவார்வினைநையநாடோறுநற்றவர்க்கரசாயஞானநற் - கண்ணினுண் டியே யடைவார்கள்கற்றவரே. எம். அறுவர்க்கறுவரைப் பெற்றுங் கவுந்தி- மறுவறு பத்தினிபோல வையிரோ - எம். வண்டார்பூங்கோ தைவரிவளைக்கைத்திருநுதலாள்-பண்டையளல்லள்படி-எம். வரும்

௩௯. வெண்பாவினமூன்றனுள்வெண்டாழிசையெவ்வாறுவரும்--

மூன்றடியாய் முதலிரண்டடியு நாற்சீராயும் - ஈற்றடியொன்றும் வெண்பாவைப்போல முச்சீராயுமுடிவுபெற்றுவேற்றுத்தளைவிரவி வருவனவும் - சிந்தியல்வெண்பாவொருபொருண்மேல் - மூன்றடுக்கிவருவனவுமென விருவகைப்பட்டுவரும்.——உம். நண்பிதென்றுதீயசொல்லார் - முன்புநின்றுமுனிவுசெய்யா - ரன்புவேண்டுபவர். இது மூன்றடியால்வந்த வெண்டாழிசை.——அம்பேருண்கண்ணார்க்கழிந்தமடநெஞ்சே - கொம்பேறுடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்-வம்பேபிறந்தவிடல். வாளேருண் கண்ணார்க்கழிந்த மடநெஞ்சே- நீணாகம்பூண்டான் கழலிறைஞ்சாதென்கொலியாம்-வீணேபிறந்தவிடல். கோளாருண்கண்ணார்க்கழிந்தமடநெஞ்சே-யாளாகவாண்டான் கழலிறைஞ்சாதென்கொலியாம்- வாளாபிறந்தவிடல். இது சிந்தியல்வெண்பாவொருபொருண்மேன்மூன்றடுக்கிவந்த வெள்ளொத்தாழிசை.

௪௰. வெண்டுறையெவ்வாறுவரும்—

மூன்றடிமுதலேழடியீறாகப்பின்புநின்ற சிலவடிகளிற் சிலசீர்குறைந்துவரும்-இவற்றுளெல்லாவடியுமோரோசையாய்வருவனவன்றியு முன்பிற்சில வடிகளோரோசையாயும் பின்பிற்சிலவடிகண்மற்றோரோசையாயும் வருதலுமுண்டு.——உம். படர்தருவெவ்வினைத்தொடர்பாற் பவத்தோடரப்பவத்தொடர்பாற் படராநிற்கும்-விடலரும்வெவ்வினைத்தொடர் பவ்வினைத்தொடர்புக் கழிவுண்டோவினையேற்கம்மா- விடர்பெரிதுமுடையேன் மற்றென்செய்கேனென்செய்கே-னரவமரைக்கசைத்தவடிகேளோவடிகேளோ. இது நான்கடியாய்ப்பின்னிரண்டு மிருசீர்குறைந்துவந்த வோரொலிவெண்டுறை.—— கூற்றிருக்குமடலாழிக்குரிசின்முதலோ ரிறைஞ்சக்கொழுந்தேன்பில்கி-யூற்றிருக்குந்தில்லை வனத்தசும்பிருக்கும்பசும்பொன்மன்றத்தொருதாளூன்றி-வண்டுபாடச்சுடர்மகுடமாடப்பிறைத்-துண்டமாடப்புலித்தோலுமாடப்பகி-ரண்டமாடக்குலைந் தகிலமாடக்கருங்-கொண்டலோடுங்குழற்கோதையோடுங்கறைக்- கண்டனுடந்திறங்காண்மினோகாண்மினோ. இதுவேழடிவேற்றொலிவெண்டுறை.

௪௧. வெளிவிருத்தமெவ்வாறுவரும்—

மூன்றடியினாலேனு நான்கடியினாலேனு முற்றுப்பெற்று

அடிதோறுமிறுதியிலொருசொல்லே தனிச்சொல்லாகக்கொண்டு வரும். —— உம். அங்கட்கமலத்தலர்கமலமேயீரு - நீரோபோலும். வெங்கட்சுடிகைவிட்டரவின்மேயீரு - நீரோபோலுந். திங்கட்சடையீருந் தில்லைவனத்துள்ளீரோ - நீரோபோலும். இது மூன்றடியால்வந்த வெளிவிருத்தம். —— ஆவாவென்றேயஞ்சினராழ்ந்தா-ரொருசாரார். கூகூவென்றே கூவிளிகொண்டா-ரொருசாரார். மாமாவென்றேமாய்ந்தனர்நீந்தா-ரொருசாரார். ஏகீர்நாகீரொன்செய் துமென்றாரொருசாரார். இது நான்கடியால்வந்த வெளிவிருத்தம்.

௬௨. அகவற்பாவினிலக்கணமியாது—

நாற்சீரான்வருமளவடியதாகியு மியற்சீர்பயின்றும் அயற்சீர்விரவியுந் தன்றளை தழுவியும் பிறதளை மயங்கியுங்-கருவிளங்கனிகூவிளங்கனியென்னு மிருசீருங்கலவாது மூன்றுமுதலியபலவடிகளால் வருவதகவற்பாவனைத்திற்கும் பொதுவிலக்கணமாம்.

௬௩. அவ்வகவற்பாவெத்தனைவகைப்படும்—

நேரிசை யாசிரியப்பாவும்-இணைக்குறளாசிரியப்பாவும்- நிலைமண்டிலவாசிரியப்பாவும்-அடிமறிமண்டில வாசிரியப்பாவுமென நான்குவகைப்படும். அகவல் ஆசிரியம் ஒருபொருட்சொற்கள்.

௬௪. அந்நான்கனுள்-நேரிசை யாசிரியப்பா வெவ்வாறுவரும்—

ஈற்றயலடி முச்சீரடியும் - மற்றையடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாகப் பெற்றுவரும். —— உம். பெருந்துறைபுகுந்துபேரின்பவெள்ள-மூழ்கியபுனிதன் மொழிந்தவாசகமே-வாசகமதற்கு வாச்சியந் - தூசமேலல்குல்வேய்த்தோளிடத்தவனே -எனவரும்.

௬௫. இணைக்குறளாசிரியப்பாவெவ்வாறுவரும்—

ஈற்றடியு முதலடியுமொத்து நடுவடிகளி லொன்றும் பலவுமொருசீரும்பலசீருங்குறைந்துவரும். —— உம். நீரின்றண்மையுந் தீயின்வெம்மையுஞ் - சாரச்சார்ந்து-தீரத்தீருஞ் - சாரனுடன்கேண்மை-சாரச்சாரச்சார்ந்து - தீரத்தீரத்தீர்பொல்லாதே-எனவரும்.

௬௬. நிலமண்டிலவாசிரியப்பாவெவ்வாறுவரும்—

எல்லாவடியு மளவொத்த நாற்சீரடிகளாகப் பெற்றுவரும். —— உம். வேரல்வேலி வேர்க்கோட்பலவின் - சாரனுடசெவ்வியையாகுமதி-யாரஃதறிந்திசினோரே சாரற்-சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவ-ளுயிர்தவச்சிறி துகாமமோபெரிதே-எனவரும்.

௪௭. அடிமறிமண்டில வாசிரியப்பாவெவ்வாறுவரும் —

எல்லாவடியுமளவொத்து - எவ்வடியை முதனடுவிறுதியாகவுச்சரித்தாலுமோசையும்பொருளும்வழுவாது நிற்கக்கொண்டுவரும். ——உம். தீர்த்தமென்பது சிவகங்கையே - யேத்தருந்தலமெழிற் புலியூரே - மூர்த்தியம்பலக்கூத்தனதுருவே - என வரும்.

௪௮. அகவற்பாவின மூன்றுள் - ஆசிரியத் தாழிசை யெவ்வாறு வரும் —

எனைத்துச்சீரானுந் தம்முளளவொத்த மூன்றடியதாய்த் தனித்தேனும் - ஒருபொருண்மேன்மூன்றடுக்கியேனும்வரும். ——உம். சத்தமுமாகியச் சத்தத்தாற்பெறு - மத்தமுமாகலினனந்தன் கண்களே - யுத்தமனைந்தெழுத்துருவங்காண்பன. இது தனித்துவந்த ஆசிரியத்தாழிசை. ——கன்றுகுணிலாக்கனியுகுத்தமாயவ - னின்றுநம்மானுள் வருமேலவன்வாயிற் - கொன்றையந்தீங்குழல் கேளாமோதோழீ. பாம்புகயிறுக்கடல் கடைந்தமாயவ - னீங்குநம்மானுள்வருமேலவன்வாயி - லாம்பலந்தீங்குழல் கேளாமோதோழீ. கொல்லையஞ்சாரற் குருந்தொசித்தமாயவ - னெல்லிநம்மானுள்வருமேலவன்வாயின் - முல்லையந்தீங்குழல்கேளாமோதோழீ. இது ஒருபொருண்மேன்மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

௪௯. ஆசிரியத்துறையெவ்வாறுவரும் —

எனைத்துச்சீரானும் வருமடி நான்குடையதாயீற்றயலடிகுறைந்தேனும் - முதலடியுமூன்றாமடியுங்குறைந்தேனும்வரும். அவ்வாறுவருமிடத்து இடைமடங்கியுமடங்காதும்வரும். ——உம் கரைபொருகானியாற்றங் கல்லதரெம்முள்ளி வருவிராயி - னரையிருள்யாமத்துப்புலியேறஞ்சியகன்றுபோக - நரையுருமேறு நுங்கைவேலஞ்சு நும்மை - வரையரமங்கையர்வௌவுதலஞ்சுதும்வாரலையோ. இது நான்கடியாயீற்றயலடிகுறைந்துவந்தவாசிரியத்துறை. ——இரங்குகுயின்முழவா வின்னிசையாழ்தேனு - மரங்கமணிபொழிலாவாடும் போலுமிளவேனி - லரங்கமணிபொழிலாவாடுமாயின் - மரங்கொன்மணந்தகன்றார் நெஞ்சமென்செய்ததிளவேனில். இது நான்கடியதாயிடையிடைகுறைந்திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை.

௫௰. ஆசிரியவிருத்தமெவ்வாறுவரும் —

அளவொத்த கழிநெடிலடி நான்கினால்வரும்.

உம். விடஞ்சூழர்வினிடை நுடங்கமின்வாள்வீசிவினையர்வேங்-கட
ஞ்சூழ்நாடன்காளிங்கன்கதிர்வேல்பாடுமாதங்கி - வடஞ்சேர்கொங்
கைமலைதாந்தாம்வடிக்கண்ணீலமலர்தாந்தாந் - தடந்தோளிரண்டு
ம்வேய்தாந்தாமென்னுந்தன்கைத்தண்ணுமையே. இது அறுசீர்க்
கழிநெடிலடியால்வந்த ஆசிரியவிருத்தம்.——கோமுனிவருக்குமரி
தாய் முதுமறைப்பனுவல்கூறியபாப்பிரமமா - மோமெனுமெழுத்
தின்வடிவாய்நடநவிற்றுபுலியூரன்மகுடச்சடிலமேன் - மாமதியினை
த்தனதுகோடென்வெடுப்ப மதமாமுகன்முகக்கைதொடவத் - தாம
தியணிப்பகையெனுவரநதிப்புகவோர் தோணியென விட்டகனுமே.
இது எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.——அருவருக்கு மு
லகவாழ் வடங்கநீத்தோர்க்கானந்தப்பெருவாழ்வாமாடல்காட்ட -
மருவருக்கன்மதிவளிவான்யமானன்றீ நீர்மண்ணெனுமெண்வகையு
றப்பின்வடிவுகொண்ட - வொருவனுக்குமொருத்திக்கு முருவொன்
று லவ்வுருவை யிஃதொருத்தனென்கோவொருத்தியென்கோ - விரு
வருக்குமுரித்தாக வொருவவொன்றோரியற் சொவிலதெனின்யான் ம
ற்றென்சொல்கேனே. இது எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்த
ம்.——வளங்குலாவருமணங்கனார்விழிமயக்கிலேமுலைமுயக்கிலே வி
ழுமாந்தர்காள் - களங்குலாமுடலிறந்துபோ யிடுகாடுசேர்முனம் வீ
டுசேர்வகைகேண்மினோ - துளங்குநீள்கழறளங்கவாடல்செய்சோதி
யா னணிபூதியானுமைபாதியான் - விளங்குசேவடியுளங்கொளீ மோம
ன்விடுத்தபாசமுமடுத்தபாசமும்விலக்குமே. இது ஒன்பதின்சீர்க்க
ழிநெடிலடியாசிரியவிருத்தம்.——கைத்தலத்தழற்கணிச்சி வைத்தி
டப்புறத்தொருத்தி கட்கடைப்படைக்கிளைத்த திறலோரா - முத்தலை
ப்படைக்காத்தெமத்தர்சிற்சபைக்குனிற்கு முக்கணைக்கருக்கொருத்
தர்மொழியீரோ - நித்திலத்தினைப்பதித்தகச்சறுத்தடிக்கனத்து நிற்
குமற்புதத்தனத்தினிடையேவே - ளத்திரத்தினிற்றெடுத்து விட்டுநெ
ட்டயிற்கணித்திலக்கணுற்றிடச்செய்விக்கும்திதானே. இது ஒன்ப
தின்மிக்கசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

௫௧. கலிப்பாவிற்கிலக்கணமென்னை.

வெண்சீர்மிகப்பெற்று மாச்சீரும்விளங்கனிச்சீரும்பெருது
பிறசீர்களுஞ் சிறுபான்மைகலந்து கலித்தளையுமயற்றளையுந் தழுவி-
தரவு - தாழிசை - அராகம் - அம்போதரங்கம் - தனிச்சொல் - சுரிதகம்-
என்னு மாறுறுப்பினுளேற்பனகொண்டு நாற்சீரடியால்வருவதுகலி
ப்பாவினத்திற்கும் பொதுவிலக்கணமாம்.

௫௭. அக்கலிப்பாவெத்தனைவகைப்படும்—

ஒத்தாழிசைக்கலிப்பாவும்- வெண்கலிப்பாவும்-கொச்சகக்க
லிப்பாவுமென மூன்றுவகைப்படும்.

௫௮. ஒத்தாழிசைக்கலிப்பா வெத்தனைவகைப்படும் அவையெவ்
வாறுவரும்—

வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா - அம்போதரங்க வொத்
தாழிசைக்கலிப்பா-நேரிசையொத்தாழிசைக்கலிப்பா - எனமூன்று
வகைப்படும்.——அவற்றுள்வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா-ஒரு
தாவு-மூன்றுதாழிசை- அராகம்- அம்போதரங்கம்- தனிச்சொல்-சுரி
தகம்-என்னுமிவ்வாறுறுப்பு மொன்றன்பின்னொன்றுறக்கொண்டுவரு
ம் அராகமெனினும்வண்ணகமெனினுமொக்கும் அசையடியெனி
னும்- அம்போதரங்கமெனினுமொக்கும்.——அராகவுறுப்பானது
அளவடிமுதலெல்லாவடிகளானு நான்கடிமுதலெட்டடியளவாகவரு
ம்.——அம்போதரங்கவுறுப்பானது-நாற்சீரடியாகிய ஈரடியாலி
ரண்டும்-ஓரடியானான்கும் முச்சீரடியாலெட்டும்-இருசீரடியாற்பதி
னாறுமாகவரும். சிறுபான்மைமுச்சீரடி நான்கும்-இருசீரடியெட்டு
மாகவும்வரும்.—— உம். தொல்லுலகம்படுசுடிகைச் சுடர்மணிவிள
க்கேந்தும்-பல்பொறியபடவரவுமடுபுலியும்பணிசெய்ய-வந்தரது
ந்துமிழுமுழங்கவமரர்மலர்மழைசிந்த - விந்திரனுமலரவனுங்கரியவ
னுமேத்தெடுப்பச்-சூடகத்தளிர்ச் செங்கைத்துணைவி துணைக்கண்ப
னிப்ப-வாடகத்திருமன்றத்தனவரதநடஞ்செய்வோய். இதுதரவு-மு
ன்மலையுங்கொலைமடங்கலீருரியுமும்மதத்தவன்மலையுங்கடமலையின்
முடையுடலின்வன்றோலும் பொன்மலையின் வெண்முகிலுங்கருமுகி
லும்போர்த்தென்னவின்மலையும் புயமலையின் புறமலைபவிசித்தனை
யே-கடநாகமெட்டும் விடங்காலுகமேலொட்டுந் தடநாகமவையெ
ட்டுந்தரித்துளபூந் துகிலொன்றுமுடலுகவடல்புரியுங்கொடுவரியி னு
டுப்பொன்று மடலுக வரவல்குற்கணிகலையா வசைத்தனையே - வரு
நீலப்புயன்மல ரமலரிதழிக்கண்ணியையு மருநீலமுயற்களங்கமுகன்
றமதிக்கண்ணியையுங் கருநீலக்கண்ணியுமைசெங்கைவருகங்கையெ
னுந் திருநீலக்கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே-
இவைமூன்றுந் தாழிசை. கறைவிட்முககவெரிகனல்விழியொடுமிளிர்
பிறையெயிறொடு மிடல்பெறுபகடொடு மடலெறுழ்வலியொடுமுரு
மிடியெனவருமொருமறலிய துயிர்கொளமலர்தருகழலினை- யிலவித

ழ்மதிநுதலிரதியோடிரதமதுலைவறநடவிடுமொருவனும் வெருவரவலைகடனெடுமுரசதிர்தரவெதிர்தருசிலைமதனனையடல்செயுநுதல்விழியினை - யுலகமோடுயிர்களுமுலைதரவலம்வருமலர்மகள் கொழுநனுமகபதிமுதலியபுலவருமடிகளோர் புகலெனமுறையிடவலைகடல் விடமுனமமுதுசெய்தருளினை - விசையிலெம்மிறைவியும் வெருவாவிரசித வசலமதசைதரவடல்புரிதசமுக நிசிசரன்மணிமுடி நெறுநெறுநெறுவென வசையில்பொன்மலரடி மணிவிரனிறுவினை. இவை நான்கும் அராகம். அருவமுமுருவமுமாகிநின்றுமவ்வருவமுமுருவமுமகன்றுநின்றனை - சொல்லொடுபொருளுமாய்த் தோன்றிநின்றுமச்சொல்லையும் பொருளையுந் துறந்துநின்றனை. இவை நாற்சீரடியிரண்டம்போதரங்கம். அந்நலம்விழைந்தவர்க் கறமுமாயினை - பொன்னலம்விழைந்தவர்பொருளுமாயினை - யின்னலம்விழைந்தவர்க்கின்பமாயினை - மெய்ந்நலம்விழைந்தவர் வீடுமாயினை. இவை நாற்சீரோடியால்வந்த நான்கம்போதரங்கம். முத்தொழிலின் வினைமுதனீ மூவர்க்குமுழுமுதனீயெத்தொழிலுமிறந்தோய்நீயிறவாததொழிலினைநீ யிருவிசும்பின்மேலோய்நீ யெழின்மலரின்மிசையோய்நீ யரவணையிற்றுயின்றோய்நீ யாலின்கீழமர்ந்தோய்நீ. இவைமுச்சீரோரடியெட்டம்போதரங்கம். பெரியைநீசிறியைநீ பெண்ணுநீ யாணுநீ யரியைநீ யெளியைநீ யறமுநீ மறமுநீ விண்ணுநீ மண்ணுநீ வித்துநீ விளைவுநீ பண்ணுநீ பயனுநீ பகையுநீ யுறவுநீ. இவை யிருசீரோரடி பதினாறம்போதரங்கம் - எனவாங்கு. இது தனிச்சொல். கற்பனைகழன்றநின் பொற்கழலிறைஞ்சுதும் வெண்மதிக்கடவுண் மீமிசைத்தவழ்தரத் தண்முகிற்குலங்கடாழ்வுறப்படிதவிற்செங்காலன்னமும்வெண்மருப்பேனமுங் கீழ்மேலுருவ வாரழற்பிழம்பாய்நின்ற நின்றன்மையை யுணர்த்தும்பொன்றிகழ் புலியூர்மன்றுகிழவோனே. இது சுரிதகம். இவ்வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவினுள் - தரவுமுதலியவாறுறுப்புங்குறைவின்றி வந்தன.

அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாமேற்சொல்லப்பட்ட தாழிசைமுதலிய வாறனுள் - அராகமொழிந்த வைந்துறுப்பையுங் கொண்டுவரும் - இதற்குதாரணமேற்காட்டியவண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவினுள் அராகமொழித்துக்காண்க.

நேரிசையொத்தாழிசைக்கலிப்பா தரவுமுதலியவாறனுள் அராக

கம்-அம்போதரங்கமொழிந்த நான்குறுப்பையுங் கொண்டுவரும்-இதற்குதாரணம். அவ்வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவினுள் அராகத்தையும் அம்போதரங்கத்தையுமொழித்துக்காண்க.

௫௪. வெண்கலிப்பாவெத்தனைவகைப்படு மெவ்வாறுவரும்—

வெண்கலிப்பாவும்-கலிவெண்பாவுமென விருவகைப்படும். அவற்றுள்வெண்கலிப்பா-கலித்தளைவிரவியீற்றடிமுச்சீரான்முடியும். ——உம். சேல்செய்தமதர்வேற்கட்சிலைசெய்தசுடிகைநுதன்-மால்செய்தகுழற்கோதைமகிழ்செய்யநடஞ்செய்யுந் -தருணவிளம்பிறைக்கண்ணித்தாழ்சடையெம்பெருமானின்-கருணைபொழிதிருநோக்கிற்கனியாதகன்னெஞ்சம்-வாமஞ்சான் மணிக்கொங்கைக்கொசிந்தொல்குமருங்குலவர்-காமஞ்சால்கடைநோக்கிற்கசிந்துருகாநிற்குமா-லவ்வண்ணமாறிநிற்றலகமென்று லகமகம்விட்டெவ்வண்ணமாறிநிற்பதின்று. இது வெண்கலிப்பா.

கலிவெண்பா-வெண்டளைதழுவி யீற்றடி முச்சீரான் முடியும். ——உம். சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்யாமாடு-மணற்சிற்றிற்காலிற்சிதையா வடர்ச்சியபொற்-கோதைபரிந்து வரிப்பந்துகொண்டோடி - நோதக்கசெய்யுஞ்சிறுபட்டிமேலோர்நா - ளன்னையும்யானுமிருந்தேமாவில்லுளே - யுண்ணுநீர் வேட்டேனெனவந்தாற்கன்னை-யடர்பொற்சிரகத்தால்வாக்கிச்சுடரிழா-யுண்ணுநீரூட்டிவாவென்றாளென்யானுந் - தன்னையறியாது சென்றேன்மற்றென்னை-வளைமுன்கைபற்றிநலியத் தெருமந்திட் - டன்னாயிவனொருவன்செய்ததுகாணென்றேனா - வன்னையலறிப்படர்தரத் தன்னையா-னுண்ணுநீர்விக்கினனென்றேனாவன்னையுந் - தன்னைப்புறம்பழித்துநீவமற்றென்னைக் - கடைக்கண்ணாற்கொல்வான்போனோக்கி நகைக்கூட்டஞ்-செய்தானக்கள்வன்மகன். இது கலிவெண்பா.

௫௫. கொச்சகக்கலிப்பாவெத்தனைவகைப்படு மெவ்வாறுவரும்—

தரவுக்கொச்சகக்கலிப்பா-தரவிணைக்கொச்சகக்கலிப்பா - சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா-பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா -மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா-எனவைந்துவகைப்படும். அவற்றுள்-தரவுக்கொச்சகக்கலிப்பா-தரவு - ஒன்றுவருவதாம்.——உம். அஞ்சம்போனடை. இது தரவுக்கொச்சகக்கலிப்பா. இது இவ்வாறுதனித்துவருதலன்றித்தனிச்சொல்லுஞ்சுரிதகமும்பெற்றுவருதலுமுண்டு.

தரவிணைக்கொச்சகக்கலிப்பா - இரண்டு தரவைக்கொண்டுவருவதாம். — உம். வடிவுடைநெடுமுடிவானவர்க்கும்வெலற்கரிய-கடிபடு நறும்பைந்தார்க்காவலர்க்குங்காவலனுங்-கொடிபடுவரைமார்பிற் கூடலார்கோமானே - தரவு-எனவாங்கு- தனிச்சொல்- துணைவளைத்தோள்இவண்மெலியத்தொன்னலந் தொடர்புண்டாங் - கிணைமலர்த்தாரருளுமேலிது விதற்கோர்மாறென்று - துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக்கருதாரோ - தரவு- அதனால் - தனிச்சொல்- செவ்வாய்ப்பேதையிவடிறத்-தெவ்வாறுங்கொ லிஃதெண்ணியவாறே. இது- இடைஇடையே தனிச்சொற்பெற்றாசிரியச்சுரிதகத்தான் முடிந்தது.

சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா - சிலதாழிசைகளோடு பிறவுறுப்புக்களையுங் கொண்டுவரும் —— உம். பரூஉத்தடக்கை மதயானைப்பணையெருத்தின் மிசைத்தோன்றிக் - குரூஉக்கொண்டவெண்குடைக்கீழ்க்குடைமன்னர்புடைசூழப் - படைப்பரிமான்றேரினொடும்பரந்துலவுமறுகினிடைக்-கொடித்தானையிடைப்பொலிந்தான்கூடலார்கோமானே. இது தரவு. ஆங்கொருசார் - உச்சியார்க்கிறைவனுலகமெலாங்காத்தளிக்கும் பச்சையார்மணிப்பைம்பூட் புரந்தரனாப்பாவித்தார் வச்சிரங்காணாதகாரணத்தான்மயங்கினரோ - ஆங்கொருசார் - அக்காலமணிநிரைகாத்தருவரையாற் பனிதவிர்த்து - வக்கிரனைவடிவழித்தமாயவனாப்பாவித்தார் - சக்கரங்காணாதகாரணத்தாற் சமழ்த்தனரோ - ஆங்கொருசார் - மால்கொண்டபகைதணிப்பான் மாத்தடிந்துமயங்காச்செங் - கோல்கொண்டசேவலங்கொடியவனாப்பாவித்தார் - வேல்கொண்டதின்மையால் விம்மிதராய்நின்றனரோ. இவைமூன்றுந்தாழிசை - அஃதான்று - தனிச்சொல் - கொடித்தேர்த்தோன்றல்கொற்கைக்கோமானின் புகழோருவன் செம்பூட்சேஎயென்றுநனியறிந்தனர்பலரோதானு - மைவரையொருவனென்றறியலாகா - மைவரையரனைமடங்காவென்றி - மன்னவன்வாழியென்றேத்தத் - தென்னவன்வாழிதிருவொடும்பொலிந்தே. சுரிதகம். இது தனிச்சொலிடையிடைபெற் றொருதரவு மூன்றுதாழிசையுஞ் சுரிதகமுங்கொண்டு நேரிசையொத்தாழிசைக்கலியிற்சிறிதுவேறுபட்டுவந்தது.

பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா - பலதாழிசைகளோடு மற்றவுறுப்புக்களையுங்கொண்டுவரும் —— மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா தரவு - தாழிசை - அராகம் - அம்போதரங்கம் - தனிச்சொல் - சுரிதகம் - என்னும் ஆறுறுப்புமிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் முறழ்ந்தும் பலவாறுமயங்கிவரும் - இவ்விரண்டிற்கு முதாரணம் வந்துழிக்காண்க.

௫௬. மேற்சொல்லப்பட்ட கலிப்பாவிற்குறுப்பாகவருந் தரவுதாழிசைகளுக்கு அடிவரையறையாமாறென்னை—

வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா வீம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாக்களுக்குத்தரவு ஆறடியால்வரும்- மற்றைக்கலிப்பாக்களுக்குத்தரவு மூன்றடி-முதலியபலவடிகளால்வரும்——தாழிசையொன்றற்கடி யிரண்டேனு மூன்றேனு நான்கேனும்வரும்.

௫௭. கலிப்பாவின மூன்றனுட் கலித்தாழிசை யெவ்வாறுவரும்—

இரண்டுமுதலியபலவடிகளாலீற்றடிமிக்கு ஏனையடி தம்முளளவொத்துநிற்பத்தனித்தேனுமொருபொருண்மேன் மூன்றடுக்கியேனும்வரும் ——உம். இருகூற்றுருவத்திருந்தண்பொழிற்றில்லை-யொருகூற்றின்கூத்தையுணராய் மடநெஞ்சே- யொருகூற்றின்கூத்தை யுணராயெனின்மற்றப்-பொருகூற்றந்தோற்றப் புலம்பேல்வாழி மடநெஞ்சே. இது ஈற்றடிமிகுந்து தனித்துவந்த நான்கடிக்கலித்தாழிசை.——பூண்டபறையறையப்பூதமருள-நீண்டசடையானாடுமேயென்ப-மாண்டசாயன்மலைமகள்காணவேகாணவே-எனச்சிறுபான்மை ஏனையடிகளொவ்வாது வருதலுமுண்டு. ——செல்லார்பொழிற்றில்லைச்சிற்றம்பலத்தெங்கள் - பொல்லாமணியைப் புகழ்மினோவம்மின்புலவீர்காள் - மூத்தேவர்தேவைமூகிலூர்திமுன்னனை-பித்தேளிர்போலப்புகழ்மினோ வம்மின்புலவீர்காள்- ஆங்கற்பகக்கன்றளித்தருளுந்தில்லைவனப்-பூங்கற்பகத்தைப் புகழ்மினோவம்மின்புலவீர்காள். இது ஒருபொருண்மேன் மூன்றடுக்கியீற்றடிமிக்குவந்த கலித்தாழிசை.

௫௮. கலித்துறையெவ்வாறுவரும்—

ஐஞ்சீரடி நான்கினைக்கொண்டுவரும்.——யானுந்தோழியுமாயமுமாடுந் துறைநண்ணித்- தானுந் தேரும் பாகனும் வந்தென்னலனுண்டான் - றேனும்பாலும்போல்வனசொல்லிப்பிரிவானேற்-கானும்புள்ளுங் கைதையுமெல்லாங்கரியன்றே.

௫௯. கலிவிருத்தமெவ்வாறுவரும்—

நாற்சீரடி நான்கினைக்கொண்டுவரும். —— உம். வேய்தலைநீடிய வெள்ளிவிலங்கலி-னாய்தலிருஞ்சுட ராழியினன்றமர்-வாய்தலினின்றனர் வந்தெனமன்னன்முன்னீதலைசென்றுரைநீள்கடைகாப்போய்-எனவரும்.

௬௰. மேற்சொல்லப்பட்ட கலிப்பாவினுங் கலித்துறையினும் வேறுபட்டுவருங்கலிப்பாவுங் கலித்துறையுமுளவோ—

உளவாம் ——அவை கட்டளைக்கலிப்பாவுங்-கட்டளைக்கலித்துறையுமெனப்பெயர்பெறும். —— அவற்றுள் - கட்டளைக்கலிப்பா - முதற்கண்மாச்சீர்பெற்று நாற்சீரான்வருவ தரையடியாகவும் அஃதிரட்டிகொண்டதோரடியாகவும் அவ்வடி நான்குகொண்டுவரும்- அரையடிக்கெழுத்து முதலசைநேராயிற்பதினொன்றும்- நிரையாயிற்பன்னிரண்டுமாம்.——உம் சொல்வினீரிவராசைப்பட்டாரென்று சொன்னசொற்பொருள்வேறுகொண்டையையோ - புல்லுவாரெவ்விதத்தினு மென்றுளம் பூரித்தேயிருந்தேன் மடமங்கைமீர் - செல்லுலாம்பொழிற்கூவநகருறைதிருவிற்கோலரினுமருளாமையாலல்லதே துதிகம்பரனொன்பொருளறையின் வன்கண்ணராவனொன்மட்டுமே.——கட்டளைக்கலித்துறை- முதற்சீர்நான்கும் வெண்டளைபிழையாமனிற்பக்கடையொருசீரும் விளங்காயாகி வருமைஞ்சீரடிநான்குகொண்டுவரும். அதுவிளங்காயாய்வருவதன்றிச் சிறுபான்மை வேறுபட்டும்வரும்-ஓரடிக்கெழுத்துமுதலசைநேராயிற் பதினாறும் நிரையாயிற் பதினேழுமாம்.—— உம். சிலைமலிவாணுத லெங்கையதாகமெனச்செழும்பூண் மலைமலிமார்பி னுதைப்பத்தந்தான்றலைமன்னர்தில்லை யுலைமலிவேற்படை யூரனிற்கள்வரில்லென்னவுன்னிக்கலைமலிகாரிகை கண்முத்தமாலைக ணுழ்ந்தனவே. எனவரும்.

௬௧. வஞ்சிப்பாவினிலக்கணம்யாது—

பெரும்பாலுந் தன்றளையுஞ் சிறுபான்மை பிறதளையுந்தழுவியிருசீரடியாலேனு முச்சீரடியாலேனு மூன்றுமுதவிய பலவடிகளைக்கொண்டு தனிச்சொற்பெற்று அகவற்சுரிதகத்தான் முடிவதாம்.——உம். பூந்தாமரைப்போதலமரத்-தேம்புனலிடைமீன்றிரிதரும்-வளவயலிடைக்களவயின்மகிழ்-வினைக்கம்பலைமனைச்சிலம்பவு-மனைச்சிலம்பியமணமுரசொலி-வயற்கம்பலைக்கயலார்ப்பவும்-நாளும்-மகிழுமகிழ்தூங்கூரன்புகழ்தலாணப் பெருவண்மையனே. இது குறளடி வஞ்சிப்பா. எறிவெண்டிரைக்கடல்சூழ்புவியெளிதெய்தினுமிறவந்திடைப்பொழுதய்ந்திடவுளதென்னினுமறிவின்றிறத்துயர்ந்தோர்படிறிசைகின்றிலர் - அதனால்-முன்வருமின்பினுமுறைப்படநாடிற்பின்வருமிடர்மிகப்பெரிதாமெனவே. இதுசிந்தடிவஞ்சிப்பா.

௬௨. வஞ்சியினமூன்றனுள் வஞ்சித்தாழிசையெவ்வாறுவரும்—

இருசீரடி நான்குகொண்டதொருபொருண்மேன் மூன்றடுக்கி வரும்.——உம். பிணியென்றுபெயராமே-திணிநின்றுதவஞ்செய்வீ-ரணிமன்றலுமைபாகன்-மணிமன்றுபணியீரோ-என்னென்றுபெயராமே-கன்னின்றுதவஞ்செய்வீர்-நன்மன்றலுமைபாகன்-பொன்மன்றுபணியீரோ-அரிதென்றுபெயராமே-வரைநின்றுதவஞ்செய்வீருருமன்றலுமைபாகன்-திருமன்றுபணியீரோ. இதுவஞ்சித்தாழிசை.

௬௩. வஞ்சித்துறையெவ்வாறுவரும்:—

இருசீரடி நான்குகொண்டுதனித்துவரும்.——உம். போறிவன்றுன்-சாரவிருந்த-வூரினுமில்லென்-றூரவிகழ்ந்தே-எனவரும்.

௬௪. வஞ்சிவிருத்தமெவ்வாறுவரும்—

முச்சீரடி நான்குகொண்டுவரும்.——உம். சாந்தமேறிய தாழ்மொழி-காய்ந்தவேவிருகாதிலும்-போந்தபோன்றுபுகுந்திட-மாந்தராகுலமன்னினர்-எனவரும்.

௬௫. மருட்பாவெவ்வாறுவரும்—

முன்னர்ச்சிலவெண்பாவடிகளும் பின்னர்ச்சில வகவலடிகளுங்கூடிவரும்.——உம். அரசியல்கோடா தானடியார்ப்பேணு-மரசியரூனவேன்மன்னர்-பரசோன்-கழலிணைப்பொதுவில்காப்பாக-வழிவழிசிறந்துவாழியோபெரிதே-எனவரும்.

௬௬. நூற்பாவெவ்வாறுவரும்—

சிலவகையெழுத்துக்களாலாகியசொற்றொடராய்ப்பல்வகைப் பொருள்களைவிளக்கித்திட்பமு நுட்பமுமமைந்துவரும்.——உம். எழுத்தெனப்படுவ வகாரமுத னகாரவிறுவாய்முப் பஃதென்ப சார்ந்துவரன்மரபின்மூன்றலங்கடையே-எனவரும்.

௬௭. கூனென்பதென்னை—

வெண்பாமுதலியசெய்யுட்களின் முதலடியி னேனோவிடத்திப் பொருள்படத்தனித்துநிற்பது கூனும். அதுவஞ்சிப்பாவின் முதற்கணன்றி யிடையிலுமிறுதியிலும் வரும். உம். உதுக்காண்-சுரந்தாருவண்கைச் சுவானமாப்பூதன் பரந்தாணுப்பல் புகழைப்பாடி-எம். அவற்றுள்-அ இ உ எ ஒ குறிலைந்தே-எம். வரும்.

யாப்பிலக்கணமுற்றிற்று.

# அணியிலக்கணம்.

௧. அணியென்பதியாது—

செய்யுட்கழகு செய்துநிற்பதாம்.

௨. அவ்வணி யெத்தனைவகைப்படும்—

பொருளணியுஞ் சொல்லணியுமெனவிருவகைப்படும் - இவ்விரண்டினும் பொருளணியேசிறப்புடைத்தாம்.

௩. அப்பொருளணியெத்தனை—

உவமையணிமுதல்-ஏதுவணி இறுதியாகநூறும்-அவற்றிற்கு முறையேபெயரும்விதியுமுதாரணமும்வருமாறு.

உவமையணி-அஃதாவது-இரண்டுபொருள்களுக்குஒப்புமையைவிளங்கச்சொல்லுதலாம். இதனை வடநூலர்உபமாலங்காரமென்பர்-அது விரியுவமையுந் தொகையுவமையுமெனவிருவகைப்படும் அவற்றுள்——விரியுவமையாவது-உபமானமும்-உபமேயமும்பொதுத்தன்மையும்-உவமையுருபும்- ஆகியநான்கும் விரிந்துவருவதாம் உம். பால்போலுமின்சொற்பவளம்போற்செந்துவர்வாய்ச்சேல்போற்பிறழுந்திருநெடுங்கண்மேலாம்புயல்போற்கொடைக்கைப்புனலுடன்கொல்லியயல்போலும் வாழ்வதவர். இதில்- பால்போலுமின்சொல்-என்புழி: பால்-உபமானம். சொல்-உபமேயம். இனிமை-பொதுத்தன்மை. போலும்-உவமையுருபு.——தொகையுவமையாவது - உபமேயமொழிந்தமூன்றனுள் - ஒன்றும்பலவுந்தொகுதலாலாகியவேழுமாம். அவை உருபுத்தொகை-பொதுத்தன்மைத்தொகை - பொதுத்தன்மையுருபுத்தொகை - உவமானத்தொகை-உருபுவமானத்தொகை- பொதுத்தன்மையுவமானத்தொகை- பொதுத்தன்மையுருபுவமானத்தொகை- எனப்பெயர்பெறுமென்றறிக. உம். புயற்கருங்குழலாள். காந்தட்போதினைநிகர்க்குங்கையாள்.

கயற்கணாள். முகத்திற்கொப்பாங்காந்திகொள்பொருளுண்டோ. வாய்நயச்சிவப்புளதொன்றில்லை. நாசிபோல்வதுமற்றுங்குங். குயிற்கிளவியினாள். பாவைகுணத்தையார்குறிக்கவல்லார். இதில் அவ்வேழுமுறையேகாண்க. காந்திகொள்பொருளுண்டோவென்புழி-பொருளுலகத்திலுளதாகவுமில்லையெனலாம்-உபமானத்தொகையாயிற்று. குயிற்கிளவியினாள்-என்புழி-குயிலினதிசைபோலுமதாமாகிய கிளவியினாள்-எனவிரித்துரைக்கவேண்டுதலால்- குயிலினதிசைஉபமானமாம். ——வடநூலார் - பொதுத்தன்மையைச் சாதாரணதருமமென்றும்-உவமையுருபை - உபமாவாசகமென்றும்-ஒப்புமையைச்சாமியமென்றும்-சாதுர்சியமென்றுங்கூறுவர்.——போலப்புரைய வொப்பவுறழ மானக்கடுப்பநேர நிகரவியையவேய்ப்பவன்னவின்னவென்பவும் பிறவுமுவமத்துருபே. . . . . . . . . . . . ௧.

இயைபின்மையணி. அஃதாவது-ஒருவாக்கியத்தில் ஒருபொருளையேயுபமானமாகவுமுபமேயமாகவுஞ்சொல்லுதலாம். இதனைவடநூலார்-அநந்வயாலங்காரமென்பர்-தண்டியாசிரியர்பொதுநீங்குவமையென்பர். உம். தேனேயனைய மொழிச்சேயிழையாள்செவ்வியினாற்றானேயுவமைதனக்கு. இதில்-இப்பொருளுக்கொப்பிரண்டாவதொன்றில்லையென்பதுகருத்து. . . . . . ௨.

புகழ்பொருளுவமையணி-அஃதாவது - இரண்டுவாக்கியங்களுள். முன்னதிலுபமானமாகச்சொல்லப்பட்டதைப்பின்னதிலுபமேயமாக்கியும் - உபமேயமாகச்சொல்லப்பட்டதையுபமானமாக்கியுஞ்சொல்லுதல். இதனைவடநூலார் உபமேயோபமாலங்காரமென்பர் - தண்டியாசிரியரிதரவிதரமென்பர். உம் நின்புடையறநிகர்த்தோங்குநீள்பொரு-ளின்புடைப்பொருணிகர்த்தோங்குமெய்தறந்-தன்புடைக்கடலுடைத்தரணியோர்க்கெலா-மன்புடைமுறைசிறந்தளிக்குமண்ணலே - எனவரும் —— அன்றியும்-களிக்குங் கயல்போலுநின்கணின்கண்போற்களிக்குங்கயலுங்கனிவாய்த்தளிர்க்கொடியே தாமரைபோன்மலரு நின்முக நின்முகம்போற் றாமரையுஞ் செவ்விதரும்-எனத்தொன்றுதொட்டுவரும்-உபமானோபமேயங்களை யவ்வாறுசொல்வதுமது. இதன்கருத்து மூன்றாவதொப்பதொன்றின்றென்பதாம்.——உபமேயம்-வர்ணியமென்றும்-புகழ்பொருளென்றும்-புனைவுளியென்றும்-உபமானம். அவர்ணியமென்றும்-அல்பொருளென்றும்-புனைவிலி யென்றுஞ்சொல்லப்படும். ௩.

எதிர்நிலையணி. அஃதாவது-உபமானத்திற்குக்குறைவுதோன்றச்சொல்லுதலாம். இது உவமையணிக்கு எதிரியதாய் நிற்றலினப்பெயர்த்து. இதனைவடநூலார்பிரதீபாலங்காரமென்பர். அது ஐந்துவகைப்படும். அவற்றுள்.——௧-வது. உலகத்திலுபமானமாய்ப்பிரசித்தமாக வழங்குகின்றபொருளை யுபமேயமாக்கிச்சொல்லுதல். உம். அதிர்கடல்சூழ்வையத் தணங்குமுகம்போல மதியுஞ்செயுமே மகிழ்.——௨-வது. அவர்ணியத்தையுபமேயமாகக்காட்டிவர்ணியத்தையிகழ்தல். உம். பொன்செருக்கைமாற்றுமெழிற் பூவைதிருமுகமே யுன்செருக்குப்போதுமொழிகவினிக்- கொன்செருக்கு-மிக்கம்கரக்கடற்பூ மிக்கண் மகிழ்செயலா - லொக்குமதியுமுனை. ——௩-வது. வர்ணியத்தை யுபமேயமாகக்காட்டி அவர்ணியத்தையிகழ்தல். உம். ஆற்றலுறுகொலையிலாவினைகீகொப்பென்றந்தோ - கூற்றுவநீவீண்செருக்குக்கொள்கின்றாய்-சாற்றுவல்கேள் - வெண்டிரைசூழ்ஞாலமிசை யுனக்கொப்பாகவே- யொண்டொடிதன்னீள்விழியுமுண்டு.——௪-வது வர்ணியத்தோடு அவர்ணியத்திற்கு ஒப்புமையின்றெனச்சொல்லுதல். உம். இறைவிமதுரமொழிக்கின்னமுதொப்பாமென் - றறைவதபவாதமாம்.——௫-வது. உபமானத்தைவீணென்றுசொல்லுதல். உம். செங்கயற்கணுயுன்றிருமுகத்தைப்பார்ப்பவர்க்குப்-பங்கயத்தா லுண்டோபயன். . . . . . . . ௬.

உருவகவணி. அஃதாவது-உபமேயத்திலுபமானத்தை யொற்றுமையினுலாவது- அதன்செய்கையினுலாவது-ஆரோபித்தலாம். இதனை வடநூலார்ரூபகாலங்காரமென்பர். ஆரோபமாவது உபமான வுபமேயங்களி னபேதவுணர்ச்சி. அது ஒற்றுமையுருவகம் அதன்செய்கையுருவகம்-எனவிருவகைப்படும். இவற்றைவடநூலார் அபேதரூபகமென்றும்- தாத்ரூப்பியரூபகமென்றுங்கூறுவர். அவ்விரண்டும்-மிகை-குறை-அவையின்மை-என்பவைகளான் மும்மூன்றாம். அவற்றுள்——௧-வது. மிகையொற்றுமை யுருவகம். உம். உயர்புகழ் நங்கோனுமூருவுடையமார-னயவழகை நாடுமென்கண். இதில் - மாரனுக்கு உருவமிகையாகச் சொல்லப்பட்டது. ——௨-வது. குறையொற்றுமையுருவகம்.——உம். எல்லாருமேத்துபுகழேந்தவிவ்வெற்றிவிழி - யில்லாதசங்கரனேயாம். இதில் - சங்

காற்கு நெற்றிக்கண்குறைவாகச்சொல்லப்பட்டது. —— ௩-வது.
அவையிலொற்றுமையுருவகம். உம். பவக்கடல்கடந்து முத்தியங்
கரையிற் படர்பவர்திகைப்பறநோக்கித் தவக்கலனடத்த வளர்ந்தெ
ழுஞ்சோணசைலனே கயிலைநாயகனே. இதில் - கடன்முதலியவை
மிகைகுறைவின்றிச்சமனாகச்சொல்லப்பட்டன. —— ௪-வது. மிகை
யதன்செய்கையுருவகம். உம். மங்கைவதன மதியங்களங்க முடை
த்-திங்களைமிக்கெள்ளல்செயும். இதில் முகமதிக்குக் களங்கமில்லா
மை யதிகமாகச்சொல்லப்பட்டது - ஈண்டுமுகமதியென்பதற்குச் ச
ந்திரனதுசெய்கையையுடைய முகமெனப் பொருள்கொள்க. ——
௫-வது. குறையதன்செய்கையுருவகம். உம். பொருதிரைசேர்தி
ண்பாற்புணரிபிறவாவே-றொருதிருவிம்மாதென்றுணர். இதில்-இத்தி
ருவுக்குப்பாற்கடலிற்பிறத்தல்குறைவாகச்சொல்லப்பட்டது. ——
௬-வது. அவையிலதன்செய்கையுருவகம். உம். இம்மான்முகமதியே
யின்புசெயுமதனா-லம்மாமதிப்பயனென்னும். இதில்-முகமதிக்குமி
கையுங்குறையுஞ்சொல்லாமற் சமஞ்செய்தது காண்க. . . ௫.

திரிபணி: அஃதாவது-உபமானப்பொருளானது அப்பொழு
து நிகழ்கின்ற செய்கையிற்பயன்படுதற்பொருட் டுபமேய
த்தினுருவத்தைக்கொண்டுபரிணமித்தலாம். இதனை வடநூலார்பரி
ணமாலங்காரமென்பர். —— உம். செய்யவடிக்கமலத்தாலைத் திருந்
திழையாள்-பையநடந்துபசும்பொழிலுற்-றுய்ய-வலர்கட்குவளையி
னானோக்கியகத்தன்பிற்-சிலசொற்றனளேதெரிந்து. இதில்-கமலமுங்
குவளையுமாகியவுபமானப்பொருள்கள். நடத்தலுநோக்கலுமாகிய
செய்கையி லுபயோகித்தற் குபமேயரூபத்தைக் கொண்டுதிரிந்த
ன-அடியுருக்கொண்டுதிரிந்தகமலமெனவும் - கண்ணுருக்கொண்டு
திரிந்தகுவளையெனவும்விரித்துரைத்துக்கொள்க. . . . ௬.

பலபடப்புனைவணி. இதனைவடநூலார் உல்லேகாலங்காரமென்
பர். அது இருவகைப்படும். அவற்றுள். —— ௧-வது. ஒரு
பொருளிற்பலரும் பலதருமங்களினாலே பலபொருள்களை யாரோ
பித்தல். உம். ஆரணங்காணென்பரந்தணர் யோகியராகமத்தின் -
காரணங்காணென்பர் காமுகரானவர்காமநன்னூ-லோரணங்காணெ
ன்ப வொண்ணெழுத்தென்பரிசைப்புலவோர்-சீரணங்காய சிற்றம்ப
லக்கோவையைச்செப்பிடினே-எனவரும். —— ௨-வது. ஒருவரோ
யொருபொருளில் விஷயபேதங்களாற் பலபொருள்களை யாரோபி

த்தல். உம். செல்வமதிற்றனதன் செப்புகொடையிற் கன்னன்கல்வித னிற்சேடனிவன்காண் - எனவரும் - தருமன்றண்ணளியாற் றனதீகை யால்வருணன் கூற்றுயிர்மாற்றவின்வாமனேயருமையா லழகிற்கணை யைந்துடைத்திருமகன்றிருமாநிலமன்னனே. இதுவுமது. எ

நினைப்பணி. அஃதாவது - ஒருபொருளைக்கண்டு ஒப்புமையினு லே மற்றொருபொருளை நினைத்தலாம். இதனைவடநூலார் - ஸ்மிருதிமதலங்காரமென்பர். உம். காதலுறுகஞ்சமலர் கண்டவெ னதுமனங் - கோதைமுகந்தன்னை நினைக்கும். அ

மயக்கவணி. அஃதாவது - ஒப்புமையினுலேயொருபொருளைம ற்றொருபொருளாகவறிதலாம். இதனைவடநூலார் பிராந்திமத லங்காரமென்பர் - பிராந்தியாவது அதுவாகாததையது வெனவறிதல். உம் மழைக்கண் மங்கையர் பயிராமரகதமணியி - னிழைத்தசெய்கு ன்றின்பைங்கதிர் பொன்னிலத்தெய்த்க் - குழைத்தடைந்தரு நீழவி ற்குலவுமானினங்க டழைத்தபுல்லென விரைவொடுதனித்தனி கறிக் கும். இதில் - மரகதமணிக்கதிரைப்புல்லெனவறிந்தது. கூ

ஐயவணி. அஃதாவது - ஒப்புமையினுலே யொருபொருளைக்க ண்டி துவோவதுவோவெனச்சந்தேகித்தலாம். இதனைவடநூ லார்சந்தேகாலங்காரமென்பர். உம். தாதளவிவண்டுதடுமாறுந்தாம ரைகொன்மாதர்விழியுலவும் வாண்முகங்கொல் யாதென்றிருபாற்கவ ர்வுற்றிடை யூசலாடியொருபாற்படாதென்னுளம் - எனவரும். ய

ஒழிப்பணி அஃதாவது - ஒருதருமத்தை யாரோபித்தற்பொரு ட்டொருதருமத்தை மறுத்தலாம். இதனை வடநூலார் அப நுதியலங்காரமென்பர். அது அறுவகைப்படும். அவற்றுள். ——— கூவது. வெற்றொழிப்பு. இது உபமானதருமத்தையாரோபித்தற்கு உபமேயதருமத்தையொழித்தலாம். உம். மதியன்றிதுபுகலின் வா னதிலிற்றோன்றும் - புதியதொருவெண்கமலப்பூ. ——— உ-வது. கார ணவொழிப்பு. இது மேற்சொல்லப்பட்டவொழிப்பேகாரணத்தோ டுகூடிவருதலாம். உம். பொங்குவெம்மைபொழிதலினுலிது - திங்க ளன்றுதினகரன்றான்று - கங்குலாதலினுற் கடனின்றெழீஇத் - தங்கு றும்வுடவைத்தழலாகுமே. ——— ௩-வது. வேறுபாட்டொழிப்பு. இது வர்ணியத்திலாரோபித்தற்பொருட்டு மற்றொருபொருளின்றரு

மத்தையொழித்தல். உம். தெரியுமி துதிங்களன்றுசெழும்பூ-ணரி
வைமுகமேதிங்களாம். இதில்-திங்களின்றரும மதனிடத்தொழிக்க
ப்பட்டு வர்ணியமாகிய முகத்திலாரோபிக்கப்பட்டது.——௪-வது.
மயக்கவொழிப்பு. இது ஒருபொருளை மற்றொருபொருளென்று
கொள்ளும்பிராந்தியையுண்மைகூறியொழித்தல். உம். மனக்கினிய
தோழி மடந்தைமுகநோக்கி-யுனக்குடலின்றியெழுவெப்பந்-
தனக்குச்-சுரநோயோகாரணநீ சொல்லெனவதான்று-பொருமார
னென்றனளப்பொன். இதில்-மன்மதனிடத்துண்டாகியசுரப்பிராந்
திமாரனென்றுகூறியொழிக்கப்பட்டது.——௫-வது. வல்லோரொ
ழிப்பு. இது பிறரையமுற்றுவினவியதஞ்சொல்லினுண்மைப்பொரு
ளைவல்லோர் அச்சொல்லுக்குமற்றொருதாற்பரியத்தைக்கற்பித்தும
றுத்தல். உம். இலங்கயிற்கணுளிருளைக்கென்காலைப்பற்றிப்-புலம்பிய
துண்டென்றுபுகல-விலங்கியய-னின்றுவருமற்றொருத்தி நின்கணவ
னேயென்ன-வன்றுசிலம்பென்றாளவள்.——௬-வது. வஞ்சகவொ
ழிப்பு. இது வஞ்சனை-கபடம்-பெயர்முதலியசொற்களால்வர்ணிய
த்தினதுதருமத்தைமறுத்தல். உம். இம்மடந்தைகட் கடைநோக்
கென்னும் பெயரினைக்கொண்-டம்மதவேள்வாளியடும். ௰௧.

தற்குறிப்பணி. அஃதாவது-ஒருபொருளைமற்றொருபொருளி
னதுதரும சம்பந்தத்தினாலேயிஃதஃதன்றென்றுதெரிந்திரு
ந்து மப்பொருளாகஅத்தியவசயித்தலாம். இதனைவடநூலார் உத்ப்
ரேக்ஷாலங்காரமென்பர்-அத்தியவசாயமாவது. ஒருபொருளின்ம
ற்றொருபொருளினபேதத்தையை யத்துடனறிதல் - அத்தியவசாய
ம்-சம்பாவனை-தற்குறிப்பு-உத்ப்ரேக்ஷை -என்பனவொருபொரு
ட்சொற்கள்-ஒருபொருளெனப்பட்டதை விஷயமெனவும் புலமெ
னவும்-மற்றொருபொருளெனப்பட்டதைத் விஷயியெனவும் புலங்
கொளியெனவுஞ்சொல்லுவர். போல-நினைக்கின்றேன்-நிச்சயம்-
உண்மை-துணிவு-முதலிய சொற்களிதற்குருபுகளாய் விரிந்தேனுந்
தொக்கேனும்வரும். அதுபொருட்டற்குறிப்பு. எதுத்தற்குறிப்பு-
பயன்றற்குறிப்பு--எனமூவகைப்படும். இவற்றைமுறையேவட நூ
லார்-வஸ்தூத்ப்ரேக்ஷை எதூத்ப்ரேக்ஷை-பலோத்ப்ரேக்ஷை -என்
பர்-இவற்றுள்-விஷயம்விரிந்துநிற்றலுந்தொக்குவருதலுமாகியவிர
ண்டாலும்பொருட்டற்குறிப்பிரண்டாம்-ஒழிந்தவிரண்டும்விஷயமு
ளதாதலுமிலதாதலுமாகியவிரண்டாலுமிவ்விரண்டாம்-அவைமுறை

யேகூறுதும்.——— ௧-வது. விரிபுலப்பொருட்டற் குறிப்பு. உம். நேமிப்பெயைத்திரளினெஞ்சங்களிற்றோன்றுங்-காமத்தழலிற்கதித் தோங்கு-தூமத்தின்-கூட்டமெனவேகுறிக்கின்றேன் மேதினிமே-லூட்டமறையிருளைநான் இதில்-இரவின்கணெங்கும் வியாபித்தவிருளில்-கருமைகண்மறைத்தன் முதலியதரும சம்பந்தத்தினு லப்போது தத்தஞ்சேவலைப்பிரிவுற்றுப் பலவிடங்களிலுமிருக்கின்ற சக்கிரவாகப்பேடைகளினுள்ளத் [illegible]தெழுதற்கு மூளுகின்ற காமத்தீயிற்றோன்றும் புகைக்கூட்டமாகியபொருளினபேதமத்தியவசயிக்கப்பட்டது-இருளாகியவிஷயம் விரிந்துநின்றது - புகைக்கூட்டம் விஷயி. இவண்முகத்தைச்சந்திரனென்று நினைக்கின்றேன் - என்பதுமது. ——— ௨-வது. தொகுபுலப்பொருட்டற்குறிப்பு. உம். காரிருளங்கங்களைப் பூசுதல்போலும் பேருலகந்தன்னிற் பெரிது - எம். மைம்மாரியைவானம்பெய்வதுமானத்தோன்று-மிம்மானிலத் திணிருள்-எம். சொல்லப்பட்ட விவ்விரண்டிலும்-இருளது வியாபித்தலில்-விண்முதன் மண்காறுமெல்லாவற்றையுங் கரியனவாக்குதலாகிய தருமசம்பந்தத்தினாலே இருளை வினைமுதலாகவுடையபூசுதலினது அபேதமும் ஆகாயத்தைக்கருத்தாவாகவுடையமைம்மழைபெய்தலினது அபேதமும் அத்தியவசயிக்கப்பட்டன. இவ்விரண்டிலுமிருளினது வியாபித்தலாகிய விஷயந்தொக்குவந்தது-பூசுதலும்பெய்தலும் விஷயிகள்.——— ௩-வது. உளபுலவேதுத்தற்குறிப்பு. உம். எந்திழைநின்று ளவனியின்மேன்மிதித்தலினாற் - சேந்தனவென்றுள்ளுமென்னெஞ்சு. இதில்-பாதங்களினதியற்கைச்சிவப்பிற்கேதுவாகாத பூமியின்மிதித்தலில்-ஏதுத்தன்மை அத்தியவசயிக்கப்பட்டது- மிதித்தலாகியவிஷயமுளதாகுகையாலுளபுலமாம். ஏதுத்தன்மைவிஷயி. ———௪-வது. இல்புலவேதுத்தற்குறிப்பு. உம். முகவொளியைப்பாவாய்ப்பெறற்குமுண்[illegible]கத்தோ. டிகலுடமதியையமிலை. இதில்-இயல்பினுண்டாகிய [illegible]மாமதிகளின் பகைக்கேதுவாகாத பாவைமுகத்தெளி விருப்பத்திலேதுத்தன்மையத்தியவசயிக்கப்பட்டது - அவ்விருப்[illegible]றக்கின்மையாலில்புலம். விருப்பம்விஷயம்-ஏதுத்தன்மை விஷயி.———௫-வது. உளபுலப்பயன்றற்குறிப்பு. உம். குயிற்றிரளையோட்டுமொழிக்கோமளமின்னே-நின்வயிற்றுமடிப்பாகியநல்வண்பொற்-கயிற்றினன்-மொட்டுண்டுபாரமுலையைச்சுமந்திடற்குக்கட்

டுண்டதோ நின்னிடை. இதில்-இடையானது கொங்கைகளைத்தன்னி யல்பிற்சுமத்தலான் மடிப்பாகிய பொற்கயிற்றின்கட்டுக்குப் பலனு காதிருக்கவச்சுமத்தலிற் பலத்தன்மையத்தியவசயிக்கப்பட்டது-சும த்தலாகியவிஷயமுளதாகுகையால் உளபுலம் - பலத்தன்மைவிஷயி. ———௩-வது. இல்புலப்பயன்றற்குறிப்பு. உம். ஒண்டொடிகேளு ன்பதசாயுச்சியத்தையுற்றிடற்கே-முண்டகமென்போது முதுநிலத் திற்-றண்டுறைநீர்-நின்றொரு[illegible]னின்டி துதவம்புரியு-மென்றறை தற்கையமிலை. இதில்-கமலத்தினது நீரிலுறைதலாகியதவஞ்செய்தற் குப்பலனாகாத பதசாயுச்சியமடைதலிற்பலத்தன்மை யத்தியவசயிக் கப்பட்டது-பதசாயுச்சியமடைதலாகிய விஷயங்கமலத்திற்குமெய் ம்மையாகவின்மையாலில்புலமாம். பலத்தன்மைவிஷயி. . ௰௨.

உயர்வுநவிற்சியணி. அஃதாவது-ஒருபொருளானது தன்சொல் லாற்சொல்லப்படாமற் கேட்போனாமகிழ்விப்பதும்-இஃ தஃதன்றென்றுதெரிந்து தன்னிச்சையாலாமென்றுகொள்ளப்படு வதுமாகியவாரோப நிச்சயத்திற்கு விஷயமாகுதலாம். இதனைவட நூலார் அதிசயோக்தியலங்காரமென்பர். அது எழுவகைப்படும்- அவற்றுள்.———௧-வது. உருவகவுயர்வுநவிற்சி. இது உபமேயத் தையதன்சொல்லாற்சொல்லாமலுபமானச்சொல்லினுவிலக்கணையா கச்சொல்லுதல். உம். புயலேசுமந்துபிறையேயணிந்து பொருவி லுடன்-கயலேமணந்தகமலமலர்ந்தொருகற்பகத்தி - னயலேபசும் பொற்கொடிநின்றதால்வெள்ளையன்னஞ்செந்நெல் - வயலேதடம் பொய்கை சூழ்தஞ்சைவாணன் மலையத்திலே. இதில்-புயன்முதலிய வுபமானச்சொற்களாற் கூந்தன்முதலிய வுபமேயங்களிலக்கணையா கச்சொல்லப்பட்டன.———௨-வது. ஒழிப்புயர்வுநவிற்சி. இதுமுன் சொன்னவுயர்வுநவிற்சியொழிப்போடுகூடிவருதல். உம். பைந்தொ டிநின்சொல்லிலமுதுளதாற்பாமரர்க-ளிந்துவிடத்துண்டென்பரே. இதில் - அமிர்தமென்னப்பட்டவுபமானத்தினாற் சொல்லிலிருக்கின் ற மாதுரியமாகிய வுபமேயஞ்சொல்லப்பட்டுச் சந்திரனிடத்தில்லை யென்பதாலொழிப்பையுட்கொண்டிருக்கின்றது.———௩-வது. பிரி நிலையுயர்வுநவிற்சி. இது உலகத்திற்பிரசித்தமாகியதீரம்-உருவம்-செ ல்வம்-முதலியவைகட்கினமாகிய-தீராதிகளைப்பிரித்துச்சொல்லுதல். உம். யாந்தண்முடியிற் பரிக்குங்குவலயத்திவ்-வேந்தனதுதீரமெ ன்றும்வேறு. எம். பேர்தார்மலர்க்கூந்தற் பூவையிவள்படைப்பு

சாதாரணமானதன்று-எம் வருமிவைகளில்-தீரத்திலும் படைப்பி
லு மிருக்கின்ற வுபேதத்திற் பேத மாரோபிக்கப்பட்டது. ——
௪-வது. தொடர்புயர்வுநவிற்சி. இது சம்பந்தமில்லாதிருப்பச் சம்
பந்தத்தைக்கற்பித்தல். உம். அகழுமிஞ்சியு மண்டத்தினடிமுடி
காறும்-புகுதுமென்றுத்ம்மாற்றலான்முரணுபு புகுங்கா - லிகலும்
வெஞ்சினச்சேடனொடிராகுவென்றுனாக்கு-நிகரில்பாம்புகணெறியி
டைக்காண்டலுநின்ற.. இதில்-[illegible]மில்லாமையிற் சம்பந்தமா
ரோபிக்கப்பட்டது. அன்றியுஞ்சம்பந்தமிருக்கச் சம்பந்த மில்லா
மையைக்கற்பித்தலுமது. உம். அற்பகத்தின்மன்னவனே நீயருள்செ
யாநிற்பக்-கற்பகத்தையாம்விரும்போங்காண்.. இதில்-கற்பகத்தை
விரும்புதலின்சம்பந்தமிருக்கவதிலதனைதில்லாமையாரோபிக்கப்பட்
டது.——௫-வது. முறையிலுயர்வுநவிற்சி. இது காரணமுங்காரிய
மு மொருகாலத்தினிகழ்வனவாகச்சொல்லுதல்.. உம். மன்னநின்க
ணையு மொன்னலர்கூட்டமு-மேககாலத்திலணிகந்தோடினவெனி-
லுன்புகழ்த்திறத்தினையுணர்ந்து-மன்பதையுலகுள் யார்பாடவல்லா
ரே. இதில்-அம்பினதிதாக்குகையாகிய காரணத்திற்கும்-அரசர்களி
னோட்டமாகிய காரியத்திற்கு முன்பின்றோன்றுகைத்தன்மையில்-ஒ
ருகாலத்திலுண்டாகுகை கற்பிக்கப்பட்டது-விரிந்தமதிநிலவின்மே
ம்பாடும்வேட்கை - புரிந்தசிலைமதவேள்போரும்-பிரிந்தோர் - நி
றைதளர்வுமொக்கநிகழ்ந்தனவாலாவிப்-பொறைதளரும்புன்மாலைப்
பொழ்து-இதுவுமது.——௬-வது. விரைவுயர்வுநவிற்சி. இது கார
ணவுணர்ச்சிமாத்திரத்திலேகாரியமுண்டாதல். உம். அருளாக்குநல்ல
றமுண்டாக்குமின்புண்டாக்குந்-தெருளாக்குமென்றுளங்கொள்செ
ம்மல்-பெரீருளாக்கற்-கேளையான்செல்வனெனப்புகலாதிற்பவிர-
லாழிவளையாயிற்றவட்கு. இதில்-பிரிவுணர்ச்சியினாலேதானே நாயகியி
ன்வாட்டமாகியகாரிய மோதிரம்வளையாயிற்றென்பதினால்விளங்கிற்
று-காரியம்பிறத்தல்விஷயம். —— ௭-வது. மிகையுயர்வுநவிற்சி.
இது-காரியத்தைமுன்னுங் காரணத்தைப்பின்னு நிகழ்வனவாகச்
சொல்லுதல். உம். வணங்கியிறையின்சொல்வழங்குமுனம்பேதை
க்-குணங்கூடனீங்கிற்றுளத்து. இதில்-காரணகாரியங்களின்முன்பின்
னிகழ்தலாகியமுறையில்-முறைப்பிறழ்வாரோபிக்கப்பட்டது - இறுதி
க்கண்ணின்ற மூன்றலங்காரங்களுங் காரியவிரைவைச் சொல்வன
வாம், மா.

ஒப்புமைக்கூட்டம். அஃதாவது-வர்ணியங்களாகியபலபொருள்களையாயினும் அவர்ணியங்களாகிய பல்பொருள்களையாயினும்பொதுவாகியவொருதருமத்தின்முடித்தலாம். இதனை-வடநூலார் துல்யயோகிதாலங்காரமென்பர். —— ௧-வது. புனைவுளியொப்புமைக்கூட்டம். உம். மாமதிதோன்றக்கணவர்த்தீர்ந்தமடவார்முகமுந் - தாமரைப்பூவுஞ்சோர்ந்தன. இதில்-சந்திரோதய வர்ணனையிற்சேர்ந்ததாமரைக்கும் பிரிவுற்றமாதர் முகங்களுக்கும்வாடுதலாகிய வொருதருமத்தின்முடிவுசெய்ததுகாண்க.—— ௨-வது. புனைவிலியொப்புமைக்கூட்டம். உம். தீதில்கழைச்சாறுந்தெள்ளமுதமுங்கசக்குங்-கோதையிவள்சொல்லுணர்ந்தார்க்கு. இதில்-வசனமாதுரியவர்ணனையில் அவர்ணியங்களாகியகழைச்சாறுமுதலியவைகளுக்குக்கசப்பாகியவொருகுணத்திலேமுடிவுசெய்ததுகாண்க.—— அன்றியுமுறவினரிடத்தும் பகையினரிடத்துஞ்சமனாகநடந்ததாகச்சொல்லுதலுமோரொப்புமைக்கூட்டம். உம். வீரமிகுமன்னனிவன்விட்டார்க்கு நட்டார்க்குந்-தாரணியினுக்கினனந்தல். இதில்-நட்டவர்க்குநந்தல் ஆக்கம்-விட்டவர்க்குநந்தல்கேடு.——விரும்பிவளர்ப்போர்க்கும் வெட்டுதல்செய்வோர்க்குந் - தரும்வேம்புவெங்கசப்பைத்தான்-எனவரும்-இன்னும் உயர்வாகிய பொருள்களோடுகூட்டிச்சொல்வதுமது. உம். ஈகுநர்கள்கற்பகமுமின்கதிர்ச்சிந்தாமணியு-மேகமு மன்னுநீயுமே-எனவரும். . . . . . . ௰௪.

விளக்கணி. அஃதாவது-வர்ணியங்களு மவர்ணியங்களுமொருதருமத்தின்முடிதலாம். இதனை வடநூலார்-தீபகாலங்காரமென்பர். உம். ஆதபத்தாற்சூரியனும் பிரதாபத்தினன்-மேதகுவேந்தும்விளங்குமே. இதில்-சூரியனும் வேந்தனும் விளங்குதலாகிய வொருதருமத்தின்முடிந்தன. . . . . . . ௰௫.

பின்வருவிளக்கணி. அஃதாவது-முன்வாக்கியத்தில்வந்தவிளக்கச்சொல்லேனும்பொருளேனுஞ்சொல்லும்பொருளுமேனும் பின்வாக்கியங்களிலும்வருதலாம். இதனை வடநூலார்-ஆவர்த்திதீபகாலங்காரமென்பர். —— ௧-வது. சொற்பின் வருவிளக்கு. உம். மாரனழுங்கம்பெய்யுமான்க ணழுங்கம்பெய்யும்-வீரனின்று வாராவிடின்.—— ௨-வது. பொருட்பின்வருவிளக்கு. உம். அவிழ்ந்தனதோன்றியலர்ந்தன்காயா - நெகிழ்ந்தனநேர்முகைமுல்லை-

மகிழ்த்திதழ்-விண்டனகொன்றைவிரிந்தகருவிளைகொண்டன-செங்காந்தள்குலை.——௩-வது. சொற்பொருட்பின்வருவிளக்கு. உ-ம். மகிழ்ந்த நெடுஞ்சாதகமகிழ்ந்த மதர்வை-புகழ்ந்திடுகார்வானெழுந்தபோது. . . . . . . . . . . . . . ௰௬.

தொடர்முழுதுவமையணி. அஃதாவது - இரண்டுவாக்கியங்களிலுஞ்சாதாரணதர்மத்தைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரதிவஸ்தூபமாலங்காரமென்பர். அது-இருவகைப்படும்.——௧-வது. நிகர்தொடர்முழுதுவமை. உ-ம். தாபத்தினால்விளங்கும்வெய்யோன்றராபதிநீள் - சாபத்தினால்விளங்குந்தான்.——௨-வது. முரண்டொடர்முழுதுவமை. உ-ம். கற்றோனருமைகற்றோனேயறியும்வந்திமகப்-பெற்றாளருமையறியாள். இதில்-கற்றோனேயறியுமென்றதற்கு மலடியறியாளென்பதாற்றோன்றும்பெற்றவளேயறிவாளென்பதுபமானமாம்.——பொருட்பின்வருவிளக்கிற்கு மிதற்கும்வேற்றுமை. அதில்-வர்ணியங்களாவது அவர்ணியங்களாவதுசொல்லப்படும். இதில்-அவ்விரண்டுஞ்சொல்லப்படும். ௰௭.

எடுத்துக்காட்டுவமையணி. அஃதாவது - பிம்பப்பிரதிபிம்பபாவத்தைக்காட்டுதலாம். பிம்பப்பிரதிபிம்பபாவமாவது-சுபாவத்திலே பின்னங்களாயிருந்தாலு மொன்றற்கொன் றுண்டாகியவொப்புமையினால் அபின்னங்களாகிய வுபமானோபமேயங்களுடையதருமங்களையிரண்டுவாக்கியங்களிலே தனித்தனிசொல்லுதலாம்.இதனைவடநூலார்திருஷ்டாந்தாலங்காரமென்பர். அது இருவகைப்படும். அவற்றுள்.——௧-வது. நிகரெடுத்துக்காட்டுவமை. உ-ம். அண்ணனீயேகீர்த்திமானம்புவிதானே வண்ணவுலகிற்காந்திமான். இதில்-கீர்த்திக்குங் காந்திக்கும் பிம்பப்பிரதிபிம்பபாவஞ்சொல்லப்பட்டது. அகரமுதலவெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றேயுலகு-இதுவுமது.——௨-வது. முரணெடுத்துக்காட்டுவமை. உ-ம். மன்னவநின்னெஞ்சிற்சினந் தோன்றமானிலத்தி-லொன்னலர்தங்கூட்டமொழிந்ததாற்-பன்னி - னெதனளவும்வெய்யோனுதயவெற்பெய்தானோ-வானளவுமேவுமேயல். இதில்-தோன்றவொழிந்ததென்றதற்கு-எய்தானோ-மேவும்-என்னும்பகைப்பொருளாற்றோன்றுகின்ற-அ[illegible]ந்தாவிருணீங்குமென்பதெழப்பாதல்காண்க. - - ௰௮.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY MADRAS

காட்சியணி. இதனை வடநூலார் நிதர்சனாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள் ——— ௧-வது. வாக்கியப்பொருட்காட்சி. அஃதாவது - இரண்டுவாக்கியார்த்தங்களுக்கு ஐக்கியத்தை யாரோபித்தல். உம். முறைகெழுவள்ளற்கு முனிவின்மைதிங்கட் - கறைகளங்கமில்லாமையாம் இதில் - கோபமில்லாமையிற் களங்கமில்லாமை யாரோபிக்கப்பட்டது. ——— ௨-வது. பதப்பொருட்காட்சி. அஃதாவது - உபமானோபமேயங்களு ளொன்றிலொன்றனது தருமத்தை யாரோபித்தல். உம். குவளைமலரழகைக்கொண்டன சீரார்ந்து - கவினுமிளந்தோகாய் நின்கண் - எம். மருத்தகுகோதாய்நின்வதனத்தொளியைத் - தரித்துளதாலொண்சீர்ச்சசி - எம். வருமிவற்றுள் - முறையே உபமேயத்திலுபமானதருமமு - உபமானத்திலுபமேயதருமமுமாரோபிக்கப்பட்டன. ——— ௩-வது. பொருட்காட்சி. அஃதாவது - தன்செய்கையினானற்பொருளையாயினுந் தீப்பொருளையாயினுந் தெரிவித்தல் உம். ஆதவனற்செல்வந்தனக்குப்பலனடுத்தோர்க் - கீதலெனல்விளக்கா நின்றெழீஇத் - தாதொடுதேன் - மல்குகமலமலர்க்கொருதன்காந்திவளநல்குகின்றான்பேருலகினன்கு. இது நற்பொருட்காட்சி. அற்பனுயர்வாமிடத்தையண்மினுங்கீழ்வீழ்வதலா - னிற்பதிலையென்னுநெறிவிளக்கி - வெற்பின் - சிகரமுறுநீர்த்திவலை தென்றலிற்றாக்குண்டு - மிகநடுங்கிக்கீழேவிழும். இது தீப்பொருட்காட்சி. வெண்மதிதோன்றத்திமிரம்வேந்தன்பகையழித - லுண்மையெனல்காட்டிற்றொழிந்து. இதுவுமது. வேந்தன்சந்திரனுக்குமாசனுக்குஞ்சிலேடை. ௰௬.

வேற்றுமையணி. அஃதாவது - உபமானோபமேயங்களில் யாதேனுமொன்றைவிசேடமுடைத்தாகச்சொல்லுதலாம். இதனை வடநூலார் வியதிரேகாலங்காரமென்பர். உம். மலிதேரான்கச்சியுமாகடலுந்தம்மு - ளொவியும்பெருமையுமொக்கு - மலிதேரான் - கச்சிபடுவகடல்படாகச்சி கடல்படுவவெல்லாம்படும். இதில் - உபமேயமாகியகச்சிக்கு அதிகஞ்சொல்லப்பட்டது. நறைமலர்த்தார்க் கூந்தலுடைநாரிமுகமு - நிறைமதியுநேரொக்குமேனு - முறைதெரியின் - மாவிருளையாக்குமடந்தைமுகம்பூதலத்தின் - மாவிருளைப்போக்குமதி. இதில் - உபமானமாகிய மதிக்குமாவிருள்போக்குதல் அதிகமாகச்சொல்லப்பட்டது. மால் - மயக்கமும்பெருமையும். ௰௭.

உடனிகழ்ச்சியணி. அஃதாவது-கற்றோரைமகிழ்விக்குமுடனி கழ்தலைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் சகோக்தியல ங்காரமென்பர். தண்டியாசிரியர் புணர்நிலையென்பர். உம். இகந்த பகைவரினத்தொடுவேல்வேந்தே-திகந்தமடைந்ததுநின்சீர் எனவ ரும். இதற்கு ஒடு ஒடு என்னுமூன்றாம்வேற்றுமையுருபுவரும். உக.

இன்மைநவிற்சியணி. அஃதாவது - யாதேனுமொன்றனில்லா மையால் வர்ணியத்தையுயர்வடைவதாகவேனுந் தாழ்வடை வதாகவேனுஞ்சொல்லுதலாம். இதனை வடநூலார் விநோக்தியலங் காரமென்பர். உம். மறங்கொள்கொடியோரிலாமையி னெம்மன் னு-சிறந்துளதன்பேரவைசேர்ந்து. இதில் - தீயரில்லாமையாற் சபைக்குயர்வுசொல்லப்பட்டது. புகழ்க்குரியன்கற்றோனெனினும்பு வியி - விகழ்க்குரியன்சாந்தமிலனேல். இதில்-சாந்தமில்லாமையாற் கற்றோனுக்குத்தாழ்வுசொல்லப்பட்டது. . . . . . . உஉ.

சுருங்கச்சொல்லலணி. அஃதாவது - அடைமொழியொப்பு மையாற்றலால் அல்பொருட்செய்திதோன்றப்புகழ்பொருட் செய்தியைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் சமாசொக்தியல ங்காரமென்பர். உம். இந்தக்கன்னிமதிமுழுநோக்கெய்திச்செவ்வா ய்வலியடைந்து-சந்தச்சிங்கந்தனையடுத்ததக்குவாவின் வலிசார்ந்து- முந்தைக்கொடிமீனத்தலைவன் முனிவராகும்பகைவெல்லக் - கந்தப் பகழிபலவேழக்கருப்புச்சிலையிற்றொடுத்தனனால். இதில் - வர்ணிக்க ப்படுகின்றமன்மதவிர்த்தாந்தத்தில் அவர்ணியமாகியகோசாரபலம் பார்த்துப்போர்க்குச்செல்லுமாசர்விர்த்தாந்தந்தோன்றிற்று. இது சிலேஷைவிசேஷணம். கொந்தார்குழல்சரியக்கோலமுகம்வியர்ப்ப ச்-சந்தார்திதலைத்தனமசையப்-பந்தேநீ-சிற்றிடையாளார்வமொடு தீண்டிவிளையாடுதற்கு-நற்றவமென்செய்தாய்நவில். இதில் - பந்தி ன்சமாசாரம் வர்ணிக்கப்பட்டுக்கொண்டிருக்க விபரீதப்புணர்ச்சியி விச்சையுடையநாயகிசமாசாரந்தோன்றிற்று. இதுபொதுவடை. உரு.

கருத்துடையடையணி. அஃதாவது-அபிப்பிராயத்தோடு கூடி யவிசேஷணத்தைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் பரி கராலங்காரமென்பர். உம். திங்கண்முடிசேர்சிவனுமதிதாபத்தை-யிங் கெற்றியாள்கவினிது. இதில்-திங்கண்முடிசேர்-என்னுமடைமொ ழிதாபத்தை நீக்கவல்லனென்னுங்கருத்தை யுட்கொண்டிருக்கின்

றது-நெடுங்கோலச்சென்னிமிசை நீர்கொளரனேநங் - கொடுங்கா மத்தீயை யவிக்கும்- இதுவுமது. வாளான்மகவரிந் தூட்டுவல்லேன லலன்மாதுசொன்ன - சூளாவிழ்ப்பை துறக்கவல்லேனல்லன் றொண்டு செய்து-நாளாறிற்கண்ணிடந்தப்பவல்லேனல்லனினிச்சென் - றாளாவதெப்படியோதிருக்காளத்தியப்பனுக்கே. இதில்- விசேஷணம் வாக்கியரூபமாயிருக்கின்றன சிறுத்தொண்டருமல்லேன் திருநீலக ண்டருமல்லேன் கண்ணப்பருமல்லேனென்பதாம். . . . உச.

கருத்துடையடைகொளியணி. அஃதாவது-அபிப்பிராயத்தோ டுகூடிய விசேஷியத்தைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் பரிகராங்குராலங்காரமென்பர். உம். முக்கணேயன்புடையார்மும் மலநீங்கப்பார்க்கத்-தக்கவனென்றென்னெஞ்சேசார். இதில்-முக்க ணனென்னும்விசேஷியம் ஆணவமுதலியமும்மலங்களையு நீக்கவல்ல னென்னுங்கருத்தையுட்கொண்டிருக்கின்றது. சீர்த்தநின்புகழ்கூறற் குச்சேடனுமெழுதற்கந்தக்-கார்த்தவீரியனும்வேந்தங்- கரிசறுநல த்திறேடு-பார்த்திடற்கமரர்கோனும்வல்லரல்லதுயாண்வண்ட-ரார் த்திடுதாரோயேனோர்க்காவதற்கொன்றுண்டோ. இதில்-விசேஷி யங்கள்வாக்கியரூபகமாகவந்தன. . . . . . . . . உரு.

பல்பொருட்சொற்றொடரணி. அஃதாவது-பலபொருள்களைத் தருதற்குரியசொற்களைப்புணர்த்துக்கூறுதலாம். இதனை வட நூலார் சிலேஷாலங்காரமென்பர். அது-மூன்றுவகைப்படும்- அவ ற்றுள்.——க-வது. புனைவுளிப்பல்பொருட்சொற்றொடர். உம். மணிமுடிமேற்கொண்டுலகை மாட்சிபெறத்தாங்கி- யணிநற்பொறி நிறஞ்சேர்ந்தாரும்-பணியிறைமை-மிக்கபுகழ்நீளரியே மேவுகூவத் திறைக்குத்-தக்கவில்விற்சேர்நாரிதான். இதுதிருமாலுக்குமனந்தனு க்குஞ்சிலேடைஅவ்விரண்டும்வர்ணியங்களாம்.——உ-வது. புனைவி விப்பல்பொருட்சொற்றொடர் உம். தெருட்டுங்கலை——வுஞ்சேர்ந்தம தியை-மருட்டுமுகத்தினளம்மான். இது சந்திரனுக்கும்புத்திக்குஞ்சி லேடை-இவ்விரண்டுமவர்ணியம்——ந-வது. இருமைப்பல்பொரு ட்சொற்றொடர். உம். எர்க்கதிர்வாள்கொடேயீர்வர்ஷிக்கி—மெய்-வோ் க்கவுங்கெடுத்தாய்வீழ்த்தியெற்றுவர்-சூர்க்கரும்பக்கட்டிஆற்றுவை ப்பித்தார்ப்பாரற்-போர்க்களம்புகுந்துபோர்புரிந்தமள்ளரோ. இதில். நெற்போர்படுத்தல் வர்ணியம் அமர்செய்தலவர்ணியம். . கசு.

புனைவிலிபுகழ்ச்சியணி. அஃதாவது-அவர்ணியத்தை வர்ணிக்கவதனது சம்பந்தத்தால்வர்ணியந்தோன்றுதலாம். இதனைவடநூலார் அப்பிரஸ்துதபிரசம்சாலங்காரமென்பர். அது ஐந்துவகைப்படும் - அவற்றுள்.——௧-வது. ஒப்புமைப்புனைவிலி புகழ்ச்சி. இது அவர்ணியத்தினொப்புமையின்சம்பந்தத்தினால் வர்ணியந்தோன்றுதல். உ-ம். மேதகுசீர்க்காரையன்றிவேறொன்றையுமிரவாச்-சாதகமேபுள்ளிற்றலை-இங்கேயவர்ணியமாகிய சாதகப்புள் வர்ணனையில் அதற்கொப்பாகியவொருமன்னனைச்சேர்ந்துபிறரையாசியாததமானியின்செய்தியாகியவர்ணியந்தோன்றிற்று.——௨-வது. பொதுப்புனைவிலி புகழ்ச்சி. இது அவர்ணியமாகிய பொதுப்பொருளால்வர்ணியமாகிய சிறப்புப்பொருடோன்றுதல். உ-ம். மைந்தகேள்கல்விவளமுணராமாந்தரலா-மந்தகரோயாவரவர்வடிவிற்-சந்தந்-தவழ்திரைகளார்த்தெழூஉந் தண்கடல்சூழ்வையத்-தவிழ்முருக்கம்பூவினிறமாம். இதில் - தந்தைவிளையாட்டுச்சிந்தையையுடைய மைந்தற்கறிவுகொளுத்தலாகிய சிறப்புப்பொருடோன்றப் பொதுப்பொருள் சொல்லப்பட்டது.——௩-வது. சிறப்புப்புனைவிலிபுகழ்ச்சி - இது அவர்ணியமாகியசிறப்புப்பொருளால் வர்ணியமாகியபொதுப்பொருடோன்றுதல். உ-ம். மன்னுமிருகமதைத்தாங்கு மதிகளங்க-னென்னும்பெயர்கொண்டிழிவுற்றான்-பன்மிருகக்-கூட்டங்கொல்சீயமிடல்கொண்மிருகராசனெனப் - பீட்டினொடுகொண்டதொருபேர். இதில்-கொடியவன்புகழடைவான்மெல்லியன் புகழடையானென்கிறபொதுப்பொருடோன்றச் சிறப்புப்பொருள் சொல்லப்பட்டது.——௪-வது. காரணப்புனைவிலிபுகழ்ச்சி. இது அவர்ணியமாகியகாரணத்தால் வர்ணியமாகிய காரியந்தோன்றுதல். உ-ம். ஒழுகொளிவிரிந்தகதிர்மணிவண்ணனுந்தியந்தாமரைவந்தோன் - முழுமதிக்கலையுணிறைந்தபேரழகை மொண்டுகொண் டரியாந்தகன்ற-மழைமதர்நெடுங்கண்மையந்திவதனம்வகுத்தனன். இதில்-காரணமாகச்சொல்லப்பட்டசந்திரசாரத்தினால் உயர்வுடையமுகத்தழகாகிய காரியந்தோன்றிற்று.——௫-வது. காரியப்புனைவிலிபுகழ்ச்சி. இது அவர்ணியமாகியகாரியத்தால் வர்ணியமாகிய காரணந்தோன்றுதல். உ-ம். மருக்கமழ்பூங்கோதைமட நடையைக்காணிற்-செருக்கடையா தன்னத்திரள். இதில் - செருக்கடையாமையாகிய காரியத்தினாலே மெல்லிய நடையழகாகியகாரணந்தோன்றிற்று. . . . உஎ.

புனைவுளிவிளைவணி. அஃதாவது-சொல்லப்பட்டவொருவர்ணி
யத்தினாற்சம்மதமாகியமற்றொரு வர்ணியந்தோன்றுதலாம்.
இதனை வடநூலார் பிரஸ்துதாங்குராலங்காரமென்பர். உம். அம்பு
யநற்போதிருப்பவஞ்சிறைவண்டேகொடுமுட்- பம்புகைதையூடலெ,
ன்பயன். இதில் - தடாகத்துறையில் தலைவனுடன்விளையாடுந் தலைவி
சொல்லிய வர்ணியமாகிய வண்டின்சமாசாரத்தினான் மனோகரமாகி
யவவளை விட்டு அச்சமுறு[illegible]பரத்தைபாற்செல்லுந் தலைவனி
ந்தையாகியமற்றொருவர்ணியந்தோன்றிற்று. . . . ௨௮.

பிறிதினவிற்சியணி. இதனை வடநூலார் பரியாயோக்தாலங்கா
ரமென்பர். அது இரண்டுவகைப்படும் - அவற்றுள். ——
௧-வது. கருதியபொருளையதற்குரியவிதத்தாற்கூறாதுமற்றொருவி
தத்தாற்கூறுதல். உம். இராகுமனைவிமுலைக்கில்பயனைச்செய்தோற்
பராவுகநீநெஞ்சேப்பணிந்து. இதில் - வாசுதேவனையிராகுவைவென்ற
வனென்னாது அப்பொருடோன்றப்பிறிதோராற்றாற்கூறினார். ——
௨-வது. கபடத்தினாலே தன்னாவிச்சிக்கப்பட்டதைச்சாதித்தல். உம்.
மின்னிகராமாதே விரைச்சாந்துடன்புணர்ந்து-நின்னிகராமாதவிக்
கணின்றருணீ-தன்னிகராஞ்-செந்தீவரமலருஞ்செங்காந்தட்போது
டனே-யிந்தீவரங்கொணர்வல்யான். இதில் - தலைவியைத்தலைவனிடத்
துவிட்ட தோழிமலர்க்குப்போதலாகியகபடத்தினாலவ்விருவரு மெ
ண்ணப்படி நடத்தலாகிய தன்னிஷ்டத்தைச்சாதித்தாள். . ௨௯.

வஞ்சப்புகழ்ச்சியணி. இதனை வடநூலார் வியாஜஸ்துதியலங்
காரமென்பர். அது மூன்றுவகைப்படும் - அவற்றுள். ——
௧-வது. பழிப்பினாற்புகழ்ச்சிதோன்றல் - அப்புகழ்ச்சிபழிக்கப்பட்
டபொருட்கேயாகியும்பிறிதொன்றற்காகியும்வரும். உம். பேசுகொ
லையாதிப்பெரும்பாதகர்தமையுந் - தேசுமிகுவா[illegible]லகிற்சேர்க்கின்றா
ய்-வீசுதிரை - பின்னியெழுமோதைபெரிதுறுபாகீ[illegible]யே-நின்னறி
வென்னென்பேனியான். இதில் - விவேகமில்லையென்னு நிந்தை[illegible]பாற்
[illegible]ரியோரைப்போல மகாபாதகரையுஞ் சுவர்க்கமடைவி[illegible]லாகிய
[illegible]கிமைதோன்றிற்று. அன்றிலங்கையெரித்தகுரங்கெங்[illegible] விராவ
ணன்போலவையோர்கேட்ப- நன்றியிலிந்திரசித்துவென்பவன[illegible]
ட்புண்டுநண்ணினானிங்-கென்றிலறவனடிபரவும் வானரர்களவனை ந
லியிகழ்ந்திடமோத-வொன்றியவச்சத்தினிரிந் தொளித்தவிடமங்கு

தன்யானுணமோனென்ருன். இதில்-அநுமனிந்தையான் மற்றைவா
னரர்களுக்குப் புகழ்ச்சிதோன்றிற்று.——௨-வது. புகழ்ச்சியாற்ப
ழிப்புத்தோன்றல்-இதுவுமப்பொருட்கேயாகியு மற்றொருபொருட்
காகியும்வரும். உம். எற்காகத்துாதரசன்புடையேகியிளங்கொடி நீ-ய
ற்கார்ளகங்குலையமெய்வேர்வையரும்பவந்தோ-பற்காயமுநகத்தா
றுநனியுறப்பட்டு நொந்தாய்-திற்காமுறைசெய்கைமாறுமுண்டோ
விந்தநீணிலத்தே. இதில்-நொந்தாயென்னும் புகழ்ச்சியாலெனக்
காகவன்று நீபுணர்தற்குப்போயினையென்னு நிந்தைதோன்றிற்று.
இரவறியாயாவனாயும்பின்செல்லாநல்ல-தருநிழலுந்தண்ணீரும்புல்
லு-மொருவர்-படைத்தனவுங்கொள்ளாவிப்புள்ளிமான்பார்மேற்-
றுடைத்தனவேயன்றோதுயர். இதில்-மான்புகழ்ச்சியா லரசன்சே
வையில் வருந்தியதன்னிந்தைதோன்றிற்று.——௫-வது. புகழ்ச்
சியால் புகழ்ச்சிதோன்றல். உம். சீரார்ந்திலகுசிறைச்செந்தார்ப்ப
சுங்கிள்ளை-வாரார்முலையாய்நின்வாயிதழ்க்கு நேராகுங்-கொவ்வை
க்கனி நுகர்தற்குத்தவமென்செய்ததோ-செவ்வைத்திறத்திற்றெரிந்
து. இதில்-கிள்ளைப்புகழ்ச்சியால்வாயிதழினழகுதோன்றிற்று. ௫௰.

வஞ்சப்பழிப்பணி. அஃதாவது-நிந்தையினனிந்தைதோன்
றுதலாம்-இதனை வடநூலார் வியாஜநிந்தாலங்காரமென்பர்.
உம், நீயுந்தவறிலை நின்னைப்புறங்கடைப்-போதரவிட்ட நுமருந்த
வறிலர்-நிறையழிகொல்யானைநீர்க்குவிட்டாங்கு-பறையறைந்தல்ல
துசெல்லற்கவென்னு-மிறையேதவறுடையான். இதில்-இறைவனிந்
தையாற்றீச்செய்கையுடையமற்றொருவர்நிந்தைதோன்றிற்று. ௫௧

எதிர்மறையணி. அஃதாவது-ஒழிப்பணிக்குவேருகியுங் கேட்
போனைமகிழ்விப்பதாகியு மிருக்கின்றமறுப்பைச் சொல்லுத
லாம். இதனை வடநூலார் ஆக்ஷேபாலங்காரமென்பர். அது மூவ
கைப்படும்-அவற்றுள்——௧-வது. தன்னாற்சொல்லப்பட்டபொ
ருளை யொருநிமித்தத்தினன்மறுத்தல். உம். ஒண்கதிர்த்திங்காணீயு
ன்வடிவைவயிங்கெமக்குக்-கண்களிகூரக்கடிதுகாட்டிடுவாய்-வண்க
வின்கூர்பூண்டாங்குகொங்கையுடைப்பூவைமுகமுண்டதனால்-மிவ
ண்டாம்போவெற்றுக்குவீண். இதில்-தான்விரும்பியசந்திரதரிசனத்
தைமுகமிருக்கையால் வீணென்றுமறுத்ததுகாண்க.——௨-வது.
மறுப்புத்தான்றள்ளுண்டு மற்றொருபொருளைத்தோன்றச்செய்தல்.

உம். தண்ணறவுண்டளிசூழ்தாம மணிதிண்டிறற்றோ - ளண்ணலே யான்றாதியல்லேன்காண் • வண்ணறிகு- வேயெனுந்தோளாண்மெய் விரகதாபம்வடவைத் - தீயெனவேதோன்றுஞ்செறிந்து. இதில்- அல்லேனென்னுமறை தள்ளுண்டு கூட்டுதற்குத்தக்கவஞ்சச்சொல்லை நீக்கி யுண்மைகூறுவோர் தன்மையைக்காட்டிக்கொண்டுவிளைந்து வந்து அவளைக்காப்பாற்றென்னு மற்றொருபொருளைத் தோற்றிற்று. ௩-வது. உடம்பாட்டுச்சொல்லான் மறுப்புக்காட்டுதல். உம். விளைபொருண்மேலண்ணல் விருப்புளையேலீண்டெங்.- கிளையழுகை கேட்பதற்குமுன்னே-விளைதேன் - புடையூறுபூந்தார்ப்புனைகழலாய்போக்குக்-கிடையூறுவாராமலேகு. இதில்-ஏகு என்னுமுடன்பாட்டுச்சொல்லாற்போகேலென்னுமறுப்பு-சுற்றத்தழுகையாற்குறிக்கப்பட்டதலைவியிறக்குமென்பதைக்கொண்டுகாட்டப்பட்டது. ௩௨.

முரண்விளைந்தழிவணி. அஃதாவது-ஒரிடத்துள்ளனவுங் காரியகாரணங்களாகாதனவுமாகிய விரண்டு தருமங்களுக்கு மேன்மேலுந்தோன்றியழியும்பகைமையைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் விரோதாபாசாலங்காரமென்பர். உம். சந்தமிலவாயுறினுஞ்சந்தமுடையனவே-கொந்தவிழ்தார்ப்பாவைகுயம். இதில்-சந்தமில்லனவற்றைச்சந்தமுடையனவேயாமென்னும்பகைமை அழகுடையனவென்னும்பொருளாலழிந்தது. ௩௩.

பிறிதாராய்ச்சியணி. இதனை வடநூலார் விபாவனலங்காரமென்பர். அது அறுவகைப்படும்-அவற்றுள்.——௧-வது. உலகறிகாரணமில்லாதிருப்பக் காரியம்பிறத்தலைச்சொல்லுதல் - இது வேபொதுவிதியுமாம். உம். கடையாமேகூர்த்தகருநெடுங்கண்டேடிப்-படையாமேயேய்ந்ததனம்பாவாய் - கடைஞெமியக் - கோட்டாமேகோடும் புருவங்குவிகச்சே-றூட்டாமேமேந்தவடி. இதில்-கடைதன்முதலிய பிரசித்தகாரணமில்லாமற் கூர்மையீதன் முதலியகாரியஞ்சொல்லப்பட்டன. இவற்றிற்கு இயல்பென்னும்பிறிதோர்காரண மாய்ந்துகொள்ளப்பட்டது.——௨-வது. காரணத்தின் துதருமமாவது சம்பந்தமாவது குறைவாக விருப்பக்காரியம் பிறத்தலைச்சொல்லுதல். உம். திண்மையுங் கூர்மையுமில்லாக்கணைகளைச் சிந்துபுவன்-கண்மையின்மூவுலகங்களும்வென்றவக்காமனிக-லுண்மையுணர்ந்து மொருநீமறந்திடினெண்டொடிதன்-பெண்மையே

ன்பாடுபடும்புகலாயெம்பெருந்தகையே. இதில்-வெல்லுதற்கேதுவாகிய வன்பிலேதிண்மையுங்கூர்மையுங்குறைவாம்.——௩-வது. காரியம்பிறத்தற்குத்தடையுளதாகவுமது பிறத்தலைச்சொல்லுதல். உம். அடுத்து நின்பிரதாபவருக்கனீ - ருடுத்தபார்மிசைமன்னவவொண்குடை விடுத்தவேந்தனைவிட்டுவிடாதுமே-யெடுத்தவேந்தரினத்தைக்கனற்றுமே. இதில்-பிரதிபந்தகமானகுடையிருப்பவுஞ் சுடுதலாகியகாரியம்பிறந்தது.——௪-வது. காரணமல்லாதமற்றொன்றாற்காரியம்பிறத்தலைச்சொல்லுதல். உம். வருவார்தமானிவள்பால்வண்சங்கினின்று-மெழுமேநல்யாழினிசை.——௫-வது. பகையாகியகாரணத்தினின்றுங்காரியம்பிறத்தலைச்சொல்லுதல். உம். சீர்தருசோமன்பொழிசீதளக்கதிர்கள்-சோர்தரவெம்மாதைச்சுடும்.——௬-வது. காரியத்தினின்றுங்காரணம்பிறத்தலைச்சொல்லுதல். உம். மற்பெறுவள்ளலுதித்ததேர்பெறுநின்வண்கையெனும் - கற்பகத்திற்சீர்ப்பாற்கடல். இதில்-சீர்ப்பாற்கடல் கீர்த்தியாகியபாற்கடல், ௫௪.

காரணவாராய்ச்சியணி. அஃதாவது-குறைவில்லாத காரணமிருந்துங்காரியம்பிறவாமையைச்சொல்லுதலாம். இதனைவடநூலார் விசேஷோக்தியலங்காரமென்பர். உம். இறைமதனுந்தீபமெரிவுறுநின்றுங்-குறைவிலதுநேயமென்றேகூறு. இதில் - விளக்காகியகாரணமிருந்தும் நேயநாசமாகியகாரியம்பிறவாமைகாண்க-நேயமென்பது தயிலமு மநுராகமுமாம். . . . . ௫௫.

கூடாமையணி. அஃதாவது - ஒருகாரியம்பிறத்தலையருமையுடைத்தாகச்சொல்லுதலாம். இதனை வடநூலார் அசம்பவாலங்காரமென்பர். உம். அடுக்கலையோர்கையினாலாயச்சிறுவ-னெடுக்குமெனயாரறிவாரிங்கு. இதில்-இடைக்குலச்சிறுவனுக்குமலையெடுத்தலாகியகாரியமரிதாகச்சொல்லப்பட்டது. கோவர்த்தனகிரியைக்குடையாகவெடுத்தானைநோக்கியிந்திரனிவ்வாறுகூறினான். ௫௬.

தொடர்பின்மையணி. இதனை வடநூலார் அசங்கதியலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும்-அவற்றுள்.

——௧-வது. காரணமோரிடத்திருப்பக்காரியமற்றோரிடந்திப்பிறத்தலைச்சொல்லுதல். உம். வேறொருமாதர்மேல்வேந்தனகநுதிவா-லூறுதரவிம்மாதுயிர்வாடுங்-கூறி-னிருவரோமெய்வடிவினேந்திழைநல்லா - ரொருவரோதம்மிலுயிர். இதில்-ஊறுசெய்தலாகியகாரண

மோரிடத்திருப்பவாடுதலாகியகாரிய மோரிடத் திற்பிறந்தது. தீய னெனும்பாம்பு செவியிலொருவற்கௌவ-மாயுமே மற்றொருவன். இதுவுமது.——— ௨-வது. ஓரிடத்திற்செய்தற்குரியதை மற்றோ ரிடத்திற்செய்தல். உம். கங்கணங்கண்ணிற்றிலகங்கையிற் றரித்தன ர்சீர் - தங்கிறையொன்னார்மடவார்தாம். இதில்-கங்கணம்-கடகமு நீர்த்துளியுமாம். திலகம்-திலோதகமும்பொட்டுமாம்.——— ௩-வது. ஒன்றைச்செயத்தொடங்கி யதற்குப்பகையாகிய மற்றொன்றைச்செ ய்தல். உம். கண்ணன்மயலகற்றக் காமருருக்கொண்டதனாற்-பண் ணுமயன் மாதர்பலர்க்கு. . . . . . . . . ௫௭

தகுதியின்மையணி. இதனைவடநூலார் விஷமாலங்காரமென்ப ர். அது மூன்றுவகைப்படும்-அவற்றுள்.——— ௧ வது. பொ ருந்துதற்குத் தகுதியில்லாதபொருள்களுக்குப் பொருத்தத்தைச் சொல்லுதல். உம். மொன்போலுங்கள்ளிப் பொறியறக்குங்கானவி லே-யென்பேதைசெல்லற்கிசைந்தனளே-மின்போலு-மானவேன் முட்டைக்குமாறியதெவ்வர்போங் - கானவேன்முட்டைக்குங்காடு. இதில்-பேதையது-மெல்லியவுருவத்திற்கும்பாலைநிலவெப்பத்திற்கு ம்பொருத்தஞ்சொல்லப்பட்டது.——— ௨-வது. ஒரு காரணத்திற்ப கைக்குணமுடையகாரியம் பிறத்தலைச்சொல்லுதல். உம். மருவெ றாழ்நங்கோன்கரியவாள்வெண்புகழைத்-தருமாலுலகந்தனில்.——— ௩-வது. ஒருகாரியத்தைச்செயத்தொடங்கி-எலியுணவிற்றென்றுரகப் பெட்டிகறித்தாயிற்-றெலிபாவிற்குத்தானுணா - என விஷ்டத்தைய டையாதநிஷ்டத்தையடைதலும். பாவையலர்க்குடைநீ பற்றுதற் குவாரிசத்தை-வாவியில்வைத்தன்றோவளர்க்கின்றாய்-மேவுகவி-யிவ்வு லகுசெய்நன்றி யெண்ணாதுநின்வதனச்-செவ்வியது வெளவல்செயு ம்-எனமலர்க்குடையைத்தான்பெறுதலுமது தன்முகவொளியைய பகரித்தலுமாகிய விஷ்டத்தையுமநிஷ்டத்தையுமடைதலும். இலகு மதிகளங்கமேந்திழையாய்நீத்தற்-குலகினுனதானனமாயுற்றுந்-தில கமென்பேர்-சேர்களங்கமேபெற்றான்பேதையனைச்சேர்ந்தக்கால்- யார்களங்கியாகாரறை-எனக்களங்கமொழித்தலாகிய விஷ்டத்தைய டையாமையுமாகிய-விம்மூன்றுவகையானும்வரும். . . . ௫௮.

தகுதியணி. இதனை வடநூலார் சமாலங்காரமென்பர். அதுமூ ன்றுவகைப்படும்; அவற்றுள்.——— ௧ வது. தகுதியாகிய வி

ரண்டுபொருள்களுக்குச்சம்பந்தத்தைச்சொல்லுதல். உம். இந்தத்தர ளவடமேந்திழை நின்கொங்கைகளிற் - சந்தமுறச்சேர்தறகும். ——— உ-வது. காரியத்தைய தன்காரணத்தோடொத்தசெய்கையுள்ளதாக ச்சொல்லுதல். உம். தானந்தனிலுதித்தங் கானந்தனையழித்திட் - டேனுஞ்செய்தீயினுதித்தபுகை - தானு - மெழிலியுருவாகியீர்ம்புனலைப் பெய்தத் - தழலையவித்தறகும். ——— ௩-வது. விரும்பத்தகாததை ய டையாமல் விரும்பப்பட்டதையேயடைதல். உம். பொற்கொடி நீர்நின்றுபுரிதவத்தாற்கஞ்சமலர் - சொற்கிவினின்றுருவாய்த்தோ ன்றியே - நற்கதியைச் - சேர்வுற்றனவுலகிற்செய்யதவநற்கதியைச் - சா ர்விக்குமென்பதுமெய்தான். இதில் - நற்கதிபுண்ணியலோகமு நல்ல நடையுமாம். நந்தலுறுதீவினைசெய்யேலென்று நான்மறைதே - ரந்த ணன்பல்கானன்கறைத்துமவன் - மைந்தனனி - நந்தலுறுதீவினையை நாடோறுஞ்செய்துமொரு - தந்தையுளாகடவான்றான். இதில் - எதிர் மறையா லநிஷ்டந்தோன்றினு மக்கினிகாரியமென்னும் பொருளா விஷ்டமடைதலேயாம். மாதர்சுவர்க்கத்து நசைவைத்தமர்செய்வே ந்தடைந்தான் - மாதர்சுவர்க்கத்தினையேமாண்டு. இதில் - அநிஷ்டந் தோன்றினுஞ் சிலேஷையாவிஷ்டமடைதலேயாம். . . ௫௰.

**வி**யப்பணி. அஃதாவது - ஒருபயனைக்கருதியதற்குப்பகையாகி யமுயற்சியைச்செய்தல். இதனைவடநூலார்விசித்திராலங்கா ரமென்பர். உம். ஓதுந்திறத்திலுயர்ந்தோர்கடாழ்குவரொப் - போது முயர்வெய்தற்பொருட்டு - எனவரும். . . . ௪௰.

**பெ**ருமையணி. இதனை வடநூலார் அதிகாலங்காரமென்பர் அது இருவகைப்படும் - அவற்றுள். ——— ௧-வது. பெரி யவாதாரத்தினு மாதேயத்தைப்பெரிதாகச்சொல்லுதல். உம். உல கமுழுதடங்கு மார்விசும்பிலுன்ற - னலகில்குணமடங்காவாம். ——— உ-வது. பொய்யவாதேயத்தினுமாதாரத்தைப்பெரிதாகச்சொல்லுத ல். உம். மன்சிருலகெவ்வளவுபெருமைத்தளவி - லுன்சீரடங்கியுள. ௪௬.

**சி**றுமையணி. அஃதாவது - அற்பமாகிய வாதேயத்தினுமாதார த்தை மிகவற்பமாகச்சொல்லுதல். இதனை வடநூலார் அல் பாலங்காரமென்பர். உம். விரலாழிகைவளையாய்விட்டதுனியார்த்து வாலாழிக்கென்செயுமெம்மாது - எனவரும். ஆதாரம் - இடம். ௪௨.

ஒன்றற்கொன்றுதவியணி. அஃதாவது-ஒன்றற்கொன்றுபகரித்தலைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் அந்நியோந்நியாலங்காரமென்பர். உம். திங்களிரவால்விளங்குஞ் செப்புங்கதிர்த்திங்கள்-கங்குலானேவிளங்குங்காண்-எனவரும். ௬௩.

சிறப்புநிலையணி. இதனைவடநூலார் விசேஷாலங்காரமென்பர். அதுமூன்றுவகைப்படும்-அவற்றுள்.——௧-வது. பிரசித்தமாகியவாதாரமில்லாதிருப்ப வாதேயத்தினிருப்பைச் சொல்லுதல். உம். தினகரனில்லாமலவனிசெய்யகதிர்க-ளினிதிலங்குந்தீபத்திருந்து.——௨-வது. ஒருபொருளைப்பலவிடங்களிலிருப்பதாகச்சொல்லுதல். உம். ஆயிழைநல்லாளகம்புறமுன்பின்னெங்கு-மேயவெனக்குத்தோன்றுமே.——௩-வது. அற்பகாரியஞ்செயத்தொடங்கியருமையாகியமற்றொருகாரியமுஞ்செய்தல். உம். மாட்சியினிற்காண்பேற்குவள்ளலேகற்பகநற்-காட்சியுங்கிட்டிற்றெளிதுகாண். ௬௪.

மற்றதற்காக்கலணி. இதனை வடநூலார் வியாகாதாலங்காரமென்பர். அது மூவகைப்படும்-அவற்றுள்.——௧-வது. ஒருகாரியத்தினதுலகறிகாரணத்தை யொருவனதற்குப் பகையாகியகாரியத்திற்குக் காரணமாக்குதல். உம். உலகைமகிழ்விக்குமுயர் மலர்கொண்டேவே-ளுலகைவருத்துமுடன்று.——௨-வது. ஒருவனொருகாரியத்திற்குச் சாதனமாகக்கொண்டபொருளை மற்றொருவனதற்குப்பகையாகிய காரியத்திற்குச் சாதனமாகக் கொள்ளுதல். உம். கண்ணாற்கொலப்பட்டகாமனையக்காரிகையார்-கண்ணாலுய்விக்கின்றார்காண்.——௩-வது. ஒருகாரியத்தையுண்டாக்குதற்கொருவராலுட்கொளப்பட்டபொருளான் மற்றொருவரதன்பகைக்காரியத்தைநன்றாகச்சமர்த்தித்தல். உம். உலுத்தன்மிடிவருமென்றுள்வெருவிநல்கா-னிலத்தென்றொருவனிகழ்த்த-நலத்திசைகூர்-வள்ளலுமவ்வச்சமருவியேநல்குமென-விள்ளலுற்றான்மற்றொருவன்மெய். ௬௫.

காரணமாலையணி. அஃதாவது-பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாகவருவனவற்றைக் காரணங்களாகவேனுங் காரியங்களாகவேனுஞ்சொல்லுதல். உம். நீதியாற்செல்வநிகழ்செல்வத்தாற்கொடைமற்-றேதுகொடையாற்சீருள. இதில்-நீதிமுதலியனசெல்வமுதலியவற்றிற்குக்காரணமாதல்காண்க. படர்நரகம்பாவத்தாற்பாவமிடியான்-மிடியீவிலாமையினாமே. இதில-நரகமுதலியன பாவமுதலியவற்றிற்குக்காரியமாதல்காண்க. ௬௬.

ஒற்றைமணிமாலையணி. அஃதாவது-பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வருவனவற்றை விசேஷியங்களாகவேனும் விசேஷணங்களாகவேனுஞ்சொல்லுதலாம். இதனை வடநூலார் ஏகாவளியலங்காரமென்பர். உம். மன்னிவன்கண்காதளவுங் காது தோண்மட்டிலையுந் - தின்னுறுதோள்சானுத்தொடும். இதில்-கண் முதலியனவிசேஷியம். நிறைவெளியுமதிவியங்குதினகரனுமவன்க திர்சேர்நிலவுமன்றேன் - குறைவிற்பிறப்பிடமாயபுனலுமதனதுபித் தக்கூறுந்தீயு-மறைநெறியினதனில்விவழங்குபுருடனுமவற்குப்பிரா ணனாகி - யுறைவளியுமதுசொண்மணமுறுநிலனுமாமிறையெட்டுரு வுட்கொள்வாம். இதில்-வெளிமுதலியனவிசேஷணம். ௬௭.

மாலைவிளக்கணி. அஃதாவது - தீபகத்தையுமேகாவளியையுஞ் சேர்த்துச்சொல்லுதலாம். இதனை வடநூலார் மாலாதீ பகாலங்காரமென்பர். உம். மனைக்குவிளக்கமடவாண்மடவா-டனக் குத்தகைசால்புதல்வர்-மனக்கினிய-காதற்புதல்வர்க்குக்கல்வியேக ல்விதனக்-கோதிற்புகழ்சாலுணர்வு. இதில்-எல்லாவாக்கியங்களுக்கும் விளக்கமென்னுமொருசொன்முடிபாய்வருதலாற்றீபகவிதியும்-மடவாண் முதலியவற்றை முன்முன்னாகவருமனை முதலியவற்றிற்கு விசேஷியங்களாகச்சொல்லுதலால் ஏகாவளிவிதியும்வந்தன. ௬௮.

மேன்மேலுயர்ச்சியணி. அஃதாவது-மேன்மேலுமொன்றற்கொன்றுயர்குணத்தாலேனு மிழிகுணத்தாலேனுமுயர்வாதலைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் சாராலங்காரமென்பர். உம். தேன்மதுரமாமதனிற்றெள்ளமுதமேமதுர-மான்சொலதினும் மதுரமாம். இது உயர்வு-நீரினுநுண்ணிது[illegible]நெய்யென்பர்-நெய் யினும்-யாருமறிவர்புகைநுட்பந்-தேரி- னிரப்பிடும்பையாளன்புகு மேபுகையும்-புகற்கரிய பூழைநுழைந்து. இது இழிவு. ௬௯.

நிரனிறையணி. அஃதாவது - வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவைகளை யம்முறையே சொல்லுதலாம். இதனைவடநூலார் யதாசங்கியாலங்காரமென்பர். உம். தரியலர்க்குந் தன்னிற்பிரியலர்க்குமெங்கோன்-றெரிதன்புமின்புஞ் செயும்-எனவரும். ௭௰.

முறையிற்படர்ச்சியணி. அஃதாவது - முறையாகவொருபொருள் பலவிடங்களிற்சென்றடைதலையேனு மோரிடத்திற் பலபொருள்சென்றடைதலையேனுஞ்சொல்லுதலாம். இதனை வடநூலார் பரியாயாலங்காரமென்பர் உம் நஞ்சமேநீயண்டைநாளினதிபதிதன் - னெஞ்சிலிருந்தாங்கதன்பினீங்கியே - செஞ்சடிலச் - சங்கரனார்கந்தரத்திற் சார்ந்திக்கொடியோன்வாய் - தங்குதியிக்காலந்தனில் - எம் முன்னாளிருவர்க்கும்பாக்கையொன்றாக மயங்கினம்யாம் - பின்னாட்பிரியன்பிரியையென்றாயினம்பேசலுறு - மிந்நாட்கணவன் மனைவியென்றாயினமெண்ணினினிச் - சின்னாளிலெப்படியோமன்ன நீயிங்குசெப்புகவே - எம். வரும். முறையேகாண்க. ௫௧.

மாற்றுநிலையணி. அஃதாவது - இழிவாகியபொருளைக்கொடுத் துயர்வாகியபொருளைவாங்குதலைச்சொல்லுதலாம் இதனை வடநூலார் பரிவிர்த்தியலங்காரமென்பர். உம். சடாயுகிழவுடம்பைத்தான்கொடுத்துப்பெற்றான் - கெடாததொருகீர்த்தியுடம்பு. ௫௨.

ஒழித்துக்காட்டணி அஃதாவது - ஒருபொருளையோரிடத்தில்லையெனவொழித்து - மற்றோரிடத்துண்டென்று நியமித்தலாம் இதனை வடநூலார் பரிசங்கியாலங்காரமென்பர். உம் சிறைபடுவபுட்குலமேயன்றிநின்றேயத் - திறைவமக்கட்குளிலை - எனவரும். சிந்துநிகர்தானையாய்த்தீத்தொழிலைச்செய்வோர்க - ளந்தணரோநின்னாட்டகத்து. இதில் - ஒழிப்புச்சொல்லானது தொக்குநின்றது ௫௩.

உறழ்ச்சியணி. அஃதாவது - சமானமாகிய வலியையுடையவிரண்டுவஸ்துக்களைக்காட்டி விகற்பித்தலாம். இதனைவடநூலார் விகல்பாலங்காரமென்பர். உம். தலையையேனும் விரைந்தெந்தார் வேந்தர்க்கோர்நின் - சிலையையேனும் வளைத்தல்செய். ௫௪.

கூட்டவணி இதனை வடநூலார் சமுச்சயாலங்காரமென்பர். அது இரண்டுவகைப்படும் - அவற்றுள் —— ௧வது பகையில்லாமையாலொருகாலத்திற் கூடத்தக்கபொருள்களுக்குக்கூட்டத்தைச்சொல்லுதல் உம். நின்சீருருவுவெளிப்படுதற்கேக்கநோக்கிநிலை தளரு - மென்பூடுருகவிளமுலைமேற்புல்லுமுனிந்தாயெனவருந்து - மன்போடேதீர்த்தனன்போனகைக்குமகன்றாயெனவெளியிற் - பின்போதருநல்லுணர்விழந்தபித்தர்போலப்பேதுறுமால். இதில் - நிலை

தளர்தல்-புல்லல்-நகைத்தல்-முதலியகூடின ——— உ-வது. பலகாரணங்கள்கூடுதலாலொருகாரியம்பிறத்தல். உம் குலமுமுருவுங்குணமுந்திருவு-நலமுமுயர்கல்விநயமும்-வலமுஞ்-செருக்கைவிளைக்கின்றனவிச் (ச?)செம்மற்குநாளுந்-திருக்கறநன்மாண்பிற்செறிந்து. ௫௫.

**வி**னைமுதல்விளக்கணி. அஃதாவது-ஒருகர்த்தாவைச்சேர்ந்த முறையுள்ளபலசெய்கைகளை முறைபிறழாமற்சொல்லுதலாம். இதனை வடநூலார் காரகதீபகாலங்காரமென்பர். உம். துயில்கின்றான்வாசநீர்தோய்கின்றான்பூசை-பயில்கின்றான்பல்சுவையவுண்டு-பயில்கின்றான்-காவலனென்றேங்குகண்டக்காப்பவாற்றள்ளுனுமிப்-பாவலனைப்பொன்னேகண்பார்-எனவரும். . . . . . ௫௬.

**எ**ளிதின்முடிபணி. அஃதாவது-ஒருவன்செயத்தொடங்கியகாரியமற்றொருகாரணவுதவியா லெளிதின்முடிதலாம். இதனை வடநூலார் சமாதியலங்காரமென்பர். உம். மதிநுதலாட்கியானூடன்மாற்றத்தொழும்போ-துதவிமுகில்செய்தன்றொலித்து. ௫௭.

**வி**றல்கோளணி. அஃதாவது-வலியுடையபகையின்மேலாதல் அதனது துணையின்மேலாதல் பராக்கிரமித்தலைச்சொல்லுதலாம். இதனைவடநூலார் பிரத்தியநீகாலங்காரமென்பர். உம் வண்டினந்தேனூட்டுமனைவாட்டவிற் சீற்றங்கொடுபோய்க்-கண்ட துதிங்கட்குக்களங்கு. இது பகை. தாக்குவிழிக்குத் துணையாய்ச்சார்ந்திலங்குகாதைக்கீ-ழாக்கிநின்றநீலத்தலர். இது பகைத்துணை. . ௫௮.

**தொ**டர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. அஃதாவது-ஒருபொருளைச்சொல்லத்தண்டாபூபிகாநியாயத்தினன் மற்றொருபொருடோன்றுதலாம். தண்டாபூபிகா நியாயமாவது தண்டத்தையபகரித்தலினலதனிற்சேர்த்துவைத்த அப்பமுதலிய வுணவபகரிக்கப்படுதலுந்தானேவிளங்கல் இதனை வடநூலார் காவியார்த்தாபத்தியலங்காரமென்பர். உம். மங்கைமுகந்துங்களையேவாட்டிற்றறைகுவதென்-பங்கயமென்போதுபடும்பாடு-எனவரும். ௫௯.

**தொ**டர்நிலைச்செய்யுட்குறியணி. அஃதாவது-சாதிக்கத்தக்கபொருளை வாக்கியார்த்தத்தினலாயினும் பதார்த்தத்தினலாயினு மவ்விரண்டினலுமாயினுஞ்சாதித்தலாம். இதனை வட

நூலார் காவியலிங்காலங்காரமென்பர். உம். காமநினைவென்றேன் கண்ணுதலோனென்மனத்தின் - மீமருவி நின்றான் விடாது. இதில் - பின்வாக்கியார்த்தத்தைக்கொண்டுவெல்லுதல்சாதிக்கப்பட்டது. இது வாக்கியப்பொருட்செய்யுட்குறி. மிளிர்நீறேயீசன் விழிமணியேயவா ழி - தெளியுமையாள்மீதணியுஞ்சீரா - ளுளதாய - வின்பவொளியைக்க வர்வீடென்னுமோகத்தழுந்தற் - கன்பினென்செல்வேனமைந்து. இதில் - வீடடைதலைமோகமாகச்சொல்லுதலட்பிரசித்தமாகையாலது சுகவொளியையபகரித்தலென்னும்பதார்த்தத்தினாற் சாதிக்கப்பட்டது. இதுபதப்பொருட்செய்யுட்குறி. கலைதேர்புலமைநிறைகாரிகை யாலோர்தன் - றலைமேற்கோட்பட்டதெக்கேசஞ்சீர் - நிலையதற்குப் - பேசுவிலங்காங்கவரி பின்புறங்கொள்சாமரையை - யேசுறயார்சொல் வாரிணை இதில் - புலமையிற்சிறந்தகாரிகையாற்சிரமேற்கொளப்பட்டதெக்கேசமென்னும் வாக்கியார்த்தமும்விலங்குபின் புறங்கொண்டவென்னும்பதார்த்தமுஞ்சேர்ந்துகாரிகைகூந்தற்குச்சாமரையொப்பாகாமை சாதிக்கப்பட்டது. இது இருமைச்செய்யுட்குறி. சூ௫.

வேற்றுப்பொருள்வைப்பணி. அஃதாவது - பொதுப்பொருளாற்சிறப்புப்பொருளையுஞ் சிறப்புப்பொருளாற்பொதுப்பொருளையுஞ்சாதித்தலாம். இதனைவடநூலார் அர்த்தாந்தரநியாசாலங்காரமென்பர். உம் நிறைவாரியைத்தாண்டி நின்றானனுமனறைபெரியோர்க்கென்றேனுவரிது. இதில் - பெரியோர்க்கரிதில்லையென்னும்பொருளால் - அனுமன்கடலைத்தாண்டி நின்றானென்னும் வர்ணியமாகிய சிறப்புப்பொருள்சாதிக்கப்பட்டது. ஊராங்கணநீருரவுநீர்ச்சேர்ந்தக்கால் - பேரும்பிறிதாகித்தீர்த்தமா - மோருங் - குலமாட்சியில்லாருங்குன்றுபோனிற்பர் - நலமாட்சிநல்லாரைச்சார்ந்து இதில் - முன்னிரண்டடியிற்சொல்லப்பட்டசிறப்புப்பொருளாற்பின்னிரண்டடியாலுஞ்சொல்லப்பட்டவர்ணியமாகிய பொதுப்பொருள்சாதிக்கப்பட்டது. தாழ்ந்தோருயர்வமொன்று மிகவுயர்ந்தோர் தாழ்வமொன்றுமறந் - சூழ்ந்தோருணாக்குமுணாகண்டாமதில் சூழ்கிடந்ததொல்கழி - தாழ்ந்தோனந்தன்மணிமுடிமேனின்றன்றுயர்ந்து தடவரையைச் - சூழ்ந்தோர்வரையினுதிப்பவன்றாட்கீழ்நின்றதுபோய்ச்சூழெயிலே. இதில் - பின்சொல்லப்பட்ட வர்ணியமாகிய சிறப்புப்பொருளான் முன்சொல்லப்பட்ட அவர்ணியமாகிய பொதுப்பொருள் சாதிக்கப்பட்டது. பிறவுமன்ன. கூக.

மலர்ச்சியணி. அஃதாவது-சிறப்புப்பொருளைச் சாதித்தற்குப் பொதுப்பொருளையுமீட்டு மப்பொதுப் பொருளைச்சாதித்தற்கு மற்றொருசிறப்புப்பொருளையுஞ்சொல்லுதலாம். இதனை வடநூலார் விகஸ்வராலங்காரமென்பர். உம். தேடுமணிபலவுஞ் சேரிமைப்பமால்வணர்க்குக்-கூடுபனியாலோர்குறைவுண்டோ-நீடுபல-வின்குணத்திற்குற்ற மொன்றிந் துபுலகதிரிற்-புன்களங்கம்போலடங்கிப்போம் இதில்-முன்னிரண்டடியிலுஞ்சொல்லிபசிறப்புப்பொருளைச்சாதிக்கப்பலகுணங்களி லொருகுற்ற மறையுமென்னும்பொதுப்பொருளைச்சொல்லி அதைச்சாதித்தற்குச்சந்திரகிரணங்களிற் களங்கம்போலென்னுஞ் சிறப்புப்பொருள் கூறப்பட்டது. சூஉ.

கற்றோர்நவிற்சியணி. அஃதாவது மிகுதிக்குக் காரணமாகாததை அதற்குக்காரணமாகச்சொல்லுதலாம். இதனை வடநூலார். பிரௌடோக்தியலங்காரமென்பர். உம். தக்கவிவள்கண்யமுனைதன்னிலலர்குவளை-யொக்குங்கருமையுள. இதில்-குவளையின்கருமைமிகுதிக்கேதுவாகாத யமுனையிற்பிறத்தலேதுவாகச்சொல்லப்பட்டது. ஐந்தருவின்மலர்த்தாதங்காமதேனுவின்பால்-சிந்தாமணியினொளிசேர்த்தனைத-னந்தா-வுயிர்ப்பினொடுசங்கநிதியுள்வெளியநந்தாலும்-வியப்பவிவற்றந்தான்விதி. இதுவுமது. சூரு.

உய்த்துணர்வணி. அஃதாவது-ஒருகாரியமுற்றுப் பெறுதற்கிஃதிவ்வாறுமெனினெனவூகித்தலாம். இதனை வடநூலார் சம்பாவனலங்காரமென்பர். உம் சேடுறுநங்கோன்புகழைச்சேடனவிலத்தொடங்கிற்-பீடுறவேமுற்றுப்பெறும். சூச.

பொய்த்தற்குறிப்பணி. அஃதாவது-ஒருபொருளைப்பொய்யாக்குதற்கு மற்றொருபொய்ப்பொருளைக் கற்பித்தலாம். இதனை வடநூலார் மித்தியாத்தியவசிதியலங்காரமென்பர். உம். வான்பசுந்தோல்போற்சுருட்டவல்லோன்பசுபதியைத்-தான் பரவாதெய்துறாஉம்வீடு. விண்மலர்த்தார்வேய்ந்தோனேவேசையைத்தன்வசமரிப்-பண்ணுதற்குவல்லனென்பார். எனவரும். சூரு.

வனப்புநிலையணி. அஃதாவது - வர்ணியத்தைவிசேஷியமாக்கிக்கொண்டு வர்ணிக்கவேண்டிய வாக்கியார்த்தத்திற்கொப்பாகிய மற்றொருவாக்கியார்த்தத்தைவர்ணித்தலாம். இதனை வடநூலார் லலிதாலங்காரமென்பர். உம். பெருகறன்முற்றம்போனபின்கணைகோலற்கித் - திருவனையாள்வேட்டல்செயும். இதில் - சிறிதன்போடுவந்த நாயகனையிகழ்ந்து மற்றொருத்தியிடத்திலவன்போனபின்புத் தன்னைத்தூதுவிடவிரும்பிய நாயகியைக்குறித்துத் தூதிதான் சொல்லவேண்டியதற்கொத்த நீர்போயபின்கணைகோலல்கூறினாள். ௬௬.

இன்பவணி. இதனை வடநூலார் பிரஹர்ஷணாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும் - அவற்றுள் ——— ௧-வது முயற்சியின்றிவிரும்பப்பட்டகாரியுஞ்சித்தித்தல் உம். தன்னாயகன்விழைந்ததையலையேதூதாக - வன்னான்கணுய்த்தாளணங்கு ——— ௨-வது. விரும்பப்பட்டபொருளினுமதிகமாகியபொருள்சித்தித்தல் உம். மழுங்குவிளக்கைத்தூண்டமங்கையெழும்போது - செழுங்கதிர்தோன்றிற்றிருள்சால்சீத்து. ——— ௩-வது உபாயஞ்சித்தித்தற்பொருட்டுச்செய்யுமுயற்சியாற்பலமேசித்தித்தல். உம். தங்குநிதியஞ்சனமூலிகையகழ்ந்தோ - னங்குநிதியேகண்டானன்று. ௬௭.

துன்பவணி. அஃதாவது - விரும்பப்பட்டபொருளைக்குறித்து முயற்சிசெய்யவதற்குப்பகைப்பொருள்கிடைத்தலாம். இதனை வடநூலார் விஷாதனாலங்காரமென்பர் உம். சோருஞ்சுடர்விளக்கைத்தூண்டுகையிலவிந்த - தாருமிடர்கூரவகத்து. ௬௮.

அகமலர்ச்சியணி அஃதாவது - ஒன்றன்குணகுற்றங்களான் மற்றொன்றற்கு அவையுளவாதலைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் உல்லாசாலங்காரமென்பர். அது நான்குவகைப்படும் - அவற்றுள். ——— ௧-வது. குணத்தினாற்குணத்தைச்சொல்லுதல். உம். இக்கற்பினண்மூழ்கித்தூய்மைசெயுமோவெனையென் - றக்கங்கைகொள்ளுமவா. இதில் - கற்பினள்பெருமைக்குணத்தாற் - கங்கைக்குப்பரிசுத்தகுணஞ்சொல்லப்பட்டது. ——— ௨-வது. குற்றத்தினாற்குற்றத்தைச்சொல்லுதல். உம். சினக்கதிர்வேல்வேந்தேநின்றெவ்வர்மடவார் - வனத்திலடைந்தோடுங்கான்மாழ்கித் - தனத்திலுற - வைத்தபெருந்திட்பமடிவையாதநான்முகனை - மைத்தவிழிநீருகவைவார்.

இதில்-பாதங்களின்மென்மைக்குற்றத்தால் வீணைகமுலைகளிற்கடின த்தைவைத்த நான்முகனிந்தைகூறப்பட்டது.——௫-வது. குணத் தினாற்குற்றத்தைச்சொல்லுதல். உம். நாறுத்தகடேபோனன்மலர் மேற்பொற்பாவாய் - நீறாய்நிலத்துவிளியரோ-வேறாய-புன்மக்கள் பக்கப்புகுவாய்நீபொன்போலு-நன்மக்கள்பக்கந்துறந்து. இதில்- நல்லோர்பெருமைக்குணத்தாற்றிருமகளுக்கு அவரையடையாமை க்குற்றங்கூறப்பட்டது. ——௬-வது. குற்றத்தினாற்குணத்தைச் சொல்லுதல். உம். கோவடுவேற்கொற்றவநீகொல்லாமைவிட்டது வே-சேவகர்க்குப்பேருதியம். இதில்-அரசன்கொடுமைக்குற்றத்தி னாற்கொலையின்றிப்புறம்போதற்குணஞ்சொல்லப்பட்டது. ௬௯.

இகழ்ச்சியணி. அஃதாவது - ஒன்றன்குணகுற்றங்களான் மற் றொன்றற்கு அவையுளவாகாமையைச்சொல்லுதலாம். இத னைவடநூலார் அவக்ஞியாலங்காரமென்பர். அது இரண்டுவகைப்படு ம்-அவற்றுள் ——௧வது குணத்தினாற்குணமுண்டாகாமை. உம். ஆழவமுக்கிமுகக்கினுமாழ்கடனீர் - நாழிமுகவாதுநானாழி இதில்- கடலின்பெருமைக்குணத்தானாழிக்கு அதிக நீர்கொள்ளலாகியகுண முண்டாகாமைகூறப்பட்டது.——௨-வது. குற்றத்தாற்குற்றமுண் டாகாமை. உம். கமலமலர்தற்கண்டுகூம்புதலாற்காம-ரமுதகிரண ற்கென் குறைவு. இதில்-கமலங்கூம்புதற்குற்றத்தாற் சந்திரனுக்கு க்குறைவாகியகுற்றமுண்டாகாமைகூறப்பட்டது. ௭௰.

வேண்டலணி. அஃதாவது-குற்றத்தாற்குணமுண்டாதலைக் கண்டு அக்குற்றத்தைப்பிரார்த்தித்தலாம். இதனை வடநூ லார் அநுக்ஞியாலங்காரமென்பர் உம் வெண்டிருநீறபுனையுமாத வர்க்கு விருந்துசெய்துறுபெருமிடியுங்- கொண்டநல்விரதத்தினைக் கும்யாக்கையு நீகொடியனேற்கருளுநாளுளதோ. ௭௧.

இலேசவணி. அஃதாவது - குற்றத்தைக்குணமாகவுங் குணத் தைக்குற்றமாகவுஞ்சொல்லுதலாம். உம். பறவைகளெலா மனப்படியேதிரிதரக்-குறைவிலிக்கிளிக்குக்கூட்டுச் - சிறைதீங்கிளவி யிற்சேர்பயனுமே. இது அரசனுக்கினியனாய்த்தன்னினீங்கி அவன் புரத்து நெடுநாளாகவிருக்குங் கல்விசான்றபுதல்வனைப் பார்த்தற்கு விரும்பியதந்தையாற்சொல்லப்பட்டது. இதில்-மதுரச்சொல்லாகி யகுணம் பஞ்சரச்சிறைக்குக்காரணமாகையாற்குற்றமாகவும். மது

ரச்சொல்லில்லாமையாகிய குற்றம்வேண்டியவாறுதிரிதற்குக்காரணமாங்கயாற்குணமாகவுஞ்சொல்லப்பட்டன. ௭௨

குறிநிலையணி. அஃதாவது-புகழ்பொருளையுணர்த்துஞ்சொற்களாற்குறித்தறிதற்குத் தகுதியாகிய பொருளைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் முத்திராலங்காரமென்பர். உம். மந்தாகினியணிவேணிப்பிரான்வெங்லைகமன்னவநீ-கொந்தார் குழன்மணிமேகலைநானுட்பங்கொள்வதெங்ஙன் - சிந்தாமணியுந்திருக்கோவையுமெழுதிக்கொளினு - நந்தாவுனையெழுதவெவ்வாறுநவின்றருளே. இதில்-சிந்தாமணிமுதலியசெய்யுள் குறிக்கப்பட்டன. ௭௩

அரதனமாலையணி. அஃதாவது-சொல்லத்தொடங்கிய பொருள்களைமுன்பின் முறைவழுவாது வரச்சொல்லுதலாம். இதனை வடநூலார் ரத்நாவளியலங்காரமென்பர். உம். ஊனதுபிரதாபமுயிரிழந்ததெவ்வர்-மனைவியரானேருறுப்பின்மண்ணுஞ் - சினவிழியி-னாமுநெஞ்சிற்றீயுநாசியிற்காலும்மறிவி-னாரும்வெளியுருவுமாம். இதில்-பஞ்சபூதங்களுமுறைபிறழாமற்சொல்லப்பட்டன. ௭௪

பிறிதின்குணம்பெறலணி. அஃதாவது-ஒருபொருளானதுதன் குணத்தையிழந்து பிறிதொன்றின் குணத்தைக் கவர்தலாம். இதனை வடநூலார் தத்குணாலங்காரமென்பர். உம். இவண்முக்கணிமுத்திதழொளியாற்பெற்ற - துவண்பதுமராகத்தொளி, இங்கே குணம்-சுவை யொளியூறோசைநாற்றமுதலியன. ௭௫

தொல்லுருப்பெறலணி. இதனை வடநூலார் பூர்வரூபாலங்காரமென்பர். அது இருவகைப்படும்-அவற்றுள்.
——௧-வது. ஒன்றுமற்றொன்றன்குணத்தையடைந்திருந்துமீட்டுந்தன்குணத்தையேயடைதலாம். உம். நித்தன்களக்கறையானீலுருக்கொள்சேடனுஞ்சீ-ருற்றடைந்தான்றன்முன்னுரு.—— ௨-வது. ஒருபொருள்விகாரத்தையடைந்தபோதிலும் பூர்வதிசையைச்சொல்லுதலாம். உம். வளியால்விளக்கவிந்துமாதுளத்திறுண-மொளிமேகலைசெயலாலுண்டு-எனவரும் நின்னெடுமுரணியநிருபர்நாடழிந்து-மாசுகளுறையிடத்தரசுகளுறைய-மாவினம்பொருந்திடமாவினம்பொருந்து-மத்திகள்வாழிடத்தத்திகள்வாழு - முரசொலிகெழுமணிமுன்றிற்-பர்சுசீர்சிறந்தபண்புடைவேந்தே. இதுசிலேடை. ௭௬

பிறிதின்குணம்பெறுமையணி. அஃதாவது- ஒருபொருளானது தன்னோடுசம்பந்தித்த பிறிதொன்றன்குணமடையாமையாம். இதனை வடநூலார் அதத்குணாலங்காரமென்பர். உம். புனைகழற்கானங்கோன்புகழ்திசைவேழங்க-ணனைமதத்திற்றோய்ந்துதயவார்-மனைவியர்வாட் - கண்மையறத்துடைத்துங்காமர்மதிபோல-வெண்மையுடைத்தாய்விளங்குமே. புகழ்கரிதாகாமைகாண்க. ௭௭.

தன்குணமிகையணி. அஃதாவது - மற்றொன்றன்சார்பினாலே தனதியற்கைக்குணமிகுதலாம். இதனை வடநூலார் அநுகுணாலங்காரமென்பர். உம். வார்செவிசேர்காவிமலர்மானனையாய் நின்கடைக்கட் - பார்வையினான் மிக்ககரும்பண்பு. இதில்-கடைக்கட்பார்வையின்சார்பினாற்குவளையின்கருமைக்குமிகுதல்சொல்லப்பட்டது. ௭௮.

மறைவணி. அஃதாவது-பொதுக்குணத்தினா விரண்டுபொருள்களுக்கு வேற்றுமைதோன்றாமையாம். இதனைவடநூலார் மீலிதாலங்காரமென்பர். உம். பேதமுறத்தோன்றாதிப்பேதையியற்கைச்சிவப்பார்-பாதமுறவூட்டியசெம்பஞ்சு. ௭௯.

பொதுமையணி. அஃதாவது - ஒப்புமையாலிரண்டுபொருள்களுக்குவிசேஷந்தோன்றாமையாம். இதனை வடநூலார் சாமானியாலங்காரமென்பர். உம். வண்பதுமவாவியடைந்தமடவார்வதனம்-பண்பினறியப்படா. ௮௰.

மறையாமையணி. அஃதாவது - பொதுக்குணத்தினாலொற்றுமையுடையவிரண்டுபொருள்களுக்கொருகாரணத்தால்வேற்றுமைதோன்றுதலாம். இதனை வடநூலார் உந்மீலிதாலங்காரமென்பர். உம். ஒழுகுறுமருவியீட்டமொலியினானகுவெண்டிங்கள்-பழகுறுமுடற்களங்காற்பாகசாதனன்கூர்ங்கோட்டு- மழகளிறுமிழ்மதத்தான்மலர்மிசைக்கடவுளூர்தி - யழகுறுநடையாலன்றியறிதாப்படாவக்குன்றில். இது கைலாசவர்ணனை. ௮௧.

சிறப்பணி. அஃதாவது-ஒப்புமையாற்பொதுமையுற்றிருந்தவிரண்டுபொருள்களுக்கொருகாரணத்தால்விசேஷந்தோன்றுதலாம். இதனை வடநூலார் விசேஷகாலங்காரமென்பர். உம். விதுவெழுஞ்சோர்வுறலான்மின்னார்முகத்திற்-பதுமமலர்வேறுபடும். ௮௨.

இறையணி. இதனை வடநூலார் உத்தராலங்காரமென்பர். அது இரண்டுவகைப்படும்- அவற்றுள்.——— ௧-வது. மறைப்பிறை. இது ஓரபிப்பிராயத்தைத்தன்னுண்மறைத்துவைத்துக்கொண்டிருக்கின்றவுத்தரத்தைச்சொல்லுதலாம். உம். மாயையையகன்றுணடக்கக்காலெழுமோவாயிடைமாற்றமொன்றுண்டோ - பேர்பெருவிடையமுணமனம்வருமோபொருந்துறுபகவிரவுளவோ-காயமுமுயிருங்கலந்துவாழ்வுறுமோகண்டனமெனவெனையொருவர்-நீயறிவுறவிங்குரைப்பவருளரோநேரிழாயென்றனனிமலன்.மாயைபிரிவப்பெயரினள் பிரிவுண்மறைந்தது.———௨-வது. வியப்பிறை. இது ஒருவினாவிற்குஅதனையேவிடையாகவும்.பலவினாக்களுக்கு ஒன்றேவிடையாகவுஞ்சொல்லுதலாம். உம். என்பணிபூண்டானிறைவன். இதில் என்பணி-யாதுபூணெனவும் எலும்புப்பூணெனவுமாம். மாதவன்கைக்கொள்வதெதுமந்திரமீசற்கேது-காதலுறுமஞ்சக்கரம். ௮௩.

நுட்பவணி. அஃதாவது-பிறர்கருத்தையறிந்துகொண்டுகருத்தோடுகூடியசெய்கையாலெதிர்மொழிகொடுத்தலாம். இதனைவடநூலார் சூக்ஷ்மாலங்காரமென்பர். உம். காதலன்மெல்லுயிர்க்குக்காவல்புரிந்ததாற்-பேதையராயம்பிரியாத-மாதர்-படரிருள்கால்சீக்கும்பகலவனைநோக்கிக்-குடதிசையைநோக்குங்குறிப்பு. இதில்-மாதர்கூட்டத்திலிருக்கின்றதலைவி தலைவன்கருத்தையறிந்து தன்செய்கையாலிரவிடைவருகவென்றுசொல்லியதுகாண்க. ௮௪.

கரவுவெளிப்படுப்பணி. அஃதாவது - ஒருவரதுமறைத்தசெய்கையை அதனைத்தானறிந்தகருத்தோடுகூடிய - தன்செய்கையால்வெளிப்படுத்தலாம். இதனைவடநூலார்பிகிதாலங்காரமென்பர். உம். கடிமனைக்குக்காலைவருகாவலற்குத் துஞ்சும்-படிவிரித்தாளோரணங்குபாய். இதில்-காலையிலமளிவிரித்தலாலிராமுழுதும்பரத்தையரில்விற்கண்டுஞ்சாதிருந்தமைவெளிப்படுத்தப்பட்டது. ௮௫.

வஞ்சநவிற்சியணி. அஃதாவது - ஒருகாரணத்தானிகழ்ந்த சத்துவமாகியகுணத்தை மற்றொருகாரணங்கூறிமறைத்தலாம். இதனை வடநூலார் வியாஜோக்தியலங்காரமென்பர். சத்துவமென்பன கண்ணீர்வார்தல்-புளகரும்பல்-வியர்த்தல்-நகைதோன்றன்முதலியவாம். உம்: கல்லுயர்தோட்கிள்ளிபரிதொழுது கண்பனிசோர்-மெல்லியலார்தோழியர்முன்வேறென்று-சொல்லுவராற்-பொங்கும்

படைப்பாப்பின்மீதெழுந்தபூந்துகள்சேர்ந் - தெங்கண்கலுழ்ந்தனவென்று. இதில்-சோழனைக்கண்டமங்கையர் தாங்கொண்டமயனோயினுளதாகிய் கண்ணீர்வார்தலைச்சேனுபாரகத்தாலுளதாயதெனத்தோழியர்க்குமறைத்ததுகாண்க . . . . . ௮௬.

**கு**றிப்புநவிற்சியணி. அஃதாவதொருபொருளைக் குறித்துச்சொல்லவேண்டியதை மற்றொருபொருளைக்குறித்துச்சொல்லுதலாம். இதனை வடநூலார் கூடோக்தியலங்காரமென்பர். உம். பிறன்புலத்தில்வாய்நயச்சொல் பெட்புடன்கொள்காளா - யிறைவனடைகின்றனன்விட்டேகு. இது மறைவிடத்திற்பிறன்மனையாள்வாய்ச்சொல்லைக்கேளாநிற்கும் விடனைக்குறித்துச் சொல்லவேண்டியதைப்பிறன்விளைநிலத்தி னெல்லைமேய்கின்ற வெருதைக் குறித்துச்சொல்லியதுகாண்க. சொல்-நெல்லுமொழியுமாம். . ௮௭.

**வெ**ளிப்படைநவிற்சியணி. அஃதாவது - சிலேஷையான் மறைத்தபொருளைப்புலவன்வெளிப்படுத்தலாம். இதனை வடநூலார் விவிர்தோக்தியலங்காரமென்பர். உம். பிறன்புலத்தில்வாய்நயச்சொல்பெட்புடன்கொள்காளா - யிறைவனடைகின்றனன்விட்டேகு- துறையினெனப்-பண்பினுணரப்பகர்ந்தான்குறிப்பாக-நண்பினுயர்பாங்கனயந்து. . . . . . ௮௮.

**யு**த்தியணி. அஃதாவது - தனதுமர்மத்தைமறைத்தற்பொருட்டுச்செய்கையாற்பிறனைவஞ்சித்தலாம். உம். மாணிழையாளன்பன் வடிவைப்படத்தெழுதும்-பாணியிலங்கோர்சிலர்தன்பாங்கருற- நாணிமுகங்-கோட்டினுள்சித்திரித்தகேரலவுருவின்கரத்திற் - நீட்டினுள்கன்னற்சிலை. இதில்-தன்கணவனுருவைக் கருப்புவில்லெழுதிவேறுபடுத்திப்பிறனைவஞ்சித்ததுகாண்க. பாணி-காலம். ௮௯.

**உ**லகவழக்குநவிற்சியணி. அஃதாவது - உலகவழக்கச்சொல்லைத்தழுவிக்கொண்டு சொல்லுதலாம். இதனை வடநூலார் லோகோக்தியலங்காரமென்பர். உம். அண்ணனீபேசாதைந்தாறுமாதம்வீணாயிந்-கண்ணைமூடிக்கொண்டிரு. . . ௯௰.

**வ**ல்லோர்நவிற்சியணி. அஃதாவது-அவ்வுலகவழக்கச்சொல்லேமற்றொருபொருளை யுட்கொண்டிருத்தலாம். இதனை வடநூலார் சேகோக்தியலங்காரமென்பர். உம். பரிமலர்ப்பூங்குஞ்சி

யாய்பாம்பேபாம்பின்கா - லறியுமுலகத்தென்றறி. இதில்-ஒருவன் மற்றொருவன்செய்தியைத்தன்னைக்கேட்க அவன் சமீபத்திருக்கின்ற வனைக்காட்டி யிவனுக்கே அது தெரியுமென்றுசொல்லுங்கருத்தை யுட்கொண்டிருத்தல்காண்க. ௯௧.

**ம**டங்குதனவிற்சியணி: அஃதாவது-ஒருவனொருபொருளையறி வுறுத்தற்குச்சொல்லியசொல்லுக்கு மற்றொருவன் சிலேஷை யினுலாதல் எடுத்தல்படுத்தன்முதலியவிசை விகாரத்தினுலாதன் மற் றொருபொருளைக்கற்பித்தலாம். இதனை வடநூலார் வக்ரோக்தியல ங்காரமென்பர். உம். என்பிழைநெஞ்சிற் பொறுமென்றேதவர சென்பிழைசே-மன்பொறுக்குநெஞ்சிலென்றாண்மாது. ௯௨.

**த**ன்மைநவிற்சியணி. அஃதாவது- சாதிசுபாவதருமத்தையாவ து தொழிற்சுபாவதருமத்தையாவது சொல்லுதலாம். இதனை வடநூலார் சுபாவோக்தியலங்காரமென்பர். உம். அப்பூருஞ்செஞ்ச டைமேலம்புலியைப்பார்த்துப்பார்த்-தெப்போதுஞ்சீத்துப்பூத்தெ ன்னுமே-வெப்போடும்-வாலங்காட்டாநிற்கும் வாயங்கரவாநிற்கு- மாலங்காட்டான்பூணரா. இது சாதித்தன்மை. புதுமணத்தகாதல னும் பூவையும்புன்வாயி-லெதிருற்றுநாண்டமர்கண்டெய்திக் - கது மென்றொருவர்க்கொருவர்வழிவிடப்பல்காற்பின்-னிருவரும்போய் மீள்வரெதிர். இது தொழிற்றன்மை. ௯௩.

**நி**கழ்வினவிற்சியணி. அஃதாவது-முன்னடந்ததையேனும்பி ன்னடப்பதையேனு மப்போதுநடக்கிறதாகச் சொல்லுத லாம். இதனைவடநூலார் பாவிகாலங்காரமென்பர். உம். பிரிவுணர்ந் தவந்நாளப்பேதைவிழிக்கஞ்சஞ்-சொரிதாளம்யான்றாரநாட்டின்- மருவலுறு- மிப்போதுங்காண்கின்றேனென்செய்கோவிங்கிதற்குத் திப்போதுதோழநீசூழ்ந்து. இது நடந்தது.. ௯௪.

**வீ**றுகோளணி. அஃதாவது-செல்வமிகுதியையேனும்புகழத் தக்கவொருசரித்திரத்தைப் புகழ்பொருளுக் கங்கமாகவே னுஞ்சொல்லுதலாம். இதனை வடநூலார் உதாத்தாலங்காரமென்பர். உம். மணிப்பொற்குழைகொண்டு கோழியேறிவாழ்க்கை - யணிப் பொற்கொடிகாணவள். இதுசெல்வமிகுதி. உமையாளருந்தவஞ்செ ய்பொன்கச்சியூரே-யுமையாள்பாமற்கிடம். ௯௫.

மிகுதிநவிற்சியணி. அஃதாவது - ஆச்சரியப்படத்தக்கதாகவும்பொய்யாகவுமிருக்கின்றகொடைசௌரியமுதலியவற்றைப்புகழ்தலாம். இதனை வடநூலார் அதியுக்தியலங்காரமென்பர். உம். ஓதிபுகழ்த்தாதாவாய்நீயுறவிப்போதிலகி- லாதிலர்கள்கற்பகமானர். இது பெருங்கொடை. உன்பிரதாபத்தழலின்வற்றுகடலொன்னலர்மா-னன்னவர்கண்ணீரினிறைந்தன்று. இதுசௌரியம். கூசா.

பிரிநிலைநவிற்சியணி அஃதாவது-பெயர்ச்சொற்களுக்குஉறுப்பாற்றலான் மற்றொருபொருளைத்தந்துரைத்தலாம். இதனை வடநூலார் நிருக்தியலங்காரமென்பர். உம். நலனையிலாக்குபழிநண்ணுதலால்வேத-வலரவனென்றன்னையறைவார். - கூஎ.

விலக்கணி. அஃதாவது - பிரசித்தமானதாகியு மபிப்பிராயத்தோடுகூடியுமிருக்கின்றவிலக்கைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரதிஷேதாலங்காரமென்பர். உம் சூதாடுவோய் சூதமன்றுசொரிகணைகண்-மீதாடுபூசலிதுமெய். இதில் -போரிற்சூதத்தன்மையினில்லாமைபிரசித்தமாகவுளதாகவும் அன்றென்னும்விலக்கு நீசூதாட்டத்தன்றிப் போரிற் சமர்த்தனல்லையென்னுமிகழ்ச்சியையுட்கொண்டிருக்கின்றது. இது சகுனிக்குச்சொன்னது. கூஅ.

விதியணி. அஃதாவது - பிரசித்தமாகியபொருளின்விதியானது ஓரபிப்பிராயத்தோடுகூடிவருதலாம். உம். குயில்குயிலேயாகுங்குவலயத்திற்சீர்மிக்-குயர்வசந்தகாலமுறின். இதில்-குயிலுக்குக்குயிற்றன்மையைவிதித்தல்வீணாய் - இளவேனில்வரின்மதுரவோசையைச்செய்யுமென்பதையுட்கொண்டிருக்கின்றது. கூகூ.

ஏதுவணி. அஃது இரண்டுவகைப்படும்; அவற்றுள்.—— ஒன்று. ஞாவது. காரணத்தைக் காரியத்துடன் சேர்த்துச்சொல்லுதல். உம் பெருந்திங்கடோன்றுமேபெய்வளையார்நெஞ்சிற்-பொருந்தூடறீர்த்தற்பொருட்டு. இதில்-ஊடறீர்த்தல்காரியம். தோன்றுதல்காரணம் —— உ.வது. காரணத்தையுங் காரியத்தையும் அபேதப்படுத்துச்சொல்லுதலாம். உம். கூர்கொணெடுவேலுடைநங்கோன்கடைக்கட்பார்வையே-சீர்கொள்கவிவாணர்திரு.

௪. சொல்லணியெத்தனைவகைப்படும்—

மடக்குஞ் சித்திரமுமென விருவகைப்படும். இவைபொருளணிபோற்பெருமையுடைய வன்மையானும் விரிதலானுங் கூறிலம்.

௫. மேற்சொல்லப்பட்டவணிகளுட்செய்யுளகத்திரண்டு முதலியன கூடிவரின் அதனைவேறணியாகக்கொள்ளுதலுண்டோ—

ஒருவரணியும்பலவணிகளின்கூட்டத்தைப்போலப்பலவணிகள்சேர்ந்து ஒருசெய்யுட்கு மிக்கவழகைச்செய்து நிற்றலால் வேறணியாகவேகொள்ளுதலுண்டு.

௬. அஃதெத்தனைவகைப்படும்—

சேர்வையணியும்-கலவையணியும்-எனவிருவகைப்படும்.

அவற்றுள்

சேர்வையணியாவது. எள்ளுமரிசியுஞ்சேர்த்தாற்போல விளங்குகின்றபேதத்தையுடைய பலவணிகளது சேர்க்கையாம். இதனை வடநூலார் சம்சிருஷ்டியலங்காரமெனப்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள் ——௧வது. பொருளணிச்சேர்வை-இது பொருளணிகள்பலசேர்ந்துவருதலாம். உம். காரிருளங்கங்களைப்பூசல்போன்றிடுமைம்-மாரியைவானம்பெய்வதுமானும்-பேருலகிற்-றீயரைச்சேர்ந்தாங்கேசிறிதும்பயன்படா-வாயினவால்நந்தோவிழி. இதில் இரண்டுதற்குறிப்புமோருவமையுஞ்சேர்ந்துவந்தமைகாண்க. ——உ-வது. சொல்லணிச்சேர்வை- இதுசொல்லணிகள்பலசேர்ந்துவருதலாம். உம். கந்தரங்கானந்தனிற்சென்றடங்கிலென்காசிக்கநே-கந்தரங்கானந்தநண்ணிலென்கன்னியர்கட்டளகக்-கந்தரங்கானந்த நின்றுடெழிற்செந்தில் கண்டிறைஞ்சிக்-கந்தரங்கானந்த நல்கச்சனனங்கடந்திலமே. இது நிரோஷ்டகமும்யமகமுங்கலந்துவந்தது. ——௩-வது. சொற்பொருளணிச்சேர்வை. இது சொல்லணியும்பொருளணியுஞ்சேர்ந்துவருதலாம். உம். ஆன்றோர்ந்தகாவினளியாடு பூந்தேன்மான்றீன்றவேரன்மணியீர்ங்கவிண்மாச சான்றோங்கு கோட்டிற்றயங்குமணிமுத்தோடேன்றார்ந்து நாட்டினடக்கவெழு மார்ந்து. இது கலிவிருத்தமாகவேனும் வெண்பாவாகவேனும்வாசிக்கப்படுதலாற் பிறிதுபடுபாட்டென்னுஞ்சொல்லணியும். மலையின்துபெருஞ்சம்பத்தைச்சொல்லுதலால் வீறுகோளென்னும்பொருளணியுமாம்.

கலவையணியாவது. பாலு நீருஞ்சேர்ந்தாற்போல விளங்காத பேதத்தையுடைய பலவணிகளுந் தொகலப்பாம். இதனைவட நூலார் சங்காாலங்காரமென்பர். அது நான்குவகைப்படும் - அவற்றுள்:——முதலாவது. உறுப்புறுப்பிக்கலவை- இது ஒன்றுதலைமைத்தாயுமொழிந்தன தலைமை யில்லனவாகியுங் கலந்துவருதலாம். உம். காற்றினசைதாருநிழல்கண் மதியமென்னுமரி - யேற்றிற்றுமிப்புண்டிடுகருமை - தோற்றுருவி - வில்லெனுமால்யானை யவயவத்துண்டோவென்று-சொல்லுறவேதோன்றுந் துடித்து. இதில்-மதியமென்னுமரியேறு-அல்லெனுமால்யானை-என்னப்பட்டவிரண்டுருவகங்களும். அவயவத்துண்டோவென்னுந்தற்குறிப்பிற்குறுப்பாதலால். உறுப்பாகியவுருவகத்திற்கும் உறுப்பியாகியதற் குறிப்பிற்குங்கலப்பாம்.——உவது. நிகர்தலைமைக்கலவை-இதுபலவணிகளுந்தலைமையுடையனவாய்க்கலந்துவருதலாம். உம். அங்குலியாற்காரோதிக்கறைநீக்குதல்போலல்லைத்-திங்கடன்கதிரானீக்கிச்செய்துமூடுறுகண்போலும்-பங்கயமலர்படைத்துப்பாருலகதனின்மேய-கங்குன்மான்முகஞ்சுவைக்கின்றனனெனக்கருதத்தோன்றும். இதில்-உறுப்புகளாகிய விரண்டுவமைகளாலுந்தோன்றுஞ்சந்திரனை வினைமுதலாகவுடையவிராத்திரியின்முக சும்பனத்தற்குறிப்பு-திங்களிலும் இராத்திரியிலுந்தலைவன்றலைவிகளின்செய்கையாரோபமாகியசுருங்கச்சொல்லணியையுட்கொண்டே தோன்றுகின்றது. சுருங்கச்சொல்லலையுட்கொள்ளாமற்போனாற்சும்பனத்தற்குறிப்பிற்குவேறோராதாரமில்லாமையா விரண்டுவமைகளுந்தற்குறிப்பையுஞ்சுருங்கச்சொல்லலையுஞ்சமமாகத்தோன்றச்செய்கின்றன ஆதலாலவ்விரண்டுநிகராயின.——ருவது. ஐயக்கலவை. இது-இதுவோவதுவோவென்றையுறப்பலவணிகள்கலந்துவருதலாம். உம். அழற்கடுவாய்நாகமடியிலுள தேறற்பல்-பழத்தருவாலுண்டோபயன். இதில்-பாம்பின்செய்தி வர்ணிக்கப்பட்டுக்கொண்டிருப்ப அரசனரண்மனைவாயிலிலிருக்குங்கொடியோனது செய்தியுந்தோன்றுகின்றது இங்கே பாம்பின்செய்தி வர்ணியமாகக்கொடியோனது செய்தியவர்ணியமாயிற்சுருங்கச்சொல்லலாம்- அங்ஙனமன்றி வர்ணியமாகிய கொடியோன்செய்தி தோன்றுதற்பொருட்டு அவர்ணியமாகிய பாம்பின்செய்தி சொல்லப்பட்டதென்றாற் புனைவிலிபுகழ்ச்சியாம். அங்ஙனமன்றிப் பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற பாம்பின்செய்தியை வர்ணித்தலாற்சமீபத்திருக்

குங் கொடியோன்செய்தி வெளிப்படுத்தப்படின் இரண்டும் வர்ணியங்களாதலாற் புனைவுளிவிளைவாம் - என்றிவ்வாறையுறமூன்றணிகள் கலந்துவந்தமைகாண்க.——— சீவது ஒருதொடர்ப்பொருட்கலவை. இது ஒருபாட்டிற்சொற்களனைத்துமொருபொருளையே சொல்லாநிற்ப வப்பொருளிவிரண்டணிகளினிலக்கணமுண்மையால் அவ்விரண்டுந்தோன்றுதலாம் உம். சோலைவாயிற்சூருநிலாமணி-யாலவாலத்தவிர்மதியாற்புனல்-காலவாய்ந்தகதிர்மணிமுல்லையின் - கோலநாண்மலர்கொய்வதற்கெய்தினாள். இதனுட்சொல்லப்பட்டபொருள்செல்வமிகுதியைச்சொல்லுதலென்னுமிலக்கணத்தால்வீறுகோளுஞ்சம்பந்தமில்லாதிருப்பச்சம்பந்தத்தைக்கற்பித்தலென்னு மிலக்கணத்தால் உயர்வு நவிற்சியுமாம்.

இந்நூலிற் பொருளணிகளி னுட்பிரிவுகளிற் சில சொல்லாதொழிந்தனவும்-சுவையணிமுதலியனவும்-சொல்லணியும் - விளங்க இப்போதியாஞ் சூத்திரமும் விருத்தியுரையுமாகச்செய்துவருகின்ற அணியிலக்கணத்துள் விரித்துக்கூறுதும். அணியிலண்க்கணமுற்றிற்று.

இலக்கணச்சுருக்க வினாவிடை முற்றிற்று.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY MADRAS.

# பிழை திருத்தல்.

| பக்கம் | வினா விடை. | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௫ | ௨௪ | ௰௮ | சேருஅசய். . . . | செருஅசய். |
| ௬ | ௨௬ | ௨௰ | வரஃகியாது. . . . | வரகியாது. |
| ௮ | ௩௩ | ௩ | சுருத்தருமுதலான. | தலைகரூத்தருமுதலான. |
| " | ௩௬ | ௨௯ | இடந்தலையும். . . . | இடமார்டம். |
| ௰௨ | ௪௯ | ௨௧ | சாரியைட்பெற்றம் | சாரியைபெற்றம். |
| " | " | ௨௪ | சாரிபெற்றம். . | சாரியைபெற்றம். |
| ௰௮ | ௬௭ | ௰௮ | சித்தரித்தான் . . . . | சித்திரித்தான். |
| ௰௯ | ௭௰ | ௰ | குறிகி. . . . . . . . . | குறுகி. |
| " | " | ௰௨ | மகாரமாயிற்று. . . | மாகாரமாயிற்று. |
| ௨௩ | ௭௮ | ௰ | இ - ய . . . . . . . . . | இய. |
| ௨௪ | ௮௰ | ௰௨ | போய்-உண்ணு. . . | போய்-உண்குபு-உண்ணு. |
| " | ௮௨ | ௨௭ | மெதிர்கால விடை. | நிகழ்காலவிடை. |
| " | " | ௩௧ | பெயருய். . . . . . | பேருய். |
| ௨௫ | ௮௫ | ௨௬ | ஆகாரவிகுதியும். | ஆகார விகுதியும். பெயரெச்சவினைவிகுதியும். |
| ௨௮ | ௯௪ | ௨௫ | திணிதோளன். . . . | திணிதோளான். |
| ௩௨ | ௱ | ௭ | அவிழ்தம் . . . . . . | ஔழ்தம். |
| ௩௩ | ௱௨ | ௰௮ | தஇ-என்னு. . . . . | இ-உ-என்னு. |
| ௩௭ | ௱௰௩ | ௰௨ | பாம்பு- பாம்பு. . . | பாம்புபாம்பு. |
| ௩௮ | ௱௰௮ | ௨௧ | டென்பதின்னிடை. | யென்பதினிடை. |
| ௪௰ | ௱௨௰ | ௫ | மொழியிடையிறுதி | மொழிமுதலிடை. |
| ௪௨ | ௱௨௪ | ௪ | மேல்வெத்து . . . | மெல்லெழுத்து. |
| " | ௱௨௫ | ௨௰ | பெயர்ளி. . . . . . | பெயர்களி. |
| ௪௬ | ௱௪௰ | ௨௬ | அல்வழியொன்றின் | வேற்றுமையொன்றின். |
| ௪௭ | " | ௰௫ | வரும் . . . . . . . . . | வரும்-உம். |
| ௪௮ | ௱௪௨ | ௰௩ | வன்றொடர்மென்றொடராயின. . . | மென்றொடர் வன்றொடராயின. |
| ௫௫ | ௱௫௮ | ௯௩ | யா-ஐ . . . . . . . . . | யாவை-ஐ. |
| ௫௮ | ௱௬௫ | ௨ | யகரமோழிந்த. . . | யகரமொழிந்த. |
| " | " | ௪ | வெவ். . . . . . . . . . | தெவ். |

# பிழைதிருத்தல்.

| பக்கம் | விருவிடை. | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௬௫ | ௱௮௫ | ௰௨ | றகரமாய் ....... | றகரடகரமாய். |
| ௬௬ | ௱௮௭ | ௬ | கட்டுது. ......... | கண்டது. |
| ௬௭ | ௱௮௯ | ௰௩ | கபிலபரணின் ... | கபிலபரணர். |
| ௭௮ | ௨௫ | ௯ | குழலும் காதுங் கண்ணு. ........ | குழலுமார்புங் கண்ணுங்காது. |
| ௮௨ | ௩௰ | ௰௮ | பலற்றிற்கு. ...... | பலவற்றிற்கு. |
| ௮௬ | ௩௮ | ௰௭. | பெயாதனுக்கிடமாகிய ........... | பெயர் அதனையிடமாகக்கொண்ட. |
| ௯௨ | ௫௨ | ௰௯ | வெதிர்மறை .... | யெதிர்மறை. |
| ௱௪ | ௮௫ | ௰௨ | சாத்தான் ....... | சாத்தன். |
| ௱௫ | ௯௰ | ௨௫ | டக்கை. ......... | நடக்கை. |
| ௱௮ | ௯௬ | ௧ | எதிர்மறையும்-ஈற்றசையும். ....... | எதிர்மறையும். |
| ௱௯ | ௱௧ | ௨௯ | கழினி. .......... | கழனி. |
| ௱௰ | " | ௨ | எந்தைமெக்கருளு | எந்தையெமக்கருளு. |
| ௱௰௧ | ௱௬ | ௰௪ | வருன .......... | வருவன. |
| ௱௨௪ | ௱௫௬ | ௰௧ | வீழவி .......... | வீழருவி |
| " | ௱௫௭ | ௰௯ | நீக்கப்பொருள்... | நீக்கப்பொருள் - மதுரையின்வடக்குச்சிதம்பரம்-எல்லைப்பொருள். |
| ௱௨௮ | ௱௭௪ | ௩௨ | பெயரீறியலாயின | பெயரீறியல்பாயின. |
| ௱௩௰ | ௱௭௭ | ௰௮ | ஈற்றபலாகர .... | ஈற்றபலாகார. |
| ௱௩௧ | ௱௭௯ | ௧ | ணகர மெய்யீற்றுயர்திணை ....... | ணகர்மெய்யீற் றஃறிணை |
| " | ௱௮௨ | ௨௧ | எவ்வெவ்வெச. . . | எவ்வெச் |
| ௱௩௮ | ௨௱௨ | ௰ | வளால். ......... | வாளால். |
| ௱௪௬ | ௨௨௬ | ௧ | பெண்பாலாயிற்று | பலர்பலாயிற்று. |
| ௱௪௭ | ௨௩௪ | ௨௬ | வயிறுநொந்தீ. . . . | வயிறுநொந்த. |
| ௱௫௪ | ௰௬ | ௰௨ | ஒன்றுவஞ்சித்தலை. | ஒன்றுவஞ்சித்தலை; கலித்தலை. |

## பிழைதிருத்தல்.

| பக்கம் | விடை-வினு | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௱௫௫ | ௰௭ | ௰௧ | கொச்சக்கலிப்பா. | கொச்சகக்கலிப்பா. |
| ௱௫௮ | ௯௨ | ௭ | பொற்றினுனல்தும் | போற்றினுனல்கும். |
| ௱௫௯ | ௯௪ | ௫ | பேற்றி. . . . . . . . | பேத்தி. |
| ௱௬௰ | ௯௯ | ௰௪ | மூன்றடக்கி . . . . . | மூன்றடிக்கி. |
| " | " | ௨௰ | பவத்தொடரப். | பவத்தொடர்பப். |
| ௱௬௭ | ௫௫ | ௨௪ | புகமோருவன். . . . | புகழொருவன். |
| ௱௭௪ | பல | ௯௰ | காமுநாரானவர்காம நன்னூ-லேரணங் காணென்பவொண் ணெழுத்தென்பரி சைப்புலவோர். | காமுநர் காம நன்னூவி தென்ப- மோரணங்கா ணென்ப வொண்ணவொ ழுத் தென்பரின் புல வோர். |
| ௱௮௧ | தொட | ௰௯ | பொருட்பின். . . . | சொற்பொருட்பின். |
| ௱௮௯ | சுருங் | ௰௫ | சேய்தி. . . . . . . . | செய்தி. |
| ௱௮௪ | கரு | ௰ | முக்கணே . . . . . | முக்கணனே. |
| ௱௯௨ | ஒன் | ௯ | செப்புங் கதிர்த்திங் கள்நங்குவினுலே விளங்குங்காண் | செப்புகதிர்த் திங்களால் கங்குல்விளங்குமோகா ண். |
| ௨௱௪ | வீறு | ௨௯ | கோழியேறி. . . . | கோழியெறி. |

OFFICE OF THE CURATOR
RECEIVED
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY